
மங்கையர் மலர்
அக்டோபர் '8
விலை ரூ. 3/-
நவராத்திரி சிறப்பிதழ்
இரட்டைச் சிறப்பிதழைக் கேட்டு வாங்குங்கள்

அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி




செய்தி சொல்லவா?

சென்னை ரோட்டரி கிளப் (மேற்கு) சிறந்த இளைஞர்களுக்கு விருது கொடுத்து கௌரவிக்கும் பணியைத் தொடர்ந்து செய்துவருகின்றது. இந்த வருடத்திற்கான விருதைப் பெற்று விருதுக்கே பெருமை சேர்த்தவர் குமாரி சுதா சந்திரன்.

விழாவிற்குத் தலைமை தாங்கிப் பாராட்டி ஆளுநர் குரானா, "அனைத்துலக இளைஞர் ஆண்டில் குமாரி சுதாவின் சாதனை ஒவ்வொரு இளைஞருக்கும் உற்சாகம் ஊட்டுவதாக அமைந்துள்ளது. சாதனை வடிவமான குமாரி சுதாவையே முன்னோடியாகக் கொண்டு ஒவ்வொரு இளைஞரும் தங்களுக்குத் திறமையுள்ள பாதையில் அயராமல் உழைத்து தங்களையும் நாட்டையும் முன்னேற்ற வேண்டும். தற்போது இளைஞர்களிடம் மிஞ்சியுள்ளது பரபரப்பும் குழப்பமும் தான். குமாரி சுதாவின் சுயகட்டுப்பாடு, தளரா உழைப்பை இவர்கள் பின்பற்ற வேண்டும்" என்றார்.

— நாராயணி.





இந்தோனேஷியாவின் 'அங்குலாங்' வாத்தியத்தில் கர்நாடக இசை வாசிக்கிறார் வீணா குல்கர்னி. சமீபத்தில் பம்பாய் ஷண்முகானந்தா அரங்கில் இவர் நடத்திய 'அங்குலாங்' இசைக் கச்சேரியைக் கேட்டுப் பிரமித்துப் போயினர் கலையன்பர்கள்.

— செம்பூரான்.

"சென்னையைப் போலவே கோவையிலும் பல நடன ஆர்வமுள்ளவர்கள் இருக்கிறார்கள் என்பதற்குச் சான்று குமாரி ரம்யா வெங்கடாத்ரி. பத்து வயதிலேயே நல்ல ஆர்வமுடன் மேடையில் நாட்டியமாடுகிறார்





தரமான தயாரிப்புக்களைத் தரும் கோத்ரெஜ் நிறுவனம் 'க்ரௌனிங்க்லோரி' எனும் பெயருடன் ஒரு புதிய சோப்பையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதைத்தலைக்கும்ஷாம்பூவைப் போல உபயோகப்படுத்தலாம் என்கிறார்கள்.

* * * * *

கேசட் லைப்ரரி

வரலக்ஷ்மி விரத விதானமு

பூஜைக்கு சாஸ்திரிகள் கிடைப்பது 'டிமாண்ட்'ாக இருக்கும் ஊர்களில் இந்த கேசட் மிகவும் பயன்படும். 'வரலக்ஷ்மி விரதம்' ஆரம்பத்திலிருந்துகடைசிவரைஎப்படிச் செய்ய வேண்டும் எனப் பாட்டுக்களோடு, மந்திரங்களோடு சொல்கிறது.

விஜயலட்சுமி சர்மா, லக்ஷ்மி இருவரின் இனிய பாடல்களும், அஸ்வினி சாஸ்திரிகளின் மந்திரங்களுடனும் 'மெட்ராஸ் ரெகார்டிங்' கம்பெனி வெளியிட்டுள்ளது.

வரலக்ஷ்மி ராவே மா இண்டிகி

வரலக்ஷ்மி நோன்பில் பாட்டுப்பாட கூச்சப்படுபவர்கள் இந்த கேசட்டை வாங்கி வைத்துக் கொள்ளலாம். இப்பாடல்கள் ஜானகி சுப்ரமண்யம் குழுவினரால் இசைக்கப்பட்டுள்ளன.




ஜானகி சுப்ரமண்யம்.




எங்களது மாதங்கி லேடீஸ் கிளப் மதுரை எஸ்.எஸ்.காலனியில் கடந்த மூன்று ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. கல்விக்கு உதவி, இலவச மருத்துவ உதவி, இரத்த தானம், அன்னதானம் போன்ற சிறு சிறு சமூக சேவைகளை செய்து வருகிறோம். ஒவ்வோர் ஆண்டும் சிறந்ததான இலவச திருமணம் இரண்டு நடத்தி வருகிறோம். இவ்வருடமும் நாங்கள் ஏழைத் தம்பதியருக்கு இலவசத் திருமணம் நடத்தி வைத்தோம்.

— உமா சிவஸ்வாமி.


சக்தி பாதுகாப்புப்
பெட்டகங்கள்
வாடகையின்றி
வழங்கும்
லாக்கர்கள்
31-12-1985 ங் தேதிக்குள் எங்களிடம் டெபாசிட்
செய்யும் வாடிக்கையாளர்க்கு ஒரு வருஷத்திற்கு
வாடகையின்றி உரிய லாக்கர்கள் ஒதுக்கப்படும்.
இந்த வசதி கோவை ஆர்-எஸ். புரம், சென்னை,
தி.நகர் எங்களது கிளைகளிலும் 31-12-85
தேதியை அடுத்துத் தொடங்க இருக்கும்
சென்னை அண்ணாநகர் கிளையிலும் உண்டு.
விவரங்களுக்குத் தொடர்பு கொள்க:
சக்தி பைனான்ஸ்
லிமிடெட்
பதிவு அலுவலகம்: 475, டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோயம்புத்தூர்-641 018 தொலைபேசி: 32240
76, தியாகராயா சாலை, தி.நகர், சென்னை-600 017.
தொலைபேசி: 440 641, 444081
பாரதீய வித்யா பவன் கட்டடம், டி.பி. ரோடு,
ஆர்-எஸ். புரம், கோவை.
உங்கள் நலனே எங்கள் நலன். உங்கள் பொருட்களை
எங்கள் பாதுகாப்பில் தந்து நிம்மதி பெறுங்கள்.
UIPC : SF : 406
SAKTHI
SAFE
VAULTS





பார்கூர் பரமேஸ்வர பாயிரி

பொதுவாகவே ஓவியமெழுதத் தெரிந்தவர்கள் வேறு வேலைகளைக் கவனிப்பதுண்டு. இவர் ஓவியத்தையே தொழிலாக ஏற்றுக் கொண்டவர். ஓவியம் என்றால் மற்றவர்களைப் போல் அல்ல. விதவிதமான கோலங்கள் வரைவது இவரது முக்கியமான ஓவியமாகும். இவரது கோலத் தொகுப்புகள் 'ரங்கவல்லி' என்ற தலைப்பில் ஒன்பது புத்தகங்களாக இதுவரை வெளிவந்திருக்கிறது. இன்னும் இருபது தொகுப்புக்களுக்கான கோலங்கள் இவரிடம் இருக்கிறது. இருபது வருடங்களாகக் கோலங்களை விதவிதமாகத் தன்னுடைய கற்பனையால் உருவாக்கி வருகிறார். ஒவ்வொரு புத்தகத்தின் விலை ஐந்து ரூபாய். சமீபத்தில் விசேஷ கோல இதழை வெளியிட்ட 'தரங்கா' கன்னடப் பத்திரிகை இவரைப் பாராட்டி எழுதியிருக்கிறது.

புத்தகம் வேண்டுவோர் தொடர்பு கொள்ள:

B.P. Bayiri,
Chitra Kutira Udupi
Dakshina Canara KARNATAKA

— அ. குமார்.

108 குத்துவிளக்குப் பூஜை

கிராமப் பெண்களின் மேம்பாட்டிற்காகத் தொடங்கப் பட்டுள்ள **'மகளிர் மேம்பாட்டு மன்றம்'** கூட்டு வழிபாட்டிற்காகவும், கிராமப் பெண்களின் நலநிதிக்காகவும், '1008 குத்துவிளக்குப் பூஜை'யை 16-8-85 அன்று சென்னையில் வெற்றிகரமாக நடத்தி முடித்தது. அடுத்து,

'108 குத்துவிளக்குப் பூஜை'

கடைசி தை வெள்ளிக்கிழமையன்று நடத்தப் படுகிறது.

கட்டணம் ரூ. 100/— மட்டும்

முதலில் பதிவு செய்யும் 108 பேர்களுக்கே அனுமதி.

சாந்தா ராமானுஜம்
செயலர்.

மஞ்சுளா ரமேஷ்
தலைவர்.

முகவரி:
'மகளிர் மேம்பாட்டு மன்றம்'
7, அருணாசலபுரம் 2-வதுதெரு, சென்னை - 20



* தவமணி.



* நாகரத்தினம்.

'பந்த்'

மனிதர்கள் ஒருநாள் கஷ்டப்பட லாம்; ரெண்டு நாள் கஷ்டப்படலாம். என்றோ ஒருநாள் விடிவு காலம் வரும்' என்ற நம்பிக்கையில் சொல்லொணு கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ள லாம். ஆனல் விடிவே எப்பொழுது என்று தெரியாமல், அதற்குள் நாம் நம் குழந்தைகள் உயிரோடு மிஞ்சு வோமா எனத் தெரியாமல் நாளும் செத்துக் கொண்டிருந்தால்...?

அப்படிப்பட்ட நிலைமைதான் இன்று இலங்கையில். கொடுமைகள் இழைக்கப்படும் மக்கள் உரிமைக் காகப் போராடுவதும், குண்டடிப் படு வதும் இன்று நேற்று புதிதல்ல, சரித்திர காலத்திலிருந்தே இருக்கிறது.

ஆயினும் நம் காலத்தில் தினம் தினம் காதில் விழும் செய்திகளைக் கேட்கும் போது கஷ்டமாக இருக் கிறது. வீட்டினுள் புகுந்து அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பதும், கண்ணில் பட்ட பெண்களையெல் லாம் இழுத்துக் கொண்டு போய் மான பங்கப்படுத்திக் குருவியைச் சுடுவது போலச் சுடுவதும்...

இதற்கு நம்முடைய மத்திய அரசு சுமுகத் தீர்வு காண பேச்சு வார்த் தையை இருசாராரிடையே நடத்தி வைத்தாலும் கொடுமைகள் என் னவோ தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கு—எதிர்ப்புத் தெரி விக்கும் வகையில் 24—ந் தேதி தமிழகம் முழுவதும் 'பந்த்' நடந்தது. உண்ணு விரதம் இருந்த தலைவர்களைக் காண வந்த சில பெண்களை அணுகிய போது—

* காந்தி சிலையருகே உண்ணுவிரதம் இருந்த மத்திய அமைச்சர் மரகதம் சந்திரசேகர், சிவாஜி கணேசனைப் பார்க்க வந்தவர்களில் ஒருவரான இந்திராணி—

''இந்த மாதிரி 'பந்த்' பண்றது ரொம்பச் சரிதானுங்க. இப்படி தமிழகம் பூராவும் எதிர்ப் புத் தெரிவிச்சாலாவது கொஞ்சத்துக்குக் கொஞ்சம் அவங்களுக்கு உறைக்கும்னு நினைக் கறேங்க. இத்தன பேரு மௌனமா உண்ணு விரதம் இருக்கறதும், ஆயிரக் கணக்குல எங் கள மாதிரி இருக்கற ஜனங்க வந்து பாக்கற தும் நிச்சயமா வீண் போவாதுங்க...''

கடற்கரை சாலையில் மக்கள் நடமாட்டத் தைப் பார்த்தால் 'பந்த்' மாதிரியே தெரிய வில்லை. 'ஜே, ஜே' என ஆண்கள், பெண்கள்



* இந்திராணி.



* உமா.

கூட்டம்.முதலமைச்சர் எம். ஜி. ஆர். இருக்கும் மேடையை நெருங்க நெருங்க ஏகப்பட்ட கெடுபிடி.

அத்தனை கெடுபிடியையும் தாண்டி உமா என்ற பெண் எம். ஜி. ஆரை அணுகி 'கறுப்பு பேட்ஜ்' குத்திவிட்டு, வணங்கி விட்டு வந்து விட்டாள். அவள் இறங்கி வந்தவுடனே அவளுக்கு ஒரே வி. ஐ. பி. மரியாதை. அவளிடம் 'பந்த்' ஐப் பற்றிக் கேட்ட போது—

"எனக்கு அதெல்லாம் ஒண்ணுந் தெரியாதுங்க. நா எம். ஜி. ஆரு விசிறி. அவருக்காக உயிரையே கூடக் கொடுப்பேன். அவரு உடம்பு சரியில்லாம இருந்தப்ப கோயில்லய கிடந்தேன். அவரு எது சொன்னாலும் செய்வேன். இன்னிக்கு நானும் உண்ணாவிரதம் தான்...

எனச் சொல்லி விட்டுச் சிட்டாகப் பறந்து விட்டாள்.

பூக்கடையிலிருந்து கைக்குழந்தையுடன் வந்திருந்த நவமணி—

"எனக்கு இன்னாங்க தெரியும்? இன்னிக்குன்னு கிட்டத்திலேர்ந்து எம். ஜி. ஆரைப் பாக்க முடியும்னு சொன்னாங்க. வந்தேன். அந்தப் புண்ணியவானைப் பாத்தேன். அது போதுமுங்க..." என்றாள்.

தன் கணவருடன் 'ஜே, ஜே' என்றிருந்த கூட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தார் மயிலாப்பூரிலிருந்து வந்திருந்த நாகரத்தினம்.

"இவ்வளவு கூட்டமும் ஏதோ வேடிக்கைக்காகவா நிக்குது? நிச்சயமா இதுக்கு ஒரு எஃபக்ட் இருக்கத்தான் செய்யும். எதிர்க்கட்சிங்கள்ளாம் ஒரேயடியா கூப்பாடு போட்டுக்கிட்டிருந்தாங்க. 'இவங்க ஒண்ணும் செய்யலே; செய்யலே'ன்னு. தமிழ்நாடு பூரா இவ்வளோ பெரிய 'லெவல்'லே பந்த் நடத்திக் காட்டிட்டாங்களே. இனிமே யாரு வாயத் தொறக்க முடியும்?"

பிரபல செய்திப் பத்திரிகை நிருபர் ஒருவரின் 'கமெண்ட்':

"நானும் காலையிலேருந்து பாத்துக்கிட்டுதான் இருக்கேன். 'கியூ' பாட்டுக்கு வந்துகிட்டே இருக்கு, சி. எம். மைப் பாக்க. அது எங்கிருந்துதான் இவ்வளவு ஜனங்க வர்றாங்கன்னு தெரியலே. நிச்சயமா இன்னும் ஐம்பது வருஷத்துக்கு இந்த ஆளை யாரும் அசைக்க முடியாது...

இத்தனை கலாட்டாவையும் தாண்டி அமைதியாக காந்தி சிலையருகே உண்ணாவிரதம் இருந்த செழியன் தொண்டர்களில் ஒருவரான சரோஜாவைக் கேட்டவுடன் பொங்கி யெழுந்தார்.

"ஹ்ஹூம். இந்த 'பந்த்'லேயெல்லாம் ஒண்ணும் பிரயோஜனம் இல்லீங்க. இவ்வளவு அமைதியா 'பந்த்' நடத்தினா கேக்கப் போறாங்களா என்ன? பேச்சு வார்த்தைகளில் எல்லாம் இதைத் தீர்த்துட



சரோஜா.

கண்ணீரைத் துடைக்குமா?





* மரகதம் சந்திரசேகர், சிவாஜி கணேசன்.



* வி. ஜி. பி. ஊழியர்.

முடியுமா? மத்திய அரசு ரொம்ப ஸ்டிராங்கா நடவடிக்கை எடுத்தாலொழிய ஒரு தீர்வும் வராது...''

அவருடைய ஆவேசப் பேச்சுக்கிடையே கலிவரதன் புன்னகையோடு குறுக்கிட்டார்.

''இதெல்லாம் கட்சியோட கருத்தில்லே. தனிப்பட்ட முறையில் அவருடைய கருத்துன்னு போடுங்க...'' என்றார். செழியனுக்கு ஒரே சிரிப்பு.

வி. ஜி. பி. சகோதரர்களும் திருமதி பாரிஜாதமும் தங்களுடைய அலுவலகம் முன்பே ஊழியர்களுடன் பேப்பர் படித்துக் கொண்டு அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

செங்கல்பட்டில் உண்ணாவிரதம் இருந்த ஜெயலலிதா கொஞ்சம் கூட களைப்பு தெரியாமல் இருந்தார். ஆறு மணிக்கு உண்ணாவிரதம் முடித்து எழுந்த போது ஒரே கர கோஷம்.

''இலங்கையில் இருந்து வரும் செய்திகளைப் படிக்கும் போது இவர்களைப் பழிக்குப் பழிவாங்கவேண்டும்என்றுநெஞ்சம்கொதிக்கத்தான் செய்கிறது. ஆனால் அது வேறு நாடு. நம்முடைய மத்திய அரசே இதைத் தீர்க்க முடியும். நாம் மாநில அரசு. ஆலோசனைகள்தான் கூற முடியும்.

அதிலும் எந்தவித வன்முறையையும் தூண்டி விடாமல் இப்படி ஒரு நாள் உண்ணாவிரத அறப் போராட்டம் என்பது நிச்சயம் ஒரு எழுச்சியையே ஏற்படுத்தும். இந்த 'பந்த்' ஒரு வெற்றிகரமான தீர்வையே கொடுக்கும்...''

என நம்பிக்கைத் தெரிவித்தார்.

எப்படியோ, ரத்தக் கண்ணீர் வடிக்கும் நம் சகோதர சகோதரிகள் என்றைக்குப் புன்னகை சிந்தப் போகிறார்கள்?

—மஞ்சுளா ரமேஷ்.

புகைப்படங்கள்: சாந்தராஜ்.

* ஜெயலலிதா.



உங்கள் குழந்தையின் சீரான வளர்ச்சி, முதல் ஆண்டில் அவன் பெறும் ஊட்டத்தைப் பொறுத்துள்ளது.



பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு

அவனது வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தும் நிரம்பியதாகும்

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு, உங்கள் குழந்தையின் ஊட்டச்சத்துத் தேவைகளை மனதில் கொண்டு விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஃபாரெக்ஸ் புரதம் செறிந்தது, கூடுதல் இரும்புச்சத்து உள்ளது, சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. குழந்தையின் வளர்ச்சிக்கு இவை அத்தியாவசியமாகும்.

ஏறக்குறைய நான்காவது மாதம் முதல், குழந்தைக்குப் பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு கொடுங்கள். அவன் ஆனந்தமாக வளருவதைக் காணுங்கள்.

பாசத்துடன் வழங்குவோர் க்ளாக்ஸோ!



ஏற்கெனவே பால் அடங்கியது

CLARION/B/GX/8/203 - R

எரிவாயுப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

Super flame—ன் குக்கிங் ரேன்ஜ் பரிசு பெற்றவர்



தனலட்சுமி ஆறுமுகம்



லதா ரகுபதி



டி. என். சுலோசனா

முதல் பரிசு இரண்டாம் பரிசு பெற்றவர்கள்
(புகைப்படங்கள் வந்தவரை)



ஆர். சுப்ரியா



கே.வி. சுபத்ரா



ஜெயந்தி ராஜசேகரன்



கல்பனா சுந்தரம்



ஜெ. டி. பத்மினி



பத்மாவதி பாலசுப்பிரமணியன்

ஆறு மாதங்களாகப் பல வாசகர்களும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்த எரிவாயுப் போட்டி பரிசளிப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

"இந்த ரப்பர் டியூபை நினைத்து இல்லே. இந்த சாக்கிலே உங்களையெல்லாம் பார்க்கலாமே" என்று ஆசையோடு வந்தேன்..." என்று பம்பாயிலிருந்து இதற்காகவே வந்த வாசகி கூறியபோது மனசுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

அகில இந்திய எரிவாயு விநியோகிப்பாளர் சங்கம் தனது பதினேந்தாவது ஆண்டு விழாவையும், மங்கையர்மலர் வாசகிகளுக் கான பரிசளிப்பு விழாவையும் இணைத்து மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

திரு. முனிவேலுவிடம், "நாங்கள் ஏதாவது செய்கிறோம், என்ன செய்யணும் சொல்லுங்கள்" என்ற போது, "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். எங்களுடைய சிறப்பு விருந்தினராக வந்து விடுங்கள், அது போதும்"

....பரிசளிப்பு விழா





• மதா சகுபதி Super flame
பரிசைப் பெறுகிறார்.

என்று கூறி தானே மொத்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு நடத்தி வைத்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக எரிவாயு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் வந்து பலர் சிறப்புரையாற்றினார்கள். அதில் முக்கியமாக யுனைடெட் இந்தியா இன்சூரன்சைச் சேர்ந்த பட்டாச்சார்யா பேச்சு அனைவரின் கவனத்துக்கும் உரியது. அதைப் பிறகு முனி வேறு அழுத்தம் திருத்தமாக மறுபடியும் விளக்கிக் கூறினார் —

"இல்லங்களில் எரிவாயு சம்பந்தப்பட்ட விபத்துக்கள் நடக்கும் போது சில சமயங்களில் மட்டுமே இன்சூரன்ஸ் பணம் வரும். எரிவாயு சிலிண்டர்களை இணைக்கும் போது. சிலிண்டரில் ஏதேனும் கோளாறு இருந்தாலோ அல்லது இணைக்கும் ஏஜென்சி ஆள் தவறாக இணைத்து விட்டாலோ அதனால் ஏற்படுகின்ற விபத்துக்களிலேதான் இன்சூரன்ஸ் தரப்படுகிறது.

ஆனால் மற்றபடி இல்லத்தரசிகளின் அஜாக்கிரதையால் நடந்து விடுகின்ற விபத்துக்களுக்கு என்ன பாதுகாப்பு? எப்படி நடந்தாலும் விபத்துத்தான், சேதம்தான். அதற்கும் நஷ்டஈடு கிடைத்தால் நன்றாகத்தானே இருக்கும்!

எனவே ஒவ்வொரு எரிவாயு பயன்படுத்துபவரும் ஒரு சிறிய தொகையைக் கட்டிவரலாம். இதற்கு இல்லத்தரசிகள் ஏற்றுக் கொண்டால் மிகப் பயனுடையதாக இருக்கும்."

என்றார். யோசிக்க வேண்டிய நல்ல விஷயம் வாசகிகளே, சிந்தியுங்கள்.

கோவையிலிருந்து. ரூ. 5000/ மதிப்புள்ள 'Superflame' குக்கிங் ரேன்ஜை லதாரகுபதி பெற்றுக்கொண்டார். திண்டிவனம், மதுரை, சேலம், கோவை முதலான ஊர்களில் இருந்தெல்லாம் வாசகிகள் வந்து விழாவைச் சிறப்பித்தார்கள். சென்னையில் பரிசு கிடைத்தவர்கள் அனைவரும் வந்திருந்தார்கள்.

எழுபதுக்கும் மேற்பட்டவர்கள் வந்து விழாவைச் சிறப்பித்தது ரொம்பவும் மகிழ்ச்சிகரமான விஷயம்.

புகைப்படங்கள்: யோகா

நேரில் பரிசைப் பெற்றுப் கொள்ளாத மற்றவர்களுக்கும் பரிசுகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும். பரிசு பெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள்.





விழாவிற்கு வந்திருந்த மங்கையர் மலர் வாசகிகள்.



Management with

Jammi's

Livercure



Jammi

சந்தோஷமான, ஆரோக்கியமான வாழ்க்கைக்கு குடல் மிகவும் நன்றாயிருக்க வேண்டும்.

உங்கள் குழந்தை:

* சரியாக சாப்பிடவில்லையா?
* சாதாரணமாக வளர்ச்சி அடைய வேண்டியது போல் இல்லாமல் இருக்கிறதா?
* உடம்பு சூடாக ஜுரமடிப்பது போல் இருக்கிறதா?
* சிறுநீர் நல்ல நிறத்தில் போகிறதா?
* மலம் களிமண் கலரில் போகிறதா?

குடல் சரியாக வேலை செய்யாதது காரணமாக இருக்கலாம்.
உடனே தேவையான சிகித்ஸை அறியுங்கள்.

பூரண வைத்திய விவரங்களுக்கு:

JAMMI PHARMACEUTICALS

"JAMMI BUILDINGS" 61, Royapettah High Road, Madras-4.

The Pioneers in the care of CHILD HEALTH



டாக்டரிடம் கேளுங்கள்

டாக்டர் கு.கு.ரஷ்யா

சுந்தரி — போபால்.

பிறப்புறுப்பில் (பெண் உறுப்பில்) எனக்கு வெள்ளை படுகிறது. 5, 6 மாதங்களாக அந்த இடத்தில் ஊறலும் இருக்கிறது. எப்போதும் ஊறிக்கொண்டே இருக்கிறது. இதற்குஎன்ன செய்ய வேண்டும்?

பிறப்புறுப்பிலிருந்து வெள்ளைப்படுவது ஒரு அளவுக்கு இயற்கையே. மாதாமாதம் இரு மாதவிடாய் இடையில் அதிகமாக இருக்கும். இது தொல்லை தரும் அளவுக்கு வாடை, அதிகமான அளவு இருப்பின் பெண் மருத்துவ நிபுணரிடம் தங்கள் உடலை உள் பரிசோதிப்பதே உசிதம். காரணம் பல உண்டு.

மோகனதிலகம் — இராசிபுரம்.

நான் அதிக உயரமாக இல்லை. குள்ளமாகவும் இல்லை. நான் இன்னும் கொஞ்சம் உயரமாக இருந்தால் நன்றாக இருப்பேன் என்று அனைவரும் கூறுகின்றனர். என்ன செய்தால் உயரமாவேன்?

பெண்களுக்கு வளர்ச்சி 17, 18 வயதுக்குப் பின்பு குறைவே. இனி உயரமாவதற்கு உயரக் குதிகால் (ஹீல்ஸ்) காலணிகள் தான் பயன் தரும். இதற்காக உடற்பயிற்சி செய்வதில் பயன் இல்லாவிடிலும் உடலுக்கு நல்லதே. எந்த உடற்பயிற்சி புத்தகங்களும் நூலகத்திலிருந்தோ, கடைகளிலோ வாங்கிப் படிக்கலாம். சென்னைத் தொலைக்காட்சியிலும் அடிக்கடி காண்பிக்கிறார்கள்.

உஷா ராணி, — மன்னார்குடி.

இரண்டு குழந்தைகளுக்குத் தாய் நான். லூப் பொருத்தியுள்ளேன். ஆறு மாதமாக வயிறு பெரிதாக உள்ளது மாதிரி உள்ளது. லூப் போட்டதால் வயிறு பெரிதாக ஆகுமா?

கருப்பையில் கருத்தடை சாதனமாக 'லூப்போ' அல்லது 'செப்பு T' பொருத்துவதால் வயிறு பெரிதாவதற்குக் காரணமாக எப்போதும் இருந்ததில்லை. எதற்கும் பெண் மருத்துவ நிபுணரிடம் அல்லது அண்மையிலுள்ள குடும்ப நல அரசு மருத்துவரிடம் காண்பித்து உங்கள் ஐயத்தைப் போக்கிக் கொள்ளுங்கள்.

பாலா, — சென்னை—12.

என் கையில் சூடான பால் கொட்டி, உடன் வைத்தியம் செய்து குணமாகிவிட்டது. ஆனால் கொட்டிய இடம் பூராவும் கறுப்பாகவும், சுருக்கமாகவும் சொரசொரப்பாகவும் உள்ளது. இவை யாவும் நீங்கி எனது பழைய நிலை அடைய என்ன வழி?

(பால் கொட்டியதில் கொப்புளங்கள் வரவில்லை.)

சூடான பால் கொட்டியதால் தோலில் ஏற்பட்ட வடுவை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணரிடம் காண்பிக்கலாம். பலன் நிச்சயம் உண்டு. சென்னை ஸ்டான்லி மருத்துவ மனை, பொது மருத்துவ மனை, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை இவைகளில் இதற்கான வழி பெற வாய்ப்பு உண்டு.

ராஜம், — நாங்குனேரி.

எனக்கு வயது பதினெட்டு. மிகவும் ஒல்லியாக மெலிந்து காணப்படுகிறேன். உடற்பயிற்சிகளும் செய்து வருகிறேன். நல்ல குண்டாகி, சதைப் பிடிப்புடன் காண வழி சொல்லுங்களேன்.

மெலிந்திருப்பவர்கள் உடல் பருக்க இள வயதிலிருந்தே நல்ல உணவு உட்கொண்டிருத்தல் வேண்டும். உடற் கூறும், அதிகமாக உணவை எரிக்கக் கூடிய (High Metabolism) அமைப்பும் காரணமாகலாம் அல்லது மற்ற உடல் நோய்க்கும் காரணமாக இருக்கலாம். அரசு மருத்துவமனையில் தேர்ந்த மருத்துவரை (medical) அணுகி தகுந்த யோசனை கேட்பதே நல்லது.

அ. பத்மா, — கோவை.

என் வயது இருபது. பொடுகு.... இது தான் என் எதிரி. சுமார் நான்கு வருடமாக தீராத தொல்லையாக என்னைப்பிடித்து வாட்டுகிறது. பத்திரிகைகளில் வந்த குறிப்புகளை எல்லாம்.... செயல்படுத்திப் பார்த்துவிட்டேன். இன்னமும் பொடுகு விட்டபாடில்லை. அடர்த்தியாய் முழங்காலை தொட்டு கொண்டிருந்த என் தலைமயிர் இப்போது சோபை இழந்து..... ரொம்பவும் கொட்டிவிட்டது. நிறைய மயிர் இருந்து கொட்டி கொண்டிருப்

பதால் மற்றவர்களின் அனுதாபத்திற்கு வேறு ஆளாக வேண்டியுள்ளது; இதுவே பெரிய தலைவேதனையாய் உள்ளது.

பொடுகு இருப்பின் க்ளினிக் (Clinic) ஷாம்பு பயன் தரும். தோல் மருத்துவரை அணுகவும். வைட்டமின் B 12 அதிகமான உணவுகளோ அல்லது மாத்திரையோ தொடர்ந்து சாப்பிடலாம். பேன் இருந்தாலும் முடி உதிரும். சத்துள்ள உணவு உட்கொள்ளாதிருந்தாலும் இவ்வாறு ஆகலாம்.

ஜே. கண்ணகி.

என் கணவரது காலில் ஆணி கால் ஏற்பட்டுள்ளது. அது வட்டமாகக் காலில் உள்ளது. இந்த இடத்தில் தசை கடினமாக இருக்கும். இது உள்ளங்காலில் இருக்கிறது. சிரமமாக இருப்பதாலும், வலி எடுப்பதாலும் பிளேடு வைத்து அந்தத் தசையை சீவி எடுத்து விடுவார். அப்பொழுது வலி குறைந்துவிடும். பிறகு வளர்ந்தால் வலி ஆரம்பிக்கும். நிரந்தரமாக இதை நீக்க என்ன வழி?

'ஆணி' (Corn) அகற்ற அறுவை சிகிச்சை மருத்துவரை அணுகி சிகிச்சை பெறவும்.

எஸ். பி. மீனு, திருச்சி—8.

என் இடது முழங்கால் மூட்டில் உட்கார்ந்து எழுந்திருக்கும்போது வலி அதிகமாக இருந்தது. இரண்டு வாரங்களுக்குப் பிறகு வலி தானாகவே நின்றுவிட்டது. அதற்குப்பின் சுமார் நான்கு மாதங்களாக வலது குதிகால் பாதம், நடக்கும் போது வலித்துக் கொண்டே இருக்கிறது. வீக்கமும் காலில் பாதத்திற்கு மேல் இருந்தது. டாக்டரிடம் காண்பித்ததில் 'ருமேட்டிஸம்' என்று அவர் எழுதிக் கொடுத்த மருந்து ஒரு மாதமாகச் சாப்பிட்டு வருகிறேன். வீக்கம் குறைந்தாலும் பாதவலி நிற்கவில்லை.

ருமோட்டிசத்திற்கு சித்த வைத்தியம் பலனளிக்கும். எல்லா ஆரம்ப சுகாதாரம் மற்றும் மாவட்ட அரசு மருத்துவ நிலையங்களில் இம்மருத்துவர்கள் கலந்து பயன் பெறலாம்.

என் கணவரை எப்படித் திருத்தினேன்?

மங்கையர் மலர்

தவறு செய்த கணவரை மணந்து அவரைப் படிப்படியாகத் திருத்திய அனுபவம் சில மனைவிமார்க்கு உண்டு. அவர்கள் எழுதுங்களேன். மற்றவர்களுக்கும் படிப்பினையாக இருக்கும்.

விரும்பாவிட்டால் பெயர் பிரசுரிக்கப்படாது.

100 பாட்டில் ரத்தம்



எங்கேயாவது வெள்ளப் பெருக்கா, இல்லை புயலடித்து ஓய்ந்த இடமா? மக்கள் அவதிப்படுகிறார்களா? அங்கெல்லாம் தவறாமல் செஞ்சிலுவைச் சங்க வண்டி நிற்பதையும், பல பணியாளர்கள் சுறுசுறுப்பாக ஓடியாடி துயரில் மூழ்கியிருக்கும் மக்களுக்கு உதவி செய்வதையும் பார்த்திருக்கிறோம்.

''உலகளாவிய சேவை நிறுவனமான செஞ்சிலுவைச் சங்கத்திற்கு என்னால் முடிந்த சேவையைச் செய்ய முடிந்தது என்னுடைய பாக்கியம்தான். நான் கோவை மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் கௌரவ செயலாளராக நியமிக்கப்பட்டபோது ரொம்ப சந்தோஷப்பட்டேன்.

என் கணவர் வரதராஜ் ரொம்பவும் 'பிஸி' பிஸினஸ்மேன். காலையிலிருந்து இரவு வரை அவருடைய ஓய்வு ஒழிவில்லாத வேலைகளுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன். இதற்கு நடுவிலே செஞ்சிலுவைச் சங்க வேலைகளையும் கவனிக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரம் கிடைக்காதா என்று ஆசையாக இருக்கிறது.''

என்கிறார் திருமதி ஸ்ரீவல்லி வரதராஜ்.

1935—லேயே கோவை மாவட்டத்தில் இச்சங்கத்தின் கிளை ஆரம்பிக்கப்பட்டது. மிகச் சிறந்த சமூக சேவகிகளால் நிருவகிக்கப்பட்ட இச்சங்கத்தால் பயனடைந்தவர்கள் ஏராளம்.

பஞ்சாப், சிந்தி அகதிகளிலிருந்து எத்தியோப்பியா அகதிகள் வரை எங்கெல்லாம் மனிதகுலம் கண்ணீர் சிந்துகிறதோ அங்கெல்லாம் இவர்களுடைய உதவிக்கரம் நீண்டிருக்கிறது.

கோவை.சுற்றுப்புற கிராம மக்கள் இவர்களால் அடைந்த பயன்கள் ஏராளம்.

அவ்வப்போது இரத்ததான முகாம் நடத்தி நூறு பாட்டில் ரத்தத்திற்குக் குறையாமல் கோவை பொது மருத்துவமனைக்குக் கொடுக்கிறார்கள்.

இவர்களின் இளைஞர் பிரிவு அனைத்து இளைஞர்களுக்குமே வழிகாட்டியாக விளங்குகிறார்கள்.

பள்ளியில் சுத்தம், சுகாதாரம், ஒழுங்கு பேணுதல்—

அருகிலுள்ள கோவில்களில் தூய்மை காத்தல்—

ஏழை மாணவர்களுக்கு உதவுதல்—

முதியோர் இல்லத்திற்குச் சென்று அவர்களிடம் உரையாடுதல்—

இதைவிட வேறென்ன வேண்டும் ஒரு இளைஞன் நல்ல வாழ்க்கைப் பயிற்சியை மேற்கொள்ள?

பல வாழ்விழந்த பெண்களுக்கும், வகையறியாமல் தவித்த பெண்களுக்கும் கருணையோடு கைகொடுத்திருக்கிறது இச்செஞ்சிலுவை சங்கம்.

''எங்களுடைய இத்தனை சேவைகளுக்கும் பின்னணியில் நின்று ஊக்கம் கொடுப்பது நம் மாநில செஞ்சிலுவை சங்க சேர்மன் சரோஜினி வரதப்பன்தான். அடிக்கடி எங்களுடைய விழாக்களுக்கு வந்து எங்களை உற்சாகப்படுத்துகிறார்...''

என்கிறார் இதன் தலைவி ரஜியா ஹாசன்.

— டி.ஆர்.ரமேஷ்



தூரத்து நட்சத்திரம்

"போட்டோ வந்துடுத்து! போட்டோ வந்துடுத்து" வினு குட்டி குதித்தவுடன் எல்லோருமே அநேகமாகத் தங்கள் கைக்காரியங்களை விட்டுவிட்டுக் கூடத்துக்கு வந்து விட்டனர்.

வாசல் திண்ணையில் பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த வாசு மட்டும் குத்துக்கல் மாதிரி உட்கார்ந்திருந்தான்.

அவனை விட வயதில் சிறியவனான ராமசந்திரன் போன வாரந்தான் சம்சாரியாகியிருந்தான். அவனுடைய கல்யாண ஆல்பம் தான் வந்திருந்தது.

போட்டோக்களைப் பார்த்து ஆளாளுக்கு கமெண்ட் அடித்துக் கொண்டிருந்தனர்.

"ஹைய்! வாசு மாமாவைப் பாரேன் எப்டி நிக்கறார் போருக்குப் போறா மாதிரி!" வினிதா கத்தியதும் அவன் ஆச்சரியப்பட்டான்.

"ராமுவுக்கு பக்கத்துல திருஷ்டி பரிகாரம் மாதிரின்னு சொல்லு" தங்கை விஜயாவின் கிண்டலில் நத்தையாய்ச் சுருங்கிப் போனான். மற்றவர்கள் மனது புண்படும்படி பேசுகிறோம் என்ற நினைவே இருக்காதா இவர்களுக்கு? கூடியவரை போட்டோவில் விழுவதைத் தவிர்த்தும் எப்படியோ விழுந்திருக்கிறான். ரிஸப்ஷனில் கூட அவனை ஒரு மனிதனாய் நினைத்து யாரும் போட்டோவில் வந்து நிற்கும்படி கூட கூப்பிடவில்லை.

கீழ் உதட்டைக் கடித்தபடி பேப்பரை மடித்து வைத்துவிட்டு தெருக்கோடியிலிருந்த கடைக்குக் கிளம்பினான்.

"வாசு போட்டோ பார்க்கலையா?" அம்மா அழைத்தாள்.

"வந்து பார்க்கறேன்!"

"ஹூம்! தனக்குக் கல்யாணமாகலையேங்கற வருத்தம் அவனுக்கு! அதான் தம்பி கல்யாண போட்டோவைப் பார்க்காம போறான் பாவம்!" வயசான அத்தை உண்மையாகவே வருத்தப்பட்டாளா? அல்லது கேலி தெறிக்க பேசினாளா என்பது புரியவில்லை.

வாசு தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினான். பிரசவத்தின் போது ஏற்பட்ட சிக்கலில் முன் மண்டை சப்பிப் போய் நெற்றி முழைத்துக் கொண்டு கோணல் மாணலாய் ஒரு மண்டை அமைந்தது அவன் தவறா? வழித்து இட்டுக் கொள்கிறாற்போல் கரிக்கட்டையாய்ப் பிறந்ததுதான் அவன் தவறா? சின்ன அண்ணா பிறந்த ஆறாவது மாதத்திற்குள் ஜனித்த காரணத்தால் ஏகப்பட்ட மாத்திரை மருந்துகளை அம்மா உள்ளே அனுப்பியும் கலைந்து போகாமல் ஆனால் கொஞ்சம் மந்தபுத்தியுடன் பிறந்ததுதான் அவன் தப்பா? இதில் எது அவன் தப்பு என்று நினைத்துக் கொண்டு மற்றவர்கள் அவனை காட்சிப் பொருளாக்கி ஏளனம் செய்கிறார்கள்.

கூடப் பிறந்தவர்கள் எல்லாம் டாக்டர் என்ன என்ஜினியர் என்று ஏகப்பட்ட படிப்பு படித்து மாசம் நாலாயிரத்துக்குக் குறையாமல் சம்பாதித்த போது ஸ்கூல் ஃபைனலுடன் படிப்பை முடித்துவிட்டு டைப்ரைட்டிங் பாஸ் செய்து விட்டு சர்க்கார் ஆபீஸில் டைப்பிஸ்ட்டாக குறைந்த சம்பளம் வாங்கத்தான் அவனால் முடிந்தது. அதுவே அதிகம் என்பது அவன் மனப்பான்மை.

ஏனோ அவனைக் கண்டாலே யாருக்கும் பிடிப்பதில்லை. எந்த விசேஷங்களுக்குச் செல்வதானாலும் சரி அவன் ஒதுக்கப்பட்டான். ஒரே தங்கை விஜயா! மற்றவர்களிடம் என்னமாய்ப் பாசத்தைக் கொட்டுகிறாள் இவனைத் தவிர! இந்த அண்ணா என்னத்தை வாரிக் கொடுத்து விடப் போகிறான் என்ற அலட்சியமா? உண்மைதான். மற்ற மூவரும் அவளுக்கு அள்ளி அள்ளிதான் செய்கிறார்கள். அவனால் அப்படி செய்ய முடியவில்லைதான். இருந்தாலும் போன தீபாவளிக்கு வந்த அட்வான்ஸ் பணத்தில் இருநூறு ரூபாய்க்கு ஒரு பாலியஸ்டர் புடவை எடுத்துக் கொடுத்தான். அவள் முகத்தில் துளிக்கூட மகிழ்ச்சியில்லை.

"என்ன விஜி பிடிக்கலையா?" என்றான்.

"ம், உன்னாட்டமே இருக்கு உன் செலக்ஷனும். நல்ல கலர்! ஊர்ல இருக்கற

அத்தனும் கலரும் இருக்கு புடவைல. எந்தக் கடைல எடுத்த? முடிஞ்சா மாத்திண்டு வந்துடு.''

அவன் சட்டென்று முகம் மாறினான் அவள் பேச்சில்.

''இது... இதை மாத்த முடியாதும்மா. ஆபீஸ்ல யாரோ வந்து வித்தா. எல்லாரும் ஒண்ணு வாங்கினா. நானும் வாங்கினேன். அவளை எங்க போய் தேடறது?''

''அதான பார்த்தேன்! எப்படியோ, இதை நா கட்டிண்டு போனா உள்ளேயே ஏத்த மாட்டார் எங்க வீட்டுக்காரர். அவருக்கு இந்த மாதிரி காடி கலர்ஸ்னாலே அலர்ஜி! வாங்கி சும்மா உள்ள வெப்பானேன்! அதனால ஒண்ணு செய்! பத்திரமா பீரோல வெச்சுக்கோ! உனக்கு பொண்டாட்டி வரப்போ கிருஹப்பிரவேசத்துக்குக் குடுத்துடு'' சொல்லி விட்டுத் தானே பெரிதாகச் சிரித்தபடி நகர்ந்தவளை துக்கமும் அவமானமும் மேலிடப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அந்தப் புடவை இன்னும் அவன் பீரோவில் தூங்குவது நிஜம்.

* * * * * * *

இரவு மொட்டை மாடிக்குப் படுக்கையுடன் போனான். சிறிது நேரத்திற்கெல்லாம் யாரோ வரும் சப்தம் கேட்கத் திரும்பினான். அம்மாதான்.

''வாசு!'' பாசம் பொங்க அழைத்தாள். என்ன இருந்தாலும் தாயல்லவா!

''என்னம்மா?''

அவள் பதில் சொல்லாமல் அவன் தலைமாட்டுப் பக்கம் உட்கார்ந்து லேசாக அவன் தலைமுடியைத் தடவிக் கொடுத்தாள். நெற்றியில் சூடாக நீர்த்துளிகள் விழவே திடுக்கிட்டு எழுந்தான்.


''என்னம்மா அழறயான்ன?''

''பெத்த வயிறு துடிக்கறதுடா வாசு! அஞ்சுல நாலு நன்னாருக்கும்போது ஒன்னை மட்டும் தெய்வம் ரொம்ப சோதிக்கறதே நா என்ன செய்வேன்?''

''என்ன ஆய்டுத்தும்மா? எனக்கென்ன இப்போ?''

''எல்லாம் தெரியும்! மத்தவா ஒன்னை எளக்காரமாப் பேசினா ஏண்டா வாய மூடிண்டு போற? வெடுக்குனு ஏதானம் திருப்பிப் பேசிடேன். எனக்கே அடிவயித்

வித்யா சுப்ரமணியம்



உவிலிக்குப் பருப்பு வகைகளை வெந்நீர் விட்டு ஊற வைத்து அரைத்து ஆவியில் வைத்து உதிர்த்தால் எண்ணெயே ஆகாது. பொலபொல வென்றிருக்கும்.

— சாரதா ராமசுவாமி.

துல ஆத்திரம் பொங்கறது. ஆனாலும் பேச முடியலே! அதுகளும் என் கொழந்தைக ளாச்சே! வாசு! வாசு...! இங்க பாரேன். உனக்குத்தான் மொதல்லகல்யாணம்பண்ண ணும்னுதான் அலையா அலஞ்சோம். ஒண்ணுமே தகஞ்சு வரலேயேடா! அதுக்குள்ள இந்தப் பயல் கன்னுபின்னுன்னு பேசவே... வாசு அம்மாவை நீ தப்பா நினைக்க மாட்டேயே? அம்மா என்னிக்கும் உன்னைத் தள்ளி வெச்சுட மாட்டேண்டா. உன்னை இப்டி பெத்ததே நான்தானன்னு மனசு குத்த தெனம் ஸ்வாமி முன்னாடி உட்கார்ந்து ஊமையா அழறேண்டா!"

"என்னம்மா இது? நா உன்னை தப்பா நெனக்கறதா? அது என்னால முடிஞ்சுடுமா? எல்லாம் என் விதிம்மா விதி!" வாசு பதற்றத்துடன் பேசினான்.

"மத்தவா எனக்காரம் பண்ணு பண்ணிட்டுப் போட்டுண்டா வாசு! அம்மா அடி வயத்துலேர்ந்து ஆசீர்வதிக்கிறேன். நீ நன்னாப்படா! கண்டிப்பா நன்னாப்ப! உன் குழந்தைகளைப் பார்த்துட்டுதான் நான் சாவேன்."

"உன் ஆசீர்வாதம் போறும்மா! கண்டிப்பா நா நன்னாப்பேன்" குரல் உடைய பேசினவன் அம்மா மடியில் முகம் பதித்து குப்புறப்படுத்துக் கொண்டான். உடம்பு லேசாகக் குலுங்கியதிலிருந்து அவன் அழுகிறான் என்று தெரிந்து கொண்ட அம்மா தானும் அடக்க முடியாமல் அழுதாள்.

* * * * * * *

"என்னப்பா வாசு! தம்பி கூட முந்திண்டுட்டான். நீ எப்ப சாப்பாடு போடப் போறே?" ஆபீஸில்உள்ளவர்கள்வெளிக்குக் கரிசனமாகக் கேட்டாலும் அதில் தொக்கிய கேலியில் துவண்டு போனான். அவன் முதுகுக்குப் பின்னால் அவர்கள் பேசிக் கொள்வது அவன் காதிலும் விழாமலில்லை.

"இந்த மன்மதனைக் கட்டிக்க எந்த ரதி வரப் போறாளோ! பாரேன்! நெய்வேலி சுரங்கத்துல முக்கி எடுத்தா மாதிரி பளபளன்னு என்ன ஒரு கறுப்பு! போறாததுக்கு மாங்கா மண்டை வேற! முப்பத்தஞ்சாயிடுத்தாம் வயசு. நம்பவே முடியலே. நா அம்பதாக்கும்னு நெனச்சுண்டிருந்தேன்."

* * * * * * *

திரும்பிப் பார்ப்பதற்குள் ராமசந்திரனுக்குபெண்குழந்தைபிறந்து அதற்குஇரண்டு வயது கூட ஆகிவிட்டது. அம்மா அவன் கவலையிலேயே இளைத்து விட்டாள். அப்பாவுக்குச் சில நேரங்களில் அவன் மேலேயே எரிச்சல் வந்தது.

"ஆளுதான் பார்வையில்லன்னா, மத்தபடி படிச்சு கிடிச்சு பெரிய ஆபீஸராவாவது ஆகக் கூடாது? ஒரு எழவும் இல்லன்னா எவன் பொண்ணைக் குடுப்பான்? பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணக் கூட இத்தனை கஷ்டப்படலே. இந்த பிள்ளைக்கு இப்டி பாடு பட வேண்டியிருக்கே" என்று சலித்துக் கொண்டார்.

ஆறு வாரம் மாங்காட்டுக்குப் போய் வந்தால் நினைத்த காரியம் நடக்கும் என்று யாரோ பேசிக் கொண்டது காதில் விழ அவனும் கிளம்பினான். ஒரு வாரம்... மூன்றாவது வாரம்.

"சார், சார் ப்ளீஸ். அந்த ரூபாயைப் பிடியுங்களேன்."

திடுக்கிட்டுத் திரும்பினான். யாரோ ஒரு பெண்! அந்தி நேரத்து வானம் போல்சிவப்பு கலந்த பொன்னிறத்துடன் மிக மிக அழகான ஒரு பெண்!

"அதோ பறந்து போறது ப்ளீஸ்!"

அவன் காட்டிய திசையில் ஒரு இரண்டு ரூபாய்த் தாள் லேசாக பறந்து போய்க் கொண்டிருந்தது. அவளுடைய ஒரு கையில் பால் கிண்ணம், மறு கையில் அர்ச்சனை தட்டு! சட்டென்று ஓடிப் போய் அந்த ரூபாயை எடுத்துக் கொண்டு வந்து நீட்டினான்.

"ரொம்ப தேங்க்ஸ். அர்ச்சனை டிக்கெட்டு வாங்க எடுத்தப்போ இது எப்டியோ கீழ விழுந்துடுத்து" சிரித்தபடிவாங்கிக்கொண்டு நகர்ந்தாள்.

அவன் போய் தர்ம தரிசன கியூவில் நின்று கொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் அவளும் வந்து நின்றாள். அவனைப் பார்த்துச் சிநேகமாகச் சிரித்தாள்.

"ஏன் பேசாம அஞ்சு ரூபா டிக்கெட் எடுத்துப்போயிட்றதுதானே. இதுலஎவ்வளோ நேரம் நிப்பீங்க?"

"போகலாம். ஆனா கால் கடுக்க, வயிறு பசிக்க நின்னு தரிசனம் பண்றேன்னு வேண்டிண்டு இருக்கேனே" சிரித்தாள்.

"கோவிலுக்கு வரதே வேண்டுதல். அதுலயும் ஒரு வேண்டுதலா?" சிரித்தவன், "இது எத்தனாவது வாரம்?" என்று கேட்டான்.

"இதுதான் முதல் வாரம். உங்களுக்கு?"

"எனக்கு மூணாவது வாரம்."

"ப்ரமோஷனுக்காக வர்றீங்களா?"

"இல்லே! கல்யாணம் ஆகணும்னுதான்" சிறிதும் தயங்காமல் பளிச்சென்று அவன் சொன்னதும் ஒருவித வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

"நீங்க?"

"நானும் அதுக்குத்தான் வரேன்" என்றாள்.

"என்னங்க இது. அநியாயமா இருக்கே! இவளோ அழகாக்கீங்க. உங்களுக்கு ஏங்க ஆகலே? நான்தான் கறுப்பு! மாங்கா தலையன்,



Godrej தருகிறது
புதிய
பெஸ்டோ
கிலோ ரூ. 7.20*
இந்த விலையில் கிடைக்க-
கூடிய ஒரே உயர்ரக
ப்ளூ டிடர்ஜென்ட் பவுடர்
Godrej
Besto
Blue detergent powder
MADE IN INDIA BY:
GODREJ SOAPS LIMITED
VIKHROLI, BOMBAY 400 079.
NET WT. WHEN
PACKED 1000 G
PACKED IN
MAX. PRICE RS. 7·20
LOCAL TAXES EXTRA
• அதிக பளபளப்பு—பெஸ்டோவின் விசேஷ ஃபார்முலா துணிகளுக்குத் தருகிறது அதிக பளபளப்பு, அதிக வெண்மை.
• அதிக மென்மை—கடுமையான வாஷிங் பவுடர்களைப் போல் பெஸ்டோ துணிகளுக்குக் கெடுதல் செய்வதில்லை. மேலும் உங்கள் கைகளை மென்மையாக வைக்கிறது.
• அதிக வெண்மை—துவைக்கத் துவைக்க துணிகள் பழுப்படைவதில்லை. ஆகவே வெளுக்க வெளுக்க வெண்மை நீடித்து நிலைக்கும்.
பெஸ்டோ—ஒரு கிலோவுக்கு ரூ. 7.20 மட்டுமே!
* உள்ளூர் வரிகள் தனி.
Godrej
புதிய
பெஸ்டோ
கோத்ரெஜ் பெஸ்டோ
ப்ளூ டிடர்ஜென்ட் பவுடர்
உயர் தரத்திற்கும் சிக்கனத்திற்கும்
CHAITRA-B-G-276 TAM RR



Art is a reflection of the creative force

And so is technology – a reflection of the creative spirit that moves man out of his limited world to explore the limitless possibilities of the universe.

LARSEN & TOUBRO LIMITED



L&T/ADV Dept. INS 506

மந்தபுத்திக்காரன். கொறஞ்ச சம்பளக்காரன். அதனலை ஆக மாட்டேங்கறது. உங்களுக்கென்னங்க?''

''ஏன் இப்படி விட்டேத்தியாப் பேசறீங்க? நீங்க நினைக்கிற மாதிரி அழகுக்கும் கல்யாணத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லே. உங்க மனசுல அப்டி ஒரு காம்ப்ளெக்ஸ் இருந்தா மொதல்ல நீங்க அதை மாத்திக்கணும். நேரம் காலம் கூடி வரலே. நமக்கெல்லாம். அதான் நிஜம்!''

''எனக்கு நம்பிக்கை விட்டுப் போச்சு!''

கோயிலுக்கு வந்துட்டு இப்டி சொல்லாதீங்க. நா பி. ஏ. படிச்சிருக்கேன். நிறைய சீர் செனத்தியும் நகையுமா அப்பா கல்யாணத்துக்கு எப்பவும் ரெடியார்க்கார். நேரம் தான் கூடி வரலே. விதி நட்சத்திர ரூபத்துல நாளைக் கடத்தறது!''

''என்ன சொல்றீங்க?''

''எனக்குக் கேட்டை நட்சத்திரமாம். ஒண்ணு வீட்டுக்கு மூத்த பையனைபார்க்கணுமாம். இல்ல ஒரே பையனு பார்க்கணுமாம். நம்ம இஷ்டப்படி சட்டுனு கிடைச்சிடுமா வரன்? வர எடமெல்லாம் அண்ணு இருக்கற எடமாவே வரது. அப்டியே ஒண்ணு ரெண்டு வந்தா அது வேற விஷயத்துல தட்டிப் போயிடறது. மனசுக்குப்பிடிக்கிறதில்லே. ஃபேமிலி பாக்ரவுண்டு சரியால்ல இப்டி...என் பிரண்ட்ஸுக்கெல்லாம் ரெண்டு மூணு கொழந்தை பொறந்தாச்சு.''

இரண்டு மணி நேர கியூ கரைந்து தரிசனம் பண்ணிவிட்டு வெளியே வந்தார்கள்.

பிரகாரம் சுற்றும் போது அவள் கேட்டாள். ''உங்களுக்கு அண்ணு இருக்காரா?''

''இருக்கா. ரெண்டு பேர் இருக்கா.''

அவள் முகம் சட்டென்று மாறியதும் ''ஏன்?'' என்றுன்.

''சும்மாதான்! இல்லாட்டா நீங்களானம் என்னைப் பண்ணிக்கிறீங்களான்னு கேக்க நெனச்சேன்.''

அவன் அதிர்ந்தான். திகைப்பில் திக்கு முக்காடினுன். ஒரு கணம் என்ன பேசுவதென்று புரியாமல் திகைத்தான். ''நா...நா..ணு என்னையா? நிஜம்தானு? கனவில்லேயே! வேண்டாம். இப்ப ஏதோ வேகத்துல முன் வந்தாலும் பின்னுடி இதுக்காக வருத்தப்படுவீங்க!'' என்றுன் சிறிதுநேரம் கழித்து.

''இல்ல மாட்டேன். கல்யாணம் ஆகலேங்கற வருத்தத்துல கேக்கலே. நிஜம்மா தான் மனசார கேக்கறேன். மொதல்ல உங்களைப் பார்த்தப்போ எனக்குப் பிடிக்கலே தான். ரெண்டு மணி நேரம் பேசினதுலேருந்து உங்க மனசு ரொம்ப அழகானதுன்னு தெரிஞ்சுண்டேன். அதான் கேட்டேன். சரின்னு சொல்லுங்களேன். ரெண்டுபேருமே கோவிலுக்கு வந்த காரணம் ஜெயமாய்டும்.''

அவனுல் பேச முடியவில்லே. பூரிப்பும் துக்கமும் மாறி மாறி வர மரம் மாதிரி அவளையே பார்த்துக் கொண்டு நின்றுன்.

''பண்ணிக்கறேங்க! கண்டிப்பா பண்ணிக்கறேன். என்னுடை சம்பளம் எழுநூறு ரூபா தான். ஆனு கட்டிக்க துணியும் வயத்துக்கு சோறும் மனசுக்கு அன்பும் கண்டிப்பா தர முடியும் என்றுல'' என்றுன் பிறகு.

''அது போதும்! அப்பாவை வரச் சொல்றேன் உங்க வீட்டுக்கு.''

அவள் போய் விட்டாள். அவன் மறுபடியும் கோவிலே வலம் வந்தான் நன்றியோடு.

* * * * * * *

''ஒத்துக்க முடியாதுன்னு முடியாது! கல்லு கல்லா ரெண்டு அண்ணுமார்கள் இருக்கும் போது கேட்டை நட்சத்திரத்தைப் போய் யாரானம் எடுப்பாளா? பைத்தியமா பிடிச்சிருக்கு உங்களுக்கு? ஒரு நாளும் நாங்க இதுக்கு ஒத்துக்க மாட்டோம்'' மன்னிகள், தங்கை விஜயா அவர்களுக்கு இசைவாகப் போர் முரசு கொட்ட அங்கே இன்ெறுரு குருக்ஷேத்திரம் ஆரம்பித்து விடுமோ என்று அம்மா பயந்து விட்டாள். அப்பா யோசித்தார்.

''உங்க பிள்ளைக்கு தாராளமா கல்யாணம் பண்ணுங்கோ. யார் வேண்டான்னு? அதுக்கு எங்க வீட்டுக்காரங்களை பலி வெச்சுதான் பண்ணனுமான்ன? நாளைக்கு ஏடாகூடமா ஏதானம் ஆய்ட்டா எங்க கதி? பெரியவாளா இருந்து கூட கொஞ்சமானும் யோசிக்கலேன்னு என்ன அர்த்தம்?''

''ப்ளீஸ் மன்னி! கொஞ்சம் பொறுமையா கேளுங்கோ! இருந்திருந்து என்னையும் ஒரு பொண்ணு கல்யாணம் பண்ணிக்கறேன்னு இப்பதான் முன் வந்திருக்கா. ஜாதகம், நட்சத்திரம்னு சொல்லி இதையும் நிறுத்திடாதீங்கோ. இதெல்லாம் சுத்த மூட நம்பிக்கை!''

''ஆஹாஹாஹா! இவருக்கு கல்யாணம் ஆகணும்னு உடனே மத்ததெல்லாம் மூடநம்பிக்கையாம். நாளைக்கு நிஜமாவே ஏதாவது ஆய்டுத்துன்னு நடந்த கல்யாணத்தை வாபஸா வாங்கிப்பீங்க? இதப் பாருங்கோ. இந்த விஷப்பரீட்சைக்கெல்லாம் நாங்க தயாராயில்லே. ஏம்மா இதே மூல நட்சத்திரம்னு இப்டி சட்டுனு ஒத்துப்பீங்களா? ஏன்னு அது உங்களைப் பாதிக்குமே. அதனுல ஒத்துக்க மாட்டீங்க. இதுன்னு மாட்டுப் பொண்கள் தானேங்கற அலட்சியம் இல்லே?''

''போறும் நிறுத்துங்க! கன்னு பின்னுன்னு பேச வேண்டாம். நா அவளைத்தான் பண்

அரிசியில் வண்டு. புழுக்கள் நிறைந்து இருக்கும். இதுபோல் வண்டு. புழுக்கள் வராமல் இருக்க அரிசியுடன் 'போரிக்' பவுடரை கலந்து வைத்து விடுங்கள். சாதம் செய்யும் போது அரிசியை நன்ருகக் கழுவிப் போட்டால் போதும். இந்த முறையில் பயனடைந்தவர்:

—வசந்தா கோவிந்தன்.

ணிப்பேன். நீங்க யார் அதைத் தடுக்க? கல்யாணம் பண்ணி வெக்கணும்னு அக்கறை இல்லாட்டாலும் ஏதாவது லொட்டு லொசுக்கு சொல்லி நிறுத்த மட்டும் வந்துடுங்க. யார் வேணு எக்கேடு கெட்டு வேணு போங்க. எனக்கென்ன? நா அவளை பண்ணிக்கப் போறது நிச்சயம்!''

புயலாக சீறிவிட்டு அகன்முன். அனைவரும் ஸ்தம்பித்து நிற்க பயங்கர நிசப்தம் நிலவியது அங்கே.

இரவு. மொட்டை மாடிக்குப் படுக்கப் போனவன் பின்னடி அன்றும் அம்மா வந்தான்.

''வாசு!'' குரலடைக்க அழுகை பிசிறடித்த குரலில் அழைத்தாள்.

பயத்துடன் பார்த்தான் அவளை.

''வாசு...! அம்மா சொன்னு கேளேன். இந்த பொண்ணு வாண்டாம்.''

''அம்மா ஆ...!'' அதிர்ந்தான். ''நீயுமா? என்னம்மா இது? இவளையும் இழந்துட்டா இனிமே இந்த ஜென்மத்துலே கல்யாணமே ஆகாதும்மா எனக்கு. இவளை மாதிரி மன சழகை இனிமே யார் பார்த்து எப்பொ எனக்கு...?'' குரல் கம்மியது அவனுக்கு.

''வாசு எனக்கு நீயும் நன்னார்க்கணும். அதே சமயம் அவங்களும் நான் பெத்தவதா னடா யோசி! யார்க்கானம் ஏதானம் ஆய்ட்டா? நா என்னடா பண்ணுவேன். இத பாருடா! உனக்குக் கல்யாணம் ஆகலேன்னு ஆகலேங்கற துக்கம் மட்டும்தான் இருக்கும். ஆனு இந்தப் பெண்ணோட உன் கல்யாணத் துக்கப்புறம் பெரியவா சொல்ற மாதிரி அவா ளுக்கு. யார்க்கானம் ஏதானம் ஆய்ட்டா? நஷ்டம் எவ்வளோன்னு யோசி!'' அம்மா சத்தம் வராமல் வாயைப் பொத்திக்கொண்டு குலுங்கினாள்.

அவன் ஆணியடித்து வைத்தது போல் உட்கார்ந்திருந்தான். எதையும் யோசிக்கும் திராணியோ அம்மாவை எதிர்க்கும் சக்தியோ அப்போது சுத்தமாய் அவனுக்கில்லே. தாய்ப் பாசம் என்ற பெரிய சுருக்குக் கயிற்றால் அவனைத் தீர்த்துக் கட்டிவிட்டாள் அம்மா! அவள் கண்ணீருக்கு உண்மையிலேயே பெரிய சக்தி இருந்தது. அவன் அடிமனசை அது ஆட்டுவதிலிருந்து அவன் புரிந்து கொண்டான்.

''உனக்காக... கண்டிப்பா உனக்காகத் தான் நா அவளை இழக்க சம்மதிக்கறேன். ஆனு இனிமே முந்தி மாதிரி நா கல்யாணத் துக்குக் கண்டிப்பா ஏங்க மாட்டேன். மனசு நிறைஞ்சிருக்கும்மா. தேவலோக ஊர்வசி மாதிரி ஒரு பொண்ணு என்னையும் கல்யாணம் பண்ணிக்க மனசார சம்மதிச்ச அந்த ஒரு சந்தோஷமே இனி ஆயுசுக்கும் போறும் எனக்கு. இனிமே கல்யாணமே ஆகாட்டாத் தான் என்ன?''

''ஆகுண்டா! கண்டிப்பா ஆகும்! நீ நல்லார்ப்படா நல்லார்ப்ப!'' அம்மா கண்ணைத் துடைத்துக் கொண்டு தழுதழுப்புடன் ஆசிர்வதித்தாள் மறுபடியும்.

• அவன் அதைக் காதில் கூட வாங்கிக் கொள்ளாமல் யோகி மாதிரி வானத்து நட்சத்திரங்களை வெறித்துக் கொண்டிருந்தான் அவன் தழுவ விட்ட நட்சத்திரத்தைத் தேடுகிறானோ?


வெல்டு பட்டரைகளில் ஆர்க் வெல்டு செய்யும் போது அதில் தோன்றும் வெளிச்சத்தை அதிக நேரம்வேடிக்கை பார்த்தால்கண்களில் இரும்புத் தூள் சிக்கிக் கொண்டு அறுப்பது போன்று வலி உண்டாகும். கண்களில் பீளை பொங்கும். கண்கள் சிவந்து வீக்கம் கொடுக்கும்.

இத்தகைய சிரமங்களிலிருந்து கண்களைக் காப்பாற்ற அந்த வெல்டிங் வெளிச்சத்தைப் பார்த்தவர்கள் கண்கள் உறுத்துவது போல் இருந்தால் ஒருகனிந்த வாழைப் பழத்தை நன்றாகப்பிசைந்து ஈரத் துணியில் வைத்துக் கண்களின் இமைகள் மீது வாழைப்பழம் உள்ள துணியை நன்றாகப் படிந்து இருக்குமாறு செய்து கட்டு கட்டி தூங்கி விட வேண்டும். காலையில் எழும்போது கண்கள் குளிர்ச்சியாகவும், நன்றாகவும் தெரியும்.

வாழைப் பழத்திற்குப் பதிலாக உருளைக்கிழங்கை பாதியாக அரிந்து அதன் ஈரம் துணியின் வழியாக கண்ணின் இமைகளில் படுமாறு செய்தாலும் கண்ணைப் பாதுகாக்கலாம்.

— ஷபீனு.





நவராத்திரி அன்று உங்கள் வீட்டுக்கு வரும் விருந்தினருக்கு இந்த ''ஜவ்வரிசி போண்டா'' செய்து அவர்களின் பாராட்டைப் பெறுங்களேன். ஜவ்வரிசி 125 கிராம், உருளைக் கிழங்கு ½ கிலோ, வெங்காயம் ¼ கிலோ, சிறிதளவு அரிசி மாவு அல்லது ரவை, உப்பு தேவையான அளவு, பச்சை மிளகாய், கொத்துமல்லி சிறிது.

முதலில் ஜவ்வரிசியை 15 நிமிடம் வரை நன்றாக ஊற வைத்துக் கொள்ளவும். பிறகு உருளைக் கிழங்கை வேக வைத்து எடுத்துக் கொண்டு, தோலை நீக்கிவிட்டு அத்துடன் பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், ஊற வைத்த ஜவ்வரிசி, உப்பு, சிறிதளவு அரிசி மாவு (அ) ரவை, கறிவேப்பிலை ஆகிய எல்லாவற்றையும் கலந்து நன்றாகப் பிசைந்து எடுத்து இதனை நன்றாகக் காய்ந்த எண்ணெயில் வடைப் போலத் தட்டிப் போட்டு எடுக்க வேண்டும்.

— குப்பம்மாள்.



பெண்ணை ஆராயும் விஞ்ஞானிகள்

இதுவரை நிலவை ஆராய்ந்து வந்த அமெரிக்காவின் விண்வெளி விஞ்ஞானிகள் தற்போது ஒரு பெண்ணை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்... நிலவும் பெண்ணும் ஒன்று என்பதாலா... இந்த ஆராய்ச்சி? அல்ல. வேறு எதற்காக?

அமெரிக்காவைச் சேர்ந்தவள் மர்சியா. நாற்பது வயதான இவள் அமெரிக்காவின் ஓர் ஓட்டலில் பணிப் பெண்ணாக வேலை பார்த்து வந்தாள். நான்காண்டுகளுக்கு முன்பு, ஒருநாள் திடீரென இவள் மயங்கி விழுந்தாள்.. மூளையில் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதே இதற்குக்காரணம் என்பதைக் கண்டுபிடித்த டாக்டர்கள் ஓர் அறுவைச் சிகிச்சை மூலம் அந்த ரத்தக் குழாய் அடைப்பை நீக்கி விட்டனர்.. இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அவளுக்கு மயக்கம் எதுவும் வரவில்லை.

ஆனால் கத்தி போச்சு, வால் வந்தது என்ற கதையாய், மயக்கத்திற்குப் பதிலாக வேறொரு விசித்திரமான வியாதி அவளைத் தொற்றிக் கொண்டது. அது என்ன வியாதி?

திடீரென மர்சியாவின் உடல் ஐஸ் போல் குளிர்ந்து விடும். சில மணி நேரம் இவ்வாறு இருக்கும். பிறகு திடீரென உடலின் உஷ்ணம் அதிகரித்து தொட்டால் சூடு போட்டுவிடும் அளவிற்கு அவள் உடலில் அனல் வீசும். சில மணி நேரம் கழிந்த பிறகு மறுபடியும் அவள் உடல் ஐஸ் போலாகிவிடும். இவ்வாறாக அவளின் உடல் வெப்பநிலை குளிர் நிலையிலிருந்து கொதிநிலைக்கும், கொதி நிலையில் இருந்து குளிர் நிலைக்கும் மாறி மாறிச் சென்று கொண்டிருந்தது. இத்தகைய விசித்திரமான வியாதிதான், முதலில் கூறிய மூளை ஆபரேஷனுக்குப் பிறகு மர்சியாவைத் தொற்றிக் கொண்டது.

மர்சியாவின் இந்த விசித்திரமான வியாதியை அறிந்தார் அவள் வேலை பார்த்து வந்த ஓட்டலின் முதலாளி. அமெரிக்காவின் ஒரு பிரபலமான மருத்துவமனையில் அவள் சேர்க்கப்படத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய, மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள் மர்சியா. ஆனால் அந்த மருத்துவமனையின் டாக்டர்களோ மர்சியாவிற்கு எத்தகைய சிகிச்சை அளிப்பது என ஓர் முடிவிற்கு வர இயலாமல் திணறினர்.

உடல் மிகவும் குளிர்ந்தால் ஏற்படும் ஜன்னியை உடலின் உஷ்ண நிலையை அதிகப்படுத்திக் குணப்படுத்தலாம். உடல் மிகவும் சூடாகிக் காய்ச்சல் அதிகரித்தால், ஐஸ் கட்டிகளை வைத்து உடலின் உஷ்ண நிலையைக் குறைக்கலாம். ஆனால் மர்சியாவிற்கோ ஜன்னியும் காய்ச்சலும் மாறி மாறி வந்ததால் அவளுக்கு எத்தகைய சிகிச்சையை அளிப்பது என்பதில் சிக்கல் ஏற்பட்டது. மேலும் உடலின் உஷ்ண நிலை அடிக்கடி குறைந்து பின்பு அதிகமாவதால், இரத்தக் குழாய்கள் வெடித்து, மர்சியாவிற்கு எந்நேரத்திலும் திடீரென மரணம் ஏற்படலாம் எனவும் டாக்டர்கள் அஞ்சினர்.

முடிவாக ஒரு டாக்டர் ஒரு யோசனையைத் தெரிவித்தார். விண்வெளிப் பயணத்தின் போது தங்களின் உடல் உஷ்ண நிலை மாறாமல் இருக்க விண்வெளி வீரர்கள் அணிந்து கொள்ளும் விசேஷ உடையை மர்சியாவிற்கு அணிவித்து, அவள் உடலின்

உஷ்ணநிலையைச் சீராக இருக்கும்படிச் செய்யலாம் என்பதே அந்த யோசனை. இந்த யோசனையை மற்ற டாக்டர்களும் ஏற்றுக் கொள்ள, இதுபற்றிய செய்தி அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான 'நாசா' வுக்கு (Nasa) அறிவிக்கப்பட்டது. உடனே அந்த நிலையத்தின் விஞ்ஞானிகள் ஏறத்தாழ 15 ஆயிரம் ரூபாய் மதிப்புக் கொண்ட விண்வெளி வீரர் விசேஷ உடைகளை மார்சியாவுக்கு இலவசமாக அளித்தனர். அந்த உடை மார்சியாவுக்கு அணிவிக்கப்பட்டது. என்ன விந்தை! கூடிக் குறைந்து மறுபடியும் அதிகரித்த மார்சியாவின் உடல் உஷ்ண நிலை 'எப்போதும் ஒரே சீராக இருக்கத் தொடங்கியது. ஆனால் இந்த விசேஷ உடையைக் கழற்றி விட்டால் மறுபடியும் அவளுடைய உஷ்ண நிலை குறைந்து, கூடத் தொடங்கியது. ஆகவே, டாக்டர்களின் ஆலோசனைகளின்படி, இருபத்து நான்கு மணி நேரமும் விண்வெளி வீரர்களின் விசேஷ உடையை அணிந்து கொண்டுள்ளாள் மார்சியா. அதாவது, வீட்டுக்குள்ளே விண்வெளி உடையோடு இருக்க வேண்டிய கட்டாயம் அவளுக்கு ஏற்பட்டு விட்டது.

விண்வெளியில், விண்வெளி வீரர்கள் பறக்கும் போது, அவர்களின் உடல் உஷ்ண நிலை கூடுவதும் குறைவதும் உண்டு. இதைத் தடுக்க அவர்களுக்கு விசேஷ உடைகள் அணிவிக்கப்பட்டு விடுவதால் உடலின் உஷ்ண நிலை அதிகரித்து, குறைந்து, மறுபடியும் அதிகரிக்கும் போது, அவர்களின் உடலில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதை அறிய முடியவில்லை. ஜன்னியும் காய்ச்சலும் மாறி மாறி வரும் விசித்திரமான வியாதியைக் கொண்டவர் உலகிலேயே நீங்கள் ஒருவர்தான். ஆகவே உங்களின் உடலை ஆராய்வதற்கு எங்களுக்கு அனுமதி தந்தால், விண்வெளியில் மனித உடலின் உஷ்ண நிலை அடிக்கடி மாறும் போது, உடலில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதைக் கண்டு கொள்ள எங்களுக்கு உதவியாக இருக்கும். எனவே எங்களின் 'ஆராய்ச்சிப் பொருளாக' நீங்கள் மாற முடியுமா என அமெரிக்க விண்வெளி விஞ்ஞானிகள் மார்சியாவுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தனர்.

அவர்களின் இந்த வேண்டுகோளை மார்சியா மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ள, இப்போது மார்சியா அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் பரிசோதனைச் சாலையில் உள்ளாள். அவளைப் பல பரிசோதனைகளுக்கு உட்படுத்தித் தற்போது ஆராய்ந்து வருகின்றனர் அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள்...

— ஷர்மிலி —



சில பிரச்னைகள்

மஞ்சுளா ரமேஷ்

அந்தப் பெண் ஆறு மாதக் குழந்தையை மடியில் போட்டுத் தூங்கப் பண்ணிக்கொண்டே அழுதுகொண்டு இருந்தாள்.

என்ன கதை?

வேறென்ன கதை? வீட்டுக்கு வீடு இருக்கும் கதைதான்!

மாமியாரோ,நாத்தனாரோகாலையில்எழுந்தவுடன் அர்ச்சனை செய்திருக்கிறார்கள். உட்கார்ந்தால் குற்றம், எழுந்தால் தப்பு. இவள் ஏதோ சொல்லி பதிலுக்கு அழ, கணவன்காரன் சாப்பாடு பிடிக்காமல் தட்டைத் தூக்கி எறிந்து விட்டுப் போய்விட்டான்.

அதுதான் இப்போது அழுகை—

தான் காலேஜின் தேவதை போல உலாவி வந்தநாட்களும்,வெள்ளை ஜிப்பாவில்யாருக்குமே மசியாமல் ஹீரோவாக இருந்தவன் தன் காலில் விழுந்து காதல் பிச்சை கேட்க, இவளோ பெருமிதமாக மறுத்த நாகரீகமான காலங்களும்...

எத்தனை அற்புதமான நாட்கள் அவை...?

எல்லாம் போய் இன்றைக்கு இந்த 'எட்டாங்கிளாஸ், எஸ். எஸ். எல். சி. களிடம் இனமும் மல்லுக்கு நிற்க வேண்டிய தலையெழுத்தை நினைத்து அழுது கொண்டிருக்கிறாள்.

''ம்ஹூக்கும்...''

கனைப்புச் சத்தம் கேட்டுக் கலங்கிய கண்களுடன் நிமிர்ந்து பார்த்தாள். பக்கத்துப் போர்ஷன்காரர் வாயில் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே இவளைப் பார்த்து ஆறுதலாகச் சிரித்தார்.

''அழாதேம்மா, ஐயையோ பெண்களா இவர்கள். பேய்கள். இன்றைக்கு நேற்றைக்கா இந்தக் கதை. இந்த வீட்டுக்கு வந்த நாளிலிருந்து இவர்கள் இப்படித்தான்... நீ இப்படிச் சாதுவா இருந்து பிரயோஜனமில்லை.. எதிர்த்து நில்லு... தானா அடங்கிடுவாங்க...''

ஒரே ஒரு கணம் தனக்கு ஆறுதல் சொல்ல இவர் கிடைத்தாரே என்று நெகிழ்ந்தாலும் மறுகணம் தூக்கிவாரிப் போட நிமிர்ந்தது.

ஆமாம், இதே ஆள்தான் பெண் பார்க்க வந்த போதும் கூட வந்த ஆள். நிச்சயதார்த்தத்தின் போதும் கடைசி பந்தி வரை விடாமல் வந்து சாப்பிட்டு விட்டு, சுகமான ஏப்பத்தோட மொட்டை மாடியில் உருண்டு விட்டுப் போன ஆள்.

அப்போதெல்லாம் ஒரு வார்த்தை. ஒரே ஒரு வார்த்தை...

''உங்க பெண்ணை அங்கே கொடுக்காதீங்க. அவர்கள் ரொம்பவும் மோசமானவர்கள்...''

என்று சொன்னாரா...? இன்றைக்கு நொட்டை பேச மட்டும் வந்துவிட்டார்.

வீட்டில் சாப்பாடு பலம் போல இருக்கிறது... 'கபக்'கென்று நிமிர்ந்தாள்.

''ஏன் மாமா, இன்னிக்கு இவ்வளவு கரிசனமா பேசறீங்களே, அன்னிக்கே இவங்க இப்படின்னு சொல்லியிருக்கலாமே...'' ஆத்திரத்தோடு கத்தினாள்.

''ஐயையோ, எனக்கேன் அந்தப் பொல்லாப்பு...?''

''அப்படின்னா இப்பமாத்திரம் ஏன் கிளறி விட்டு வேடிக்கை பார்க்கறீங்க...? என் தலையெழுத்து நா அனுபவிச்சிட்டுப் போறேன், போங்க, உங்க வேலையைப் பார்த்துண்டு..''

இவள் புத்திசாலிப் பெண். அதனால்தான் இன்றைக்கு வெற்றிகரமான இல்லத்தரசியாக கொடிகட்டி வாழ்ந்து கொண்டு இருக்கிறாள். மூன்றும் மனுஷருக்கு இடமே கொடுக்கவில்லை. அடுத்த வீட்டுக் காரியின் விமரிசனத்தைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. தன் வாழ்க்கையின் மேடு பள்ளங்களைத் தானே சரி செய்யத் துவங்கினாள்.

இன்னொரு கதையைப் பார்ப்போமா...?

ஆனாலும் உன் மருமகளுக்கு இத்தனை வாய் கூடாதுமா. நானும் காலையில சண்டையைக் கேட்டுண்டுதான் இருந்தேன். அப்படி என்ன சொல்லிட்டே நீ...? காலையில தடிமாடு மாதிரி குளிக்காம எட்டு மணி வரைக்கும் நிக்கறியேன்னுதானே சொன்னே? இதுக்கே இந்தக் குதி குதிக்கிறாளே இவ. இன்னும் எங்ககாலத்துமாமியாருங்கமாதிரியெல்லாம் இந்தப் பக்கம் குத்தி அந்தப் பக்கம் இழுக்க ஆரம்பிச்சா எல்லாம் பேசினா என்னதான் பண்ண மாட்டா?''

ரூமுக்குள்ளே இருந்து பாய்ந்து வந்தாள் மருமகள்.

"போறும் நிறுத்துங்கோ. இன்னிக்குத் தடி மாடும்பா. நாளைக்கு இன்னும் ஏதாவது சொல்வா. எல்லாத்தையும்கேட்டுக்கணும்னு தலையெழுத்தா? அப்படியொண்ணும் இந்த வீட்டுக்கு நா வேலைக்காரியாட்டம் வரலை. அஞ்சும் மூணும் அடுக்குமாத்தான் செஞ்சு அனுப்பினா எங்க அம்மா வீட்ல...:"

மாமியார் பிடித்துக் கொண்டாள்.

"போறுமே உங்கம்மா சீர் பண்ண லட்சணம். வெங்கல உருளிக்குள்ள பூனைத்தான் தலையை உருட்டணும். என்னன்னு ஆடிக்கு வெள்ளி டம்ளர், தலை தீபாவளிக்கு மாப்பிள்ளைக்கு வைரமோதிரம்..."



சில வார்த்தைகள்

"ஏன், உங்க அம்மா வீட்ல பண்ணதைப் பீத்திக்கிறீங்களோ... உங்கள மாதிரி நான் ஒண்ணும் உக்காந்து சாப்பிடலை... ஆயிரமாயிரமா சம்பாரிச்சுக் கொட்டறேன்..."

"எனக்கா கொட்டறே...?"

ஆக இப்படியாகத் துவந்த யுத்தம் ஞாயிற்றுக்கிழமையை விழுங்கி, திங்கட்கிழமை ஆபீஸில் நாலு ஆஸ்ப்ரோ விழுங்கியும் தீராமல், இடைவெளியில் தோழிகளிடையே ஸஹஸ்ர நாமாவளியாகக் கொட்டினாள்.

தங்கள் தோழி சண்டைக் கோழியாகச் சிலிர்த்து நிற்பதைக் கைதட்டி ஆமோதித்த மற்ற ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள் மேலும் பலபாயிண்ட்டுகளை விலாவாரியாகஎடுத்துக் கொடுத்தார்கள். மேலும் பல புதிய ஆயுதங்களுடன் மாலையில் மல்யுத்தத்தில் இறங்கினாள் இவள்.

இந்தப் பெண்ணின் வாழ்வில் முழக்கும் போர்முரசில்என்ன சந்தோஷம் இருக்கிறது? அரிக்கும் புண்ணைச் சொரிந்து சொரிந்து இன்பம் காணும் நிலைதான். ஒருநாள் புண் புரையோடி பெரிய ஆபரேஷனுக்குத் தயாராக வேண்டியதுதான்.

குடும்பத்தில் சண்டை இல்லாமல் இல்லை. கருத்து வேற்றுமைகளுக்கும் இடமிருக்கும். ஒருவருக்கொருவர் மனஸ்தாபங்களும் இருக்கத்தான் செய்யும்.

ஆனால்...

இந்தக் குடும்ப விவகாரத்தில் மூன்றாம் தலை நுழையும் போதுதான் குரோதங்களும், வஞ்சம் தீர்த்தலும், ஒர வஞ்சனையுமாக காளிக்குப் பல கைகள் பல ஆயுதங்களுடன் முளைத்தாற் போல ஆகின்றது.

புண்ணைச் சொரிந்து விட்டுக் கொள்ளும் சகோதரிகள் ஒரு நிமிஷம் நினைத்துப் பாருங்கள்.

இந்தப் பக்கத்துப் போர்ஷன்காரர் நிஜமாகவே இவள்மேல் அக்கறை உள்ளவர்தானா...?

நாளைக்கு உடம்புக்கு என்று வந்து படுத்தால் கஞ்சி காய்ச்சிக் கொடுப்பாரா...?



இதே அலுவலகத் தோழிகள் மாலையில் வீட்டுத் தோட்டத்தில் உட்கார்ந்து அசை போட சுவாரசியமான விஷயம் கிடைத்தது என்றுதான் நினைப்பார்கள்.

உண்மையான அக்கறை கொண்ட மனிதரோ,

தோழியின் வாழ்வு செழிக்க நினைக்கும் சக ஊழியர்களோ,

நினைப்பதே வேறுவிதமாக இருக்கும்.

உண்மையிலேயே அடாத குடும்பமாக இருக்குமானால் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டாமோ?

"உங்க ஃபேமிலிக்கும் அவங்க ஃபேமிலிக்கும் ஒத்து வராது. அவங்க போக்கே வேறே..." என்று சொல்லியிருக்க வேண்டும்.

குடும்பத் தகராறைப் பற்றிப் புகார் பேசும் தோழியைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும்.

"மொதலில் சண்டையை ஆரம்பித்தது யார்? தரக் குறைவாக யார் முதலில் பேசியது? என்ன காரணம் இந்தச் சண்டைக்கு...?"

கேட்டிருக்க வேண்டாமோ?

இதுவே என்றில்லை, கணவன் மனைவி மேல் சந்தேகம் கொள்ள வைப்பது, மனைவிக்குக் கணவன்மேல் வெறுப்பைத் தூண்டுவது இதெல்லாம் இவர்களின் பொழுது போக்கு.

இது மாற்றவே முடியாத மனித சுபாவம். ஒரு விபத்து நடந்து விடட்டும். சுற்றி எத்தனை மனிதர்கள் நின்று வேடிக்கை பார்க்கிறார்கள் என்று கவனியுங்கள். உண்மையிலேயே 'ஆன் த ஸ்பாட்' இறந்துவிட்ட அந்த இளைஞனின் மேல் அனுதாபமா?

கதறிக் கதறித் துடிக்கும் அன்னையின்மேல் இரக்கமா?

எதிர்காலம் தெரியாமல் நிற்கும் மனைவியின் மேல் கருணையா?

ஒன்றுமில்லை, ஜஸ்ட், பல வேடிக்கைகளில் இதுவும் ஒன்று. அவ்வளவுதான்.

"விபத்தைப் பார்த்தவர்கள் யாராவது ஒருத்தர் சாட்சிக் கையெழுத்துப் போடுங்கள்" என்று சொல்லிப் பாருங்கள். கல்லடி பட்ட காக்காய் கூட்டம்தான். ஓடியே போய் விடுவார்கள்.

பெரிய விபத்திலிருந்து வாழ்க்கையில் குடும்ப விபத்துக்கள் வரை எல்லாமே இப்படிப் பட்டவர்களுக்கு ஒரு வேடிக்கை தான்.

எனவே என்றைக்குமே மூன்றாம் மனிதர்களின் பேச்சுக்களை, விமரிசனங்களை பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.

இது நம் வாழ்க்கை. பெண் பார்க்க வந்த அன்னைக்கு 'இந்தமாப்பிள்ளை பிடித்திருக்கா?' என்று அம்மா கேட்டபோது தலைகுனிந்து தலையாட்டி மாங்கல்யத்தை ஏற்றுக் கொண்ட வாழ்க்கை.

இதில் மூன்றாம் மனிதரின் வாய்க்கு என்ன வேலை? அதனால் சீரழிந்த குடும்பங்கள்தான் எத்தனை? ஏன், உங்கள் வாழ்வில் அப்படி நடந்த சம்பவங்களைத்தான் நினைத்துப் பாருங்களேன், நான் சொல்வதன் அர்த்தம் புரியும்.

அதற்காக மூன்றாம் மனிதர் தலையிடு கூடாது என்று சொல்லவில்லை. எத்தனை கொடுமைப்படும் அப்பாவிப் பெண்களுக்கு, வாழ்வில் தைரியம் இழந்து தற்கொலை வரை துணியும் அபலைகளுக்கு ஆறுதல் சொல்பவர்கள் இவர்கள். நியாயம் கிடைக்கப் பாடுபடுபவர்கள் இவர்கள். இப்படிப்பட்டவர்கள் வாழ்க!

ஆனால் இந்த மூன்றாம் மனிதரின் மூக்கு எந்த நோக்கத்தோடு நுழைகிறது என்பதை மட்டும் ஒரு நிமிஷம் யோசித்துக் கொள்ளுங்கள்.

இல்லையென்றால்...

'தடி மாடு' பட்டம் கொடுத்த மாமியாரும், மருமகளும் எகிறிக் குதித்துக் கொண்டிருக்க, என்னை விட்ட மகராசி மற்ற குடித்தனக்காரிகளோடு சேர்ந்து கண்ணடித்துச் சிரிக்கும் நிலைக்குத்தான் ஆளாவீர்கள்.

எனது திருமணத்திற்கு முன் எங்கள் வீட்டில் ஒருநாள் என் அம்மாவுக்குத் தலை வலிக்கிறது என்று என்னை மாங்கொட்டை போட்டுக் குழம்பு வைக்கச் சொன்னார்கள். எனக்கு அவ்வளவாக தெரியாததால் கையால் மாங்கொட்டையின் உள்ளிருக்கும் பருப்பை எடுத்துப் போட்டுக் குழம்பு வைத்திருந்தேன். என் அப்பா வந்து, "என்ன குழம்பு?" என்று கேட்டார்கள். "மாங்கொட்டை குழம்பு" என்று சொல்லி விட்டுச் சாப்பாடு போட்டேன். "எங்கே மாங்கொட்டையைக் காணோம்?" என்று கேட்டார். "இதோதான் போட்டிருக்கேனே?" என்று சொன்னேன். அதைப் பார்த்துவிட்டு விழுந்து, விழுந்து சிரித்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் புரிந்தது.



நான் எப்போது ஊருக்குப் போனாலும் "சாந்தியை மாங்கொட்டை போட்டுக் குழம்பு வைக்கச் சொல்" என்று சொல்லிச் சிரிப்பார்.

— சாந்தி இளங்கோவன்.



எங்கள் வீட்டுக் கொலு

அலமேலு நாராயணன்:

"அக்டோபர் மாதம் வருதுன்னாலே எனக்கு சந்தோஷம். நவராத்திரியாலயான்னு கேக்கறீங்களா? அதுவும் கூடத்தான். அப்பத் தான் வருஷா வருஷம் என் பெண் அமெரிக் காலேர்ந்து வருவா."

ஒரே பொண்ணு. அமெரிக்க மாப்பிள் ளைன்னவுடனே கஷ்டமாத்தான் இருந்தது. பொண்ணை விட்டுப் பிரியணுமேன்னு. ஆனா லும் நல்ல வரன். நம்ப பாசத்துக்காக பொண் ணோட வாழ்க்கைய கெடுக்கக் கூடாதுன்னு கல்யாணம் பண்ணிக் கொடுத்தோம்.

என் பெண்ணுக்கு இப்ப ஆறு வயசுல ஒரு பொண்ணு இருக்கா. அவளுக்கு நம்ப கலாசாரம் மறக்கக் கூடாதுன்னு இந்தச் சமயத்துல கூட்டிண்டு வருவா. அதனாலே வருஷத்துல ரொம்ப கிராண்டா நாங்க கொண்டாடறது நவராத்திரியதான். தினம் ஒரு ஸ்வீட், பலகாரம், சுண்டல். அவளைப் பார்க்க வர்ற விசிட்டர்ஸ் என ஒரே கோலா கலம்தான் போங்கள்..."

உஷா சீதாராமன்:

"ஐந்து வருஷத்திற்கு முன் நவராத்திரிக்கு நடந்த சம்பவத்தை என்னால ஆயுசுக்கும் மறக்க முடியாது.

ஒரு அழகான நரிக்குறவர் பொம்மை வாங்கிக் கொலுவுல வச்சிருந்தேன். அதுக்கு என் கையாலயே தினமும் ஒரு சின்ன மாலை யும் தொடுத்துப் போடுவேன்,· காரணத் தோடதான்.

என் மாமியாரோட அம்மா ரொம்பப் பழைய கால மனுஷி. தள்ளாத வயசு. கிரா மத்துலேருந்து வந்திருந்தாங்க அந்தக் காலப் பார்வையோட.

"இதென்னடி குறவன் பொம்மைய போய் ரெண்டாவது படிக்கட்டுலே வச்சிருக்கே. சீச்சீ... எடுத்துக் கீழே வை..."

என்றார்.

அப்போ அகஸ்மாத்தா அந்தப் பக்கம் வந்த என்னோட கணவர் பாட் டியைத் தேற்றினார்.

"பாட்டி, உஷாவக் கோவிச்சுக்காதீங்க. நம்ப குட்டி ராஜா (என்னோட இரண்டு வயது மகன்) இருக்கானே, அவன் போன வாரம் என்ன காரியம் பண்ணினான் தெரியுமா? வாசல்ல 'அம்மா தாயே!'ன்னு குறவங்க சாப்பாட்டுக்காகக் கத்தியிருக்காங்க.

அம்மா உள்ள இருந்துண்டே, 'ஒண்ணும் இல்லே போ'ன்னுட்டாங்க! குட்டி ராஜா அம்மாவுக்குத் தெரியாம ஒரு பிடி சாதத்த எடுத்துண்டு வாசலுக்கு ஓடினான். அதுக் குள்ள அவங்க பக்கத்து வீடு, மூணாவது வீடுன்னு போய்ட்டாங்க. இவன் சாதத் தே எடுத்துண்டு பின்னாடியே ஓடினான்.

வழக்கமா நம்ப வீட்டுக்கு வர்ற குறவன் தான் அவன். குட்டி ராஜாவோட தண்ட சத்தத்தைக் கேட்டுட்டு அவன் வரவும், அதே சமயம் ஒரு ஸ்கூட்டரும் வந்துருக்கு. நம்ப பய குடுகுடுன்னு நடுரோட்டுலே ஓடி வர்றத பார்த்துட்டு வெகு வேகமா ஓடிவந்து ராஜாவை புடிச்சுத் தள்ளியிருக்கான். அவன் ஸ்கூட்டர்ல மாட்டிண்டுட்டான்..."

"ஆமாம் பாட்டி, ராஜாவ காண மேன்னு பின்னாடியே நான் போற நேரத்துக்கு

அந்த ஆக்ஸிடெண்ட் சரியா நடந்தது. மண்டை உடைஞ்சு அந்தக் குறவன் பாவம்... நம்ப ராஜாவுக்கு வந்திருக்க வேண்டிய எமன் அவனை கொண்டு போய்ட்டான்...''

பாட்டி அப்படியே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தார். மறுநாள் தன்னுடைய ஜப தபம்முடிந்து வந்துகையோடு அந்தக்குறவன் பொம்மைக்குச் சந்தனம் இட்டுப் பொட்டும் இட்டார்! வருஷா வருஷம் அந்தக் குறவன் பொம்மை எங்களுடைய கொலுவில் இடம் பெறத் தவறுவதில்லை!

விஜேந்தினி:

''எங்கள் வீட்டில் கொலு வைத்தால் ஆகாது என இரண்டு தலைமுறையாகக் கொலுவே வைப்பதில்லை. பொம்மைகள் வைத்தாலே ஏதாவது கெட்ட சம்பவம் வீட்டில் நடக்குமாம்.

என் பெண் ஜயந்தியோ, என்னைப் பிய்த்து எடுப்பாள். அம்மா என் ஃபிரண்ட்ஸ் வீட்டில் எல்லாம் கொலு வைக்கிறாங்க. அவங்க கூப்பிடறப்போ நான் கூப்பிட வேண்டாமா என ஒவ்வொரு கொலுவுக்கும் ரகளைதான்.

அவளுடைய வாடிய முகத்தைக் காணச் சகிக்கவில்லை. நான் நித்தியமும் காமாட்சி அம்மனை வைத்து எனக்குத் தெரிந்த ஸ்லோகத்தைச் சொல்லிப் பூஜை செய்வேன். அவளையே சரணாகதி அடைந்தேன்.

''அம்மா தாயே! உன்னைக் கொண்டாடி கொலுவேற்றும்திருநாள்தானே இது!எங்கள் வீட்டில் தங்க மட்டும் ஏன் மறுக்கிறாய்? உன் மேல் பாரத்தைப் போட்டு இந்தத் தடவை கொலு வைக்கிறேன். நீதான் துணை!'' என பிரார்த்தனை செய்து விட்டுப் பொம்மைகளை வாங்கினேன்.

என்பெண்ணுக்கு மகாகுஷி. என் மாமியாரிடம் நான் வாங்கிக் கொண்ட பேச்சு வார்த்தைகள்! ஒரு நிலையில் என் கணவரே, ''விடேன்மா, ஒண்ணும் ஆகாது!'' என்று சொல்லும்படி ஆயிற்று.

நடுங்கிக் கொண்டே அந்த ஒன்பது நாளும் கழித்தேன்., அப்புறம் அந்த வருஷம் பூரா யாருக்காவது தலைவலி என்றால் கூட பயமாக இருக்கும். என் மாமியார் ரெடியாக இருந்தார், என் மேல் பழியைப் போட. நல்ல காலம், ஒன்றும் ஆகவில்லை.



> சமையலறை மாதத்திற்கு ஒரு முறை புதிதாக மாற்றி அழகுபடுத்துங்கள். எப்போதும் ஒரே மாதிரி இருப்பதால், மனத்தில் வெறுப்பும், சலிப்பும் ஏற்படும். டப்பாக்கள், பாட்டில்களை புதியவாக வாங்கி வைத்து, பழையவைகளை அப்புறப்படுத்தல் நல்லது. அதிக நேரம் சமையலறையிலிருக்கும் பெண்களுக்கு இம்மாதிரி சிறிய மாறுதல்களால் உற்சாகம் ஏற்படும்.
>
> — விஜயா சீனிவாசன்.

இந்தவருஷம்நான்கொலு வைத்து ஆறாவது வருஷம். தினமும் ''இன்னிக்கு என்ன சுண்டல் பண்ணப் போறே'' என்று கேட்டு அக்கறையோடு தானும் உதவி செய்கிறார் என் மாமியார்.

கலாவதி வைத்தியநாதன்:

''எங்க வீட்டு வறுமையைப் போக்கியதே அந்த நவராத்திரி நாயகிதான்னு சொல்லணும். அப்ப அவருக்கு வேலையும் போய் ரொம்பத் திண்டாடிக்கிட்டு இருந்தோம். நல்ல சம்பாத்தியத்தோட கான்வெண்ட்லே குழந்தைங்க படிச்சிண்டிருந்த குடும்பம். யார் கண் பட்டதோ, கம்பெனிய இழுத்து மூடிட்டாங்க. கையில இருந்த நகைய வித்து நல்ல நாள் வருமான்னு ஏங்கிக்கிட்டிருந்தோம்.

இந்தச் சமயத்துல்தான் அந்த வருஷ நவராத்திரி வந்தது. வருஷா வருஷம் ரொம்ப கோலாகலமாக பண்றது. இந்த வருஷம் அம்மனை மூளியா வைக்கக் கூடாதுன்னு அழுதுக்கிட்டே சரஸ்வதி, லட்சுமி, துர்கா தேவி படங்களை மட்டும் அலமாரியில வச்சு கிடைச்ச பூவ வச்சிருந்தேன். நைவேத்தியம் பண்ண என்ன இருக்கு?

அன்னிக்குச் சாயங்காலம் துக்கம் தாங்க முடியாம என் பசங்கள பக்கத்துல வச்சுக்கிட்டு அம்மன் மேல ரெண்டு பாட்டுப் பாடினேன். என் கண்லேருந்து கண்ணீர் தாரை தாரையா இறங்கிட்டிருந்தது. பாடி முடிச்சப்புறம் வாசல்ல நிழலாடறதைப் பார்த்தவுடனே திரும்பினேன்.

எங்க வீட்டுக்கு மூணாவது வீட்டுக்காரர் நின்னுக்கிட்டிருந்தார்.

''அம்மா, உங்க குடும்பத்தப் பத்தி நல்லா தெரியும் எனக்கு. பல தடவை என் வொய்ஃப் கிட்டே சொல்லி மனசு கஷ்டப்படுவேன். பணத்தால என்னால உதவி செய்ய முடியாம இருந்தது...

''நீங்க இவ்வளவு நல்லா பாடுவீங்கன்னு எனக்குத் தெரியாது. ரொம்ப நல்ல வாய்ஸ் உங்களுக்கு. எனக்குத் தெரிஞ்சவர் ஒருத்தர் ரேடியோவுல இருக்கார். உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா அவர் மூலமா ஏதாவது ட்ரை பண்ணுவோம்னார்...

கரும்புத் தின்னக் கூலியா? மறுநாளே என்னோட' கணவரோட அனுமதியோடு போனேன். ஆடிஷன் நடந்தது., பல வாய்ப்புக்கள் ரேடியோவுலேருந்து வந்தது. அங்க கிடைச்ச நண்பர்கள் மூலமா மெல்லிசைக் குழுக்கள்லேயும் பாட ஆரம்பிச்சேன். ஒரு வருஷம் கஷ்டமில்லாமப் போயிடிச்சு.

என் கணவருக்கும் போன வேலை திரும்பி வந்தது. நானும் அடிக்கடி பாடிக்கிட்டுத் தான் இருக்கேன். என் வாழ்க்கையை இசை நிரப்பின 'கொலு'வை வருஷா வருஷம் நாங்க நன்றியோடு கொண்டாடறோம்...''

பேட்டி: புவனேஸ்வரி

அமிர்தாஞ்சனின்



“அழியாச் சின்னங்களை அடையாளம் காணும்” போட்டி

ரூ.2.75.000

மதிப்புள்ள பரிசுகளை வெல்வீர்!


போட்டி மிகவும் எளிது! உலகப் புகழ் வாய்ந்த 5 அழியாச் சின்னங்களின் படங்கள் இங்கு தரப் பட்டுள்ளன. அவற்றின் பெயர்கள் 1 முதல் 5 என்று இலக்கமிட்டும் தரப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்: அந்த அழியாச் சின்னங்கள் எவை என்று ஒவ்வொரு படத்தின் அடியிலும் தரப்பட்டுள்ள கட்டத்தில் பொருத்த மான எண்ணை எழுத வேண்டும்.

பின்னர், கீழ்க்கண்ட கட்டத்திலுள்ள வாக்கி யத்தை மேலும் 10 வார்த்தைகளுக்கு மேற் படாமல் எழுதி, பூர்த்தி செய்து அனுப்பவும்.

உங்கள் நுழைவுத்தாள்களை 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப்பெட்டி ஒன்றுடன் அனுப்ப வேண்டும். இந்த விளம்பரத் தையே நுழைவுத் தாளாகப் பயன்படுத்தலாம்.


விரைந்திடுவீர்! நுழைவுத்தாள்களை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: அக்டோபர் 15, 1985

அமிர்தாஞ்சன் பெயின் பாம்
தலைவலி, உடல் வலி, தசை வலி, மற்றும் சுளுக்கு, இவற்றிற்கு துரித நிவாரணி



10 முதல் பரிசுகள்
கலர் டிவி-க்கள்

100 இரண்டாவது பரிசுகள்
14" பிளாக் & ஒயிட் டிவி






200 மூன்றாவது பரிசுகள்
எலெக்ட்ரானிக் கைக்கடிகாரங்கள்.

போட்டி விதிகளும் நிபந்தனைகளும்:

1. அமிர்தாஞ்சன் லிமிடெட் ஊழியர்கள், அதன் விளம்பர ஏஜென்சிகள் மற்றும் அவர்களது உறவினர்களைத் தவிர, இந்தியாவிலுள்ள யாவருமே போட்டியில் பங்கு பெறலாம்.
2. நீங்கள் எத்தனை நுழைவுத்தாள்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப்பெட்டி ஒன்றும் இணைக்க வேண்டும்.
3. பென்சிலால் எழுதப்பட்ட நுழைவுத்தாள்களும், அழிக்கப்பட்ட குறிகள் கொண்டவை அல்லது சீர்குலைந்தவை, தெளிவாக எழுதப்படாதவை, அல்லது தபால்தலை ஒட்டப்படாதவை அல்லது குறைவாக ஒட்டப்பட்டவை ஆகிய நுழைவுத்தாள்களும் நிராகரிக்கப்படும்.
4. நுழைவுத்தாள்களுடன் அனுப்பப்படும் அட்டைப்பெட்டிகள் சேதமுற்றிருந்தாலும், சீர்குலைந்து இருந்தாலும், போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. வியாபாரியின் பெயரும் முகவரியும் எழுதப்படாத நுழைவுத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
6. தபாலில் இழந்துபோன அல்லது தாமதமாக வந்து சேரும் நுழைவுத்தாள்களுக்கு அமிர்தாஞ்சன் பொறுப்பேற்காது.
7. நுழைவுத்தாள்களை ஆங்கிலம் அல்லது மற்றெந்த இந்திய மொழியிலும் எழுதலாம்.
8. முடிவை ஒரு தீர்ப்பாளர் குழு பரிசீலிக்கும். அவர்களின் தீர்ப்பே முடிவானது. அதற்குக் கட்டுப்பட வேண்டும்.
9. போட்டி சம்பந்தமாக எவ்வித கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
10. நுழைவுத்தாள்களும், விளம்பர வாசகமும் அமிர்தாஞ்சன் லிமிடெட்டின் உரிமைகளாகும்.
11. போட்டி சம்பந்தப்பட்ட சட்டப்படியே பரிசுத் தொகை வழங்கப்படும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட நுழைவுத் தாள்களும், 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப் பெட்டியும் அடங்கிய உறையின் மீது "அமிர்தாஞ்சன் போட்டி" என்று எழுதி, அமிர்தாஞ்சன் லிமிடெட், 42-45, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004. என்னும் முகவரிக்கு அக்டோபர் 15, 1985-க்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.
13. பரிசு பெற்றவர்கள் தபால் மூலம் அறிவிக்கப்படுவார்கள். முதல் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் முக்கியமான நாளேடுகளில் வெளியிடப்படும்.



1. விடுதலைச் சின்னத்தின் சிலை
2. தாஜ் மகால்
3. கோமதேஸ்வரரின் உருவச்சிலை
4. செயின்ட் பீட்டர் சதுக்கம்
5. பீசா நகரத்தின் சாய்ந்த கோபுரம்

நான் அமிர்தாஞ்சன் பெயின் பாம் உபயோகிக்கிறேன். ______
ஏனெனில் ______

______

______

______

பெயர் ______

முகவரி ______

______

90 ஆண்டுகளாக நம்பகமானது.

அமிர்தாஞ்சன்

துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது
தீய பின்விளைவுகள் இல்லாதது.

வியாபாரியின் பெயர் : ______

______

முகவரி : ______

______

பண்டிகைகள்



கலந்துரையாடலில் பங்கு பெற்றோர்:

வழுத்தூர் ஸ்ரீ ராஜகோபால சர்மா — உபன்யாசகர்.

திருமதி பாலாம்பாள் ராஜகோபாலசர்மா

திருமதி எம். எஸ். சுந்தரிபாய் — பழம் பெரும் நடிகை.

திருமதி சியாமளா வெங்கட்ராமன் — டைரக்டர், சுப்ரீம் எனமல்ட் பிரைவேட் லிட்.

திருமதி வித்யா ஜெய்குமார் — குடும்பத் தலைவி.

திருமதி ராதா கோபாலகிருஷ்ணன் — குடும்பத் தலைவி.

குமாரி ராணி ஜானகி ஈஸ்வரன் — கிண்டி பொறியியல் கல்லூரி மாணவி.

திருமதி செல்வி செல்வம் — குடும்பத் தலைவி. (கலைஞர் கருணாநிதியின் மகள்.)

சு. பாய்: நவராத்திரி பண்டிகை கொண்டாட வேண்டிய அவசியம் என்னன்னு விவரமாச் சொல்லுங்களேன். விலைவாசிய நினைச்சா ரொம்ப பயமாயிருக்கு.

வ. ரா. சர்மா: நவராத்திரி பண்டிகை கொண்டாடறது அவசியமா இல்லையான்னு நினைக்கறதுக்கு முன்னாடி, பொதுவா எல்லாப் பண்டிகைகளும் ஏன் கொண்டாடணும்னு சொல்லிடறேன். எல்லாரும் மனமகிழ்ச்சியோட இருக்கத்தான் பண்டிகைகளெல்லாம் கொண்டாடறோம். அந்த ஒரு நாளிலாவது எல்லாரும் ஒண்ணு சேர்ந்து சந்தோஷமா இருக்க முடியறது.

தையிலிருந்து ஆனிவரை 'உத்தராயணம்' கல்யாணம் போன்ற விசேஷங்கள் அதிகமா கொண்டாடப்படற நேரம். ஆடியிலிருந்து மார்கழி வரை 'தட்சிணாயணம்.' பெரும்பாலான பூஜைகள் பண்டிகைகள் கொண்டாடப்படற நேரம். ஒவ்வொரு பண்டிகையிலும் ஒவ்வொரு கடவுளை வேண்டி பூஜைகள் செய்யறோம். எந்தக் காரியம் நடக்கவும் முக்கியமானது தைரியம், பலம். இந்தச் சக்திகளுக்கு மூலக் காரணமான ஆதி சக்தியை வணங்கி, எல்லாவித நன்மையை அடையும் நேரமே நவராத்திரி. துர்கா — லக்ஷ்மி — சரஸ்வதி சேர்ந்து இருக்கும் நேரம். தைரியம், ஐஸ்வரியம், ஞானம் பொங்கும் நேரம்.

ராணி ஜா: ஆனால் இந்தக் கால விலைவாசியில் பண்டிகைகளையெல்லாம் கொண்டாடறது அவசியம்தானா?

ராதா கோ: பண்டிகையைக் கொண்டாடுவது அவசியம். அதை எப்படிக் கொண்டாடுவது என்பது தான் முக்கியம்.

பா. வ. சர்மா: அவரவர் மனசு வசதியைப் பொறுத்தது. எப்படி வேண்டுமானாலும் கொண்டாடலாம். பகவான் இதுதான் தரணும். அப்படித்தான் செய்யணும்னு சொல்லலை. பக்தியோடு துளசியைத் தண்ணீரில் போட்டுக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளும் கருணையுள்ளவர்.

சியாமளா : சில பேர் நம்பிக்கையோட செய்யறாங்க. சிலர் நம்பாம கடமைக்காகச் செய்யறாங்க. சிலர், கடவுள் இதெல்லாம் கேட்டாரான்னு நம்பாம செய்யறதேயில்லை.

ராதா கோ: முன்போல நவராத்திரி சமயம் பத்து நாளும் எல்லாரையும் வரச் சொல்லிக் கூப்பிடறதில்லை. விலைவாசியும் அப்படியிருக்கு. அழைப்பில் கூட இரண்டு நாளைக் குறிப்பிட்டு, அன்று மட்டும் வரவும்னு போடறாங்க.

வித்யா: இதுக்கு இரண்டு காரணமிருக்குன்னு நான் நினைக்கிறேன். முன்னை எல்லா

அவசியமா?



ரும் சேர்ந்து ஒரேக் குடும்பமா இருந்ததால ஒருவர் வெளில போனாலும் வீட்டைப் பூட்ட வேண்டிய அவசியம் இல்லாமலிருந்தது. இப்பல்லாம் பல காரணங்களால பிரிந்துச் சின்னச் சின்னக் குடும்பமா இருக்காங்க. வெளிலபோனக்கூட வீட்டைப்பூட்டவேண்டிய நிலைமையிருக்கு. குறிப்பிட்ட தேதிகள்ள வீட்டுல நாமிருந்து எல்லாரையும் வரவேற்கலாம். நமக்கும் எல்லார் வீட்டிற்கும் போக முடியும், தாராளமா எல்லாருக்கும் செய்யவும் முடிகிறது.

ப. வ. சர்மா: அந்தக் காலத்துல பத்து வயசுக்குள்ள கல்யாணம் பண்ணினதால் மாமனார் மாமியாரை எதிர்த்துப் பேச முடியாது. அவங்களும் எங்கள தங்கள் குழந்தைகள்ள ஒருத்தரா நினைச்சாங்க.

சியாமளா: இந்தக் காலத்துல தங்களோட கல்யாணத்துக்காகவே வேலை பார்த்து சம்பாதிக்க வேண்டிய நிலையில் பெண்கள் இருக்கறதால திருமணம் ஆகும்போது வயதாகி விடுகிறது. பொறுப்பு அதிகமா சுமக்கறதால தானே சிந்திக்கறத் திறனும் வந்துடுது. தவறுன்னு தோணினா சுட்டிக் காட்டாம இருக்க முடியறதில்ல. இதனால்தான் எல்லாக் குழப்பமும் வருகிறது.

வ. ரா. ச.: எங்க காலத்துல பெரியவங்க சொன்னத உடனே கேக்கற சுபாவம் வந்தது. அடுத்த தலைமுறை பிடிச்சதோப் பிடிக்கலையோ, கடமைக்காக செய்யற குணம் இருக்கு. ஆனா இப்ப வரப்போற இளையத் தலைமுறைக்கு சொல்வதைக் கேக்கற பொறுமையுமில்லை. கேட்டு நடக்க அவர்களோட பிடிவாதம் இடம் கொடுக்கல.

ராணி. ஜா: பண்டிகைகளுக்குப் பணம் செலவழித்து ஆடம்பரமாகக் கொண்டாடறதைவிட ஏழைக்குழந்தைகளுக்குபுஸ்தகம், டிரஸ்னு வாங்கிக் கொடுக்கலாமே.

சு. பாய்: இல்லம்மா. பண்டிகைகள்னு கொண்டாடறதே ஒரு மனோதத்துவச் சிகிச்சைதான். வாழ்க்கையில் பிடிப்பு, தைரியம் வர கடவுளை வழிபடறோம். கடவுளை வழிபட பல முறைகளைப் பின்பற்றுகிறோம். நம்பிக்கையோட செய்யும் போது, நம்மையறியாம ஒரு சக்தி, நம்மையடையறதுன்னு நினைக்கிறேன்.

“பண்டிகைகளெல்லாம் ஒரு மனோதத்துவ சிகிச்சை மாதிரிதான். எல்லோரும் அன்றைக்கு ஒரு நாளாவது சேர்ந்து சந்தோஷமா இருக்க முடியுது...

வித்யா: டொனேஷன்னு தரும்போது விளம்பரப் புத்திதான் வருது. நம்மையறியாம நம்மதான் ஏழைகளுக்குச் செய்யறோங்கிற கர்வமும் ஏற்படற சான்ஸிருக்கு. ஆனா கடவுளுக்கு முன்னாடி அதெல்லாம் தோணறதில்லை. பண்டிகைமூலமா நம்மையறியாமலே தானங்கள் பண்றோம்.

ராதா கோ: அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் எல்லாத்துலயும் ரொம்ப வித்தியாசமிருக்கு. பிள்ளை வீட்டுக்காரங்க பதினொரு ரூபாயோ பதிமூன்று ரூபாயோ பெண் வீட்டுக்காரர்களுக்குக் கொடுத்துக் கன்னிகா தானத்திற்குத் தேதி வைத்துப் போவாங்க. தலைகீழா மாறி பெண் வீட்டுக்காரர்களிடம் பேரம். ஒவ்வொரு மாப்பிள்ளைக்கும் ரேட்டிருக்கு. விலைவாசில கட்டுப்படியாகல. •

சு. பாய்: அப்பல்லாம் வீட்டு விசேஷங்களுக்கு ஆள் போட்டுச் சமையல் செய்ய மாட்டாங்க. தெருவிலிருப்பவர்கள் சேர்ந்து சமைப்பாங்க. அப்பளம் கூட வெளிலவாங்க மாட்டோம். வீட்டுக்கு ஐம்பது உருண்டையா குடுத்துடுவாங்க. இட்டு உலர்த்தி கல்யாண வீட்டிற்கு வந்துடும்.

பா. ரா. சர்மா: இட்லிக்கு மாவு அரைப்பதில் கூட சேர்ந்தே செய்வாங்க. வீட்டுக்கு இத்தனை படி அரிசி உளுந்துன்னு விநியோகம் பண்ணிடுவாங்க. அவரவர்கள் மாவை அரைத்து அனுப்பிடுவாங்க. சேர்ந்தே எதையும் செய்வதால் சிரமம் தெரியல.

> "டொனேஷன் கொடுக்கறப்போ விளம்பரப் புத்திதான் வருது. கர்வமும் ஏற்படறது. ஆனா பண்டிகைகள் மூலமா நம்மையறியாமலே தானங்கள் பண்றோம்.

சியாமளா: இப்ப பழைய 'ட்ரெண்ட்' திரும்பறதுன்னு நினைக்கிறேன். விலைவாசிக் காரணமா ரொம்பப் பேர் சிம்பிளா வீட்டுலேயே கல்யாணம் பண்ணிடறா. சில மாப்பிள்ளைகள் ஜானவாசம் கூட வெச்சுக்கறதில்லே. எந்தக் காலத்துலேயும் நல்லது கெட்டது கலந்தே இருந்தது.

ப. ரா. சர்மா: எனக்குப் பன்னிரண்டு வயசுல கல்யாணம். இதனால இப்ப பிள்ளைகளெல்லாம் தலையெடுத்துட்டாங்க. நம்ம நல்லாயிருக்கும் போதே கடமையெல்லாம் செய்து அவர்களையும் நல்ல நிலைமையுல பார்த்துட்டோங்கற சந்தோஷமும், தைரியமுமிருக்கு.

வித்யா: கல்யாணமே லேட்டுங்கறதால குழந்தைகளை ரிடையர் ஆகறதுக்கு முன்னாடி நல்ல நிலைமைல வைக்க முடியறதில்ல. ஆடம்பரப் பொருட்களெல்லாம் அத்தியாவசியமாகிவிட்டது. இந்தக் காலத்துல கூட பண்டிகைகள் விடாமக் கொண்டாடறவங்க இருக்காங்க. வெளிநாடு போற இந்தியர்கள் கூட ஓரளவு கொண்டாடத்தான் செய்யறாங்க.

சியாமளா: நம் நாட்டிற்கு பெருமை சேர்ப்பவைகளில் பண்டிகைகளும் ஒரு அம்சமாகும். நம் பண்டிகைகளில் அழகிலேயும், வகையிலேயும் மனசைப் பறிகொடுக்காத வெளிநாட்டவரே இல்லே. நம்ம தோசை கூட ஒரு அழகுதான். புளிச்ச மாவை வார்க்கும்போது வர ஓட்டைகளைக் கண்டு "ஹவ் டு யூ மேக் ஸோ மெனி ஹோல்ஸ் இன் தோசை"ன்னு கேக்கறா. நம்ம கொலு பொம்மை, வரலக்ஷ்மி முகம், பிள்ளையார் பொம்மையெல்லாம் அவங்களை ரொம்பக் கவர்ந்திருக்கு. பல பேர் விரும்பி வாங்கியும் போறாங்க.

ராணி ஜா: தீபாவளிப் பண்டிகை போது பட்டாசுலயே காசைக் கரியாக்கறாங்க. 200, 300, 1000 ரூபாய்னு கூட சிலர் பட்டாசு வாங்கறாங்க.

சு. பாய்: அதுவும் தப்பு. நிதானமா செலவு செய்யணும். கடன் வாங்கிப் பண்டிகை கொண்டாடணும்னு எந்தக் கடவுளும் சொல்லல.

வித்யா: குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைத் தருவது பட்டாசு. அது ரொம்ப அவசியம். ஆனா அளவோட இருக்கணும்.

வ. ரா. சு.: கிராமப்புறங்களில் ஏழைகளுக்குப் பொங்கல் சமயம் புது துணி போன்றவை கொடுப்பது ரொம்ப சகஜமான நிகழ்ச்சி. இது போன்றவைகள் வீணானதுன்னு சொல்லக் கூடாது.

சியா. வெ: ஒவ்வொரு பண்டிகையையும் ஒழுங்கா கொண்டாடினாலே, சமைக்கத் தெரியாதவர்கள் கூட சமைக்கக் கற்றுக் கொண்டு விடுவார்கள். ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒவ்வொரு விதமான பலகாரம் செய்வதனால் எல்லா வகைகளும் நமக்கே பழக்கமாயிடும்.

பா. ரா. ச.: கொழுக்கட்டை, வெல்லச் சீடை, கைமுறுக்கு, போன்றவைகள் பத்து வயதிலேயே எங்களுக்கு எல்லாம் பண்ணத் தெரியும்.

ராணி ஜா: எங்களுக்கு அதுக்கெல்லாம் நேரமே இல்லே. பஸ் பிடித்து ஸ்கூல், காலேஜ், ஆபீஸ்னு அலையவே நேரம் சரியா இருக்கு. மாணவர்களுக்கு பிரச்னைகள் அதிகம். பாடங்கள் உங்க காலம் போல இல்லே. ரொம்ப ஜாஸ்தி. குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் பண்டிகைகளை கொண்டாடணும்னு சொல்வதால் மற்ற வேலைகளை கவனிக்க முடியலே.

சி. வெ.: வீடுகள் பெரும்பாலும் பிளாட்டுகளாக இருப்பதால் ரொம்பப் பேர் வர முடியலே. ஆபீஸ் போவதற்குள் பண்டிகைகளையும் செய்யணும், ஸ்கூலுக்குக் குழந்தைகளையும் அனுப்பணும், அலுவலகம் போகும் கணவனையும் கவனிக்கணும்ங்கற போது ரொம்ப டென்ஷனா இருக்கு.

> "நம்ம தோசை கூட அழகுதான். வெளிநாட்டவர் இதைப் பார்த்துட்டு "ஹவ் டூ யூ மேக் ஸோ மெனி ஹோல்ஸ் இன் தோசை"ன்னு கேக்கறாங்க...."
>
> "ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒவ்வொரு பட்சணம் செய்யறதாலே பலகாரம், சமையலைத் தானா கத்துக்கறோம்..."



திருமதி செல்வி செல்வம்:

என்னைப் பொறுத்தவரை பொங்கலைத் தவிர எந்தப் பண்டிகையையும் கொண்டாடுவதே கிடையாது. உழவர்கள் திருநாள் ஆண்டு முழுவதும் நமக்காகப் பாடுபடும் உழவர்களை உயர்த்தும் விழா. ஏழை பணக்காரன் என்ற வேறுபாடில்லாமல் எல்லாரும் கொண்டாடும் விழா. நமக்கெல்லாம் உணவளிக்கப் பாடுபடும் உழவர்களை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில்தான் கொண்டாடுகிறோம். அச்சமயத்தில் கூட எங்கள் வீட்டில் பெரியவர்களான பாட்டி தாத்தாவின் படத்தைத்தான் வைத்து வணங்குகிறோம்.

நமக்காக (பாடுபடும்) வாழும் — வாழ்ந்தவர்களை உயர்த்துவதே நம் பண்பாகும். எங்கள் தாத்தா இறந்த நாளில் ஒவ்வொரு வருடமும் ஏழைக் குழந்தைகளுக்குப் புத்தகம் பென்சில் போன்றவைகளைக் கொடுப்போம்.

மடி ஆசாரம் போன்றவைகளில் எனக்கு நம்பிக்கைக் கிடையாது. வீட்டில் துணிகள் தேவைக்கு அதிகமாக இருக்கும் போதும் புதிது புதிதாக துணிகள் நகைகள் வாங்குகிறோம். இவைகளை வாங்குவதற்காகத்தான் பண்டிகைகளில் ஆர்வம் காட்டறாங்கன்னே நினைக்கறேன். நிலைமைக்கு மீறி செலவு கடன் என்ற தொல்லைகளில் மாட்டித் தவிக்கிறாங்க.

பள்ளிகள் பலவற்றில் பண்டிகைகளுக்கு விடுமுறை விடுவது கிடையாது. பள்ளி இருக்கும் நாட்களில் பண்டிகைகள் வந்தால் மாணவர்களுக்கு நிச்சயம் துன்பம்தான். மூட நம்பிக்கைகளைப் பிள்ளைகளிடம் வளரவிடக் கூடாது.

பண்டிகைகளைக் கொண்டாடுவதால் மட்டும் நம் பண்பாட்டைக் காப்பாற்றியதாக ஆகாது. வீட்டிற்கு வருபவர்களை விருந்தோம்பி, நம் குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து, குடும்பத்தை நன்கு கவனித்தாலே போதும்.

ராணி ஜா: சில பேர் படிக்காமல் இருந்துட்டு பண்டிகைகள் மேல் சாக்கு சொல்வதும் உண்டு.

வித்: இது தப்பு இல்லையா? சின்ன வயசுலே கத்துக்கறதுதான் மனசிலே பதியும்னு சொல்வாங்க. பண்டிகைகள் மூலம் விருந்தோம்பல் போன்ற நம் நாட்டு கலாச்சாரத்தைக் கற்றுக் கொள்கிறோம். வகை வகையான துணி, தினுசு தினுசான பலகாரம் எல்லாருடனும் சேர்ந்து அனுபவிக்கும் போது தனி சுகம்தான்.

ராணி ஜா: என் பிரண்ட்ஸ் பலர் பண்டிகை கொண்டாடறதே அனாவசியம்னு நினைக்கறா. கடவுள் நம் மனசுக்குள் இருக்கும் போது, பண்டிகைனு தனியா தேவையா?

வ. ரா. ச.: ஸ்கூல் யூனிபாரம்னு ஏன் போடணும். சாதாரணமான உடை போட்டா படிப்பு வராதா? ஒரு டிசிப்ளினுக்காக எல்லோரும் ஒரே விதமா இருக்கணும்னு யூனிபாரம் போடற மாதிரி, பண்டிகைகளைக் கொண்டாடுவதும் மனத்தை நிலைப்படுத்த, ஒரு வழி. சும்மா கடவுளைக் கும்பிடுன்னு சொன்னா குழந்தைகள் யோசிப்பா.. புதுத் துணி பலகாரம்னு வைக்கும் போது அதனால் கவரப்பட்டு பண்டிகைகளில் ஆர்வம் வரது. நாளாவட்டத்தில் பழக்கமாகி அவங்களே எதிர்பார்க்க ஆரம்பிக்கிறாங்க.

ராணி ஜா: இளைய தலைமுறை ரொம்பக் குழம்பி இருக்கு. அலை பாயும் மனம், எதிலேயும் பிடிப்பு இல்லை.

சு. பா; பண்டிகைகளால் பிடிப்பு தானே வரும்.

சியா. வெ: பணத்தாலும் உடலாலும் கஷ்டப்படும் போது பண்டிகை அவசியமான்னு தோணும். சகஜம்தான்.

ராணி ஜா: பூஜை முடியாம சாப்பிட முடியாது. டெஸ்ட் இருக்கும் நேரங்களில் லீவும் போட முடியாது. கேன்டீனில் சாப்பிடவும் பிடிக்கலை. அந்த நேரங்களில் ரொம்ப கோவம் வரது. கோவம் வெறிப்பா மாறிடறது.

வ. ரா. சர்.: நீங்க எல்லாம் எப்பவுமே மாணவர்களாக மட்டுமே இருக்கப் போவ

"துன்பத்தில்தான் கடவுளைக் கூப்பிடணும்னு இல்லை. சந்தோஷமா பண்டிகைகளின் போதும் கடவுளை வணங்கும் பழக்கம் வரணும்.

தில்லை. கொஞ்ச காலம் கழித்துக் குடும்பத் தலைவர், தலைவிகளாகவும் போகிறீர்களே! இப்ப எதையும் தெரிஞ்சுக்கலேன்னு பின்னால் நம் வழக்கம் எதுவுமே தெரியாமல் போயிடும்.

ராதா கோ: அதுவுமில்லாம இப்போ எல்லா அம்மாக்களுமே எவ்வளவோ மாறிட்டாங்க. பண்டிகை நாளில் குழந்தைகளுக்குப் பள்ளிக் கூடம் காலேஜ் இருந்தால் அவர்களுக்குச் சாப்பிடத் தனியா ஏதாவது பண்ணிக் குடுத்திடறா. பல பசங்க டிரஸ் பண்ணிக்க எடுத்துக்கற நேரத்தைவிட படிக்க எடுத்துக்கற நேரம் ரொம்பக் குறைச்சல்.

சாப்பாடு தயார் பண்ணி வைத்தால் கூட டென்ஷனில் எல்லாத்தையும் வைத்துவிட்டு போயிடறா. எது சொன்னாலும் போரடிக்கிறது போரடிக்கிறது'ன்னு சொல்லத் தெரியறது. இதுல பண்டிகைகளைக் குறை சொல்வானேன்?

ராணி ஜா: என்னவோ தெரியலை. பெரியவர்கள் சரியா சொன்னாலும் அந்த நேரத்துலே ஒத்துக்கத் தோணலை. எதிர்த்துப் பேசணும்னுனே தோணறது. எதிர்க்கறது தப்புன்னு தெரிந்தாலும் ஒத்துக்க முடியலை.

பா. ரா. சர்: வயசுதான் காரணம். இளவயதில் அப்படித்தான் எதிலும் நிதானம் இருக்காது. நாமும் ஓவரா மடி ஆசாரம்னு சொல்லிக் கடவுள், பூஜை, பண்டிகைகளாலே பயத்தை உண்டாக்கக் கூடாது. மனசுத்தியுடன் அன்புடன் எளிமையா பூஜை செய்தாலே கடவுள் எல்லாம் தருவார்னு கத்துக் கொடுக்கணும்.

வ. ரா. சர்: ஆர்ப்பாட்டத்தால் மனசுலே வெறுப்புத்தான் வரது. எளிமையா நிதானமா செய்தால் அதுவே குழந்தைகள் மனத்திலும் பதியும்.

எம். சுந்தரி: சந்திர மண்டலத்துக்குப் போனவர்கள் கூட துன்பம் வரும் போது கடவுளைத்தான் கூப்பிட்டார்கள். துன்பத்தில்தான், நம்தேவைக்காக கடவுளைக்கொண்டாடணும்னு இல்லை. சந்தோஷ நேரத்திலும் கடவுளை வணங்குவதைத்தான் பண்டிகைன்னு கொண்டாடறோம்.

தொகுப்பு, புகைப்படங்கள்:

லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.


காஞ்சிபுரம்
பட்டுப் புடவைகளுக்கு
கைராசியான இடம்
ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்
ராஜ வீதி – கோயமுத்தூர்-1
கடை வீதி - சேலம்-1
OSR

நீயே சரணம் அம்மா!

பசி... கடுமையான பசி...! வயிறு கர்புர் ரென்று சங்கீதம் பாட... அதற்கு பாக்கிரவுண்ட் மியூசிக்காக டேபிள் மீது தாளம் போட்டன பிரபுவின் விரல்கள்.

"ஆஷா.... இன்னுமா ரெடியாகலே...? இப்படியே நீ டிலே செய்துண்டு போனா பசி தாங்காம உன்னையே கடிச்சு முழுங்கிடுவேன்... ஜாக்கிரதை..." கேலியும் சீற்றமுமாகச் சமையலறையை நோக்கிக் குரல் பாணம் போட்டான் பிரபு.

"ஜஸ்ட் ஃபைவ் மினிட்ஸ் ப்ளீ...ஸ்...!" குழைவும் கொஞ்சலுமாய் மிதந்து வந்தது ஆஷாவின் பதில் குரல்.

ஃபைவ் மினிட்ஸ் என்பதன் பொருள் ஆஷாவின் டிக்ஷனரியில் அரை மணி போலும்...! அந்த நீண்ட முப்பது நிமிடப் பசியின் போராட்டத்திற்குப் பிறகு அவன் முன் வந்தமர்ந்த வஸ்துக்கள்...

நான்கு சப்பாத்தி... தால்... ஒரு கப்பில் தயிர்... ஒரு சிறு தட்டில் அலங்காரமாக வட்ட வட்டமாக நறுக்கப்பட்ட வெங்காய வளையங்கள்... நீளவாக்கில் அரியப்பட்ட பச்சை மிளகாய்த் துண்டங்கள்... எலுமிச்சைப் பழ வில்லைகள்... ஏதோ ஒரு பெயர் தெரியாத ஸ்வீட்... போனால் போகிறதென்று ஒரு சின்ன கப் சாதம்...

ச்சே... குமட்டிக் கொண்டு வந்தது பிரபுவுக்கு. அத்தனை நேரப் பசி உணர்ச்சியும் பாக்கியநாத்தின் மாயஜாலம் போல் அடியோடு மறந்து போயிற்று.

"சப்பாத்தி... சப்ஜி... தால்... குருமா... எப்பப் பார்த்தாலும் இதே இழவுதானா...? அவியல், மசியல், வடை பாயசத்தோட பெரிய விருந்து வேண்டாம். கேவலம் ஒரு சாம்பார் ரசம் கூட உன்னாலே செய்ய முடியாதா ஆஷா?" எரிச்சலுடன் கத்தினான் பிரபு.

ஆஷா அவனை மிக பரிதாபமாகப் பார்த்தாள். ஒரு பத்து நாளாகத் தினமும் இதே ரகளைதான். ஜாதி மத, இன பேதம் என்ற 'அல்ப' விஷயமெல்லாம் காதல், கல்யாணம் போன்ற வாழ்வின் மிகப் பெரிய சமாசாரங்களுக்கு ஒரு பிரச்னையாகவே இருக்காது... இருக்க முடியாது என்று ஜம்பம் பேசி அதே ஆபீசில் பணிபுரிந்த வடநாட்டு ஆஷாவை மணந்தாகிவிட்டது. கல்யாணமான புதிதில் நாக்கின் ருசியெல்லாம் பெரிதாகப்படவில்லை. நாளாக ஆக உப்பு உறைப்பாகச் சாப்பிட்டுப் பழகிய நாக்கு அடம் பிடிக்க ஆரம்பித்தது. ஏற்கெனவே சரியான சாப்பாட்டு ராமன். ஈட் டு லிவ் என்றில்லாமல் லிவ் டு ஈட் என்று நினைப்பவன்... சாம்பார்... ரசம்... கூட்டு... வற்றல் குழம்பு... மோர்க் குழம்பு... இட்லி... வடை... தோசை... பொங்கல் வகையறாக்களை நினைத்து ஏங்க ஆரம்பித்தான். ஆஷாவுக்குத் தெரிந்ததோ ரொட்டி... சப்ஜி... பேங்கன் மசாலா... தால்... குருமா... புலாவ்... ஆலுமட்டர்... ஆலு பாலக்... பன்னீர் பீஸ் வகைகள்தாம்.

டில்லியிலுள்ள 'மதராஸி' ஓட்டல்களுக்கு எத்தனை முறைதாம் போக முடியும்...? யானை விலை குதிரை விலை எனக் காசு தண்டமானாலும் ஓட்டல் வகைகள் அலுத்து விட்டனவே!.. வெட்கம் கெட்டு அழையா விருந்தாளியாக அவன் அறிந்த தமிழ் நண்பர்கள் வீட்டிற்கு 'சாப்பாடு சமயம்' பார்த்து விஜயம் செய்து, 'ஸாரி... அப்புறம் வரேன்....' என்று பாசாங்கு காட்டி (நெஞ்சில் மாத்திரம் படபடா... 'அப்படியா? சரோஜா... ஸாருக்குப் பசியில்லையாம். ஒரு டம்ளர் மோர் மாத்திரம் ஜில்லுனு கொண்டா...' என்று சொல்லி விடப் போகிறார்களோ...) அவர்கள் 'சனியன் பிடித்தவன், சாப்பாட்டு நேரம் பார்த்து வந்து கழுத்தை அறுக்கிறான்' என்று மனம் வசைபாட ஒப்புக்கேனும் 'பரவாயில்லே... ஒரு வாய் ரசம் சாதமாவது சாப்பிடுங்க...' என்று ஒரு வார்த்தை இழுக்க... அந்த ஒரு வார்த்தையைக் கப்பென்று பிடித்துக் கொண்டு 'சொன்னால் கேட்க மாட்டேங்கறீங்க.... நீங்க இப்படி ஃபோர்ஸ் செய்யறப்ப என்னால மீற முடியலையே' என்று பெரிய பண்பாளன் போல நடித்து... நாவில் நீர் சுரக்க இலையின் முன் அமர்ந்து... 'இன்று இவர்கள் வீட்டில் பொரிச்ச கூட்டு இருக்குமா?' என்று ஏங்கி... இப்படியாக நாக்கின் அரிப்பைப் பல சமயங்களில் தீர்த்துக் கொண்டிருக்கிறான். எல்லாம் நாக்கின் சபலம்தான் பாவம். அந்த 'பன்னுடைத்தனம்' எத்தனை நாட்களுக்குத்தான் தொடர முடியும்...?

பேசாமல் நல்ல சமையல்காரரை அமர்த்திக் கொண்டு விடலாமா என்றும் பல முறை யோசித்திருக்கிறான். டில்லியில் அந்த 'நல்ல' கைமணம் கிடைக்காதே... ஊரிலிருந்து அழைத்து வந்தால் சம்பளம், சாப்பாடு, துணிமணி... மற்ற செலவுகள்... தாங்காது டாப்பா... அந்த யோசனையும் யோசனை அளவிலேயே நின்று போனது.

சாந்தாதத்



கமான் டியர். ஆறிப்போகுது சாப்பிடுங்க. கூடிய சீக்கிரம் உங்க பக்க சமையல் நான் கத்துக்கறேன்...'' அவன் தவிப்பைப் புரிந்து கொண்டவளாய்க் கெஞ்சலும் கொஞ்சலுமாக அரை குறைத் தமிழில் ஆதங்கத்துடன் ஆஷா கூறினாள். இப்படி தமிழ்ச் சமையலைக் கூட அரைகுறையாகவாவது செய்து போடத் தெரிந்திருக்கக் கூடாதா இவளுக்கு...?

விதியே என்று சப்பாத்தியை விண்டு அந்த உப்பு சப்பற்றப் பருப்பில் தோய்த்து கம்மென்று மணக்கும் அம்மா கை முருங்கைக் காய் சாம்பார் எனக் கற்பனை செய்து...

அம்மா கை...

...பளீரென கல்யாணப் பாயச முந்திரிப் பருப்பாக உள்ளிருந்து எட்டிப் பார்த்தது ஒரு ஐடியா...

* * * * *

தந்தியைப் பார்த்து என்னவோ ஏதோ என்று அலறி அடித்துக் கொண்டு தென் கோடியினின்று வடகோடிக்கு ஓடி வந்தாள் அம்மா.

''அம்மா... இனி நான் தாங்க மாட்டேன். புல், தழை சாப்பிடுவது போல் இதையே தொடர்ந்து சாப்பிட்டால் நிச்சயம் நான் செத்து விடுவேன். உனக்கு உன் பிள்ளை வேணும்னு கூட்டு... துவையல்... சாம்பார்... ரசம்னு தினமும் வகை வகையா சமைத்துப் போடு. சைட் பை சைட் நீ ஊருக்குப் போறதுக்குள்ளே அத்தனையும் உன் நாட்டுப் பெண்ணுக்குக் கத்துக் கொடு...'' சாஷ்டாங்கமாய் அம்மா காலில் விழுந்தான் பிரபு.

பருப்பு உசிலி... தேங்காய்த் துவையல்... வெந்தயக் குழம்பு... கீரை மசியல்... சீரக ரசம்... மைசூர் ரசம்... இட்லி... அடை... வடை... பொங்கல்... புளியோதரை... தேன் குழல்... ஓமப்பொடி... சீடை... இத்யாதி வகைகளை மூன்று நான்கு நாட்கள் ஆபீசுக்குக் கூட லீவு போட்டுவிட்டு மாயாபஜார் ரங்காராவாக மனமும் வயிறும் நிறைய ரசித்து ருசித்துச் சாப்பிட்டான். 'கல்யாண சமையல் சாதம்...' பாடாத குறைதான்.

ஐந்தாம் நாள் பிடித்தது சனி... வேதாளம் முருங்கைமரம் ஏறிய கதைதான். 'லீவு போட்டது போதும். மானேஜர் சனியன் கத்துவான். இருக்கவே இருக்கு அடுக்கடுக்காய் ஐந்து அடுக்கு டிபன் கேரியர். ஆபீஸில் லஞ்ச் பிரேக்கில் ஒரு கைபிடிக்கலாம். இப்ப போறப்பவும் வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டுப் போகலாம்' னு அடுக்கடுக்காய் நினைவுகளைக் கட்டியபடி ஆபீஸ் புறப்பட ஆயத்தமாகி டேபிள் முன் சாப்பிட அமர்ந்தான்.


சப்பாத்தி... காலிஃப்ளவர் தால்... ஆலு புலாவ் சீரிஸ் தட்டில் வரிசையாக விழ...

''அடி ஆஷா... உன்னை யார் சமைக்கச் சொன்னாங்க...?'' குதுப்மினார் உச்சிக்குக் கேட்கும் விதத்தில் பெருங்குரலெடுத்து ராட்சஸக் கத்தல் கத்தினான் பிரபு.

''கத்தாதே பிரபு. இதெல்லாம் நான்தான் செய்தேன். பொறந்ததுலேர்ந்து சாம்பார், ரசம்னு... இட்லி, வடைன்னு சாப்பிட்டு உங்கப்பாவுக்கு நாக்கு செத்துப் போய்ட்டதாம். வயசான காலத்துலே ஒரு மாறுதலா விதம் விதமா சாப்பிடலாம்னு உன் நாட்டுப் பொண்கிட்ட அவங்க சமையலைக் கத்துண்டு வாடின்னு உங்கப்பா வரப்ப சொல்லி அனுப்பிச்சார். நான் இருக்கப் போறது இன்னும் பத்தே நாள். அதுக்குள்ள அத்தனை வடப்பக்க தினுசுகளையும் கத்துக்க வேணுமா... உனக்கு நம்ம பக்கத்துச் சாப்பாடு சாப்பிடணும்னு ஒரு மாச லீவுலே ஊர்ப் பக்கம் வரேபாரு... அப்ப ஆசை தீரச் சாப்பிடலாம். ஆஷா...! சாயங்கால டிபனுக்கு சோளா படூரா செய்யலாமா...?''

ஒரு மாச லீவு... அதான் ஹனிமூன் விவகாரத்துலேயே தீர்ந்து விட்டதே...! அப்ப... இனி அடுத்த வருடம்தானா...?

அவனைத் தொபீரென்று யாரோ கிணற்றில் பிடித்துத் தள்ளுவது போல்... அந்தக் கிணற்றில் தண்ணீருக்குப் பதில் பன்னீர் ரசம் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டான் பிரபு.





கிண்டி கால்ஃப் மைதானம் திருவிதாங்கூர் மகாராஜா கொடுத்த சீதனம். கால்ஃப் பெண்களுக்கான பகுதியினை நான்கு பெண்மணிகள் கமிட்டியில் அங்கம் வகித்து நிர்வகிக்கிறார்கள். கால்ஃப் காப்டன் சரோஜா ராமன்; காரியதரிசி ஜெயஸ்ரீ பரத்; 'ஹாண்டிகாப்' காரியதரிசி லலிதா பாலசுப்பிரமணியம்; ஹவுஸ் அங்கத்தினர் சூஸி சூரியன்.

கால்ஃப் காரியதரிசி ஸ்ரீமதி ஜெயஸ்ரீ பரத்தினைக் கிண்டி கால்ஃப் மைதானத்தில் சிதம்பரம் கோப்பைப் போட்டி இறுதி நாளன்று சந்தித்தேன்.

''பெண்மணிகளுக்கான கால்ஃப் சிதம்பரம் கோப்பைப் பந்தயம் எப்பொழுது தொடங்கப்பட்டது?''

''சௌத் இந்தியா சிப்பந்திகள் பொழுது போக்குச் சங்கத்தின் ஆதரவில் 1979—ஆம் ஆண்டில் சிதம்பரம் கால்ஃப் கோப்பைப் பந்தயம் ஆரம்பிக்கப்பட்டது. நடுவில் மூன்று வருஷங்கள் பிரேக்! இந்த வருஷம் மூன்றாவது தடவையாக நடைபெறுகிறது. 'கால்ஃப் முன்பு பணக்காரர்கள் விளையாட்டு' என்று பலர் நினைத்ததுண்டு. சமீப காலமாக டென்னிஸ் மாதிரி கால்ஃபும் இன்று பிராபல்யமாகி பலரும் இந்த விளையாட்டில் ஆர்வம் காட்டுகிறார்கள். கால்ஃப் குச்சிகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகிறது!'' என்றார் ஸ்ரீமதி ஜெயஸ்ரீ பரத்.

''எங்கள் கால்ஃப் கிளப்புக்குத் தம் உடலை 'டிரிம்'மாக வைத்துக் கொள்ளத் தமிழக ஆளுநர் குரானா வந்து அடிக்கடி ஆடுவது எங்களுக்குப் பெருமை!'' என்கிறார் ஸ்ரீமதி லலிதா பாலசுப்பிரமணியம்.

கால்ஃப் மைதானத்தில் ஒன்பது அல்லது பதினெட்டு குழிகள் உள்ளன. இந்தக் குழியைச் சுற்றி வட்டங்கள் உண்டு. ஒரு சிறு மேடையுள்ள பகுதியிலிருந்து முந்நூறு கஜ தூரத்திலுள்ள குழிக்குப் பந்தை அடித்துப் போட வேண்டும். பந்தைக் குழிக்குள் அடித்துப் போடக் கணக்கு உண்டு. இதில் இத்தனை தடவைகளுக்குமேல் அடிக்கக் கூடாது என்றும் சொல்கிறார்கள். இதற்கு 'பார்' என்கிறார்கள். காடி பதினான்கு குச்சிகள் அடங்கிய பையைச் சுமந்து வர, வெயிலுக்குக் குடையுடன் பெண்மணிகள் போட்டியில் பங்கேற்கும் அழகே தனிதான்!

1985—ஆம் ஆண்டு நடைபெற்ற சிதம்பரம் கோப்பைப் பந்தயத்தில் வெற்றி

காஃல்ஃபுக்கு ஒரு ஸூப்பர்ஸ்டார்!

வாகை சூடிய ஷிராஸ் ஷெகித் புன்னகை மலர மைதானக் கூடத்துக்கு வருகிறார்.

''நீங்கள் கால்ஃப் ஆடத் தொடங்கிய இளமை நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளலாமா?''

''ஓ! எனது பெற்றோர் நல்ல கால்ஃப் நிபுணர்கள். அவர்கள் தவிரவும் 'கோச்' மங்கிலால் கால்ஃப் ஆட்டத்தின் நுணுக்கங்களை எனக்குக் கற்றுத் தந்தார். கால்ஃப் ரொம்பச் செலவுள்ள ஆட்டம். அமெச்சூர் ஆட்டக்காரர்களுக்குக் கடுமையான நிபந்தனைகள் உண்டு. அமெச்சூர் ஆட்டக்காரர் எந்த (Sponsor) ஆதரவாளரையும் எதிர்பார்க்கக் கூடாது. வருஷத்தில் கல்கத்தா, பம்பாய், சென்னை, டில்லி ஆகிய இடங்களில் நடக்கும் ஐந்து கால்ஃப் பந்தயங்களில் பங்கேற்கிறேன்!'' என்று விவரிக்கிறார் சாம்பியன் ஷிராஸ் ஷெகித்.

''கால்ஃப் பந்தயத்துக்காகத் தாங்கள் அயல் நாடுகள் சென்ற அனுபவம் உண்டா?''

''குயின் ஸ்கிரிட், ஆஸ்திரேலியா, கோலாலம்பூருக்குப் போயிருக்கிறோம். ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேசப் போட்டியில்





இந்தியக் குழு டீம் சாம்பியன்ஷிப் பெற்றது இமாலய சாதனை!''

ஷீராஸ் ஷகித் புதுதில்லியில் ஜெகன்மேரி கல்லூரியில் சரித்திர ஆசிரியையாகப் பணி புரிகிறார். கால்ஃப் ஆட்டம் இவரது முழு நேரப் பொழுது போக்கு.

தமிழகக் கால்ஃப் ஆட்டக்காரிகளில் முதன்மை வகிப்பவர் ஏ. வி. எம். அவர்களின் மருமகள் ஸ்ரீமதி லலிதா பாலசுப்பிரமணியம். ஸ்ரீமதி லலிதா பாலசுப்பிரமணியம் சிதம்பரம் கோப்பைப் பந்தயத்தில் சாம்பியன்களுக்குப் பலத்த போட்டியாளராகத் திகழ்ந்தார். அஞ்சனி தேசாய் கால்ஃப் போட்டிகளின் கன்வீனர்.

கால்ஃப் கோச் எஸ். லோகநாதன் கால்ஃப் ஆட விரும்பும் பெண்மணிகளுக்குத் தரும் டிப்ஸ் ''மூன்று மாதங்களில், முப்பது மணி நேரம் நடக்கும் கால்ஃப் நுணுக்கப் பயிற்சிகளில் கலந்து கொண்டால் ஒரு தேர்ந்த ஆட்டக்காரியாகப் பரிமளிக்கலாம்!

—பி. எஸ். மணி.


நமக்குள்ளே ஒரு கடிதம்

இரண்டு நாட்களுக்கு முன்பு டாக்டரிடம் போயிருந்த போது அவர் ஒரு இளம் தம்பதிகளைத் தேற்றிக் கொண்டிருந்தார். அவர்கள் கண்கள் சிவந்து முகங்கள் வீங்கியிருந்தன. அவர்கள் சென்ற பின் என்ன விஷயம் என்று டாக்டரைக் கேட்டேன். ''பாவம் அவர்கள் குழந்தை தண்ணீர் பக்கெட்டுக்குள் விழுந்து இறந்து விட்டது. நேற்றைக்கு முன் தினம் கூட இங்கே வந்திருந்தது. அழகான குழந்தை'' என்று டாக்டர் அங்கலாய்த்தார்.

எப்படிக் குழந்தை தண்ணீருக்குள் விழுந்தது? அதற்கு வயது எட்டே மாதங்கள். தவழ்ந்து வந்து தண்ணீர் உள்ள பக்கெட்டைப் பற்றிக் கொண்டு நின்றிருக்கிறது. அருகில் யாரும் இல்லை. விழுந்த கணமே நீர் மூக்கிலேறியதால் குழந்தை இறந்து போய் விட்டது. விக்ரகம் போல வீட்டில் வளைய வந்த குழந்தையை ஒரே கணத்தில் இழப்பது எவ்வளவு கொடுமை? அந்தத் தாயின் சோகத்தைப் போக்கும் வலிமை எந்த ஆறுதல் வார்த்தைக்கும் இல்லை.

இதேபோல் 15 நாட்களுக்கு முன்புதான் ஒரு நிகழ்ச்சியைக் கேட்டுப் பல நாட்கள் மனத்தில் வேதனையைச் சுமந்தேன். எங்கள் வீட்டு வேலைக்காரி வீட்டின் பக்கத்து வீட்டுக் குழந்தை. இரண்டு வயது இருக்கும். கழுநீர் வைக்கும் அகலமான சிமெண்ட் தொட்டியை எட்டிப் பார்த்திருக்கிறது. எம்பிய போது கால் தவறித் தொட்டிக்குள் தலைகீழாக விழுந்திருக்கிறது. இத்தனைக்கும் தொட்டியில் குழந்தையின் மூக்கு எட்டும் அளவுதான் கழுநீர் இருந்திருக்கிறது.

ஒரு மாதத்திற்குள் இரண்டு மரணங்கள். இரண்டும் ஒரே மாதிரியானவை. இதேபோல் தினம் தினம் எங்காவது ஒரு சோக மரணம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதைத் தடுக்க என்ன வழி என்ன வழி என்று மனது தவித்தது. மனத்தில் தோன்றிய கருத்துக்கள் சிலவற்றைக் கீழே கொடுத்துள்ளேன்.



1. வீட்டில் சின்னக் குழந்தை இருந்தால் அனைவரும் அதனைக் கவனிக்க வேண்டும். தாய் கவனிப்பாள் என்று மற்றவர்கள் அசட்டையாக இருக்கக் கூடாது.

2. தண்ணீர்த் தொட்டி, பக்கெட் இவைகளை மூடியால் மூடி வைக்க வேண்டும். பெரிய தொட்டியாக இருப்பின் முக்கால் பாகத்தை ஸ்லாபுகளால் மூடிவிட்டு மீதியை மரப்பலகையால் மூட வேண்டும். குழந்தை காலில் விழுந்தால் அடிபடுமே என்பவர்கள் கவனிக்க: பலகை விழுந்தால் கால் வலிக்கும். குழந்தையே தொட்டிக்குள் விழுந்தால்?

3. கிணற்றருகில் பக்கெட்டுகளைக் கவிழ்த்து வைக்கக் கூடாது. குழந்தை ஆர்வம் காரணமாக அதன் மீது ஏறி கிணற்றை எட்டிப் பார்க்கும்.

4. சில குழந்தைகளுக்கு தண்ணீர் மீது அலாதி ஆர்வம். அத்தகைய குழந்தைகளைக் கிணற்றுக்குள் நீர் இருப்பதைக் காட்டக் கூடாது. நீரை அடைய என்ன வேண்டுமானாலும் செய்வார்கள் அவர்கள். கூடியவரை கிணற்றைக் காட்டி பயமுறுத்தி வைப்பது நல்லது.

5. பிற்பகல் தாய் கண்ணயரும்போது குழந்தை வெளியே சென்றுவிடும். வாசல், கொல்லைக் கதவுகளை மூடி வைக்க வேண்டும். சமையலறை, குளியலறையில் நீருள்ள பக்கெட் இருந்தால் அவைகளையும் மூடி வைக்க வேண்டும்.

6. வேலைக்குச் செல்லும் தாய் தன் குழந்தையை ஆயாவிடமோ அண்டை வீட்டாரிடமோ விட்டுச் சென்றால் அவர்களிடமும் தண்ணீர் பாத்திரங்களைப் பற்றி எச்சரித்துக் குழந்தையைக் கண்காணிக்கச் சொல்ல வேண்டும்.

7. எட்டு மாதமானவுடனேயே குழந்தைக்கு அதன் பெயர் சொல்லிக் கூப்பிட்டால் குரல் கொடுக்க, என்ன என்று கேட்க பழக்க வேண்டும். இதனால் கூப்பிட்ட குரலுக்குப் பதில் வராவிட்டால் குழந்தையை உடனே தேட வசதியாக இருக்கும்.

முடிவாக துறுதுறுப்பான குழந்தைகள் சுவாரசியமானவர்கள்தான். ஆனால் அந்தக் குணமே அவர்களுக்கு யமன். குழந்தைகளைத் தண்ணீர்த் தொட்டிகளிடமும் பக்கெட்டுகளிடமும் அண்ட விடாதீர்கள். ஏனென்றால் அவைகளுக்கு உணவு சின்னக் குழந்தைகள்.

—லக்ஷ்மி சங்கர்.



ஜான்ஸன்ஸ் பேபி கிரீம் பச்சிள மேனிக்கு மென்மையான பராமரிப்பு.



உங்கள் குழந்தையின் பச்சிள மேனி அனைத்துக்கும் இதமான பாதுகாப்பு

ஜான்ஸன்ஸ் பேபி கிரீம் பச்சிள மேனிக்கு மென்மையான பராமரிப்பு.

உங்கள் குழந்தையை போன்ற மிருதுவான, மென்மையான, பச்சிளமேனிக்கு தேவை 'ஒரு விசேஷமான கிரீம்-அதுவே, ஜான்ஸன்ஸ் பேபி கிரீம்.

தூய்மையான, மென்மையான ஜான்ஸன்ஸ் பேபி கிரீம் உங்கள் செல்லக் குழந்தையின் முழங்கால், முழங்கை, தோள்பட்டை மற்றும் மூக்கு இவற்றை பாதுகாத்து சுகமளிக்கிறது.

உலகிலேயே ஒப்பிலா மணியல்லவா உங்கள் அன்பு குழந்தை! அந்த குழந்தைக்கு உபயோகிப்பீர் ஜான்ஸன்ஸ் பேபி கிரீம் ஒன்றே.

Johnson & Johnson

பச்சிள சருமத்தை மிக சிறப்புடன் அறிந்துள்ளோர் வழங்குவது ஜான்ஸன்ஸ் பேபி கிரீம்

OBM 5809 TM

லாலாவின் புதிய சுலபமுறை சாம்பார் பவுடருக்கு நன்றி!

சுவையான சாம்பார் தயாரிக்க அதிக நேரமா ? தேவையே இல்லை. இதோ... லாலாவின் புதிய சுலபமுறை சாம்பார் பவுடரால் நொடியில் சுவையான சாம்பார் நம் முன்னால்.

சாம்பாருக்குத் தேவையான சகல பொருட்களும் லாலாவுக்கே உரித்தான முறையில் சரியான விகிதத்தில் அடங்கியுள்ளன—புளி உட்பட. ஊறவைத்து, கரைத்து பிழியும் நேரமும் மிச்சம்.

வேகவைத்த பருப்புடன் லாலாவின் சாம்பார் பவுடரை கலந்துவிட்டு - இரண்டு கொதிப்பிற்குப் பின் அடுப்பிலிருந்து இறக்கினால் மீண்டும் மீண்டும் சாப்பிடத்தூண்டும் சாம்பார் தயார்.

சமையலறையில் முடங்கிக் கிடக்கவேண்டிய வேதனை இல்லை. சந்தோஷமான நேரத்திற்கும் குறைவு இல்லை.


கரம் மசாலா பவுடர், ரசம் பவுடர், இட்லி மிளகாய்ப் பொடி மற்றும் இதர வகைகளும் கிடைக்கின்றன.

லாலாவின் புதிய சுலபமுறை சாம்பார் பவுடர் நாவில் தங்கிடும் ருசி.

பாரம்பரிய சுவைக்கு —*லாலாஸ்*



ASP/LM/1333



ஸ்ரீவைஷ்ணவி தேவி, குமாரவாழ

நவராத்திரி மஹிமை

அன்னையின் வடிவம் பராசக்தி. எனவே அவள் "ஸ்ரீமாதா" என்று போற்றப்படுகிறாள். சிவன் கணவனாகவும், சக்தி மனைவியாகவும் இருந்து உலகம் என்ற குடும்பத்தை நடத்தி வருவதால் 'ஸதாசிவ குடும்பினி' என்றும் போற்றப்படுகிறாள். பல வடிவங்களுடைய பராசக்தி ராஜராஜேஸ்வரியாகி இனிமை, அருள், ஆனந்தம், அமைதிக்கு உறைவிடமாய்த் திகழ்கிறாள். அதே சக்தி மகா காளியாகவும், சண்டியாகவும் ஸம்ஹாரத் தாண்டவமாடுகிறாள். நவராத்திரி நாட்களில் நவதுர்க்கையாக மாறுகிறாள். அதனாலேயே ஒன்பது கன்னியர்களை நவ துர்க்கைகளாகப்பாவித்துசண்டியாகம்இயற்றுவர்.


இந்தப் பூஜைக்குரிய கன்னிகைகள் முறையே குமாரி, திருமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்ரா ஆகியோர். குமாரியைப் பூஜித்தால் தரித்திர நாசமும், சத்துரு நாசமும் ஆயுள் விருத்தி தனவிருத்தி முதலிய விருத்திகளுண்டாகும். திரிமூர்த்தியைப் பூஜித்தால் தர்மார்த்த காரியமும், தனதானிய விருத்தி, புத்திர பௌத்திராதி விருத்தியுமுண்டாகும். கல்யாணியைப் பூஜித்தால் வித்தை ஜயம், ராஜ்யசுகமுண்டாகும், ரோகிணியைப் பூஜித்தால் ரோகநாசமுண்டாகும். காளியை பக்தியுடன் உபாசித்தால் சத்துரு நாசமுண்டாகும். சண்டியைப் பூஜித்தால் ஐஸ்வர்யமுண்டாகும். சாம்பவியை நாடோறும் பூஜித்தால் யுத்தத்தில் ஜெயமும், தரித்திர நிவர்த்தியும், ராஜ சம்போகமும் உண்டாகும். துர்க்கையைப் பூஜித்தால் சத்துரு நாசமும், எந்தக் கடினமான காரியத்தையும் ஜெயிக்கும் ஆற்றலுமுண்டாகும். சுபத்திரையைப் பூஜித்தால் மனோரத சித்தியுண்டாகும். எவரெவர் எதை எதை விரும்பிச் செய்கின்றனரோ அதையதை அவர்களுக்குக் கொடுக்குந்தன்மையுடையது இவ்விரதம்.

பத்து நாட்கள் பத்துவித அலங்காரம், அர்ச்சனைகள் நூறாயிரம். 'ஸ்ரீ மாதா,' 'ஸ்ரீ மஹா ராஜ்ஞி முதல் நாள் அட்சயமாலையுடன் அலங்கார ரூபிணியாகி, 2—ம் நாள் கரும்புவில், மலரம்பு கொண்ட ராஜராஜேஸ்வரியாக மாறி, 3—ம் நாள் சூலம் தாங்கி மகிஷத்தின் தலைமீது நிற்பாள். 4—ம் நாள்


முதல் நாள் மஹேஸ்வரி பாலா


2ம் நாள் கௌமாரி குமாரி


3—ம் நாள் வாராஹி கன்யா கல்யாணி



5 ம் நாள் வைஷ்ணவி



6 ம் நாள் இந்திராணி



4 ம் நாள் மஹாலக்ஷ்மி

ஜெயதுர்க்கையாய்க் காட்சி தருவாள். 5—ம் நாள் தூது வந்த அசுரனின் கூற்றைக் கேட்பவளாகி, 6—வது நாளில் பரமேஸ்வரியாகி, மண்டை ஓடு, பிறை, அட்சய மாலையுடன் தாமரைப் பூ அணிந்து சர்ப்பராஜ பீடத்தில் காட்சி தருவாள். 7—வது நாளில் ஞானவடிவாய் வீணையுடன் காட்சி தருவாள். 8—ம் நாளில் அஷ்டசக்திகள் சூழ, கரும்பு—வில், ஏந்தி கருணை வடிவாகத் தோன்றுவாள். 9—ம் நாள் சிவசக்தி வடிவமாய் சகல ஆயுதங்களுடன் சர்வாலங்கார பூஷிதையாகக் காட்சி தருவாள்.

முதல் மூன்று நாட்கள் ருத்திர துர்க்கையை வணங்க வேண்டும். மாஹேஸ்வரி, கௌமாரி, வாராஹி என்று பூஜிக்கப்படுகிறாள். அடுத்த மூன்று நாட்கள் லக்ஷ்மி துர்க்கையைத் தியானிக்க வேண்டும். மஹாலக்ஷ்மி வைஷ்ணவி, இந்திராணி என்ற பெயர்களில் தியானிக்கப்படுகிறாள். கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதி துர்க்கையை வழிபட வேண்டும். மஹா சரஸ்வதி, நரசிம்மி, சாமுண்டி, என்ற நாமங்களில் பூஜிக்கப்படுகிறாள். கிரியா சக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி ஒன்றாகி மஹாசக்தியாக நவராத்திரியில் விளங்குகிறாள்.

பார்வதி, லக்ஷ்மி, ஸரஸ்வதி ஒருங்கிணைந்து மகிஷனை வதைத்து மகிஷாசுரமர்த்தினியானாள். ஒன்பதுநாள் ஊசிமேல் கடும் விரதம் அம்பாள் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவேதான் பெரியோர்களில் பலர் ஒன்பது நாட்களில் ஊசியால் தைக்கவே மாட்டார்கள். பத்தாவது நாளில் அசுரனை வென்று அன்பையும் அறத்தையும் தழைக்கச் செய்தாள். அன்னை வெற்றி தரப்போகும் ஆயுதங்களைப் படைத்து பூஜை செய்த ஒன்பதாவது நாளைத்தான் ஆயுத பூஜையாகப் போற்றுகிறோம். தொழிலாளர்கள், உழவர்கள், நெசவாளர்கள், மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற உதவும் ஆயுதங்களை வைத்து சரஸ்வதி பூஜையாகக் கொண்டாடுவார்கள். அசுரனை அழித்த பத்தாவது நாள் வெற்றியைத் தரும் விஜயதசமியாகக் கொண்டாடப்படுகிறது.

நவராத்திரியில் சாமுண்டி வழிபாடு மிகச் சிறந்த அம்சமாகும். உஜ்ஜயினி நாட்டின் அரசன் பீஜ்ஜலனுக்கு ஏழு பெண்கள். இவர்களில் ஏழாமவள் சாமுண்டி. ஏழு பேரும் வடக்கிலிருந்து தெற்கு வந்து தெற்கில் வெவ்வேறு இடங்களில் நிலை பெற்றனர். சாமுண்டி மகிஷ மண்டலத்தால் கவரப்பட்டு நிலைக்க எண்ணிய போது மகிஷன் என்னும் அசுரன் தடுத்தான். அவனுடன் போரிட்ட போது அம்பிகையின் நெற்றியிலிருந்து பெருகிய வியர்வையிலிருந்து மாரம்மா தோன்றினாள். மாரம்மாவின் உதவியால் மகிஷனை வென்று மலை உச்சியில் கொலுவேறினாள். மகிஷன் ஆண்ட மகிஷ மண்டலமே மகிஷபுரியாகி, மகிசூராகி, இப்பொழுது மைசூர் என்று அழைக்கப்படுகிறது. அங்கு போற்றப்படும் தேவியே சாமுண்டி. மைசூர் தசரா உலகப் புகழ் பெற்றது. வங்காளத்தில் காளி பூஜை துர்க்கா பூஜை என்றும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.



7ம் நாள் மஹா சரஸ்வதி



8ம் நாள் நரசிம்மீ



9—ம் நாள் சாமுண்டி

நவராத்திரி பெண்களுக்கான பண்டிகை என்றே நம்மில் பலர் நினைக்கிறோம். அன்னையின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டியவர்கள் ஆண், பெண் இருவருமே. இராமபிரான் நவராத்திரி விரதம் இருந்ததாக தேவி பாகவதம் கூறுகிறது. இழந்த சீதையையும், அரசையும் பெற விஜயதசமியன்று இராவணனுடன் போரிட்டதாகவும் சான்றுகள் உண்டு. கௌரவர்களை அழிக்கப் பாண்டவர்கள் சபதம் பூண்டது விஜயதசமியன்றுதான். சிவபெருமானே திரிபுரத்தை எரிக்க நவராத்திரி விரதம் இருந்ததாகப் புராணங்கள் கூறுகின்றது. சத்ரபதி சிவாஜியும் இந்து சாம்ராஜ்யம் அமைக்க விஜயதசமியன்றுதான் புறப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

நவக்கிரகங்களும் மஹாசக்தியில் அடக்கம். நவக்கிரகங்களுக்கு உகந்த சில பூஜா விதிகளையும் நவராத்திரியில் கடைப்பிடித்தால் சகல நோய்களும் தீர்ந்து சர்வமங்களம் பெருகும்.

அந்தந்த கிரஹங்கள் கிழமைகளுக்குண்டான தானியங்களால் நைவேத்தியம் தயார் செய்து நவகிரஹங்களுக்கும் அர்ப்பணித்தால் சர்வமங்களம் உண்டாகும் என்பது நியதி..

உங்கள் குழந்தைகளுக்கு ஒரு நற்பழக்கத்தை அறிமுகம் செய்யுங்கள்...



ட்ரஸ்ட் (நைட்)

பற்பசையினால் இரவில் பல் துலக்கும் பழக்கம்

உறங்கும் பொழுது, பற்களிடையே சிக்கி இருக்கும் உணவுப்பண்டங்களின் மீதங்கள் வாயில் கிருமிகளைப் பெருகச் செய்து 'ப்ளாக்' என்ற மெல்லிய பற்பூச்சை படரச் செய்கின்றன. 'ப்ளாக்' பற்சிதைவு, பற்குழிகளை ஏற்படுத்திவிடும்.

உங்கள் குழந்தைகளின் பற்களை சிறுவயதிலிருந்தே பாதுகாக்க ட்ரஸ்ட் (நைட்) மூலம் இரவில் பல் துலக்குவது மிக அவசியம். அதில் இருக்கும் 'க்ளோர்ஹெக்ஸிடின்' பல மணி நேரம் வாயில் தங்கி பற்களைக் கெடுக்கும் கிருமிகளைக் கொல்லுகின்றது.

ட்ரஸ்ட்...ஒரு விசேஷமான பற்பசை.

AKSHARA/ 9685 Tam (N)

முதல் பரிசு: ஹாட் பேக்
சைனீஸ் கட்லெட்

தேவையான பொருட்கள்:

நூடுல்ஸ் — 1½ கப்,
உருளைக் கிழங்கு — 3,
காரட் — 2,
பீன்ஸ் — 200 கிராம்,
கோஸ் — 200 கிராம்,
உரித்த பச்சைப் பட்டாணி — 4 மேசைக் கரண்டி,
வெங்காயம் — 2,
பிரட் ஸ்லைஸ் — 3,
மஞ்சள் தூள் — ¼ தேக்கரண்டி,
மிளகாய்த் தூள் — ½ தேக்கரண்டி,
மைதா மாவு — 3 அல்லது 4 மேசைக் கரண்டி,
கொத்துமல்லி இலை — 2 மேசைக்கரண்டி,
சோயா சாஸ் — 1½ தேக்கரண்டி,
சில்லி சாஸ் — 1 தேக்கரண்டி,
பச்சை மிளகாய் — 2 (அ) 3,
உப்பு — தேவைக்கேற்ப,
அஜினமோட்டோ — 1 தேக்கரண்டி,
பிரட் தூள் — 1 கப்,
பொரிக்க எண்ணெய்.

செய்முறை:

நூடுல்ஸ் ஒன்றிரண்டாக பொடித்து வைக்கவும். கொஞ்சம் தண்ணீரில் வேகவிட்டு எடுத்து வடிய வைக்கவும். ரொட்டி ஸ்லைஸ் கொஞ்சம் தண்ணீரில் ஊற வைக்கவும். வெங்காயம், காய்கறிகளை பொடிப் பொடியாக நறுக்கி வைக்கவும்.

2 மேசைக் கரண்டி எண்ணெயைச் சூடாக்கி வெங்காயத்தை நன்றாக வதக்கிக்

இம்மாத இல்லத்தரசி


இம்மாத இல்லத்தரசிக்கு நடுவர்களாக இருந்தவர்கள்: கஸ்தூரிபா பெண்கள் மன்றம், புதுக்காலனி, ஆதம்பாக்கம்.

வஸந்தா பார்த்தசாரதி, பங்கஜம் ராமலிங்கம்,
சிநேகம் கிருஷ்ணமூர்த்தி,
பேபி, பெரியசாமி, சாவித்ரி ஜெயராமன்.



கொண்டு, காய்கறிகள், நூடுல்ஸ், உப்பு, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், சேர்த்து, கொஞ்சம் தண்ணீர் தெளித்து மூடி வைக்கவும். காய்கறிகள் வெந்ததும் அஜினமோட்டோவை தூவி, சோயா சாஸ், சில்லி சாஸ், பிசைந்த பிரட் சேர்த்துக் கிளறவும். மைதா மாவைத் தூவி, நன்றாக மசித்துக் கொண்டு கிளறி, இறக்கு முன்பு கொத்துமல்லி, பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் சேர்க்கவும்

போட்டு குக்கரில் வைத்து வேக விடவும். பருப்பு குழையக் கூடாது. வெந்தபின் இறக்கி கரம் மசாலா சேர்த்து கலக்கி வைக்கவும். மைதாவை சிறிது உப்பு சேர்த்து நீர்விட்டுப் பிசையவும். பூரிக்குப் பிசைவது போல் பக்குவம் இருக்க வேண்டும்., மாவு ஒரு பத்து நிமிடம் ஊற வேண்டும்.



கீதா கருணாகரன்

வி. பங்கஜம்

ஆறியதும் கையில் எண்ணெ தொட்டுக் கொண்டு கட்லெட் வடிவத்தில் ஷேப் செய்து கொண்டு பிரட் தூளில் நன்றாக பிரட்டி, சூடான எண்ணெயில், பொன்னிறமாக பொரித்து எடுக்கவும். தக்காளி சாஸ் உடன் சூடாகப் பரிமாறவும்.

—திருமதி. சுந்தரம், பம்பாய்—52.

இரண்டாம் பரிசு: மினி இட்லி தட்டுகள்

கீமா சீஸ் ரோல் கட்லெட்

தேவையான பொருட்கள்:

கொத்தின கறி — 250 கிராம்,
சீஸ் துருவல் — 1 கப்,
கடலைப் பருப்பு — ½ கப்,
வெங்காயம் (பொடியாக நறுக்கவும்) — 1 மீடியம் சைஸ்,
பூண்டு — 3 பல்,
இஞ்சி — 1 துண்டு,
பச்சை மிளகாய் — 3,
கரம் மசாலா — 1 டீஸ்பூன்,
முட்டை — 3,
ரொட்டித் தூள் — 1 கப்,
எண்ணெய் (அ) நெய் — பொறிக்க.

செய்முறை:

இஞ்சி பூண்டு இவைகளை அரைத்துக் கொள்ள வேண்டும். கறியை நன்கு கழுவித் தண்ணீர் இல்லாமல் பிழிந்துவிடவும். பருப்பையும் சுத்தம் செய்து எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் போடவும். வெங்காயத் துண்டுகளையும் மிளகாய் போட்டு உப்பு

பின்னர் எலுமிச்சை அளவு உருண்டை மாவு எடுத்து வட்டமான மெல்லிய பூரியிடவும். இவ்வாறு மூன்று பூரிகள் இடவும்.

முதல் பூரியின் மேல் சிறிதளவு கைமா கலவையைப் பரப்பவும். அதன் மேல் இரண்டாவது பூரியைப் போட்டு அதிலும் அவ்வாறே கலவையைப் போட்டு மீண்டும் மூன்றாவது பூரியைப் போட்டு அதன் மேலும் கலவையைப் போடவும். பின் லேசாக அழுத்திவிடவும். இப்போது மூன்று பூரிகளையும் இறுக்கமாய் ரோல் செய்து கொள்ள வேண்டும். ஓரங்களை நன்கு அழுத்திவிட்டு 1 அங்குலத் துண்டுகளாய் கட் செய்யவும். எல்லாவற்றையும் இவ்வாறே செய்துவிட்டு சீஸ் துருவலில் இருபுறமும் அழுத்தி விடவும்.

பின் மூன்று முட்டைகளையும் நுரைக்க அடித்து அதில் கட்லெட்டின் இருபக்கமும் பட தோய்த்து மீண்டும் ரொட்டித் தூளில் புரட்டவும். வாணலியில் எண்ணெய் காய்ந்தவுடன் கீமா சீஸ் ரோல் கட்லெட்டுகளை போட்டு சிவக்க விட்டு எடுக்கவும். மிதமான தீயே போதுமானது. புதினா சட்னி, தக்காளி சாஸ் இவற்றுடன் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

—திருமதி. கீதா கருணாகரன், ஹைதராபாத்—36.

மூன்றாம் பரிசு: பூக்கூடை

பாம்பே கட்லெட்

தேவையான பொருட்கள்:

உருளைக் கிழங்கு — ½ கிலோ,
பச்சைப் பட்டாணி — 100 கிராம்,
காரட் — 1,
பெரிய வெங்காயம் — 1,
பச்சை மிளகாய் — 6,
இஞ்சி — 1 துண்டு,
பூண்டு — 4 பல்,

பச்சரிசி சாதம் — 1 கப்,
கடலை மாவு — 1 கப்,
சேமியா — 1 கப்,
நெய் அல்லது டால்டா 50 கிராம்,
கரம் மசாலா — 1 டீஸ்பூன்,
சோம்பு — ½ டீஸ்பூன்,
சீரகம் — ½ டீஸ்பூன்,
உப்பு — தேவையான அளவு,
பொறித்து எடுக்க எண்ணெய்.

செய்முறை:

உருளைக் கிழங்கை வேக வைத்து தோல் எடுத்துக் கட்டி இல்லாமல் உதிர்த்துக் கொள்ளவும்.

சூட்டுடன் ஒரு கப் சாதம் எடுத்து உரு தெரியாமல் மசித்துக் கொள்ளவும்.

பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு, வெங்காயம் சுத்தம் செய்து, பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

காரட்டைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய், 4 முட்டை விட்டு காய்ந்ததும், நறுக்கி வைத்துள்ள இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம், பூண்டு போட்டு சற்று வதக்கவும். பாதி வதங்கியதும், நறுக்கிய காரட், பட்டாணியை அதன் மேல் போட்டு மேலும் வதக்கவும். இதை தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு தாம்பாளத்தில் கடலை மாவைக் கொட்டி பரப்பி 50 கிராம் டால்டா அல்லது நெய்யை உருக்கி சூட்டுடன் கடலை மாவு மேல் கொட்டிக் கலக்கவும். இதன்மேல் உதிர்த்த உருளைக் கிழங்கு, மசித்த சாதம், வதக்கிய இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம், பூண்டு, காரட், பட்டாணி உப்பு, கரம் மசாலா, சீரகம், சோம்பு போட்டுக் கொஞ்சமாகத் தண்ணீர் சேர்த்து ஒன்றாகக் கலந்து சப்பாத்தி மாவு பக்குவத்தில் கலந்து கொள்ளவும்.

அடுப்பில் எண்ணெய் வைத்துக் காய்ந்ததும், ப்ளாஸ்டிக் பேப்பரில் எண்ணெய் தடவி மேற்படி கலவையை வடைபோல் வட்டமாகவோ நீண்ட சதுரமாகவோ செய்து, ஒரு தட்டில் நொறுக்கிய சேமியாவைப் பரவலாக தூவி, ஒவ்வொரு கட்லெட்டையும் அதில் (சேமியாவில்) ஒற்றி எடுக்கவும். (இருபுறமும்.) (சேமியா நன்றாக கட்லெட்டில் அடங்கும்படி). இதைக் காய்ந்த எண்ணெயில் இரண்டு, மூன்றாகப் போட்டு பொன் நிறமாகப் பொறித்து எடுக்கவும்.

பின் குறிப்பு:

தோசை கல்லிலும் எண்ணெய் தடவிப் போட்டு சுற்றி எண்ணெய் விட்டுத் திருப்பிப் பொன்னிறமாகச் சுட்டு எடுக்கலாம்.

— ஜி. ராமலட்சுமி, பம்பாய்—28.

ஆறுதல் பரிசு: டிஷ்

மீன் கட்லெட்

தேவையான பொருட்கள்:

மீன் — ¼ கிலோ,
உருளைக் கிழங்கு — ¼ கிலோ,
பச்சை மிளகாய் — 6,
இஞ்சி — 1 சிறிய துண்டு,
பூண்டு — 4 பற்கள்,
மிளகு — ½ சின்ன ஸ்பூன்,
கிராம்பு — 4,
பட்டை — சிறு துண்டு,
ஏலக்காய் — 2,
பெரிய வெங்காயம் — ¼ கிலோ,
முட்டை — 1,
ரஸ்க் தூள் — 1 கப்,
புதினா — சிறிது அளவு,
கொத்துமல்லி இலை — சிறிது அளவு,
எலுமிச்சைச் சாறு — ருசிக்குத் தகுந்தாற் போல்
உப்பு — தேவையான அளவு,
எண்ணெய் — ஒரு கப்.

செய்முறை:

மீனை சிறிது உப்பு சேர்த்து வேக வைக்க வேண்டும். பச்சை மிளகாய், வெங்காயம், இஞ்சி, பூண்டு, புதினா, மல்லி ஆகியவற்றை சின்னதாக நறுக்கவும். பட்டை, ஏலக்காய் ஆகியவற்றைப் பொடி செய்து கொள்ளவும்.

உருளைக் கிழங்கை வேக வைத்து, உரித்து நன்றாக மசித்து வைத்துக் கொள்ளவும்.

வேக வைத்த மீனில் இருந்து முள்ளை அகற்றவும். வாணலியில் ¼ கப் எண்ணெய்

பூண்டு

ஒருவர் மிகவும் ஆரோக்கியமாக நீண்ட காலம் உயிர் வாழ உறுதுணை புரிவது பூண்டாகும். இரைப்பை, நுரையீரல் சம்பந்தப் பட்ட நோய்களுக்கு இது நல்ல மருந்தாகும். இரத்த அழுத்தத்திற்கும், சளித் தொல்லைக்கும், நிமோனியா சுரத்திற்கும் கூட இது அருமருந்தாகப் பயன்படுகிறது. நாள்தோறும் சிறிது பூண்டு உண்டு வர நுரையீரலில் கட்டியிருக்கும் கபம் கரைந்து சுரம் குறைந்து வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்படுகிறது. இதை தினமும் உண்பவர் என்றும் இளமையோடு இருப்பார் என்பதில் ஐயமில்லை.

— சந்திரா.



ஊற்றி வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு, ஆகியவற்றை நன்ருக வதக்கி, பொடி செய்துள்ள பட்டை, கிராம்பு, ஏலக்காய் ஆகியவற்றை மேலே தூவ வேண்டும். பிறகு வேக வைத்த மீனைப் போட்டு நன்ருகக் கிளற வும். பின் மசித்த உருளைக் கிழங்கையும், அதில் சேர்த்து நன்ருகக் கிளறி அடுப்பிலி ருந்து இறக்கவும். ருசிக்குத் தகுந்தாற் போல் உப்புப் போட்டு, சிறிது எலுமிச்சம்பழச் சாற்றைப் பிழிந்து கிளறவும்.

முட்டையை நன்ருக அடித்துக் கொள்ள வும். தயார் செய்த கலவையை சிறிய உருண் டைகளாக உருட்டி, பின் வடை போல் தட்டி, முட்டையில் நனைத்து, ரஸ்க் தூளில் புரட்டி எடுத்து எண்ணெயில் போட்டு எடுக்கவும்.

—புவஞ எஸ். மோகன், மூணுறு.

ஆறுதல் பரிசு: டிஷ்

வின்ச் கட்லெட்

தேவையான பொருட்கள்:


அவல் — 2 கப்,
பொட்டுக்கடலை — 1 கப்,
உருளைக் கிழங்கு — ¼ கிலோ,
ப. மிளகாய் — 6,
வெங்காயம் — 100 கிராம்,
கொத்துமல்லி — 1 கட்டு,
எலுமிச்சம்பழம் — 2,
பச்சரிசி மாவு — 4 ஸ்பூன்,
எண்ணெய் — ½ லிட்டர்,
உப்பு — தேவையான அளவு.

செய்முறை:

அவலை தண்ணீர் விட்டு ½ மணி நேரம் ஊற வைத்து, தண்ணீர் இல்லாமல் எடுத்துக் கொண்டு, பொட்டுக்கடலையைச் சிவக்க வறுத்து, கரகரப்பாய் பொடி செய்து, உருளைக் கிழங்கை தோல் சீவி, பூப்போல் துருவி, வெங்காயம், பச்சை மிளகாய், கொத்து மல்லி இவற்றைப் பொடிப்பொடியாக அரிந்து, எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து, உப்பு சேர்த்து சிறிது தண்ணீர் விட்டுப் பிசைந்து, அத்துடன் பச்சரிசி மாவையும் சேர்த்துப் பிசைந்து, எண்ணெயை காய வைத்து கட் லெட் வடிவத்தில் செய்து, எண்ணெயில் போட்டுச் சிவக்க வெந்த பின் எடுக்கவும்.

—வி. மங்களம், கோவை—29

இம்மாத இல்லத்தரசி போட்டியில்
தரப்பட்ட பாத்திரங்கள்.





மூக்குத்தி எப்போது வந்தது?

கி. ராதாகிருஷ்ணன் I.P.S

கி. மு. 500 ஆம் ஆண்டில் பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரம் தோன்றியதாகப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அந்நூலில் ஆடை அணிகள், ஒப்பனை, ஆபரணங்கள் பற்றி விரிவாகக் கூறப்படுகிறது.

அணி வகைகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1. ஆவேத்யம்: உறுப் புக்களைத் துளைத்து அணிவது (காதணிகள்); 2. பந்தனீயம்: கட்டி அணிவது (ஸ்ரோணி ஸூத்ரம் (மேகலை) அங்கதம் (வங்கி என லாம்); 3. ப்ரக்ஷேப்யம்: அணிவது நூபுரம் போன்றது; 4. ஆரோப்ய: சுற்றி வடமாக அணிவது. ஹேம சூத்ரம் (தங்கச் சங்கிலி)

சதுர்விதம் து விக்ஞேயம் தேஹஸ்ய
ஆபரணம் புதை:
ஆவேத்யம், பந்தனீயம் ச ப்ரஸேப்யா
ரோப்யகே ததா
ஆவேத்யம் குண்டலாதிஹ யஸ்யாத்
ச்ரவண பூஷணம்
ச்ரோணி ஸூத்ராங்கதை (ஸ்ததா) பந்
தனீயானி நிந்திசேத்
ப்ரக்ஷ்யேப்யம் நூபுரம் வித்யாத்வஸ்த்ரா
பரணமேவச
ஆரோப்யம் ஹேமஸூத்ராதி ஹாராஸ்ச
விவிதாச்ரயா:

ஆண்மக்களுக்குரிய அணிகள் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன. தலைக்குச் சூடா மணி, மகுடம், காதுக்குக் குண்டலம், மோச கம், கீலம்; கழுத்திற்கு முக்தாவளி, ஹர்ஷ கம்; விரலுக்கு அங்குலி முத்ரா; கைக்கு வலயம், பாஹூநாலி; மணிக்கட்டுக்கு ருசக; சூலிகா; முழங்கைக்குமேல் கேயூரம்; அங் கதம்; மார்பிற்கு த்ரிஸரம்; தொங்கும் முத்து மாலை; இடுப்பிற்கு திலகம், தங்க ஸூத்ரம்; கடவுளர்க்கும், அரசர்க்கும் மேற்கூறிய வகை யில் ஆபரணங்கள் செய்ய வேண்டும்.

மகளிர் அணிகலன்கள்:

தலை: சிகாபாசம், சிகா வ்யாலம், பிண்டி பத்ரம், சூடாமணி, முக்தாஜாலம் (முத்து வலை, பசுக்களின் கண்கள் பரிமாணத்தில் வலைகள் பின்னியிருக்க வேண்டும்), சீர்ஷ ஜாலம் (கூந்தல் வலை).

நெற்றி: திலகம், மலர் வடிவங்களைக் கண்டு புருவத்திற்கு மேல் இருக்க வேண்டும்.

காது: குண்டலம், கர்ணிகா, கர்ண வலயம், சிகிபத்ரம் (தாமரை நாளத்துடன் கட்டியிருக்க வேண்டும்), பத்ர கர்ணிகா, கர்ண முத்ரா, கர்ணோத் கீலகம், (காதின் மேல் நுனியில் அணிய), பல்வகை தந்த பத் ரங்கள் (மணிகளுடன் கோத்து), கர்ண பூரம்.

கன்னம்: திலகம், பத்ரலேகா.

மார்பு: த்ரிவேணி

கழுத்து: முக்தாவலி (முத்துச்சரம்), வ்யாலபங்க்தி (ஸர்ப்ப வகைகள்), மஞ்சரி (மணி மாலை), ரத்ன மாலிகா, இரண்டு, மூன்று, நான்கு வட சங்கலிகள். — கழுத்து ஆபரணங்கள் மார்பையும் அலங்கரிக்கும் வகையில் இருக்கலாம்.

கரங்கள்: அங்கதம், வலயம் (வளையல் கள்). இவைகள் மேல்கரங்களில் அணியப் படுவன. கர்ஜூரகம், உச்சிதிகம், கலாபி, கடகம் இவை முன்கரங்களுக்கு.

விரல்கள்: ஹஸ்த பத்ரம், பூரகம்.

இடை: காஞ்சி (முத்துக்கள், கோக்கப் பட்டவை), தலகம், மேகலா, ரஸனா, கலா பம், காஞ்சிக்கு முத்துச்சரம் ஒன்று. மேகலைக்கு எட்டு வடம். ரஸனைக்கு பதினாறு, கலாபத்திற்கு 25 வடங்கள். தெய்வங்களுக் கும், அரசிகளுக்கும் 32, 64, 108 வடங்கள்.

கணுக்கால்: நூபுரம், கடகம், கிண்கிணி (ஒலிக்கும் மணிகள் கோர்க்கப்பட்டது).

முழங்காலிலிருந்து கணுக்கால் வரை: பாதபத்ரம்.

கால்விரல்கள்: அங்குலீயகம் (மெட்டி). கட்டை விரலுக்குத் திலகம்.

மேற்கூறிய அணிகலன்கள் ரஸ, பாவங் களுக்கு, மேனி நிறம், பரிமாணங்களுக்கு ஏற்ற வகையில் விஸ்வகர்மா வகுத்த வழி யிலும், ஆகம முறைப்படியும் அணிய வேண் டும். முழுவதும் பொன் இல்லாமல் அரக்கு

இலக்கியம் காட்டும் அணிகலன்கள்

டன் இழைத்து இருந்தால் தளர்ச்சியிராது என்று கூறப்படுகிறது.

இந்திய சரித்திர காலத்தையொட்டி வளர்ந்த அணிகலன்கள்:

மொஹெஞ்சோதாரோ, ஹாரப்பா இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி மூலம் கண்டறிந்த இந்திய துணைக் கண்டத்தின் நாகரிகம். சரித்திர வரலாற்றில் எவ்வாறு பல்வகையில் மாறுபாடு அடைந்தது என்பதை நாம் அறிவோம்.

அலெக்ஸாண்டர் படையெடுப்பு மூலம் கிரேக்க, கலாச்சாரம், ஹூணர்கள், பாரசிகர்கள், முகம்மதியர்கள், ஆங்கிலேயர்கள், போர்த்துகீசியர்கள், டச்சுக்காரரர்கள் பின்னிப் பிணைந்தன. ஹிந்து, பௌத்த, சமண, இஸ்லாமிய, கிருத்தவ சமயங்களும் கலந்தன. இந்தியர்களும், ரோமாபுரி, கிரேக்க நாடுகளுடனும், ஆப்பிரிக்கா, மொரீசியஸ், பர்மா, தாய்லாந்து, மலேயா, இலங்கை, இந்தோனிஷியா, சீனு போன்ற நாடுகளுக்கு வாணிப, சமய வழி தொடர்பு கொண்டு குடியேறியும் மற்ற இனங்களுடனும் கலந்தனர்.



அணிகலன்களை ஆராயும்போது பல்வகை நாகரிக ஊடுறுவல்களை காணலாம். கிரேக்க, ரோமாபுரி, அணிகலன்களில் இந்திய கலாச்சாரத்தின் முத்திரையை காணலாம். அவ்வகையில் பிற நாடுகளின் கலாச்சார பிரதிபலிப்பையும் நம் அணிகளில் காண முடியும். நம் நாட்டிலேயே எழுதப்பட்ட வேத, இலக்கிய, சமய, சரித்திர நூல்கள், சிற்பம், சித்திரம், வெளி நாட்டிலிருந்து வ்ருகைத் தந்த பல யாத்ரீகள் எழுதியிருக்கும் அனுபவத் தகவல்கள் போன்றவைகள்தான் ஆய்வுக்கு உதவுகின்றன.

கௌடில்யனின் அர்த்த சாஸ்திரம் கி.மு. மூன்றாவது நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. நம் நாட்டில் பல இடங்களில் பொன் கிடைத்ததாக தெரிய வருகிறது. இடத்திற்கு ஏற்ற வகையில் பெயர்கள் கொடுக்கப்பட்டன. (சம்பு நதியருகில் கிடைத்ததற்கு சம்புநாதம், சாதகும்ப மலையருகில் கிடைத்த வகைக்கு சாதகும்பம் என்றும் இன்னும் பல வகைகள் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் சாதரூபம், சாம்பூநாதம் இவற்றின் குணங்களை அறிந்திருந்த பொற்கொல்லர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வகைகளுக்கு ஏற்ற அங்காடிகள் இருந்தன. அர்த்த சாஸ்திரத்திலும் " இவ்வகையான வாணிப இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

வெள்ளி பிற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டது. முத்துக்கள், பவழங்கள், வயிரம், மற்றும் பல்வகை இரத்தினக் கற்கள் நம் நாட்டிலேயே கிடைத்தன. பொன் ஆபரணங்களைச் செய்ய பரம்பரை வழி வந்த பொற்கொல்லர்களே பயன்படுத்தப்பட்டனர். ஆபரண திருட்டுகளுக்கு அர்த்த சாஸ்திரப்படி மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. கோவலன் கதையும் இதைப் பிரதிபலிக்கிறது.

வடநாட்டில் முகம்மதிய ஆட்சியில் இஸ்லாமிய, துணைக் கண்டத்தின் கேரளம் போன்ற மேற்கு பகுதியில் அரேபியர்களின் கலாச்சார வழிமுறைகள் அணிகலன்களிலும் ஊடுறுவின. மொகலாய சக்கிரவர்த்திகள் பாரசீகம் போன்ற மத்திய ஆசியா நாடுகளிலிருந்து ஆபரணத் தொழில் நுட்பம் அறிந்த கலைஞர்களை வரவழைத்தனர். மூக்கு அணிகலன் முகம்மதியர் காலத்தில் புகுத்தப்-

பட்டதாக சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். சங்க காலத்து இலக்கிய நூல்களிலும் மூக்கு அணி வர்ணனையை காண்பதரிது. பரத முனியின் நாட்டிய சாஸ்திரத்தில் அணிகலன் பட்டியலும் அது குறிப்பிடப்படவில்லை.

1938—இல் பி. கே. கோடே என்பவர் மூக்குத்தியைப் பற்றி ஒரு விரிவான ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதியுள்ளார். அச்சமயம் பூனாவில் இருந்த ஒரு சுகாதார அதிகாரி மகளிர் மூக்கில் 'நத்து' அணிவது அசுத்தமான பழக்கமுறை என்று கூறியது ஆராய்ச்சியாளரின் ஆய்வு முயற்சியைத் தூண்டியது. டாவர்னியர் என்னும் யாத்ரீகம் நத்து அணியும் முறை அரபு நாட்டில் உதித்தது என்று எழுதினார்.

பி. கே. கோடே 1832 ஆம் ஆண்டு லண்டனில் வெளி வந்த 'முகம்மதிய பழக்க வழக்கங்கள்' என்ற புத்தகத்தில் 'தித்திப்புப் பண்டங்கள் விற்கும் வீதிகளில், இளிய மகளிர் மூக்கில் நத்து — புல்லக்குடன் காட்சியளித்தனர்' என்பதை குறிப்பிட்டிருக்கிறார். நத்து—புல்லக்கு வடமொழியில் இல்லை. அது பிற மொழியிலிருந்து வந்தது என அவருடைய வாதம். சில வட மொழி நூல்களில் வரும் சொற்களைச் சுட்டிக்காட்டி அவைகளெல்லாம் கி. பி. 1000 ஆம் ஆண்டிற்குப் பிறகு எழுதப்பட்டவை என்கிறார்.

கிருஷ்ண கர்ணாம்ருதத்தில் வரும் 'நாஸாக்ரே நவ மௌளதிகம்' கி. பி. 1080ல் எழுதப்பட்டிருக்கலாம் என்கிறார். அவ்வகையில் ஆதி சங்கரர் எழுதிய திரிபுரசுந்தரி மானஸ பூஜாஸ்தோத்திரத்தில் வரும் 'முக்தாமுகோத்பாஸிதாம்' நாஸாவி பூஷாமிமாம்'. ஆபரணத்தின் லக்ஷணத்தை குறிக்கிறது மூக்கை வர்ணிப்பது அல்ல' என்கிறார்.

'முக' என்பது வடமொழியில் என்னவென்று புரியாது. கன்னட மொழியில் 'முக பட்டு' என்றால் மூக்கு அணி என்கிறார். தமிழிலும் 'மூக்குத்தி' என்பது மூக்குடன் இணைந்ததுதான்! அந்த ஸ்தோத்திரத்தில் சில வரிகள் சங்கரருக்குப் பிற்காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளரின் கருத்து. பண்டைய கால சிற்பங்களிலும், சித்திரங்களிலும் மூக்கு ஆபரணம் குறிக்கப்படவில்லை என்கிறார். முகம்மதியர் காலத்திற்குப்பின் வரையப்பட்டவைகளில் காணலாம் என்கிறார். வாத பிரதிவாதங்களுக்கிடையே அதோடு நின்றது. இன்னொரு ஆராய்ச்சியாளர் கிருத்தவ ஆதியாகமத்தில் (ஸெமிடிக் குடியினர் அணிந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார்)

மிக்க மங்களகரமாகப் போற்றப்படும் இம்மூக்குத்தி அணியைப்பற்றி மேலும் ஆராய்வதற்கு வாய்ப்பு உள்ளது போல தோன்றுகிறது!

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள் : தொக்கு

கடைசி தேதி: 15.10.85

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்


பெண்மை அழகின்
முழுமை எழிலுக்கு...
விஜய்
தயாரிப்பாளர்கள் :
விஜய் என்டர்பிரைசஸ்
சென்னை
இளமை, வளமை, வனப்பு —
மங்கையரின் எழில் கூட்டும்
"விஜய்" உள்ளாடைகள் —
உடலுக்கு மென்மை சுகம் தர
உன்னதமான உயர் ரக
பருத்தி இழையில் தயாரிப்பு
"விஜய்" மகளிர் வண்ண உலகில்
ஒரு புதிய பார்வை, பொருத்தம் சேர்த்தி
கருங்குதலின்றி நாள் முழுவதும்
உடலோடு பொருத்தம், மிக சுகம்
"விஜய்" பிரேசியர்கள் வனிதையர்
உலகிற்காக, உங்களுக்காக!
விஜய் பிரேசியர்கள்

JG/VE/1/85



குழந்தை விளையாட்டுப் பொருளை வீசி எறிகிறதா?

எந்தவொரு விளையாட்டுப் பொருளைக் கொடுத்தாலும், உங்களின் குழந்தை அவைகளை வீசி எறிகிறதா? தரையில் மோதி உடைத்துத் தள்ளுகிறதா? ஆம் என்றால் இவ்வாறு உங்கள் குழந்தை செய்வதற்குக் காரணம் உங்கள் குழந்தை அல்ல. நீங்கள் தான்... எப்படி என்கிறீர்களா?

குழந்தைகளுக்கென விளையாட்டுப் பொருட்கள் வாங்கக் கடைக்குச் சென்றால் நமக்கு எந்த விளையாட்டுப் பொருட்கள் பிடிக்கிறதோ அதைத்தான் வாங்கிக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறோம்., நாம் செய்யும் இந்தத் தவறு காரணமாகத்தான் விளையாட்டுப் பொருட்களைக் குழந்தைகள் வீசி எறிகின்றன. உடைத்துத் தள்ளுகின்றன.

குழந்தைகளுக்கு எந்தெந்த விதமான விளையாட்டுப் பொருட்கள் பிடிக்கின்றனவோ அந்தப் பொருட்களைத்தான் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமேத் தவிர நமக்கு விருப்பமான பொருட்களை வாங்கிக் கொடுக்கக் கூடாது. சரி... குழந்தைக்கு விருப்பமான விளையாட்டுப் பொருள் எது எது என்பதை எப்படி அறிந்து கொள்வது?

கடைகளுக்குக் குழந்தைகளைத் தூக்கிச் சென்று. அவை சுட்டிக் காட்டும் பொருட்களை வாங்கிக் கொடுக்க வேண்டுமா... அப்படி இல்லை... உங்களுக்கு இந்த சிரமத்தை ஏற்படுத்தாமல் இருக்க, குழந்தைகளின் வயது அளவைப் பொறுத்து அவைகளுக்கு என்னென்ன விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுக்க வேண்டும் எனக் குழந்தை இயல் நிபுணர்கள் ஒரு பட்டியல் தயாரித்துள்ளனர். அந்தப் பட்டியல் இதோ...



ஆறு மாதத்திற்கு உட்பட்ட குழந்தை

உலோகத்தில் அமைந்த மற்றும் பெயிண்ட் பூசிப்பட்ட விளையாட்டுப் பொருட்களை இந்த வயதுக் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாது. எதையும் வாயில் வைக்கும் குணம் கொண்ட குழந்தை விளையாட்டுப் பொருளை வாயில் வைத்தால், பொருளின் மீதுள்ள வர்ணப் பூச்சு குழந்தையின் வயிற்றுக்குள் சென்று விபரீத விளைவுகளை ஏற்படுத்திவிடும். மேலும் உலோகத்தினாலான விளையாட்டுப் பொருட்கள், குழந்தையின் பிஞ்சு உடலில் இரத்தக் காயங்களை ஏற்படுத்தி விடக் கூடும். ஆகவே துணியால் செய்யப்பட்ட யானை, நாய், பந்து, போன்றவைகளையே இந்த வயதுக் குழந்தைகளுக்கு விளையாடக் கொடுக்க வேண்டும்.

ஆறு மாதம் முதல் பன்னிரண்டு மாதம் வரை

இப்போது, துணியால் ஆன விளையாட்டுப் பொருட்களை நீக்கிவிட்டு, ஆணிகள் அடிக்கப் படாத முனைகள் கூர்மையாக இல்லாத பிளாஸ்டிக், ரப்பர் விளையாட்டுப் பொருட்களை இந்த வயதுக் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும்... உதாரணமாக, ரப்பர் பந்து, ரப்பரில் செய்யப்பட்ட யானை, நாய், மனித உருவ பொம்மைகள், பிளாஸ்டிக் பந்து ஆகியவை இந்த வயதுக் குழந்தைகளுக்கு ஏற்றவை.

பன்னிரண்டு முதல் பதினெட்டு மாதம் வரை...

மரக் கட்டையிலான விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுக்க ஏற்ற வயது இது. மரக்கட்டைகளைக் கொண்டு கோபுரம், வீடுகள், பாலங்கள் அமைத்தல், தள்ளினால் ஓடும் கார், தட்டினால் ஓசை எழுப்பும் மணி போன்ற விளையாட்டுப் பொருட்களை இந்த வயதுக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும்.

பதினெட்டு மாதம் முதல் இரண்டு வயது வரை...

அழகான படங்கள் ஒட்டிய அட்டைகள், ஏ. பி. சி. டி எழுத்துக்கள் அடங்கிய டப்பாக்கள், 1, 2, 3, 4, என எண்கள் பொறிக்கப்பட்டுள்ள கட்டைகள் போன்றவை இந்த வயதுக் குழந்தைகளுக்கு ஏற்றவை.

இரண்டிலிருந்து மூன்று வயது வரை.

'கீ' கொடுத்தால் ஓடும் கார்கள், ரயில்கள், சிறிய சைக்கிள், விளையாட்டு டெலிபோன், விளையாட்டுக்கடிகாரம் ஆகியவைகளை இந்த வயதில் அமைந்தக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும்.

மூன்றிலிருந்து ஐந்து வயது வரை...

இப்போது குழந்தை ஓரளவு வளர்ந்து விட்டது. எனவே அதன் மூளையைச் செலவழித்து விளையாடுவதற்கு ஏற்ற வகையில் அமைந்த சின்னஞ்சிறு புதிர் விளையாட்டுப் பொருட்களை இந்த வயதில் அமைந்தக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பது நல்லது. அதோடு சிலேட், பலப்பம், கலர் பென்சில் போன்றவற்றை இந்த வயதுக் குழந்தைகள் கையில் கொடுத்து, அவைகளின் விருப்பம் போல் கிறுக்கி விளையாட அனுமதிப்பது நல்லது.

ஐந்து வயதிற்குமேல் நன்றாகப் பேசப் சக்தியும், விரும்பிய பொருட்களை வாங்கித் தரும்படி கேட்கும் சக்தியும் குழந்தைகளுக்கு வந்து விடுகின்றன. எனவே ஐந்து வயதிற்கு மேல் குழந்தைகள் எந்த விளையாட்டுப் பொருட்களை விரும்புகிறதோ அதை வாங்கிக் கொடுங்கள்.

— ஆர். லோகசுந்தரி.

படங்கள்: ஜி. பிரபாகர்



நெற்றியில் குங்குமம் வைத்ததினால் ஏற்படும் கருநிறத்தைப் போக்க மிக சுலபமான வழி. குங்குமம் இட்டுக் கொள்ளும் போது வாஸலின் வெள்ளை நிறமுள்ளதை முதலில் நெற்றியில் வைத்துக் கொண்டு அதன் மேல் குங்குமம் இட்டுக் கொண்டாலே போதும். சில மாதங்களில் கருநிறம் மாறி நெற்றி இயற்கையான நிறத்திற்கு வந்துவிடும்.

— ராஜலட்சுமி.


30,00,000
அன்பர்கள் அன்றாடம்
நரசுஸ் காபியை அருந்துவதே
அதன் தரத்திற்கு சான்று.
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசுஸ்
தெர்மலோ முறை காபி!
நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE NCC 2956

24

"இந்த வீடுதான் மாலு!'' என்றாள் அம்மா கையிலிருந்த சீட்டில் எழுதியிருந்த எண்ணை ஒப்பிட்டுப் பார்த்து.

பஸ்ஸில் பயணித்த களைப்பில் அம்மாவின் முகம் கன்னிச் சிவந்திருந்தது. நெற்றி வியர்த்திருந்தது.

கலாவின் பெற்றோர்களை நேரில் கண்டு பேசும் பொருட்டுத் தன்னுடன், கிளம்பியிருந்த இந்த அம்மா ஒரு புதிய மனுஷி போல்மாலுவுக்குத்தோன்றினாள். எங்கிருந்து வந்தது இந்த உத்வேகம்? எப்படிப்பட்ட ஆத்மார்த்த அனுதாபு வேகம் இது!- அம்மாவுக்கு இருக்கும் இந்த மனித நேய ரேகை இத்தனை நாள் தான் கண்டுகொள்ளாதது எப்படி என்று அவள் வியந்தாள்.

மைசூர் பாகையும் ரவா கேஸரியையும் பதமாகச் செய்ய மட்டுமே அம்மா தனது நேரத்தையும் மூளையையும் செயல்படுத்துகிறாள்! அதனாலேயே சமூக அஞ்ஞானங்களைத் தீவிரமாகச் சிந்திக்காமலிருக்கிறாள் என்கிற தனது ஆதங்கம் திடீர் என்று பலவீனப்பட்டுப் போனாற்போல் சந்தோஷம் ஏற்பட்டது.

மாலு அம்மாவைப் பார்த்து மெல்லிய புன்னகையுடன், ''ஆமாம், இதுதான்'', என்றாள். ''தீபக் அரோராண்ணு பெயரும் இருக்கு பாரு., கலாவுடைய அப்பா பேரு.''

அவள் மெள்ளக். கதவைத் தட்டினாள். கதவு திறந்தவர் தீபக் அரோரா என்று மாலு தெரிந்து கொண்டாள். கலாவின் முகச் சாயலாகச் சிவந்த நிறமாக இருந்தார்.

மாலுவின் 'நமஸ்தே'விற்குப் பதில் நமஸ்தே போட்டுக் கேள்விக் குறியுடன் அவளையும் அவள் பின்னால் நின்றிருந்த அம்மாவையும் பார்த்தார். சிநேகிதமான முகம். கிட்டத்தட்ட சாத்விகம்.

''உங்கள் பெண் இருக்கும் தெருக்காரர்கள் நாங்கள். கலாவின் சிநேகிதர்கள்,'' என்று மாலு ஆரம்பித்ததும், முகமெல்லாம் புன்னகைப் படர,

''வாருங்கள், உள்ளே வாருங்கள்'' என்றார். உள்புறம் நோக்கி

''கமலா, வா, கலாவுக்குத் தெரிந்தவர்களாம்!'' என்றார்.

உள்ளேயிருந்து ஓடிசலா்க ஒரு அம்மாள் வந்தாள். கலாவின் கண்களில் இருக்கும் மிரட்சி இவள் கண்களிலும் இருந்தது. அதோடு ஒரு நிரந்தர சோகம் நிழலாடியது. அவர்கள் அருகில் அவள் ஏதோ ஒரு விபரீதச் செய்தியை எதிர்பார்த்தவள் போலத் தயக்கத்துடன் அமர்ந்தாள்.



''எங்களைப் பார்க்கச் சொல்லி அனுப்பினாளா, கலா உங்களை?'' என்றான் மெல்லிய குரலில்.

அம்மா சட்டென்று முந்திக் கொண்டு சொன்னாள்.

''இல்லை பெஹன். (சகோதரி) நாங்களாகத்தான் வந்தோம்.''

கமலா தன் கணவனை அரைவிநாடி ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

கலா எப்படியிருக்கிறாள் என்று இவர்கள் கேட்காதது மாலுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. கேள்வியைக் கண்டு பயப்படுகிறார்களா, விடையைக் கண்டு பயப்படுகிறார்களா?

''புக்ககத்தில் கலா எப்படியிருக்கிறாள் என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று அம்மா படபடப்புடன் ஆரம்பித்தாள்.

அரோர்ரா அவர்களைப் பார்த்து நிதானமாகச் சொன்னார்.

''கன்னிகாதானம் செய்து கொடுத்த பிறகு அவர்கள் வீட்டுப் பெண். எங்களுக்கு விசாரிக்கத் தகுதியும் இல்லை, அதிகாரமும் இல்லை.''

திடுக்கிட்டு மாலு நிமிர்ந்தாள்.

''ஏன்?'' எப்படி? எந்த சட்டத்திலே இந்த மாதிரி சொல்லியிருக்கு?''

''நீ ஒரு சிறுமி'' என்கிற பொறுமையுடன் அவர் சொன்னார்.

''நம்ம பாரம்பர்ய வழக்கம் அது. சட்டப்படி இப்பொழுது அவர்கள் வீட்டுப் பெயர்தான் அவள் பெயருடன் ஒட்டிக் கொண்டிருக்கிறது. கலா அரோரா இல்லை. கலா மெஹ்ரா இப்பொழுது!''

மாலுவுக்குக் குபுகுபுவென்று ஆத்திரம் கிளம்பியது.

''வேடிக்கையாயிருக்கிறது மிஸ்டர் அரோரா. பாரம்பர்யத்தைப் பற்றியும் சட்டத்தைப் பற்றியும் சொல்கிறீர்கள். மருமகளை அடிமையைப் போல நடத்துவது பாரம்பர்யமா? ஆடு மாட்டைப் போல விலை பேசுவது பாரம்பர்யமா? சட்டத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்! இவை இரண்டுமே சட்டப்படி குற்றம். உங்கள் பெண்ணை அவர்கள் எத்தனைக் கொடுமைப்படுத்துகிறார்கள்? உங்களால் கொடுக்க முடியாத மிகுதி வரதட்சிணைப் பணத்துக்காக என்று உங்களுக்குத் தெரியுமா?''

எல்லைகளின் விளிம்பில்

வாஸந்தி



சமைக்காத முட்டைகோஸில் வைட்டமின் 'சி' மிகவும் நிறைந்து இருக்கிறது. அது பற்களையும் ஈறுகளையும் சௌக்கியமாகவும் ரத்தத்தை சுத்தமாகவும் வைக்கிறது. ஆனால் சமைத்தவுடன் வைட்டமின் சத்து பாதிக்குமேல் குறைந்து போகிறது. ஆகையால் தினந்தோறும் முட்டைக்கோஸை சிறு துண்டுகளாக்கி சாலடுடன் சேர்த்தோ அல்லது வேறு வகைகளிலோ வேக வைக்காமல் சாப்பிடவும்.

— வசந்தா கோவிந்தன்.

அரோரா தலையைக் குனிந்து கொண்டார். சிறிது நேரம் மௌனமாக இருந்தார். கமலா அரோராவின் கண்களில் நீர் நிரம்பியிருந்தது.

"அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள், பயமுறுத்துகிறார்கள் உங்கள் பெண்ணை. அவளுடைய கணவனும் அவர்களுடன் சேர்ந்து கொள்கிறான். இந்த மாதிரி ஒரு இடத்தில் உங்கள் பெண் ஏன் இருக்க வேண்டும்? அவள் என்ன தவறு செய்தாள்?"

அடக்க முடியாமல் மாலுவுக்கு ஆத்திரம் பொங்கிப் பொங்கி வந்தது. வயிற்றில் பிறந்த பெண் சித்திரவதைப் படுகிறாள், இவர் பாரம்பர்யத்தைப் பற்றிப் பேசுகிறார்!

"சொல்லுங்கள்! எந்தத் தவறும் செய்யாத ஒரு பெண் எதற்கு இந்த மாதிரி தண்டனை அனுபவிக்க வேண்டும்?"

கமலா இப்பொழுது வாய்விட்டு அழுதாள்.

"அவளுடைய தலைவிதி மகளே! பெண்ணை மூணை வரிசையாய்ப் பெத்திருக்கேனே, என்னுடைய பாவம்!"

தலையை அறைந்துகொண்டு அழும் அவளை மாலு மெல்லிய அதிர்ச்சியுடன் பார்த்தாள். நகரத்தில் வாழும் இவளா இத்தனை அறியாமையுடன் பேசுகிறாள்?.

"உங்கள் பெண்ணின் தலைவிதி நீங்கள் எழுதியது மிஸஸ் அரோரா!" என்றாள் அவள் மெள்ள.

"இப்பவும் நீங்கள் அதை மாற்றலாம். உடனே கலாவை அழைத்துக்கொண்டு வந்து விடுங்கள். விவாகரத்துக்கு மனு போட்டு விட்டு அவளை மேலே படிக்க வையுங்கள். அநியாயமாய் அந்த ராட்சஸர்களிடம் விட்டு வைக்காதீர்கள்!"

"ஆமாம், அழைத்து வந்து விடுங்கள். உங்கள் சம்பந்திகள் மகாப் பொல்லாதவர்கள்," என்றாள் அம்மா.

"எத்தனை நாளைக்கு ஆட்டம் போடுவார்கள் சகோதரி?" என்றார் அரோரா தன் துக்கத்தை விழுங்கியபடி. "அவர்களுடைய பேராசைக்கு என்னால் தாக்குப் பிடிக்க முடியாது என்று புரிந்தால் தன்னால் அடங்கிப் போவார்கள். ரொம்பப் பொல்லாதவர்கள் அவர்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. அந்தப் பெண் கலாவுக்கு மனசும் பூஞ்சை, உடம்பும் பூஞ்சை. செல்லமாக வளர்ந்தவள். அவர்கள் ஏதாவது சொல்லிக் காட்டினால் இவளுக்குத் தாங்கவில்லை. ரோஷக்காரி. தன்னால் சரியாகிவிடுவாள்!"

நிலைமையின் விபரீதத்தை இவர்கள் உணரவேயில்லை என்கிற பிரக்ஞை மாலுவை அசத்திற்று.

"நீங்கள் நினைப்பதுபோல் இது அவ்வளவு ஸிம்பிள் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது மிஸ்டர் அரோரா. என் அம்மாவை உங்கள் பெண்ணுக்கு அத்தனைப் பரிச்சயமில்லை. அப்படியும் தன் கஷ்டங்களை வந்து சொல்லி அழுதிருக்கிறாள். யாராவது சகாயம் பண்ணுவார்களா என்கிற பதைப்போடு. நீங்கள் புரிந்து கொள்ள மாட்டீர்கள் என்கிற பயம் அவளுக்கு."

"இங்கேயும் வந்து அழுதாள் இரண்டு தரம். நாங்கள் சமாதானப்படுத்தி அனுப்பினோம். கொஞ்சம் பொறுமையாயிரு என்று சொன்னோம். பின் பெண்ணைப் பெற்றவர்கள் என்ன செய்வார்கள்? பெண் கண்ணைக் கசக்கியவுடன் புருஷனை விட்டு வந்து விடு என்று சொல்வார்களா? குடும்பம் கௌரவம் என்பதெல்லாம் இல்லையா? எனக்கு இன்னும் இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். வீட்டோடு ஒரு பெண் வந்து விட்டாள் என்றால் பிறகு எங்களோடு யார் சம்பந்தம் செய்வார்கள்?"


இந்த மாதிரி மனிதர்களை என்ன செய்வது என்று மாலு திகைத்தாள். இந்தக் கௌரவப் பிரச்னை மனிதாபிமான உணர்வையே நசுக்கி விடுமா? அல்லது விஷயத்தின் தீவிரத்தை உணர முடியாத அளவுக்கு மந்தத்தனம் ஏறி விட்டதா? முடிவெடுக்கச் சோம்பும் மந்தத்தனம் பாதையை விட்டு விலக முடியாத அதைரியத்தை ஏற்படுத்தும் மந்தத் தனம்.

"என் சாவுலேயே என் அப்பா அம்மாவுடைய கண் திறக்கும்!"

வார்த்தைகளின் நினைப்பு மனத்தை உலுக்கிற்று.

"அவள் தலைவிதி போல் நடக்கட்டும் என்று விட்டுவிடப் போகிறீர்களா?"

மாலு இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். யாராவது அவளது பயத்தைப் புரிந்து கொள்வார்களா என்கிற எதிர்பார்ப்பில்.



கமலா தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். கண்களிலிருந்து புதிதாக நீர் வழிய ஆரம்பித்திருந்தது. வாயைத் திறக்கவில்லை.

''வேறு வழி இல்லேம்மா!'' என்றார் அரோரா.

''யோசித்துப் பாருங்கள் மிஸ்டர் அரோரா. அப்புறம் வருந்துவீர்கள். உங்கள் பெண்ணின் உயிரை விட உங்கள் கௌரவம் பெரிசில்லே. உங்கள் சம்பந்திகள் பொல்லாதவர்கள். இந்தப் பிரச்னைக்கு என்ன தீர்வு காணப் போகிறீர்கள்? அவர்கள் கேட்கும் பணத்தைக் கொடுப்பதாக இருக்கிறீர்களா?''

''ஓ. நோ! அது சாத்தியமில்லே. என் கிட்டப் பணம் இல்லே?''

''இருந்திருந்தால் கொடுத்திருப்பீர்களா?''

''கொடுத்திருப்பேன்! என் பெண்களுக்குக் கொடுக்காமல் வேறு யாருக்குக் கொடுக்கப் போகிறேன்?''

தன் ஆத்திரத்தை மறைத்துக் கொண்டு மாலு புன்னகைத்தாள்.

''நீங்கள் இந்த விஷயத்தைப் பற்றித் தீவிரமாக யோசிக்க வேண்டும் மிஸ்டர் அரோரா. உங்களைப் போன்றவர்களினால்தான் இந்த வரதட்சிணைக் கொடுமை இன்னும் பயங்கரமாக இருக்கிறது...''

''என்னை எப்படியம்மா சொல்கிறாய்? நான் பெண்ணைப் பெற்றவன். திண்டாடிக் கொண்டிருக்கிறேன்!''

''முடிகிறதோ இல்லேயோ, இந்த அசிங்க வியாபாரத்துக்கு நீங்கள் ஒப்புக் கொள்வதினால்தானே கேட்கிறவர்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள்?''

''என்னம்மா செய்வது? ரொம்பக் கண்டிப்பாக இருந்தோமானால் பெண்ணுக்குக் கல்யாணமே ஆகாமல் போய்விடும்!''

''அதனால் என்ன நஷ்டம்? நீங்கள் அவள் கல்யாணத்துக்கு செலவழித்ததை அவள் படிப்புக்குச் செலவழித்திருந்தீர்களானால் அவள் இப்பொழுது கலங்கிக் கொண்டு நிற்க மாட்டாள், அல்லது பாங்கில் வட்டிக்குப் போட்டிருந்தால் ஆயுசுக்கு வட்டிப் பணமே அவள் ஒருத்திக்குப் போதும்! இப்பொழுது காசையும் கொடுத்து நரகத்தில் தள்ளியிருக்கிறீர்கள்!''

படபடவென்று ஆத்திரத்துடன் வெடிக்கும் அம்மாவை மாலு வியப்புடன் பார்த்தாள். சட்டென்று ஒரு சந்தோஷம் உள்ளுக்குள் பிரவாகமாய் பொங்கிற்று. அம்மாதானா இது? இரண்டு வருஷங்களுக்கு முன் நல்ல வரன் கிடைத்தால் போதும் என்று அந்த வெங்கடேஷன் கேட்டதைக் கடனோ உடனோ வாங்கிக் கொடுக்கச் சித்தமாக இருந்த அம்மாவா இது?

இனிமேல் இவர்களுடன் பேசிப் பிரயோஜனமில்லே என்பது போல் அம்மா எழுந்தாள்.

''கலா சொன்னாள். எங்கப்பா அம்மா

அரிசி வேக வைத்த நீரை முருங்கை மரத்திற்கு ஊற்றி வந்தால் முருங்கை நன்றாகக் காய்க்கும். பயிறு வேக வைத்த நீரை குழம்பிற்கு பயன்படுத்தினால் குழம்பு சுவையாக இருக்கும்.

— குப்பம்மாள்.

அப்பம், வெல்லத் தோசை செய்வதற்கு, நீரில் வெல்லத்தைப் போட்டு அடுப்பில் வைத்து சூடு பிடித்ததும் இறக்கி ஆறியதும் வடிகட்டி கோதுமை மாவைப் போட்டுக் கரைத்து, ஏலம் பழம் போட்டு அப்பம் சுக்க. தோசையும் அதே போல, பழம் போடாமல் கரைத்துத் தோசை வார்க்கக் கருகாமல் அழகாகத் திண்டாமல் வார்க்க முடியும்.

— சாரதா ராமசுவாமி.

கிட்டப் பேசிப்பிரயோஜனமில்லே. என்னைத் திருப்பி அழைத்துக் கொள்ள மாட்டார்கள் என்றாள். எனக்கூத்தான் சபலம். பெற்றவர்கள் அப்படி இருக்க மாட்டார்கள் என்கிற நம்பிக்கை. நம்ம குழந்தை சௌக்கியமாயிருக்கணும்னு கல்யாணம் பண்றோம். ஆனா அந்தக் கல்யாணம் தவறாப் போனா அந்தக் குழந்தை ஏன் கஷ்டப்படணும்?''

அரோரா தம்பதிகள் பதிலே சொல்லவில்லே.

அம்மா மறுபடி அரோராவைப் பார்த்துச் சொன்னாள்.

''சமூகத்தைக் கண்டு பயப்படாதீர்கள். நாளைக்கு உங்கள் பெண்ணுக்கு ஏதாவது ஆனால் அது வேடிக்கைதான் பார்க்கும்.''

கமலா அரோரா, 'ஓ'வென்று அழ ஆரம்பித்தாள்.

''இவர்கள் என்னென்னவோ சொல்கிறார்கள். எனக்கு பயமாயிருக்கிறது!''

முகத்தில் ஒரு கண்டிப்புடன் அரோரா எழுந்தார். வாசற்கதவைத் திறந்து,


''நீங்கள் இருவரும் தயவு செய்து இங்கிருந்து போங்கள்'' என்றார். 'எங்கள் பெண்ணைப் பற்றிய கவலே எங்களுக்கு இல்லாமல் இல்லே. நீங்கள் வீணாக வந்து எங்களைப் பயமுறுத்தாதீர்கள்.''

மாலு ஏதோ சொல்ல வாயைத் திறந்த போது அம்மா அவள் கையைப் பிடித்து இழுத்தாள்.

''வாடி மாலு. இவாகிட்டப் பேசிப் பிரயோஜனமில்லே. அவாளுக்கே புத்தி வந்தாத்தான் உண்டு.''

மாலுவுக்கு மறுபடி கலாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. அடிவயிற்றில் ஜில்லிப்பு ஏற்பட்டது.

(தொடரும்)



நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்:ப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடிதுடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருக்கிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி, நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்:ப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்:ப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்:ப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்:ப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்:ப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்:ப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்:ப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்:ப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம்-என்று ஒதுக்குவானேன்?



கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்—பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு—மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

கிடைக்கிறது, 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்

தனியும் கிடைக்கிறது, கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ் 10 உள்ள பேக்கில்

Johnson & Johnson

OBM/5070/R2/TAM

கோடுகள் கோலமாவதில்லை

9

விகாலையில் காலை நேர கலகலப்பு நிறைந்திருக்கிறது. தோட்ட வேலை ஜரூராக — எரு விட்டுக் கொத்தி பெருக்கி, நீருற்றியென்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பேஷண்டுகளும் அவர்களைப் பார்க்க வருபவர்களும் வந்துக் கொண்டிருக்கின்றனர். இதையெல்லாம் பார்த்துக் கொண்டே பூப்பாத்திகளிலிருந்து பூக்களை டக் டக்கென்று கத்தரிக்கிறாள் மேட்ரன் லீலா. காதம்பரி காரைத் திருப்பி மரத்தடியில் விட்டுவிட்டு அவளருகில் போய் 'ம்ம்ம்'மென்று மூச்சை நன்றாக உள்ளுக்கிழுத்து, "என்ன வாசனை..." என்று ரசிக்கிறாள்.

"குட்மார்னிங் டாக்டர். இதுக்கு கன்னடத்திலே என்ன பேரு தெரியுமோ... சுகந்த ராஜா... வாசனையில ராஜாவாம். பொருத்தந்தான் இல்லே..."

"ரொம்ப... நாங்கஇதைநிலசம்பங்கின்னு சொல்லுவோம்., ஆனா இங்கே மைசூரிலேயும் பெங்களூரிலேயும் பாக்கற மாதிரி இவ்வளவு ஜாஸ்தி எங்க ஊர்லே இல்லே..."

"ஹலோ காதம்பரி! குட்மார்னிங்..." வாசலிலேயே முகமன் கூறி வரவேற்கிறார் கிருபாகரன்.

"ஹேய், என்ன வாசனை அடேயப்பா!..." மென்மையான மணத்தோடு ஒரு செண்ட் பாட்டில் நடந்து போவது போல நறுமண மண்டலத்தைப் பரவ விட்டுக் கொண்டே உள்ளே செல்கிறாள் லீலா.

"ஹௌ ஆர் யூ டுடே. வேலையெல்லாம் எப்படியிருக்கு...?"

"இன்டரெஸ்டிங்... எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு..."

"அடிக்கடி வீட்டு ஞாபகம் வந்து தொந்திரவு பண்ணுதோ...?"

"இப்ப என்ன வீட்டு ஞாபகம். கல்யாணம் ஆகி, ஹஸ்பெண்டை விட்டுட்டு இருக்கணும்னுதான் ஒருநாள் பிரிவு கூட ஒரு யுகமா... என்ன காதம்பரி, கரெக்ட் தானே..." சிரிக்கிறார் அவர்களுடன் சேர்ந்து கொண்ட டாக்டர் சுந்தர்.

"எனக்குத் தெரியாது. உங்க அனுபவத்திலே சொல்றீங்களா...." சட்டென்று கிருபாகரனின் குடும்பம் நினைவுக்கு வருகிறது. அவரும் குஸுமாவும் அவர்கள் அன்னியோன்னியமும் "ஒரு வேளை கிருபாகரனை பார்த்துச் சொல்றீங்களோ. எல்லோரும் அவரையும் அவர் ஒய்பையும் போல இருந்துட்டா கவலையே கிடையாது. நமக்கெல்லாம் வேலையோ தேவையோ கூட இருக்காது. இல்லே டாக்டர். உங்க ரெண்டு பேரையும் நினைச்சு நினைச்சுப் பார்த்து நான் ஆச்சரியப்படறேன்..."

"ஹோ... ஹோ..."வென்று சிரிக்கிறார் கிருபாகரன். "குட், தட்ஸ் வெரிகுட்... கண்டிப்பா குஸுமாகிட்ட சொல்லணும். இப்பவே அவளுக்கு தலை தரிக்கிறதில்லே. இதை சொன்னவுடனே தனியா எழும்பியே நிக்கும். எனிவே, இட் இஸ் எ குட் டே. காலையிலே ஒரு பெரிய காம்ப்ளிமெண்ட் கிடைச்சிருக்கே..." தலையாட்டிக் கொண்டே போகிறார் கிருபாகரன்.

"இந்த அட்மாஸ்பியர்லேயே, என்னமோ எல்லாமே நன்னா இருக்கிற மாதிரி மனசிலே ஒரு சந்தோஷம்... ஒரு..."

"அதுக்கு அட்மாஸ்பியரோ, ஊரோ, காத்தோ காரணம் இல்லேம்மா. வயசு; பருவம்! அந்தந்த காலா காலத்திலே நடந்துட்டா..."

"நான் இப்ப கவலையா இருக்குன்னு சொன்னேன்..."

"ம்ஹூம், இன்னும் குஷியா, படு சந்தோஷமா இருக்கும்னு சொல்ல வந்தேன். உங்க பேரண்ட்ஸ் ஒண்ணும் அந்த மாதிரி பேச்சே எடுக்கலியா... சும்மாவா இருக்காங்க...?"

"அந்தக் கவலை உங்களுக்கெதுக்கு...?"

"மத்தவங்க கவலைதானே நமக்குச் சோறு போடுது... அதுக்கு மாத்து கண்டுபிடிக்கிறதும், மனசைத் தேத்தறதும்தானே நம்ம தொழில். மறந்துட்டீங்களே, காதம்பரி..."

"மை காட்! உங்கக்கிட்ட பேச நம்மாலே முடியாது. நாமசொல்றதைவெச்சே மடக்கிடறீங்களே. ஆமா, உங்க பேஷண்ட், ஹாலூசினேஷன் கேஸ் என்ன ஆச்சு. அதான் ஹஸ்பெண்ட் வீட்டுக்குப் போகணும்னு.."

"அதுவா, அடுத்த வாரம் டிஸ்சார்ஜ் பண்ணிடலாம்னு நினைக்கறேன். ஷீ வில் பீ ஆன் எ ஸ்மால் மெயின்டெனன்ஸ் டோஸ். பாருங்க, ஹஸ்பெண்ட் வீட்டுக்குப் போகணும்ங்கறது பெண்களுக்கு ரொம்ப இயற்கை..."

"ஆரம்பிச்சுட்டீங்களே மறுபடி. நான் போறேன், பத்தரை மணிக்கு அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்திருக்கேன்..."

கோமளா வரதன்

"ஆல் த பெஸ்ட்..."

தாஸ் அவளுடைய கைப்பையை வாங்கி வைத்துவிட்டு, கிளாஸில் தண்ணீர் கொண்டு வந்து வைக்கிறான். ஏதாவது வேண்டுமா வென கேட்பது போல சற்றுத் தயங்கி நிற்கிறான். அவள் தலையாட்டவும், ஸ்பிரிங் கதவைத் தள்ளிக் கொண்டு வெளியே போகிறான். கதவு ஒரு தாளத்தில் முன்னும் பின்னும் ஆடுகிறது.

டைரியை எடுத்து அன்றைய அலுவல்களைப் பார்க்கிறாள். முற்பகலில் அடுத்தடுத்து இரண்டு நோயாளிகளுக்கு நேரம் கொடுத்திருக்கிறாள். முதலாமவர் குணமடைந்து வீடு திரும்பி விட்டவர். கொஞ்ச நாளைக்கு இப்படி செக் அப்புக்கு வந்து கொண்டிருப்பது அவசியம்.

இரண்டாமவர் ஒரு அதிர்ச்சி கேஸ். படு குரூரமாகச் செய்யப்பட்ட கொலையை நேருக்கு நேர் பார்க்க நேர்ந்து விட்ட பயங்கரத்தில் பலமான அதிர்ச்சிக்குள்ளானவர். இத்தனை நாள் சிகிச்சையில் இப்போதுதான் கொஞ்சம் குணம் தெரிய ஆரம்பித்திருக்கிறது. இன்னும் நீடித்த சிகிச்சை தேவை. ஒரு குழந்தையை பேணும் தாய் போல் கணவன் மீது காற்று கூட பலமாக வீசிவிடாமல் பார்த்துக் கொள்ளும் அந்த மனைவிக்காகவாவது அவர் சீக்கிரம் குணமடைய வேண்டும். இத்தனை கஷ்டத்திலும் யாரையும் எதையும் நொந்துக் கொள்ளாமலிருக்க அவளால் எப்படி முடிகிறது!... சாந்தமான சிரிப்பையும் சிவப்பு குங்குமத்தையும் பார்க்கும் போதெல்லாம் காதம்பரிக்கு ஒரே நினைவு தான் எழும்.


அம்மா உயிரோடு இருந்திருந்தால்... நினைவை ஒதுக்கிவிட்டு அவரைப் பற்றிய குறிப்புகளை எடுத்துப் பார்வையிடுகிறாள். தாஸ் எட்டிப் பார்க்கிறான். அவர்கள் வந்துவிட்டதாய் அர்த்தம். அனுப்பு என்ற பாவனையில் தலையாட்ட, அவர்கள் உள்ளே வருகிறார்கள். ஒரு பக்கமாயிருந்த சோபாவில் அவரை அமரச் செய்துவிட்டு, மனைவியை ஜாடையாக அருகில் அழைத்து விசாரிக்கிறாள்.

"ரொம்ப தேவலிங்க. முன்னெல்லாம் ராத்திரி பூரா கத்தி கலாட்டா செய்வாரே, இப்ப குறைஞ்சிருக்குங்க. கொஞ்சங்கொஞ்சம் தூங்கறாரு. நேத்து ராவிலே ரெண்டு தரந்தான் எழுந்து பெனாத்தினாரு..."

தணிந்த குரலில் அவள் சொல்ல — இவள் சரியாய் தூங்கி எத்தனை நாளாகியிருக்கும் என்ற கவலை முதலில் எழுகிறது. கவலையும் இரவில் தூங்காத களைப்பும் இவளைப் படுக்கையிலே தள்ளிவிடக் கூடாது. தெம்புக்கு இவளுக்கு ஏதாவது எழுதித் தரணும்...

அவரைப் பார்க்கிறாள்.

ஏதோ ஒரு பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். படபடவென்று பக்கங்களைப் புரட்டுவதிலும், எதையும் படிக்காமல் மேலும் கீழும் பார்வையை ஓட்டுவதிலும் ஒரு பதற்றம் தெரிகிறது. தான் எதையும் கவனித்ததாய்க் காட்டிக் கொள்ளாமல், அருகில் சென்று இனிமையாய்ப் பேசிக் கொண்டே அவரை உள்ளறைக்கு அழைத்துச் செல்கிறாள் காதம்பரி. மங்கிய, மிக மங்கிய விளக்கு. உடலைக் கிடத்தினாற்போல் சௌகரியமாய் சாய்ந்து உட்கார வசதியான நாற்காலி. இதற்காகவே முயன்று பழக்கப்படுத்



திக் கொண்ட இதந்தரும் குரல். அவருடைய மனக்கபாடம் மெள்ள மெள்ளத் திறக்கிறது.

சிக்கலைப் பிரிக்கும் வகையில் கனிவுடன் பேசுகிறான். இன்றைக்குப் போதும் என்ற நிலையில் வெளியே அழைத்து வருகிறான். அவருக்கு மருந்தோடு, மனைவிக்கும் மறக்காமல் டானிக் எழுதிக் கொடுக்கிறான். ''பையன்கள் யாரையாவது கூடப் படுத்துக்கச் சொல்லிட்டு, ஒரு நாளைக்கு நீங்க தனியாப் படுத்துண்டு நன்னாத் தூங்கணும்...'' என்று அதையும் சொல்லி அனுப்புகிறான்.

அவர்கள் போன பின்பும் அந்த சாந்தமான முகம் நினைவில் தொடருகிறது. இள வயதில் அவள் கற்பனை செய்துக் கொண்ட அம்மாவுடையதைப் போல இல்லையோ... அம்மா!

அவள் மட்டும் உயிரோடு இருந்திருந்தால்...

வாஞ்சிநாதன் இப்படி மாறியிருக்கவே மாட்டாரில்லையா...?

அவளுக்கு பெற்றோர் இருவரின் அரவணைப்பும் கிடைத்திருக்கும். மூவரும் இணைந்த அன்பு வளையமாக வாழ்க்கை பரிமளித்திருக்கும். அவளுடைய வாழ்க்கையும் வேறு மாதிரியிருந்திருக்கும். அவள் டாக்டருக்குப் படித்திருப்பாளோ...! அம்மா விட்டிருக்க மாட்டாள். எல்லா அம்மாக்களையும் போல் ஸ்கூல் முடித்ததும் 'ஏன்னா...' வென்று பெண்ணுக்கு வரன் பார்க்க அப்பாவை நச்சரித்திருப்பாள். அவள் வேறு மாதிரி மாப்பிள்ளை பார்த்திருப்பாள். ஒரு தாயுடைய நோக்கில், பெண் கண்கலங்கக் கூடாதேயென்று. வரப் போகிறவனுடைய குண நலன்களைத்தான் முக்கியமாய் அலசியிருப்பாள். குடும்பப் பின்னணியைப் பெண்களுக்கே உள்ள சூட்சும அறிவு அவள் மனத்தில் குறளி சொல்லியிருக்கும். மொத்தத்தில் இவளுக்கு ஒரு திருப்தியான மணவாழ்க்கை அமைய...

அட ராமா! காதம்பரி திடுக்கிடுகிறாள். அவளுடைய அடிமனத்திலே திருமணத்தைப் பற்றிய ஆதங்கம் இவ்வளவு இருக்கிறதா...? பின், டாக்டர் சுந்தர் கேலி செய்ததில் என்ன தவறு, கணவன் வீட்டுக்குப் போக வேண்டுமென்பது அவ்வளவு இயற்கை போலிருக்கிறது!

ஆனாலும் இந்த யோசனை அவளுக்கு ஆகுமா? எப்போது முயன்று அது சரியாக அமையாமல் போய் விட்டதோ, பிறகு, அதைப் பற்றிய நினைவோ ஏக்கமோ என்ன விதத்தில் ஆறுதலளிக்கப் போகிறது. கிட்டா தாயின் வெட்டென மற என்பதுதான் நல்ல பாலிஸி என்று அவளுக்குத் தெரியாதா? 'இந்த மாதிரி நினைவுகளும் ஆசைகளும் கூடாது. கடவுளே கூடாது. கூடவே கூடாது.... கொடுக்காதே...' — ஒரு கணம் கண்ணை மூடி மனத்தை நிலை நிறுத்துகிறாள் காதம்பரி.

(தொடரும்)

குறிக் கல்யாணம்



டௌரி சம்பந்தமான பல தரப்பட்ட செய்திகளை அன்றாடம் பத்திரிகைகளிலும் தினசரிகளிலும் படித்து அலுத்துப் போன நமக்கு, கேரளாவில் மலபார் பகுதிகளில் உள்ள சில கிராமங்களில் நடத்தும் ஒரு அருமையான செலவில்லாத கல்யாணத்தைப் பற்றிக் கேள்விப்படும்போது ஆச்சரியமாக இருக்கிறது.

அங்கு பெண்ணுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டவுடன், பெண்ணின் தகப்பனார் ஒரு தனிப்பட்ட அழைப்பிதழை அச்சிட்டு, அதை தன் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மற்றும் பொது உதவியில் நாட்டங் கொண்டுள்ள நல்ல உள்ளம் படைத்தவர்களுக்கும் கொடுப்பார். அந்த அழைப்பிதழில், தன் மகளுக்கு 'குறிக் கல்யாணம்' இன்ன தேதியில் இன்ன இடத்தில் நடக்கவிருப்பதாகவும், அனைவரும் வந்து அதில் அவசியம் கலந்து கொள்ளும்படியும் வேண்டுகோள் விடுத்திருப்பார்.

பெண்ணின் தகப்பனாரின் அழைப்பிதழை ஏற்று அனைவரும் அந்தக் குறிப்பிட்ட நாளில் 'குறிக் கல்யாணத்'திற்கு வருவார்கள். திருமணமாகப் போகும் பெண்ணை மனமார வாழ்த்தித் தங்களால் இயன்றதை பண அளவில் மட்டுமே கொடுப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தரும் பணத்தின் விபரங்களைக் கவனமாக ஒரு தனிப்பட்ட புஸ்தகத்தில் பெண்ணின் தகப்பனார் குறித்து வைத்துக் கொள்ளுவார். பின்பு வேறொரு சந்தர்ப்பத்தில் அப்பணத்தைக் கொடுத்தவர்களுக்கு அதே அளவிலோ அல்லது அதைவிட சற்று அதிகப்படியாகவோ கண்டிப்பாகச் செலுத்தி விட வேண்டும். வட்டி இல்லாமல் கடனாகப் பணத்தை வழங்கும் இந்நிகழ்ச்சியினையே ''குறிக் கல்யாணம்'' என்று அழைக்கிறார்கள். இப்பணம் திருமணச் செலவுக்கு மட்டுமேயன்றி, டௌரிக்காக அல்ல.

ஆகவே ஊரார் அன்புடன் வழங்கும் இப்பண உதவியினால் பெற்றோருக்கு எவ்வித சுமையும் இருப்பதில்லை.

திருமணம் தவிர வீடு கட்டுவதற்கும், வீட்டைப் பழுது பார்ப்பதற்கும், சிறுதொழில் ஆரம்பிப்பதற்கும், பையனை அரபு நாடுகளுக்கு அனுப்புவதற்கும் கூட இந்த மாதிரி 'குறிக் கல்யாணம்' நடத்தப்படுவதுண்டு.

கேரளாவில் பின்பற்றப்படும் இக்குறிக் கல்யாண முறை நம் நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவினால் சமூகத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் அல்லவா?

— டி. வனிதா.

உங்கள் அபிமான நிறுவனமான "திருப்பதி எஸ்டேட்ஸ்"
பெருமையுடன் அறிமுகப்படுத்தும் புதுமனைப் பிரிவு

ஸ்ரீ திரிபுரசுந்தரி நகர்

ஸ்ரீ பெரும்பூதூர் டவுனிலேயே

ஸ்ரீ பெரும்பூதூர் - தாம்பரம் பேருந்து மார்க்கத்தில்
மாநில நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளது

வரலாறு காணாத புரட்சி! சரித்திரம் கண்டிராத சாதனை!!

கான்கிரீட் காணிக்கற்கள்; கான்கிரீட் மனை இலக்கக் கற்கள்
உபயோகப்படுத்தி மனைகளை என்றும் தேட அவசியம் இல்லாத வகையில்
அமைக்கப்பட்ட மனைப்பிரிவு.

மனைக்கு இரண்டு தென்னங்கன்றுகள்!

அவை பலன் தரும் வரை இலவச பராமரிப்பு!

ஐந்து ஆண்டுகளுக்கு மனைகளை காத்திட உத்திரவாதம்!

எந்த அதிகப்படி செலவும் கிடையாது!

மனைப்பிரிவிற்கு ஒரு பொதுக்கிணறு!

இப்படி அனைத்து சிறப்பு அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற
இந்த லே-அவுட் அரசாங்க அங்கீகாரம் பெற்றது.

DTP. APPROVAL NO : CSAR/DTCP (M) 85-51/LP. 27

**பத்திரம் சுத்தமானது என்பதற்கு அத்தாட்சியாக
அரசாங்க வழக்கறிஞரின் ஒப்புதலும் பெற்றது.**

மனை ஒன்றின் (2400 சதுர அடிகள்) விலை ரூபாய் 7,560/-

சுலப தவணைமுறை திட்டம்! முன்பணம் ரூபாய் 2,520/-

மீதியை 12 மாதங்களில் சுலப தவணைகளாக செலுத்தலாம்.

15.10.85 க்குள் மனை பதிவு செய்பவர்களுக்கு

எங்கள் அன்பளிப்பு : சூட்கேஸ் இனாம்!

மனைகளைப் பார்வையிடவும், மற்ற விபரங்களுக்கும் நேரில் அணுகவும்

திருப்பதி எஸ்டேட்ஸ்

"ஸ்ரீ மீனாக்ஷி நிலையம்"
30, ஆற்காடு முதலியார் தெரு, (தெற்கு போக் ரோடு பக்கம்)
தியாகராயநகர், சென்னை-600 017 தொலைபேசி: 442564

Imageads-2132

ராசி பலன்

அக்டோபர் 85

மேஷம்

நீண்ட நாட்களாகப் பிரிந்திருந்த உறவு அல்லது நண்பர்கள் ஒன்றுகூடும் நேரமிது. பொறுமையுடனும், அதிக வாக்குவாதங்களில் ஈடுபடாமல் இருந்தீர்களானால் நண்பர்களால் ஏராளமான பலன் உண்டு. உடல் நிலையில் ஓரளவு கவனம் செலுத்துவது நல்லது. பண விஷயம் அதிகப் பிரச்னைகள் இல்லாமல் சென்றுவிடும். குழந்தைகளினால் சிறுசிறு மனஸ்தாபங்கள் உண்டாகலாம்.



ரிஷபம்



வெளியூர்ப் பிரயாணங்களில் அதிக ஆதாயங்கள் ஏற்படும் மாதமிது. எதிர்பாராத நிலையில் பணவரவு உண்டாவதுடன் உங்களுடைய எதிர்கால இலட்சியங்களுக்குத் தேவையான திட்டங்களும் உருவாகும். தெய்வ நம்பிக்கை மிகுந்த உங்கள் எதிர்காலம் வெகுவிரைவில் பல மாற்றங்களுக்கு உள்ளாகும். உறவினர்களிடையே உங்களுடைய மதிப்பு உயரும்.

மிதுனம்

அதிக விசேஷங்கள் இல்லாமல் எளிமையாகச் சென்று விடும் மாதமிது. அரசாங்க அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் பரிவால் சிறிய சிறிய ஆதாயங்கள் உண்டாகலாம். நண்பர்களின் கூட்டுறவால் சிறிய பிரயாணங்களை மேற்கொள்ள நேரிடும். பொருளாதாரச் சிக்கல்கள் ஏதுமிருக்காது. தம்பதியரிடையே உறவுகள் சுமுகமாகவே இருக்கும்.




கடகம்



வெளிநாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்திருந்த செய்தி உங்களுக்குச் சாதகமாகவே வந்து அமையும். குழந்தைகளினால் நல்ல பணவரவு உண்டாவதுடன் புதிய வீடு, மனை வாங்க முயற்சிப்பவர்களும் இம்மாதம் அதற்கான பணிகளைத் துவக்கலாம். குடும்பத்தில் இருந்த சிறு சிறு விரிசல்கள் நீங்கி சுமுகமான நிலைமை இருப்பதால் உங்களுடைய காரியங்கள் வெற்றியே அடையும்.

சிம்மம்

'உங்கள் மனத்துக்கு அந்தரங்கமானவரிடமிருந்து நீங்கள் எதிர்பார்த்த பதிலே கிடைக்கும். ஓரளவு எதிர்கால திட்டங்கள் சிக்கல் நிறைந்ததாக இருந்தாலும், கடின உழைப்பில் உயரும் நீங்கள் இந்தச் சோதனைகளிலும் விரைவில் வெற்றியே காண்பீர்கள். உங்கள் நண்பரின் மூலம் தனலாபம் உண்டாகும். குடும்பத்தில் அதிகமான மனக்கசப்புகள் இராது.




கன்னி




கடமைகளும், வேலைப்பளுவும் மேலும் மேலும் வந்து கொண்டுதான் இருக்கும். தனியார் நிறுவனங்களில் உள்ளவர்கள் அரசாங்க உதவி நாடி அலைச்சலும், உழைப்புமாகச் சுற்ற வேண்டி வரும். மாதத்தின் இறுதியில் வேலைப்பளு குறைவதுடன் உழைத்ததற்கு ஏற்ற பலன்களையும் பெறுவீர்கள். சிலருக்கு உயர் பதவியும், வெளியூர் மாற்றங்களும் உண்டாகும். வரவுக்கேற்ற செலவே நிலவும்.

துலாம்




வழக்கு, விசாரணைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிலைமைக்கு ஆளாவீர்கள். புதிய வாகனப்ராப்திகளும் சிலருக்கு உண்டாகும். கவிஞர்களுக்கும், விளையாட்டுத் துறையில் உள்ளவர்களுக்கும் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பண வரவும் உண்டாகும திருமணத்தை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கு நல்ல வரன்கள் வந்து கைகூடும்.

விருச்சிகம்



பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது ஓர் உன்னதமான மாதமாகும். உயர்ந்த பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைப்பதுடன், நல்ல சேர்க்கையின் மூலம் மிகவுயர்ந்த நிலைக்குச் செல்கின்ற அறிகுறிகளும் சிலருக்கு உண்டாகும். எடுத்த காரியத்தில் வெற்றி அமையும் என்பதால் திட்டமிட்டு விரைந்து செயல்படுவீர்கள். பணப் பிரச்னை ஏற்படாது என்பதால் குடும்பத்திலும் சிரமங்கள் உண்டாகாது.

தனுசு




வீட்டிற்கு வந்து சேருகின்ற புதிய நண்பர் ஒருவரால் இல்லத்தில் சில மாறுதல்கள் ஏற்படக் கூடும். பல சுபகாரியங்கள் நடப்பதுடன் பொருளாதார நிலைமையும் கட்டுக்குள்ளேயே அடங்கி இருக்கும். வீட்டுப் பெரியவர்களின் நோயைப் பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை. புதிய ஆபரணச் சேர்க்கைகள் சிலருக்கு நிகழும்.

மகரம்



நீங்கள் மேற்கொள்ள இருந்த பிரயாணமோ அல்லது எதிர்காலத் திட்டமோ ஓரளவு மேலதிகாரிகளின் குறுக்கீட்டினால் பாதிக்கக் கூடும். உடன் இருப்பவர்களுடன் அதிக வாக்குவாதங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. மாதத்தின் நடுவில் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படுவதுடன், உங்களுடைய பொறுமையினால் சௌஜன்யமான நிலைமைக்கும் வந்துவிடும்.

கும்பம்



வாழ்க்கையில் நீங்களாக எடுத்துக் கொண்ட முடிவின் காரணமாகவோ, பலவித பிரச்னைகளை சந்திக்க நேரிடலாம். நேர்மையும் திறமையும் கொண்ட நீங்கள் மன உறுதியுடன் இருந்து விடுவீர்களேயானால் பல சங்கடங்களையும் தவிர்க்கலாம். குழந்தைகளுடன் சகஜமாகப் பழகுவதும், உங்களுடைய பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்வதும் எதிர்காலத்திற்கு நல்லது.

மீனம்



இதுநாள் வரை கவலைதரக் கூடிய சம்பவங்களாக இருந்தவை இப்பொழுது அதன் தீவிரம் குறைந்து சாதாரண நிலைக்கு வந்துவிடும். இளையவர்கள் பொறுப்புணர்ந்து உங்களுடைய கடமைச் சுமையைக் குறைக்க முன்வருவார்கள். விரைவில் இல்லத்தில் சுபநிகழ்ச்சியொன்று நடைபெறும். எதிர்பார்த்த விதத்தில் பணமும் நல்ல புழக்கத்திலேயே இருக்கும்.

இவர்கள் யார்?

(விடை 84-ம் பக்கம்)

தெரிந்து கொள்ளுங்கள் — 1.



1. கனிஷ்கா விமானம் நடுவானில் வெடித்துச் சிதறிய போது அதில் உள்ள ஒரு இந்திய விஞ்ஞானி யும் இறந்து போனார். அந்த விஞ்ஞானியின் உறவினரான இவர் வாழ விரும்பாமல் துக்கம் தாளாமல் தீயினால் உடலைச் சுட்டுக் கொண்டவர்.



Kerala Iyer Brahacharanam, Bharadwaja Utherattathi, 36 years Delhi employed youth owning flat seeks Keralite of non graduate homely bride from mediocre family amenable for joint family life with parents etc. Apply with horoscope and particulars to Box No. 2737.

Suitable non-gowthama Brahmin alliances upto 45 invited for smart convent educated trained Graduate Smartha Telugu Bride 37 employed Karnataka other subsects unencumbered widowers no bar. Reply to Box No. 2738.

Alliance invited from Bank/Govt/Decently employed Iyer Girls, for a Nationalised Bank employee Brahacharanam, Kasiyappa, Barani. 29/158/1800, Son of a Bank Officer. Subsects no bar. Apply with Horoscope and Details to Box No. 2739.

Alliance invited from non-Koundinya Iyer Boys. Decently employed having Chevai Dosham for girl 32/160 Star Sadayam, Plus Two with Typewriting Higher. Unemployed, well verse in domestic duties. Subsects no bar. Box No. 2740.

Alliance invited from very fair looking Graduate Girl from respectable family for Central Govt. undertaking employed Graduate Boy at Port Blair aged 28 Height 5' 9". Bharatwaja Vathimal. Drawing Rs. 1500/- per month. Reply to Box No. 2741.

Alliance invited from Tamil Hindu Girls who dislike or incabable of bearing children, Tall, Fair, preferably Graduate around 22, for a Bank Officer 28, Tall and Handsome. Reply to Box No. 2742.

Non-Bharathwaja, Brahacharanam, decently employed for fair looking domestically well trained unemployed Graduate Girl. Star Sadhayam, 25 years. Please reply with Horoscope to Box No.2743.

Alliance invited for respectable Graduate Iyer Girl, Bharadwaja Brahacharanam 31 years Moolam Star decently employed in Bombay. Horoscope optional. Sub-sects no bar. Decently employed Bombay Boys preferred. Box No. 2744.

Alliance invited for Iyer, Bharadwaja Gothram, Sister charming 23 years. Thiruvathirai. Good at domestic work. S.S.L.C. and Brother Avittom B.A., 29 years working near Bombay drawing Rs. 1700/- p.m. hailing from respectable family from Palghat. Graduates preferred. Early simple Marriage. Please reply to Box No. 2745.

Alliance for Smartha Vadama Bharadwaja boy 32, studying B. Com. 5'10" fair and handsome employed as substaff in Bank drawing around Rs. 1050/— plus the perquisites. Decent family. Sub-sects are also welcome. Box No. 2746.

கௌண்டின்ய பிரஹசரணம், 158 செ. மீ. 36. வயதுடைய குடும்பப்பாங்கான பெண்ணிற்கு 40 முதல் 46 வயது வரை உள்ள வரன் தேவை. தாரமிழந்தவரும், தாரமிழந்து குழந்தைகள் உள்ளவரும் விண்ணப்பிக்கலாம். எளிய உடனடி திருமணம். ஜாதகம் இல்லை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2747.

தமிழ்குலாலர் 5' 4'' வயது 34, பி.யூ.சி. வேளாண்மை பயிற்சி முடித்த கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு உதவியாளராக ரூ. 1000 ஊதியம் பெறும் மணமகனுக்கு, பணிபுரியும் (அ) நடுத்தர கல்வித் தகுதி உள்ள நற்குணமுள்ள தமிழ் குலால மணமகள் தேவை. பெட்டி எண்: 2748.

மத்திய அரசில் பணிபுரியும் நல்ல ஊதியம் பெறும் பாரத்வாஜ, பிரஹசரணம் உத்திரட்டாதி வாலிபருக்கு நல்ல நிறம், அழகு 5 அடி உயரத்திற்கு மேல் போகாத நடுத்தர உடலமைப்புடன் கூடிய 23 வயதுக்குட்பட்ட வரன் தேவை. பெட்டி எண்: 2749.

பிரஹசரணம், ஆத்ரேய கோத்திரம், உத்திரம், 30 வயது, உயரம் 5' 3'' பி. யூ. சி. வரை படித்துள்ள தட்டெழுத்து ஹையர் பாஸ் செய்துள்ள, ஹிந்தியில் விசாரத் பாஸ் செய்துள்ள, வேலைக்குப் போகாத, குடும்பப்பாங்கான, வீட்டு வேலைகளில் நன்கு தேர்ச்சி பெற்ற, சிவப்பு நிறமுள்ள பெண்ணுக்கு, அதே பிரிவில் ஒழுக்கமும், திடகாத்திரமான உடல் நலமும், நல்ல குடும்பத்தைச் சேர்ந்த நன்கு படித்து நல்ல வேலையில் உள்ள வரன் தேவை. விவாகம் நல்ல முறையில் செய்து தரப்படும். பையனின் பெற்றோர் அல்லது உறவினர் முழு விவரங்களுடன் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2750.

தெலுங்கு விசுவகர்மா வகுப்பு, வயது 21, பி. எஸ்ஸி. படித்துள்ள உயர்குடிப் பெண்ணுக்கு அதே பிரிவைச் சார்ந்த வரன் தேவை. விவரங்களை ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 2751.

Mutual alliance invited from 'Non-Srivathsa' Vadamal Iyer for decent beautiful Graduate employed Girl aged 34 and her brother Chartered Accountant aged 38 employed in Bank. Native Chingleput District. Box No.2752.

Wanted broadminded educated Bridegroom for Hindu Vellala Mudaliar Graduate, 25/152, good-looking Girl from respectable family, due to major operation 5 yrs. back cannot give birth to children. Box No. 2753.

மதுரையில் தனியார் கம்பெனியில்—மாத சம்பளம் ரூ. 650/— பணிபுரியும் கார்காத்த சைவ வேளாள வகுப்பைச் சேர்ந்த 33 வயது பி. எஸ்ஸி பட்டதாரிக்கு அதே வகுப்பைச் சேர்ந்த அரசு/தனியார் நிறுவனத்தில் மதுரையில்/மதுரைக்கு மாற்றல் செய்து கொள்ளக் கூடிய வேலையிலுள்ள மணமகள் தேவை. பெட்டி எண்: 2754.

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: Manjula Ramesh.

நவராத்திரி நன்மைகள்

— கனகவல்லி சாரங்கபாணி

குழந்தைகளுக்குக் கால் வருட பரீட்சை முடிந்து விடுமுறையின் மகிழ்ச்சி. பெண்களுக்கோ, புரட்டாசி மாதத்தில், மஹாளய அமாவாசை அன்று ஆரம்பிக்கும் நவராத்திரி வைபவ மகிழ்ச்சி. ஒன்பது நாட்களும் அம்பாளுக்கு மிகவும் உகந்தது. திருமணமான பெண்கள் ஒன்பது நாளும், மடிசுத்தமாக நவராத்திரி கொலுவின் முன்பு, கிழமை கோலமும், ஸந்நிதியில் (அல்லது தெய்வ படங்களுக்குக் கீழே) ஹ்ருதய கமலம், ஐஸ்வர்ய கோலம் போன்றவையும் போட்டு, செங்காவி தீட்டி, தேய்த்து, மஞ்சள், குங்குமம் இட்டு, பூ சுற்றிய, வெள்ளி, அல்லது வெண்கல விளக்கில், (எவர்சில்வர் விளக்குக் கூடாது) ஐந்து முகமும் திரியிட்டு, நல்லெண்ணெய் விட்டு (சனி பகவானுக்குப் ப்ரீதி) திரிமுனையில் ஒரு சொட்டு நெய் விட்டு தீபம் சமர்ப்பிக்க வேண்டும். (ஏற்ற வேண்டும்).

ஒன்பது நாளும் பாயஸம் நைவேத்தியம் செய்வது நல்லது. இயலாதவர்கள் செவ்வாய், வெள்ளி இரண்டு நாளும் அவசியம் பாயஸம் செய்து நைவேத்தியம் வைக்கவும். ஒன்பது நாளும், லலிதா ஸஹஸ்ரநாமமும், ஸ்ரீ லக்ஷ்மி ஸஹஸ்ரநாமமும் சொல்லி, தூப: தீபம், பழம், பாயசம் ஸமர்ப்பித்து, சேவித்து, அம்பாளின் அருட்கடாட்சத்தினைப் பெற்று நலமுடன் சுமங்கலித்துவத்துடன், வாழலாம்.

வேலைக்குச் செல்வதாலும், வீட்டு வேலைகளின் சுமையாலும் விஸ்தாரமாய் ஸஹஸ்ரநாமம் சொல்லிப் பூஜிக்க நம்மில் பலராலும் முடியாது. (சாஸ்திரங்களிலேயே, தன் இல்லத்தின் தேவைகளை, குடும்பத்தினரின் நலன்களைப் போஷிப்பதாலேயே பெண்கள், இறைவனின் பரிபூரண அருளைப் பெறுகிறார்கள் என்று கூறியுள்ளார்கள்.) ஆகையால் காலை, மாலை, இருவேளையும் அஷ்ட லக்ஷ்மி ஸ்தோத்திரம், லக்ஷ்மி அஷ்டோத்திரம் சொல்லி, சேவித்தாலும் அம்பாளின் கருணை கடாட்சம் கிட்டும்.

மாலையில் ஒன்பது நாளும் ஏதாவது ஒரு சுண்டல் செய்து (நைவேத்தியம் வைத்து) ஸமர்ப்பித்து, கொலு பார்க்க வரும் குழந்தைகளுக்கும் கொடுத்து மகிழலாம். கொலுவிற்கு வரும் கன்னிப் பெண்களுக்கும், சுமங்கலிகளுக்கும், வெற்றிலை, சீவல், பழம், சிறு குங்குமச் சிமிழ், சிறு கண்ணாடி, சிறு சீப்பு, மஞ்சள் வைத்துத் தாம்பூலம் தருவது நமக்கு மிகவும் நல்லது. மாலையில் அம்பாள்மேல் கீர்த்தனைகள் பாட வேண்டும். குழந்தைகளுக்கு மகிஷாசுரமர்த்தனி ஸ்லோகம் கற்பித்து மாலையில் சொல்லச் செய்ய வேண்டும்.

சுண்டல் செய்யும் போது, முதல் நாள் இரவே ஊறப் போடவும். இதனால் தானியம் முளை விடுவதால் சத்து கூடுதல், வேக விடவும் பாதி நேரமே ஆகும். வெந்ததும் வடிய விட்டு (வடி நீரை வீசிக் கொட்டாமல் ரசம், குழம்பில் விடவும். மிகச் சத்து மிக்க நீர்.) கடுகு, பெருங்காயப் பொடி ஒரு சிட்டிகை கறிவேப்பிலை தாளித்து, வடியவிட்ட காராமணி (அல்லது கடலை, பட்டாணி)யைப் போட்டு, ஒரு மூடி தேங்காய் துருவல் சேர்த்து, வதக்கி இறக்கவும். பெருங்காயம் கட்டியாக உபயோகிப்பதை விட பொடி உபயோகித்தால், சிக்கனம். மொத்த சுண்டலுக்கும் பெருங்காயம் கலந்துவிடும்.

வியாழக்கிழமை கொண்டைக் கடலை சுண்டலும், சனிக்கிழமை எள்ளுருண்டையும், வெள்ளிக்கிழமை புட்டும், சரஸ்வதி பூஜை அல்லது ஹயக்ரீவனுக்கு உகந்த வெள்ளைக்



கடலே சுண்டலும் செய்வது நல்லது. பட்டாணி சுண்டலுக்கு மஞ்சள், கொப்பரைத் தேங்காய், மிளகாய் வற்றல், பொன்னிறமாய் வறுத்த தனியா இவைகளை அரைத்துப் பிசிறி சுண்டல் செய்யவும். எள்ளைத் தண்ணீரில் விட்டு, பத்து நிமிடம் ஊறியதும், கல் அரிந்து, அம்மியில் பிழிந்து போட்டு லேசாகக் குழவியை ஓட்ட, எள் தோல் நீங்கி, வெள்ளையாகும். இதை ஓட்டப் பிழிந்து வாணலியில் போட்டு, வாசனை வரும் வரை வறுக்கவும். வறுபட்ட எள் உருண்டு இருக்கும்.) வறுத்ததும் புடைத்தால் தோலி நீங்கும். ¼ கிலோ எள்ளுக்கு 200 கிராம் வெல்லம் கெட்டிப் பாகு வைத்து, எள்ளில் சேர்த்து சிறு உருண்டைகள் பிடித்து, சனிக்கிழமை குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

புட்டுசெய்ய, அரிசியைக் களைந்து இடித்து, மாவை வறுத்துக் கொள்ளவும். துவரம் பருப்பை வேகவிட்டு, வடிய விடவும். அந்தத் தண்ணீரை விட்டுப் புட்டு மாவைக் கட்டி முட்டி இல்லாமல் பிசிறி, வெள்ளைத் துணியில் தளர முடிந்து, வேக விடவும். ஏலக்காய்ப் பொடி, வறுத்த முந்திரிப் பருப்பு, பிழிந்த துவரம் பருப்பு, துருவிய தேங்காய் இவற்றைத் தாம்பாளத்தில் கொட்டி, வெந்த புட்டு மாவையும்கொட்டிக் கலக்கவும். ½ லிட்டர் அரிசிக்கு, 250 கிராம் வெல்லம் கெட்டிப் பாகு வைத்து, கலவையில் பரவலாகக் கொட்டி, சட்டுவத்தால் கலந்து கிளறவும். உதிர் உதிராக அருமையாக இருக்கும்.

ஆனால் இடித்து வறுத்துச் செய்ய வசதி இல்லாதவர்கள் புழுங்கல் அரிசியை, இட்லி நொய் போல் மில்லில் அரைத்து வைத்து, லேசாக வறுத்து, மேற்கூறிய முறையில் செய்யலாம்.



சரஸ்வதி பூஜை அன்று, புத்தகங்கள், வீணை, வயலின், ஹார்மோனியம் போன்ற வாத்தியக் கருவிகள் யாவற்றுக்கும் பூஜை செய்யவும். சந்தனம், குங்குமம் வைத்து, அருகம்புல், பூ, அட்சதை போட்டு தூப, தீபம், பழம் சமர்ப்பித்துப் பூஜிக்க வேண்டும். விஜயதசமி அன்று அருகே உள்ள கோயிலில் அம்பு போட்டதும், கொலு பொம்மைகளுக்கு ஆரத்தி காட்டிப் படுக்க வைத்துவிட வேண்டும்.

இன்றும் பல கிராமங்களில் (கல்கத்தாவில் துர்கா பூஜையாக) தமிழ்நாட்டில், பெண்கள் நவராத்திரி ஒன்பது நாளும், பாராயணம், பூஜை, அதிதி போஜனம், சுவாசினி பூஜை செய்து கொண்டாடுகிறார்கள். விஸ்தாரமாகச் செய்ய நேரமும், வசதியும் இல்லாதவர்கள் எளிமையாக மேற்கூறிய முறையில் அம்பாளைத் துதித்தால், அம்பாள், தன் கமல நயனங்களின் அருட்பெருக்கை நம் மீது அனுக்ரஹிப்பாள்.



ஆறிலிருந்து அறுபது வரை அனைவரும் ஆரோக்கியமாக வாழ

காயகல்பம்

எல்லாம் வல்ல இறைவன் மனித இனம் கொஞ்சிக் குலவும் குழந்தைப் பருவம் முதல் முன்டு தட்டிய முதுமைப் பருவம் வரை ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவரும் ஆரோக்கியமாகவும், இளமையோடும், வலிமையோடும் வாழ்வதற்கு அவசியமான இயற்கை வளங்களை உலகமெங்கும் ஏராளமாக படைத்திருக்கிறான். இவ்வாறான இயற்கை செல்வங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சுற்ப மூலிகைகளையும் தங்கம், வெள்ளி முதலிய நவலோக பற்பங்களையும் தாது உப்புக்களையும், நவீன விஞ்ஞான அடிப்படையில் ஒன்றாக இணைத்து காயகல்பம் உருவாக்கப்பட்டிருக்கிறது. சின்னஞ்சிறு வயது முதல் வயோதிகப் பருவம் வரை அனைவரும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு அவசியமான அரிய பல மருந்துகள் காயகல்பத்தில் அடங்கி இருக்கின்றன.

குழந்தைகள்

கணைச்சூடு, சக்குவான் இருமல், க்ஷயரோக தேகவாது, அடிக்கடி தடிமன் பிடித்தல் போன்ற நோய் நொடிகளால் நலிந்தும், மெலிந்தும் அவதியுறும் குழந்தைகளுக்கும் சிறுவர்—சிறுமிகளுக்கும் காயகல்பம் அமிழ்தம் போன்று வேலை செய்யும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்து உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும்.

இளைஞர்கள்

வயதிற்கேற்ற உடல் வளர்ச்சியும், மன வலிமையும் இல்லாமல் தன்னம்பிக்கையை இழந்து, தடுமாறுகின்ற இன்றைய இளைஞர்களும், யுவதிகளும் தெம்பும் துணிவும் பெற்று வாழ்க்கையில் முன்னேறுவதற்கு காயகல்பம் ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்.

வாழ்க்கை போராட்டத்தில் அலுத்து சலித்து: விரக்தி அடைந்துள்ள நடுத்தர வயதினருக்கு,— தத்தளிக்கும் தம்பதிகளுக்கு,— காயகல்பம் ஒரு கைகண்ட மருந்து. வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க உதவி செய்யும்.

முதியவர்கள்

முதியவர்களுக்கு காயகல்பம் ஒரு வலுவான ஊன்றுகோல் போன்றது. முதுமையில் தோன்றுகின்ற வாயுக் கோளாறுகள், வயிற்றுப் பொருமல், பசியின்மை, மலச்சிக்கல், நெஞ்செரிவு, இதய பலவீனம், படபடப்பு, இரத்தக் கொதிப்பு, உடல்பலம் குன்றுதல், மாதவிடாய்க் கோளாறுகள், உடல் உளைச்சல் முதலிய நிலைமைகளில் காயகல்பம் நன்கு பயன்படுகிறது.

நீரிழிவு நோயினருக்கு

நீரிழிவிற்கு காயகல்பம் ஒரு நிவாரணி அல்ல. எனினும் நீரிழிவு நோயினருக்கு ஏற்படுகிற பலவீன நிலைமையை காயகல்பம் அகற்றுகிறது. அவர்கள் வழக்கமாக உட்கொள்ளும் நீரிழிவிற்கான ஆங்கில மருந்துகளுடன் காயகல்பத்தையும் உட்கொள்ளலாம்.

உடற்சூடு குறைய

காயகல்பத்தில் தங்கம் முதலிய நவலோகங்கள் அடங்கி இருப்பதால் இதை உட்கொண்ட பின் குளிர்ச்சி தரும் ஆகார வகைகளை சேர்த்துக் கொள்வது நல்லது. எங்கள் ஹெர்பல் ஹேர் க்ரீம், ஹெர்பல் ஹேர் டானிக், ஹெர்பல் ஹேர்கேர் போன்ற தயாரிப்புகளை தலைக்கு பயன் படுத்துவதால் உடற்சூடு குறையும். இது தவிர காயகல்பத்திற்கு பத்தியம் எதுவும் இல்லை.

காயகல்பம் தவிர, முடி உதிர்தலை தடுத்து நிறுத்தி முடி வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய ஹெர்பல் ஹேர்க்ரீம், ஹெர்பல் ஹேர்டானிக் ஆகிய குளிர்ச்சி மிக்க கூந்தல் தைலங்களும் குற்றாலத்தில் குளித்தது போன்ற குளுமையை ஊட்டி, முடி உதிர்தலை நிறுத்தி பொடுகுகளையும், அழுக்குத் திவலைகளையும் உடனடியாகப் போக்கக் கூடிய "ஹெர்பல் ஹேர் கேர்.." என்ற மூலிகை ஷாம்பும், உடல் வலியையும், தலை வலியையும் போக்கி உடல் உறுப்புகளை உறுதிப்படுத்தக் கூடிய "ஹெர்பல் மசாஜ் க்ரீம்" என்ற மூலிகை தேய்ப்பு மருந்தும், முகப் பருக்களை நிவர்த்தி செய்து முக வசீகரத்தை அதிகரிக்கச் செய்யும் "பிம்பிளக்ஸ்" என்ற நறுமணம் கமழும் முகப்பரு நிவாரணியும், ஆடும் பற்களின் அசைவுகளை நிறுத்தி ஈறுகளை உறுதிப்படுத்தி, வாய் நாற்றத்தை போக்கி வாசம் கமழச் செய்யும் ஹெர்பல் டூத் பவுடர் என்ற மூலிகை பற்பொடியும் விஞ்ஞான அடிப்படையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. டாக்டர் இ. ஷாநூல் ஹமீதுவின் நீண்ட நெடுங்கால ஆராய்ச்சிகளின் பலனால் உருவாகியுள்ள இந்த அரிய மருந்துகள் தற்போது தமிழகத்தில் எல்லா நகரங்களிலும் விற்பனையாகின்றன. வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

தயாரிப்பாளர்கள்:—

கிரவுன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ்;
55, நாரிஸ் சாலை,
சென்னை—600 002.

விநியோகஸ்தர்கள்:—

P. Govindasamy Pillai, S'pore (Pvt) Ltd., 48, 49, 50 & 53, Serangoon Road, Singapore – 0821.

மலேசியா M/S. சபரி எண்டர்பிரைசஸ், 333, ஜாலான் பஹாங், செட்டாபக், கோலாலம்பூர். திருச்சி மாவட்டம்: M/S. சுரேஷ் ஏஜென்சீஸ், 1/F/1, புரோமினேட் ரோடு, கன்டோன்மென்ட், திருச்சி—1. மதுரை, இராமநாதபுரம் மாவட்டம்: M/S. தனலக்ஷ்மி ஏஜென்சீஸ், 30, வடக்கு சித்திரை வீதி, மதுரை—625 001. தென் ஆற்காடு மாவட்டம்: M. K. ஏஜென்சீஸ், 1/8, பாரதி ரோடு, கடலூர்—1. தஞ்சை மாவட்டம்: [illegible] ஏஜென்சீஸ், 3/108, [illegible] ரோடு, [illegible]. நெல்லை மாவட்டம்: [illegible] ஏஜென்சீஸ், 48, [illegible], திருநெல்வேலி—1. குமரி மாவட்டம்: M. கோபாலன் ஆசான், 81, பால மோர் ரோடு, நாகர்கோவில்—1. கோவை மாவட்டம்: ஸ்ரீராம் அன்கோ, 503 செயின்ட் மிக்கேல் [illegible], பெரிய கடை வீதி, கோவை—1. சேலம் மாவட்டம்: [illegible] செண்டர், 57, கோட்டை மெயின் ரோடு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்—2. பெரியார் மாவட்டம்: [illegible] ஸ்டோர்ஸ், [illegible] பஸ் நிலையக் கட்டிடம், [illegible] ரோடு—1. வட ஆற்காடு மாவட்டம்: கே. என். பாஸ்கர், [illegible] தெரு, வேலூர்—4.

—Advt.



"எல்லோரும் சமத்தா பிள்ளையாரைக் கும்பிடுங்க..."



"இவையே... இன்னிக்குப் பட்டாசுகள் வெடிப்பாங்க..."




''இன்னிக்கு சாமியத்தாண்டி கும்பிட ணும்... போடி...''

''பட்டாசுதாண்டா வெடிக்கணும்... போடா...''



''என்னத்துக்கு வீணா சண்டை போடறீங்க? என்ன மாதிரி எல்லாத்துக்கும் பொதுவா விளக்கேத்தி வச்சுடுங்களேன்..''



''ஓயே... இவங்க யாருக்கும் ஒண்ணும் தெரியலே... எல்லாரும் அடுத்த பக்கம் வாங்க... சொல்றேன்...''





"மொதல்ல என்னுட்டம் சமத்தா குளிக்கணுமாம்..."

"...அப்புறமா என்னே மாதிரி கோலம் போடணும்..."

"...அம்மாவைப் படுத்தாம தலேயப் பின்னிக்கணும்..."

"...நா பண்ணிண்டா மாதிரி அழகா டிரெஸ் பண்ணிண்டு சுவாமிக்கு விளக்கேத்தணுமாம்..."







"...நாங்கள்ளாம் குறுக்கும் நெடுக்கும் ஓடாம அம்மா போடற கோலத்தை அழிக்காம பாப்போம்..."



"சிதார் தெரியுமா உங்களுக்கு...? சிதார் வாசியுங்களேன் என்னை மாதிரி...?"



"எல்லாரும் சொல்லியாச்சா? வாங்க எல்லாரும்... நவராத்திரியில சரஸ்வதிய கும்பிடுவோம்...படிச்சு பர்ஸ்ட் ரேங்க் வரணுமில்ல...?"

படங்கள்: எம். நடராஜன்.
பி. ஈ. ரமணன்.

ஸ்ரீ தேவியின் பேரருளைப் பெற நவராத்திரியில்

	ஒன்பது பொருள்களைக் கொண்டு	ஒன்பது வித மா கோலங்கள் போட வேண்டும்.	சுமங்கலிகளுக்கும் கன்னி பெண்களுக்கும் நீராடக் கொடுக்க வேண்டும்.		சக்தியுள்ளவர்கள் பெண்களை வீட்டுக்கு அழைத்து நவரத்தினம் கொடுக்கலாம்.	வசதியற்றவர்கள் இவைகளைக் கொடுக்கலாம்.
நாள்						
1	அரிசிமா	பொட்டு	பச்சிலை	எண்ணெய்	பொன்	சோழி
2	கோதுமைமா	கட்டம்	பூலாங்கிழங்கு	மஞ்சள்	வெள்ளி	குன்றிமணி
3	முத்து	மலர்	சண்பக மொட்டு	குங்குமம்	முத்து	தட்டைப் பவளம்
4	அட்சதை	படிக்கட்டு	கஸ்தூரி மஞ்சள்	பன்னீர்	பவளம்	கிளிஞ்சல்
5	கடலை	பறவையினம்	இரவியப்பட்டை	சந்தனம்	வைடூரியம்	செப்பு
6	பருப்பு	தேவிநாமம்	காசுக்கட்டி	வாசனைத் தைலம்	கோமேதகம்	பதுமை
7	மலர்	இட்டாணி	லாக்ஷாரஸம்	நலங்கு மஞ்சள்	புஷ்பராகம்	அம்மானை
8	காசு	பத்மம்	கஸ்தூரிகா பத்ரம்	மருதோன்றி	மரகதம்	பந்து
9	கற்பூரம்	ஆயுதம்	கோரோஜனம்	புஷ்பநீர்	வைரம்	கழற்சிக்காய்

இவைகளை செய்ய முடியாதவர்கள் கீழ்க்கண்ட எமது இனிப்பு கார வகைகளை வாங்கி விநியோகிக்கவும்.


இனிப்பு: பாதாம் அல்வா, கோதுமை அல்வா, பால் அல்வா, முந்திரி கதலி, பாதம் கத்தரி, ஜாங்கிரி, லட்டு, மைசூர்பாகு, சாக்லட் கேக், சோன் பப்டி, பாதுஷா, குலாப்ஜாமூன், ரஸமலாய், கர்ஜிக்காய் பேடா, பருப்பு போளி, தேங்காய் போளி, சம்சம் சம்பாக்களி, கோவா சேன்டிவிச் முதலியன.

காரம்: தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, மிக்ஸர், சமோசா, சீடை முதலியன.

செய்ய வேண்டிய சில அனுஷ்டானங்கள்

வீடு தேடி வரும் குமரிகளுக்கும், சுமங்கலி களுக்கும், பக்தியுடன் தன் கையால் பொட்டு இடலாம்.	தினசரி காலை, மாலை கீழ்க்கண்ட ராகங்களில் ஸ்ரீ தேவி சம்பந்தமாக பாடலாம்.	கீழ்க்கண்ட வாத்தியப் பின்னணிகளுடன் பாட லாம்.	கீழ்க்கண்ட மலர்களைக் கொண்டு மாலை அணிவிக்க லாம்.	கீழ்க்கண்ட தழைகளைக் கட்டு மாலைகளாகக் கட்டி சார்த்தலாம்.	பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொருநாளும் நிவித மாகக் கொடுக்கலாம்.	பாலா என்னும் பருவச் சிறுமியின் மகிழ்ச்சிக்காக	கீழ்க்கண்ட பிரசாதங்களை விநியோகிக்கலாம்.
புனுகு	தோடி	மிருதங்கம்	மல்லிகை	வில்வம்	வாழை	கண்டல்	வெண்பொங்கல்
ஜவ்வாது	கல்யாணி	புல்லாங்குழல்	முல்லை	துளசி	மா	வறுவல்	புளியோதரை
கஸ்தூரி	காம்போதி	வீணை	சம்பங்கி	மரு	பலா	துவையல்	சர்க்கரைப் பொங்கல்
அரகஜா	பைரவி	கோட்டு வாத்தியம்	ஜாதி	கதிர்ப்பச்சை	கொய்யா	பொரியல்	கதம்பம்
சந்தனம்	பந்துவராளி	ஜல்லரி	பாரிஜாதம்	விபூதிப்பச்சை	மாதுளை	அப்பளம்	ததியோதனம்
குங்குமம்	நீலாம்பரி	பேரி	செம்பருத்தி	சந்தனஇலை	நாரத்தை	வடகம்	தேங்காய்சாதம்
சாந்து	பிலஹரி	படகம்	தாழம்பூ	தும்பைஇலை	பேரிச்சை	சூரணம்	எலுமிச்சம் பழம் சாதம்
ஸ்ரீசூர்ணம்	புன்னாக வராளி	கும்மி	ரோஜா	பன்னீர் இலை	திராட்சை	முறுக்கு	பாய சான்னம்
மை	வஸந்தா	கோலாட்டம்	தாமரை	மருக் கொழுந்து	நாவல்	திரட்டுப்பால்	அக்காரஅடிசில்

திருமண வைபவங்களுக்கு: சீர் அதிரசம், சீர் முறுக்கு, பருப்புத் தேங்காய், கட்டிப்பருப்பு, திரட்டுப் பால், முள்ளு தேன்குழல் முதலியன.



நவராத்திரி புதுமை மெனு

1

பாசிப் பருப்புப் புட்டு

தேவையான பொருட்கள்:

பாசிப் பருப்பு — 1 கிலோ,
வெல்லம் — ½ கிலோ,
தேங்காய் — 1 பெரிய தேங்காய்,
முந்திரிப் பருப்பு — 50 கிராம்.

செய்முறை:

1. முதலில் பாசிப் பருப்பை ஒரு மணி நேரம் ஊற வைத்து பின் நன்றாக அரைத்துக் கொள்ளவும்.
2. அரைத்தமாவை ஆவியில்வேகவைக்கவும்.
3. வெந்தபின் கட்டிகள் இல்லாமல் நன்றாக உதிரித்துக் கொள்ளவும்.
4. தேங்காயை உடைத்துத் துருவிக் கொள்ளவும்.
5. வெல்லத்தைப் பாகு எடுத்துக் கொண்டு, தேங்காயை அதில் சேர்த்துக் கிளறவும்.
6. பின் வேக வைத்த பருப்பு மாவை இத்துடன் சேர்த்துக் கலக்கவும். இத்துடன் பொன்னிறத்தில் வறுத்த முந்திரியையும் ஏலக்காய்ப் பொடியையும் கலந்து இறக்கி வைக்கவும்.

இது மிகவும் சுவையாகவும் ஊட்டச் சத்து மிகுந்ததாகவும் இருக்கும்.

2

பஞ்ச கஜாயா

தேவையான பொருட்கள்:

கடலைப் பருப்பு — ½ கிலோ,
பாசிப் பருப்பு — ½ கிலோ,
எள்ளு — 100 கிராம்,
தேங்காய் — 2,
வெல்லம் — ½ கிலோ.

செய்முறை:

1. முதலில் கடலைப் பருப்பு, பாசிப் பருப்பு, எள்ளு ஆகியவற்றைப் பொன்னிறத்தில் வறுத்துக் கொள்ளவும்.
2. இதனை ரவை பதத்திற்கு அரைத்துக் கொள்ளவும்.
3. தேங்காயைத் துருவி வறுத்துக் கொள்ளவும்.
4. வெல்லத்தைப் பாகு எடுத்து, அதில் தேங்காய், பொடி செய்த பருப்பு கலவை ஆகியவற்றைச் சேர்த்துக் கிண்டி இறக்கும் போது 2 தேக்கரண்டி நெய்யை விட்டு கலக்கவும்.

இது பண்டிகைக் காலங்களில் செய்து, வருபவர்களுக்குக் கொடுக்க ஏற்ற சத்தும், மிகுந்த சுவையும் நிறைந்த ஒரு பலகாரமாகும்.

3

ரவா மிளகு வடை

தேவையான பொருட்கள்:

ரவை — ½ கிலோ,
உளுத்தம் பருப்பு — ½ ஆழாக்கு,
மிளகு — 25 கிராம்,
பெருங்காயம்
டால்டா — 50 கிராம்,
உப்பு — 2½ தேக்கரண்டி,
தண்ணீர் — 1 கப்,

செய்முறை:

1. உளுத்தம் பருப்பை ஒரு மணி நேரம் ஊற வைத்து அரைத்துக் கொள்ளவும்.
2. சுத்தம் செய்த ரவையுடன் டால்டாவைக் கலந்து கொள்ளவும்.
3. இத்துடன் ஊறவைத்த பருப்பு, பொடி செய்த மிளகு, பெருங்காயம் (துகள்) ஆகியவற்றைச் சேர்க்கவும்.

4. சிறிது தண்ணீரில் உப்பைக் கலந்து, ரவையுடன் சேர்த்து, பூரி மாவு பதத்திற்குப் பிசைந்து கொள்ளவும்.

5. பின் சாதாரண மிளகு வடை போல், தட்டி எண்ணெயில் போட்டு எடுக்கவும்.

4

மொச்சைக்காய் கண்டல்

தேவையான பொருட்கள்:

மொச்சைக்காய் — ½ கிலோ,
கடலைப் பருப்பு — ¼ கிலோ,
பச்சைப் பருப்பு — ¼ கிலோ,
பச்சை மிளகாய் — 10,
தேங்காய் — 1,
எலுமிச்சம் பழம் — 1,
கடுகு — 1 தேக்கரண்டி,
உளுத்தம் பருப்பு — 1 தேக்கரண்டி,
இஞ்சி — 1 துண்டு.

செய்முறை:

1. மொச்சை, கடலைப் பருப்பு, பச்சைப் பருப்பு ஆகியவற்றை வேக வைத்துக் கொள்ளவும்.

2. தேங்காயைச் சிறிய பற்களாகக் கீறிக் கொள்ளவும்.

3. சிறிது எண்ணெயில் கடுகு, உளுத்தம் பருப்பு, மிளகாய், இஞ்சி ஆகியவற்றைப் போட்டுத் தாளித்து வேக வைத்த பருப்பு வகைகள், எலுமிச்சம்பழச் சாறு, உப்பு, தேங்காய் ஆகியவை சேர்த்துக் கிளறி இறக்கவும்.

5

வெஜிடபிள் மிக்சர்

தேவையான பொருட்கள்:

உருளைக் கிழங்கு — ½ கிலோ,
சேனைக் கிழங்கு — ½ கிலோ,
மரவள்ளிக் கிழங்கு — ½ கிலோ,
பச்சை மொச்சை — ½ கிலோ,
எண்ணெய் — ½ கிலோ,
மிளகு, உப்பு — தேவையான அளவு.

செய்முறை:

1. முதலில் கிழங்கு வகைகளை, மெல்லியதாகவும் சிறிது நீளமாகவும் சீவி, கழுவி நிழலில் உலர்த்தவும்.

2. பின் இவற்றை, எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

3. மொச்சைப் பயிறின் தோலை நீக்கி (இரண்டாக உடைத்தாற்போல்) எண்ணெயில் பொரித்துக் கொள்ளவும்.

4. பிறகு இதனுடன் உப்புத் தூளையும், மிளகுத் தூளையும் கலக்கி எடுத்து வைக்கவும்.

6

ரவா புட்டு

தேவையான பொருட்கள்:

ரவை (பெரியது) — 1 கிலோ,
சர்க்கரை — 1½ ஆழாக்கு,
தேங்காய் — 1,
ஏலக்காய் — 5 கிராம்,
பச்சைக் கற்பூரம் — சிறிது.

செய்முறை:

1. முதலில் ரவையைச் சிறிது உப்புக் கலந்த தண்ணீர் தெளித்துக் கலந்து கொள்ளவும்.

2. இதனை ஆவியில் வேக வைத்துக் கொள்ளவும்.

3. வெந்தபின், இதனை நன்றாக உதிர்த்துக் கொள்ளவும்.

4. ரவை சூடாக இருக்கும் போதே, துருவிய தேங்காயும், சர்க்கரையும், பொடி செய்த ஏலக்காயும் கலந்து கொள்ளவும். தேவைப்பட்டால் வறுத்த முந்திரியும் கலந்து கொள்ளலாம்.

7

பச்சைப் பட்டாணி கண்டல்

தேவையான பொருட்கள்:

பச்சைப் பட்டாணி — 1 கிலோ,
கேரட் — ¼ கிலோ,
வெள்ளரிக்காய் — ¼ கிலோ,
எலுமிச்சம் பழம் — 1,
தேங்காய் — ½ மூடி,
கடுகு — 1 தேக்கரண்டி,
மிளகாய் (பச்சை) — 7.

செய்முறை:

1. பச்சைப் பட்டாணியை வேக வைத்துக் கொள்ளவும்.

2. கேரட்டையும், தேங்காயையும் துருவிக் கொள்ளவும்.

3. வெள்ளரிக்காயை சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

4. வேகவைத்த பட்டாணி, கேரட், வெள்ளரிக்காய், தேங்காய் ஆகியவற்றைக் கலந்து, கடுகு மிளகாய் போட்டுத் தாளித்து உப்பு, எலுமிச்சம்பழச் சாறு ஆகியவற்றைக் கலந்து எடுத்துக் கொள்ளவும்.

8

சுரைக்காய் கேக்

தேவையான பொருட்கள்:

சுரைக்காய் — 1,
பால் — 1 லிட்டர்,
சர்க்கரை — 1 கிலோ,
வெள்ளரி விதை — 10 கிராம்,
ஏலக்காய் — 10.

செய்முறை:

1. சுரைக்காயை துருவி வைத்துக் கொள்ளவும்.
2. பின் இத்துடன் காய்ச்சிய பால், சர்க்கரை ஆகியவற்றைக் கலந்து அடுப்பில் வைத்துக் கிண்டவும். ஒட்டாமல் இருக்க் சிறிது நெய் வேண்டுமானால் சேர்க்கலாம்.
3. பாத்திரத்தில் ஒட்டாமல் வரும் போது ஏலக்காயையும், வெள்ளரி விதையையும் கலந்து, நெய் தடவிய தட்டில் ஊற்றி சிறிய துண்டுகளாக வெட்டவும்.

9

திவ்யப்ரசாதம்

தேவையான பொருட்கள்:


பச்சைப் பருப்பு — ½ கிலோ,
பொட்டுக் கடலை — ½ கிலோ,
தேங்காய் — 1,
சர்க்கரை — ½ கிலோ,
ஏலக்காய் — 10,
காய்ந்த திராட்சை — 25 கிராம்.

செய்முறை:

1. பச்சைப் பருப்பை நன்ருக வறுத்து மாவாக அரைத்துக் கொள்ளவும்.
2. சர்க்கரையையும் மாவாக அரைத்துக் கொள்ளவும்.
3. தேங்காயை துருவி நன்ருக வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
4. பொட்டுக்கடலையை நன்ருக வறுத்துக் கொள்ளவும்..
5. இவை எல்லாவற்றையும் கலந்து, பொடி செய்த ஏலக்காயையும், திராட்சையையும் கலந்து வைத்துக் கொள்ளவும்.

இத்துடன் சிறிது நெய்யை உருக்கி கலந்து பிசைந்து கொள்ள்வும்.

வித்யாவதி ஜெயகுமார்.





பெண் குலத்திற்கு ஆபத்து

பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று தெரிந்து கொள்ள முடியாமல் சஸ்பென்ஸாய் இருந்த காலம் போய் இப்போது விஞ்ஞானம் பெருமளவில் முன்னேறியுள்ளதால் கருவுற்ற சில மாதங்களுக்குள் கருவில் உள்ள உயிர், ஆணா, பெண்ணா என்பதைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். சமீபத்தில் கூட நடிகை ஹேமமாலினி, மற்றும் நடிகர் ஒய். ஜி. மகேந்திரனின் மனைவி முதலியோர் இந்த டெஸ்ட் செய்து கொண்டு, அதே போல், குழந்தைப் பிறந்ததாய்ப் பத்திரிகைகளில் படித்தோம்.

''பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் பெரும்
பீழையிருக்கு தடி' என்று பாடினார் பாரதி.

ஆனால் இன்றோ பெண்ணென்று பிறக்கக் கூட வேண்டாம். கருவில் உருவாகும் போதே அவர்களுக்கு, அந்த அறியாத உயிர்களுக்கு அபாயம் காத்திருக்கிறது! ஆம்! முக்கால்வாசிப் பெண்கள், இந்த டெஸ்ட்டின் மூலம் பிறக்கப் போவது பெண் என்று தெரிந்தால் அதை அழித்து விடுகிறார்கள்! உலகில் உதிக்கும் முன்பே பெண்களை அழிக்கக் கரங்களும் ஆயுதங்களும் காத்திருக்கின்றன!

முதலில் இந்த 'டெஸ்ட்' என்னவென்று பார்ப்போம். ஆம்னியோ ஸென்டெஸிஸ்' **(amniocentesis)** என்று அழைக்கப்படும் இந்த மருத்துவமுறை, முதன் முதலாக, கருவைப் பாதிக்கும் நோய்களைக் கண்டறியவும், கருவின் அசாதாரண நிலைகளை அல்லது பரம்பரை வியாதியின் சுவடுகள் கருவில் தோன்றினால் கண்டறியவும் என அறிமுகமாயிற்று. பிறகு மெல்லக் கருவின் **(Foetus)** பாலை நிர்ணயம் செய்யப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இப்போது முக்கியமாகவும் முழுமையாகவுமே கருவின் பால் **(Sex)** நிர்ணயிக்கவே இந்த முறை உபயோகிக்கப்படுகிறது.

இதன் விளைவோ, பயங்கரம்! பெண் குழந்தை என்றவுடனேயே அக்கரு 80% கேஸ்களில் கலைக்கப்படுகிறது!

சில காலம் முன்பு வரை, ஆண் குழந்தை இல்லாத தாய் மலடியெனவே கருதப்பட்டாள். ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில் அடுத்தடுத்து முயன்று அடுக்கடுக்காய்ப் பெண்கள் பெற்றவர்களும் உண்டு! ஆனால் இப்போதோ நிலைமை மாறி விட்டது. ராக்கெட்டாய் உயரும் விலைவாசியும், வேறு பல காரணங்களும் இன்று ஒன்றோ அல்லது இரண்டோ போதும் என்ற மனப்பான்மையை ஊன்றி விட்டதால், தம்பதிகள் தமக்கு இஷ்டப்பட்ட குழந்தையை முதல் முறையிலேயே பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். 99 சதவீதம் வெற்றிகரமாய்ப் பிறக்கப் போகும் குழந்தையின் பாலை அறிவிக்கக் கூடிய இந்த ஆம்னியோஸென்டஸிஸ் இவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகி விட்டது!

தம்பதியின் முழு நோய்ச் சரித்திரமும் ஆராய்ந்த பின், கருவுக்கு ஏதேனும் அபாயம் உண்டாகக் கூடும் என்ற நிலையில், முன்பெல்லாம் கருவின் நார்மல்ஸியை அறிய இந்த டெஸ்ட்டைச் செய்து வந்தனர். கருவுற்ற 16 முதல் 18 வாரங்களுக்குள், அதாவது நான்காம் மாதம் முதல் ஐந்தாம் மாதத்திற்குள் இந்த டெஸ்ட் செய்யப்படுகிறது. ஒரு உள்ளீடுள்ள ஸ்பெஷல் ஊசி வயிற்றில் செலுத்தப்பட்டு, கருப்பையினுள் நுழைக்கப்படுகிறது. கருவைச் சுற்றிப் படர்ந்துள்ள ஆம்னியாடிக் ஃப்ளுயிட் என்னும் திரவம் (இதைப் பனிக்குடம் என்பார்கள்.) சுமார் 20 மில்லி கிராம் அளவு ஊசியினுள் இழுக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது.

பிறகு, இந்தத் திரவத்தைச் சோதனைச் சாலையில், ஃப்ளுரோக்ராம்'' என்னும் பொருளின் உதவியுடன் மிகவும் சக்திவாய்ந்த மைக்ரோஸ்கோப்புகளின் மூலம் பரிசோதிக்கப்படுகிறது. ஒரு நுண்ணிய கரு செல்

வில் 23 க்ரோமாஸோம்கள் அடங்கியுள்ளன. இதில் இரண்டே இரண்டு மட்டும் கருவின் பாலை நிர்ணயம் செய்கின்றன. க்ரோமோ ஸோம்களை எண்ணிக் கணக்கிட்டு, பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டறிகிறார்கள். சில தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் மட்டுமே இந்த வசதி உண்டு. ஒரு நாளில் 12 முதல் 15 டெஸ்டுகளைச் செய்கிறார்கள். இந்த டெஸ்ட்டைச் செய்து, பிறக்கப் போவது பெண் என்று தெரிந்தால், அநேகம் பெண்கள் இதை அழித்து விடுகிறார்கள்!

பெண்களுக்காகப் போராடும் FAOW (Forum Against Oppression Woman) என்ற அமைப்பும், வேறு பல பெண்கள் சங்கங்களும் இந்த ஆம்னியோஸெண்டிஸிஸ்ஸைத் தடை செய்ய வேண்டும் என எதிர்ப்புக் குரல் எழுப்பிப் போராடி வருகின்றன. இந்த டெஸ்ட் கருவிலேயே பெண்களைக் கொல்லத் தூண்டுவதாயும், இது பெண் இனத்தையே நாசமாக்கும் அழிவு வேலை எனவும் இவர்கள் வாதாடுகிறார்கள். உண்மையிலேயே, சமீபத்தில் S. N. D. T. ரிஸர்ச் டிபார்ட்மெண்ட் வெளியிட்ட ஒரு ஃபீல்டு ஸ்டடி பின் வரும் விபரங்களைச் சொல்கிறது.

"சென்ற நான்கு வருடங்களில் சுமார் 4000 பெண் கருக்கள் ஆம்னியோஸெண்டிஸிஸ் ரிஸல்ட்டுகள் மூலம் அழிக்கப்பட்டுள்ளன! கொடுமை! ஏற்கெனவே இந்தியாவில் ஆயிரம் ஆண்களுக்கு 935 பெண்கள் என்ற விகிதத்தில் உள்ளனர். இந்த மாதிரிப் பெண் கருக்கள் அழிக்கப்பட்டால், இன்னும் கொஞ்ச காலத்தில் பெண்களின் எண்ணிக்கை கணிசமாய்க் குறைந்து, ஒரே பெண்ணுக்குப் பல கணவன்மார்கள் இருக்கக் கூடிய அபாயம் ஏற்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன! (ஏற்கெனவே ஹிமாசல் பிரதேசத்திலும் வேறு சில மலைவாழ் இனங்களிலும் இந்தப் பழக்கம் இருக்கிறதாம்!)

"இத்தனை நாளாய்ப் பெண்களின் உரிமைக்காக, அவர்கள் நசுக்கப்படுவதை எதிர்த்துப் போராடினோம்! இனி பிறக்காத சிறுமிகளின் உயிரைக் காக்கப் போராடியாக வேண்டும்! பெண் கரு கூட ஆண் கருவை விட மட்டமா என்ன?" என்று காரமாய்க் கேட்கிறார் பெண்ணுரிமைச் சங்க உறுப்பினர் ஒருவர்.

"கணவனையும், மாமியார் மாமனாரையும் திருப்தி செய்வதற்காக இந்தச் சோதனையைச் செய்து கொள்ளும் பெண்ணும் பெரிய ரிஸ்க்குக்கு ஆளாகிறாள். உட்செலுத்தப்படும் ஊசி, கருப்பையைச் சிறிது சிதைத்துவிட்டால், பிறகு இன்ஃபெக்ஷன், நோய்த் தொற்று ஏற்பட்டு, அபார்ஷன் ஆகக் கூடிய அபாயம் உள்ளது! சரி, பெண் என்று தெரிந்து கருவை அழிப்பதும் மிக அபாயமான செயல்தான், ஏனெனில் 4 அல்லது 5 மாதத்தில் கரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்திருக்கும்," என்கிறார் பெண் டாக்டர் ஒருவர்.

பெண்கள் மருத்துவ நிபுணர் டாக்டர் மஞ்சுஷா என்பவரோ, "இந்த டெஸ்ட்டைச் செய்து வேண்டாததை அழிப்பதில் தப்பில்லை" என்று வாதாடுகிறார்.

"இந்த டெஸ்ட் அணுசக்தியைப் போல்தான். நல்லதற்கும் பயன்படுத்தலாம். நான் படக் கருவுறும், அல்லது அடிக்கடி உயிரற்ற குழந்தை பெறும், கர்ப்பப்பை கோளாறுகள் உள்ள பெண்களுக்கு இந்த டெஸ்ட் ஒரு வரப்பிரசாதம் ஆகும். சரியில்லாத கருவை அறிந்து அதை அழிப்பது நல்லதில்லையா? முதலிலேயே நாலைந்து பெண் குழந்தைகள் உள்ள, ஒரு தாய் இன்னொரு பெண் குழந்தை பிறப்பதைத் தடுப்பதன் மூலம் எத்தனை மன வேதனையிலிருந்து தப்பிக்கிறாள்! வேண்டாத குழந்தையாய்ப் பிறந்து எல்லோராலும் ஒதுக்கப்படும் நிலையை அடையாமல் அந்தக் கருவைக் காக்கிறாள் இல்லையா? எந்த ஒரு புதிய கண்டுபிடிப்பிலும், எத்தனைக்கெத்தனை நல்லது இருக்குமோ, அத்தனைக்கத்தனை கெட்டதும் இருக்கும். கெட்ட விதத்தில் அதை உபயோகிக்காமல், நல்ல விதமாய் உபயோகிக்குமாறு ஜனங்களுக்கு எடுத்துக் கூற வேண்டியது அவசியமாகும். அதை விட்டு விட்டு 'பான்' செய்ய வேண்டும் என்று போராடுவது முட்டாள்தனமாகும்" என்கிறார் இவர்.

எது எப்படியோ மதிப்பு வாய்ந்த அருமையான டெக்னிக்கான "ஆம்னியோஸெண்டிஸிஸ்" இப்போது வந்து விட்டது. பெண் குலத்தின் அழிவுக்கு அது காரணமாகாமல் தடுப்பது நம் கையில், பெண்களாகிய நம் கையில்தான் இருக்கிறது!

—வி. கீதா.



அழகில்லாத பெண்கள் என்று எவருமே கிடையாது. சோம்பலுள்ள பெண்கள் தான் உண்டு.

— ஹெலினா ரூபன்ஸ்டைன்

பதினெட்டு வயது வரை ஒரு பெண்ணுக்கு நல்ல பெற்றோர் தேவை. பதினெட்டிலிருந்து முப்பத்தைந்து வரை நல்ல தோற்றம் தேவை. முப்பத்தைந்திலிருந்து ஐம்பத்தைந்து வரை நன்றாகப் பழகத் தெரிந்திருப்பது தேவை. ஐம்பதுக்கு மேல் நல்ல ரொக்கம் தேவை.

— சோஃபீ டக்கர்.

தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன்.



சொஸைட்டி





மேக்கப்பில் சாதாரணமாக எல்லா பெண்களும் ஒரே முறைதான் இருக்கிறது என எண்ணிக் கொண்டு மேக்கப் என்றாலே ஏதோ நமக்கு ஒத்து வராத ஒன்று என ஒதுங்குகிறார்கள். மேக்கப் என்றால் குறைகளை மறைத்து முகத்தை ஒழுங்குபடுத்திக் குறைகள் தெரியாவண்ணம் நிவர்த்தி செய்வது தான். அதில் பொதுவாக நாம் காலையில் அலுவலகம் மற்றும் வெளியிடங்களுக்குச் சென்று மாலையில் திரும்புகிறோம். அதுவரையில் முகம் பார்ப்பதற்கு அழுது வடியாமல் பொலிவோடு விளங்கச் சிறிது நேரம் செலவழித்து, அக்கறை எடுத்துக் கொண்டால் புத்துணர்ச்சியோடு செயல்படலாம். நம்மைப் பார்ப்பவர்களுக்கும் ஒரு புத்துணர்ச்சி அளிக்கக் கூடிய வகையில் நமது மேக்கப் அமைய வேண்டும். மேக்கப்பில் காலை,





மேக்-அப்!

மாலை, டீ. வி. மேடை, சினிமா போன்ற இடத்திற்குத் தகுந்தபடி செய்து கொள்ள பல முறைகள் உள்ளன. அலுவலகம், வெளியிடங்களுக்குச் செல்லக் கூடிய பெண்கள் தாங்கள் மாலை வரை உற்சாகத்தோடு செயல்பட உதவுகிறது இந்த சொசைட்டி மேக்கப்.

வேண்டிய சாதனங்கள்:

1. **Nourishing Cream,**
2. **Foundation,**





3. பவுடர்,
4. ரூஜ்,
5. ஐப்ரோ—பென்சில்,
6. ஐ—லைனர்,
7. லிப்ஸ்டிக்.

மேக்கப் போடும் முறை:

1. முதலில் முகத்தை சுத்தமாக துடைத்துக் கொள்ள வேண்டும். பிறகு படம் (1)—ல் உள்ளபடி **Nourishing Cream**—ஐ கையில் எடுத்து முகம், கழுத்து ஆகிய இடங்களில் துடைத்துக் கொண்டு, நன்றாக, சமமாகத் தேய்த்துக் கொள்ள வேண்டும். பிறகு சிறிது பஞ்சினால் முகத்தில் ஒத்தி எடுத்தால் அதிகப்படியான க்ரீம் வந்துவிடும்.

2. உங்கள் முகத்தோல் நிறத்திற்கேற்ப ஃபவுண்டேஷனை எடுத்து முகம், கழுத்து, காது ஆகிய இடங்களில் சமமாகப் பரவுமாறு, தோலோடு இசைந்து இருக்குமாறு செய்ய வேண்டும்.

3. சிறிதளவு பவுடரைப் பஞ்சில் ஒத்தி முகம், கழுத்து, காது ஆகிய பகுதிகளில் சமமாகப் பரவும்படி துடைத்து எடுக்க வேண்டும்.

4. ரூஜ்ஜை பிரஷ்ஷில் எடுத்து இரு கன்னக் கதுப்புக்களில் லேசாக, சமமாகப் பரவும்படி தடவ வேண்டும்.

5. ஐப்ரோ பென்சிலால் புருவங்களை லேசாக சரி செய்யவும். ஏனெனில் ஃபவுண்டேஷன், பவுடர் போன்றவை பட்டு புருவம் நிறம் மங்கித் தெரியும். பிறகு ஐப்ரோ பென்சி




லால் கண்களின் இமைகளின் மேல் எந்த அளவுக்கு அடர்த்தி வேண்டுமோ அந்த அளவிற்கு அவுட்-லைன் வரைந்து கொண்டு, அதன்மேல் ஐ-லைனர் பிரஷ் கொண்டு ஐ-லைனரை அந்தக் கோட்டில் தீட்டிக் கொள்ளவும்.

6. லிப்ஸ்டிக்கை லிப்-பிரஷ் கொண்டு உதட்டில் அவுட்-லைன் வரைந்து கொண்டு பிறகு லிப்ஸ்டிக் தடவி உதடுகளை லேசாக **press** செய்து விடவும். கடைசியில் பொட்டு வைத்துக் கொள்ள மேக்கப் நிறைவு பெறுகிறது.

மாலையில் மேக்கப் போட்டுக் கொள்ளும் போது ஐ-லைனர் போட்டுக் கொண்ட பிறகு இமைகளின்மேல் ஐ-ஷேடோ போட்டுக் கொள்ளலாம். இமை முடிகளுக்கு மஸ்காரா உபயோகப்படுத்தினால் இமை முடிகள் அடர்த்தியாகத் தெரியும். லிப்ஸ்டிப் போடும் போது அழுத்தமான **(Dark)** நிறம் உபயோகிக்க வேண்டும்.

—மல்லிகா & பார்வதி.



“என் செல்லப்பேத்திக்கு என் பழங்கதைகளைக் கேட்பதில் அலாதி உற்சாகம்! எனக்கு 12 வயதிலேயே கல்யாண வைபோகம் நடந்த கதையைச் சொன்னால் அவளுக்கு கொள்ளமாட்டாத சிரிப்பு!

எனக்கு கல்யாணச் சீராகக் கிடைத்த எவர்சில்வர் பாத்திரங்களைப் பற்றியும் ஆவலாகக் கேட்பாள். நாற்பது வருடங்களாக இன்றும் நான் சமைத்துவரும் பாத்திரங்களாயிற்றே!

இப்போதெல்லாம் அந்த மாதிரியான ‘கிண்’ணென்ற பாத்திரங்கள் கிடைப்பதில்லை என்றே நினைத்திருந்தேன் சேலம் எவர்சில்வர் பாத்திரங்களைப் பார்க்கும் வரை. எனக்கா தெரியாது, எது நல்ல பாத்திரம் என்று!

அந்த காலத்துப் பாத்திரங்களைப்போலவே உயர்தரமானவை. கரும்புள்ளிகளோ, கறையோ பிடிக்காது. வருடக்கணக்கில் உழைத்தாலும் பளபளப்பு போகாது.

நான் இனி பழங்கதை பேசினால் அதில் புது கதாபாத்திரங்களும் இருக்கும். அவைதான் சேலம் எவர்சில்வரில் செய்த பாத்திரங்கள்!”

சேலம் எவர்சில்வரினால்
தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள்
எல்லா பிரபலமான
பாத்திரக்கடைகளிலும் கிடைக்கும்.

சேலம் எவர்சில்வர்.


நம்பிக்கைக்குப் பாத்திரமான பாத்திரங்கள்.

ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட்
ஒரு இந்திய அரசு நிறுவனம்
சேலம் உருக்காலை
சேலம் 636 013 தமிழ் நாடு


காட்பரிஸ்
போர்ன்விடா
சுறு சுறுப்புப் பானம்!
"ஒரு டம்ளர் பாலிலே இரண்டு ஸ்பூன் போர்ன்விடா அதுவே நலமான கலவையான பானம்—அதை, என் குழந்தைகளுக்கு அன்றாடம் இருவேளை தருகிறேன்.
என் குழந்தைகளுக்கு, கோகோ, மால்ட், பால், சர்க்கரை ஆகியவற்றின் போஷாக்கினைத் தருகிறது போர்ன்விடா. அவர்கள் வளரும் காலம் முழுவதும் அவர்களுக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்தையும் சக்தியையும் அளிக்கிறது. அவர்கள் நல்ல வளர்ச்சி பெறுகிறார்கள். ஆகவே நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி."
போர்ன்விடாவின் இனிமைக்காலம். போர்ன்விடா அறிந்தவரை பாசமனங்கள் நேசத்தோடு நினைந்து மகிழும் ஒருநாள்.
MILK
Bournvita
Bournvita

மிகப் புதியதான காஸ்கட் ரிலீஸ் ஸிஸ்டம்

MAJESTIC



இந்தியாவின் 100% பாதுகாப்பான பிரஷர் குக்கரை உருவாக்குகிறது


உங்கள் நேரம், பணம், எரிபொருள் மூன்றும் தொடர்ந்து மிச்சப்படுகின்றன.

உணவின் மணமும், ருசியும் மாறுமலும் வைட்டமின்கள் சக்தி குறையாமலும் பாதுகாக்கப்படுகிறது.

3 லிட்டர் முதல் 12.5 லிட்டர் வரை உள்ள மெஜெஸ்டிக் குக்கர்களும், அவை சம்பந்தப்பட்ட இதர பாத்திரங்களும் அலுமினியம் மற்றும் எவர் சில்வரில் கிடைக்கின்றன.

எங்கள் மற்றைய பிரபலமான விசில் செய்யும் சமையலறைத் துணைகள்.

IS:1660
IS:1300



ரைஸ் குக்கர், மில்க் பாய்லர் இட்லி குக்கர் பிரஷர் பான்

DISTRIBUTORS FOR TAMILNADU **Naik** BROTHERS

56, Purushwalkam High Road. 1st floor, MADRAS – 7 Phone : 662965 661034

மயூரிக்குப் பாராட்டு



"நான் போக்குவரத்துத் துறையில் உயர் அதிகாரியாக இருந்த போது பல சாலை விபத்துக்களைப் பார்த்திருக்கிறேன்.

நாம் பேப்பரில் இந்த வேனோடு அந்த பஸ் மோதியது; ஐந்து பேர் மாண்டனர் எனப் படித்துவிட்டு அடுத்த செய்திக்குப் போய் விடுவோம்.

ஆனால் அப்படி மாண்டவரின் குடும்பங்கள் எத்தனை பெரிய பாதிப்புக்கு ஆளாகின்றன என்று கண்கூடாகக் கண்டவன் நான். பலவித எதிர்காலக் கனவுகளோடு வரும் இளைஞர்கள், குடும்ப பாரத்தைச் சுமந்திருக்கும் ஆண்கள்... இப்படி எத்தனையோ...

விபத்தால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை திசை தெரியாமல் தடுமாறிப் போகிறது. ஆனால் அப்படி ஒரு விபத்தில் தன் காலை இழந்த சுதா, அதையே சவாலாக ஏற்றுத் தன் வெற்றிக்கே காரணமாக்கிக் கொண்டார் என்பது சாதாரண விஷயமில்லை...

கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறவேண்டிய சாதனை. எனக்குத் தெரிந்து உலகில் வேறு யாரும் காலை இழந்த பிறகு பரத நாட்டியம் ஆடவில்லை...

என்று ராதாகிருஷ்ணன் ஐ. பி. எஸ் கோவையில் நடந்த ஒரு விழாவில் பாராட்டினார்.

* * * * * * *

'மயூரி' சுதாசந்திரனைப் பற்றி அனைவரும் எழுதிவிட்டார்கள். கூடுதலாக ஒரு பாராட்டு விழாவும் சமீபத்தில் கோவையில் நடந்தது. கோவை ரோட்டரி கிளப் அங்கத்தினர்கள் கௌரவப் பட்டமளித்துப் பாராட்டினார்கள். திரு. ராதாகிருஷ்ணன் ஐ. பி. எஸ். விழாவிற்குத் தலைமைத் தாங்கிய போதுதான் சுதா சந்திரனைப் பற்றி இப்படிக் குறிப்பிட்டார்.



ரமணி சங்கர்

கோவை ரோட்டரி கிளப்பின் தலைவர் ரமணி சங்கர் வரவேற்றுப் பேசும்போது,

"சுதாவின் மனோதைரியமும், விடாமுயற்சியும் பிரமிக்க வேண்டிய ஒன்று," என்றார்.

சுதாவைச் சிறு குழந்தையிலிருந்து அறிந்திருந்த பாலசுப்ரமணியம் அவரை அறிமுகப் படுத்தும்போது,

"என் மகளை நானே அறிமுகப்படுத்துவது போல இருக்கிறது. நான் பார்த்து வளர்ந்த குழந்தை இன்று பெண் குலத்திற்கே பெருமை தேடித் தருபவளாக இருக்கிறாள் எனச் சொல்ல நேரும்போது எத்தனை சந்தோஷமாக இருக்கிறது" என்றார்.

ரோட்டரி கிளப் இன்னர்வீல் சுதாவை தங்களின் கௌரவ உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டது. இவர்களுக்கெல்லாம் உளப்பூர்வமாக நன்றி செலுத்திய சுதாசந்திரன், மாலையில் நடத்திக் கொடுத்த தன்னுடைய நாட்டிய நிகழ்ச்சியின் மூலம் அவர்களுடைய பாராட்டுக்குத் தகுதியானவர்தான் என்பதையும் நிரூபித்து விட்டார்.

* * * * * * *

"அமெரிக்காவில் ஜெரீனா என்ற ஒரு பெண் திடீரென்று தன் கண் பார்வையை இழந்து விட்டாள். ஆனால் அவள் அயரவில்லை. ஒரு ஹோட்டல் வைத்து அதன் மூலம் சம்பாதிக்க ஆரம்பித்தாள். அவளுடைய ஹோட்டலுக்கு வருகிறவர்கள் 'க்யூ'வில் நின்று சாப்பிட்டு விட்டுப் போவார்களாம். அத்தனை ருசியாக இருக்குமாம் சமையல்.

இதில் என்ன விசேஷம் என்றால், அங்கு தயாராகும் உணவு வகைகளை அந்தக் கண்ணிழந்த பெண்மணிதான் தயாரிப்பாளாம்!

சுதாவின் அற்புதமான சாதனையைப் பார்க்கும் போது ஜெரீனாவின் இந்த அற்புதமான உண்மை வரலாறுதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது."

என்றார் ரோட்டரி கிளப் கவர்னர் சார்பில் பாராட்டிய எஸ். ராஜகோபால்.

—டி. ஆர். ரமேஷ்

அவளும் அப்படித்தான் நினைப்பாள்

மாலதி பேசிப் பேசிக் களைத்து விட்டாள். சொர்ணு தான் பிடித்த பிடியிலேயே நின்று கொண்டிருந்தாள்.

"சரி! சொர்ணு! நாம ரெண்டு பேரும் இன்னிக்கு நேத்திக்குப் பழக்கம் இல்லே! அந்த ஒரு அடிப்படையிலேதான், நான் இவ்வளவு நேரமா வாதாடிக்கிட்டிருந்தேன்! எப்ப நீ இவ்வளவு தீர்மானமா இருக்கிறியோ, இனிச் சொல்றதுக்கு எதுவுமே இல்லே!"

ஜன்னல்ஓரமாகப்போய்நின்றுகொண்டு வானத்தை வெறித்துப் பார்த்தாள் மாலதி. ஒரே இருட்டாக இருந்தது.

அது ஒரு பெண்களுக்கான ஹாஸ்டல். படித்து முடித்துவிட்டு வேலையில் இருப்பவர்களுக்கான ஹாஸ்டல்!

கல்யாண மார்க்கெட்டில், சில லட்சங்களைப் புரட்ட வகை தெரியாதவர்கள், ஆபீஸ் பேரேடுகளில் பல லட்சங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்கள்.

எண்ணற்ற மயில்கள் — ஆடத் தெரிந்திருந்தும் அரங்கேற முடியாத மயில்கள். அங்கேதான் மூத்து உதிர்ந்து கொண்டிருந்தன...

சொர்ணு தயக்கத்தோடு மாலதியின் அருகில் வந்தாள்.

"என்னடி மாலதி? ஏன் இப்படி எரிச்சல் படறே?"

"நான் பொய் சொல்ல இஷ்டப்படலே சொர்ணு! இந்த உன் முடிவிலே எனக்குத் துளிக் கூட இஷ்டம் இல்லே."

"என்னைப் புரிஞ்சுக்கோடி மாலதி! இந்த ஹாஸ்டல் வாழ்க்கை ரொம்ப நரகமாயிட்டு வருது... அதைத் தாங்க முடியலேப்பா..."

"அப்படி என்ன நரகம்? ஏன் சொர்ணு? கல்யாணம் ஆகலேங்கற ஒரே கஷ்டம்தான்! ஆனா கல்யாணம் ஆனவங்களுக்கு எத்தனைக் கஷ்டங்க தெரியுமா? அது மட்டும் இல்லே..."

"ஏன் தயங்கறே? நான் சொல்றேன்! அவருக்கு ஏற்கெனவே மனைவியும், குழந்தைங்களும் இருக்குது... அதைத்தானே சொல்ல வரே? அவர் ஒண்ணும் கல்யாணம் ஆகாதவர்னு சொல்லிக்கலேயே... அப்புறம் என்ன பிரச்னைகள்...?"

"மண்டு! இனிமேத்தான் பிரச்னைகள்... உன் சுபாவம் எனக்குத் தெரியாதா? பட்டாம் பூச்சியோட இறக்கையைப் பிச்ச மாதிரி நொறுங்கிப் போயிடுவே! இதோ பார் சொர்ணு! கல்யாணம் ஆகாத கன்னிகைகள் கூட்டம் இந்தியாவிலே ஏகமாப் பெருகிக்கிட்டு வருதுடி! இந்தச் சூழ்நிலையிலே, எவனாவது அன்பா நாலு வார்த்தை பேசிட்டா, பனிக்கட்டியா உருகிடும் மனசு..."

"அவர் என் மேலே உயிரையே வெச்சிருக்காரு மாலதி!"

"அப்படித்தான் அவரோட முதல் மனைவியும் இந்த நிமிஷம் வரையிலும் நினைச்சுக்கிட்டிருப்பா..."

"என்ன மாலதி! எதையாவது சொல்லிக்கிட்டு?" சொர்ணு சலித்துக் கொண்டாள்.

"நான்தான் சொர்ணு உன்கிட்டே எதையும் சொல்ல முடியும்! மற்றவங்க மாதிரி இல்லேடி நான்! நீ நிம்மதியா வாழணும்னு ஆசைப்படறேன்..."

"ஆமாம் போ! நான் 'வாழணும்'னு எங்கே நீ ஆசைப்படறே?"

"ரெண்டு பேர்க்கு நடுவிலே ஒருத்தனைப் பங்கு வெச்சுக்கிட்டு 'வாழறது' வாழ்க்கையே இல்லேடி... ஏற்கெனவே கல்யாணம் ஆனவனைக் கட்டிக்கிட்டு எந்தப் பொண்ணுமே சந்தோஷமா, நிம்மதியா வாழ்ந்ததா சரித்திரமே கிடையாது..."

"கல்யாணம் ஆனவர்னு தெரிஞ்சுதானே பண்ணிக்கிறேன்? என் மனசை 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கிறேன்! அவர் அங்கேயும், இங்கேயுமா இருந்துட்டுப் போகட்டும்..."

"அப்படியாவது நீ ஒரு அரைகுறை வாழ்க்கை வாழலேன்னு என்னடி? அதைச் சொல்லித் தொலையேன்."

"மாலு! எனக்கு இந்த முப்பத்து மூணு வயசுலே தனி வாழ்க்கை ரொம்ப அலுத்துப் போச்சு இவளே... எத்தனையோ ராத்திரி நான் எதுக்கு, என்னன்னு கூடத் தெரியாமே, மணிக்கணக்கா அழுதிருக்கேன் தெரியுமா! ஜோடி ஜோடியா நடந்து போறவங்களைப் பார்க்கிறப்போ, என்னமா ஒரு ஆத்திரம் வருது தெரியுமா?"

"கொஞ்சம் இரு சொர்ணு! ஆபீஸ்லே அவங்கவங்க "என் வீட்டுக்காரர் — என் குழந்தை" அப்படி இப்படின்னு சொல்றப்போ ஏக்கத்திலே மனசு எரிமலையாகும்! இல்லையா?" "நீங்க கொஞ்சம் முடிச்சுட்டுப் போயிடுங்க! அவங்களுக்கெல்லாம் பேமிலி, புருஷன், பிள்ளைக் குட்டின்னு ஆயிரம் தொல்லை" அப்படின்னு கல்யாணமாகாத நம்ம தலையிலே மானேஜர் மூட்டை மூட்டையா வேலைங்களை ஏத்தறப்போ, நம்ம மனசு அப்படியே துடிச்சுப் போயிடும்..."


"கரெக்ட் மாலதி! கரெக்ட்!"

"பெரிய கரெக்டைக் கண்டுட்டா இவ... ச்சீ! சும்மா இரு! நீ சொல்ற வேதனை, குமுறல் எனக்கு மட்டும் இல்லையா? அதுக்காக இன்னொரு பொண்ணுடைய வாழ்க்கையைப் பறிச்சுக்கிறதா?"

"என்ன மாலதி நீ? உலகத்திலேயே நான் மட்டும்தான் அப்படிப் பண்ணப் போறேனு? அதைச் சொல்லு..."

"சரி! நாளைக்கு இன்னொருத்தி உன் வாழ்க்கையிலே நுழையறா! அப்ப இதே சமாதானத்தை உனக்கு நீயே சொல்லிப்பியா?"

சொர்ணு மவுனமாயிருந்தாள். ஒரு நிமிடம் பொறுத்து, "அவர் அப்படியெல்லாம் பண்ண மாட்டார்; அப்படிப்பட்டவர் இல்லை!" என்றாள்.



''அப்படிப்பட்டவர் இல்லேன்னு அவர் வாழ்க்கையிலே இரண்டாவதுக்கே இடம் இல்லையே! மூணாவது வரவே வராதுன்னு நீ எப்படி சொர்ணு உறுதி கொடுக்கிறே?''

சொர்ணு மவுனமாக நின்று கொண்டிருந்தாள். மாலதி தொடர்ந்தாள்:

''நம்மைச் சுத்தியிருக்கிற உலகத்தை நல்லாப் புரிஞ்சுக்கோ! இரண்டாம் தாரங்கன்னு ஒரு தனிப் பிரிவே உருவாகுது... அந்த கும்பல்லே, நீயும் போய்ச் சேரப் போறியா? உன் ஆத்மாவை அழிச்சிக்கிட்டு, 'முதல் பெண்டாட்டி வீட்டுக்கு எப்பப் போனார்? என்னிக்குத் திரும்பினார்'னு துப்புக் கண்டுபிடிக்கிற வேவுக்காரியா மாறப் போறியா?''

''என்ன சொல்றே?''

''ஆமாம் சொர்ணு! எத்தனையோ பேர் வாழ்க்கை இப்படித்தாண்டி மாறிப் போகுது — அவ படிச்சவளோ, படிக்காதவளோ எவளா இருந்தாலும் சரி! ஆமாம் சொர்ணு! கணநேரம்கூட கனவுகள் இல்லாத வாழ்க்கை அவங்க வாழ்க்கை! யதார்த்தப் பாலைவனத்திலே அவங்க ஆத்மா, திறமைகள், மரியாதை, எல்லாமே ஆவியாயிடுது... உனக்கு எதுக்கு அந்தத் தலையெழுத்து? நல்லா யோசித்துப் பாரு...''

மாலதி 'மொபெட்'டை எடுத்துக் கொண்டு டென்னிஸ் ஆடக் கிளம்பி விட்டாள். சொர்ணு அப்படியே சாய்ந்து படுத்தவள்தான்!

ஏதேதோ யோசனைகள் — எண்ணங்கள் — விரல்கள் அவன் பெயரைத் தலையணை மேல் எழுதி எழுதிப் பார்த்துக் கொண்டிருந்தன.

மனத்துக்குள் இருந்த மயக்கம் இப்போது மெல்ல மெல்லக் கலையத் தொடங்கிற்று! தலையணை மேல் பெயர் இருப்பதாகவே எண்ணிக் கொண்டு விரல்களால் துடைத்து அழித்தாள் சொர்ணு. இப்போது முகம் தெளிவாக இருந்தது.

எட்டு மணி போல மாலதி திரும்பி வந்த போது, புத்தம் புது மலர் போல சொர்ணு ஜொலித்துக் கொண்டிருந்தாள். நடுவில் வந்து பற்றியிருந்த குழப்பம், கலக்கம், சோர்வு, — எல்லாமே உதிர்ந்திருந்தன.

கண்ணிலே தீபம் தெரிந்தது.

மாலதியை அணைத்துக் கொண்டவள் ''நாளையிலேர்ந்து நானும் வரட்டுமாடி! டென்னிஸ் கத்துத் தரையா?'' என்று கெஞ்சியவள், அவள் தோள்களை மிருதுவாக அமுக்கி, ''மாலு! ரொம்ப...தேங்க்ஸ்! ரொம்ப தேங்க்ஸ் —எல்லாத்துக்கும்'' என்ற போது இரு கண்ணீர் முத்துக்கள் எட்டிப் பார்த்தன...



ப்ளவுஸ் பிட் கொடுத்து ஒரு மணி நேரத்திலே சென்னையில் யாராவது தையற்காரர் தைத்துத் தருவாரா?

''நாங்கள் தருகிறோம்!'' என்கிறார் மவுண்ட் ரோடில் 'பத்மம்' என்ற பெயரில் புடவைக் கடை வைத்துள்ள திரு. ஜெகன்னாதன்.

''தீபாவளி சமயத்தில் இந்த அளவிற்கு முடியாது. ஆனாலும் மற்றவர்களை விட சீக்கிரம் கொடுத்து விடுவோம். சாதாரண நாட்களில் சில மணி நேரங்களில் சட்டைகள் தைத்துத் தருகிறோம். அதனால்தான் சுற்றுலாப் பயணிகள் எங்களிடம் வந்து புடவை, ப்ளவுஸ் துணி வாங்கித் தைக்கக் கொடுக்கிறார்கள். அவர்கள் மெட்ராஸைச் சுற்றிப் பார்த்து விட்டு வருவதற்குள் தைத்து வைத்து விடுவோம்!''

''இது தவிர மாசம் இருபத்தைந்து ரூபாய் சீட்டு வைத்திருக்கிறோம். குலுக்கலில் பெயர் விழுகிறவர்கள் அப்புறம் கட்ட வேண்டியதில்லை. பக்கத்தில் இருக்கும் ஆபீஸ் பெண்கள் பூரா எங்களுடைய வாடிக்கையாளர்கள்தான்!'' என்கிறார் சந்தோஷமாக.



இது மிக நீளமான நேப்கின்.



இது மிக அகலமான நேப்கின்.



இது மிக தடிப்பான நேப்கின்.

புதிய

கேர்ஃப்ரீ*எக்ஸ்ட்ரா லார்ஜ்

சில பெண்களுக்கு இது தேவை.

கூடுதலான பெரிய சைஸிலே தரமுள்ள நேப்கினின் முழுமையான சுகமும், பாதுகாப்பும் தேவைப்படும் பெண்களுக்கு—இதோ! புதிய கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ். ஆம் உங்களுக்காகவே.

நீளத்தினையும், அகலத்தினையும், தடிப்புத்தன்மையினையும் கூடுதலாகவே பெற்றிருக்கும் இந்த நேப்கினின் நூலிழைகள் உறிஞ்சும் திறன் அதிகமாகப் பெற்று மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது.

ஒன்டர்ராப் உறைகள் ஈரத்தை உள் அடுக்கிற்குள் செலுத்துவதால் ஈரம் சீராக உறிஞ்சப்பட்டு உலர்வினையும் சுகத்தினையும் உங்களுக்குத் தருகிறது. நாப்கினின் இந்த சிறப்பான டாப்-நுனிகள் சரியாகப் பொருத்த உதவுவதோடு கச்சிதமாகவும் இருக்கிறது.

அத்துடன் ஈரம் கசியாத "நீல-பிளாஸ்டி ஷீல்டு" நேப்கினின் அடிப்பகுதியினையும், இரண்டு பக்கப்பகுதியினையும் சூழ்ந்து கொண்டு, கசிவோ, கறையோ மற்ற விபரீதங்களோ ஏற்படாமல பாதுகாக்கிறது.

புதிய கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்—முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு. கூடுதலான பெரிய சைஸில்



முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு கூடுதலான பெரிய சைஸில்.

Johnson & Johnson

தமிழ்நாட்டில் மட்டுமே கிடைக்கும்.

பாலை உறையவைப்பது எப்படி?



சாதாரணமாக, நம் வீடுகளில், இரவு தூங்கச் செல்வதற்கு முன்பு, பாலை உறை ஊற்றும் வழக்கம் இருந்து வருகிறது. சில சமயம் உறைஊற்றமறந்துபோய்,படுத்துக்கொண்ட பிறகு நினைவுக்கு வந்து, எழுந்து பாலில் ஒருகரண்டி (அந்தநேரத்தில்கைக்குக்கிடைக்கும் கரண்டி) தயிரையோ அல்லது மோரையோ விட்டுவிட்டுப் பால் பாத்திரத்தை மூடிவிட்டுப் படுத்துக் கொள்வதும் நடப்பதுண்டு. பாலை உறை ஊற்றுவது என்பது அவசரமாகவோ அல்லது ஏனோதானோவென்று செய்யும் வேலை இல்லை. கரண்டி மோரையோ அல்லது தயிரையோ பாலில் ஊற்றி விட்டால் நல்ல தயிர் கிடைக்கும் என்பது இல்லை. நல்ல முறையில் பால் தயிராக உறைய வேண்டுமானால், கீழே கொடுக்கப்பட்ட முறையைப் பின்பற்றுவது நல்ல பலனைத் தரும்.

பால் தயிராக மாறுவதற்கு நான்கு மணி நேரம்போதுமானாலும்,முழுவதுமாக உறைவதற்குச் சுமார் பன்னிரண்டு மணி நேரம் தேவை. புளிப்பில்லாத ஒரு பண்டம் புளிப்படைவதை, ஆங்கிலத்தில் 'Fermentation என்று கூறுகிறார்கள். குளிர் காலமானால் பால் உறைய ஒரு நாள் முழுதும் தேவைப்படும்.

பால் சரியான சூடாக இருக்க வேண்டும். அளவுக்கதிகமான சூடாகவும், அளவுக்குக் குறைவான சூடாகவும் இருக்கக் கூடாது. அளவுக்கதிகமான சூடாக இருந்தால், பால் தயிராவதற்கு உதவும் பாக்டீரியாக்கள் அழிந்துவிடும். அளவுக்குக் குறைவான சூடாக இருந்தால், பாக்டீரியாக்கள் பாலை, புளிப்பேறச் செய்ய முடியாது. பாலில் விரல் விட்டுப் பார்க்கும் போது, பால் வெதுவெதுப்பாக இருக்க வேண்டும்.

மண்பாத்திரம் பாலை உறை ஊற்றச் சிறந்தது. ஏனென்றால், மண் பாத்திரம் அளவுக்கு அதிகமான சூட்டை வெளியேற்றி, தயிர் நல்ல முறையில் உறைவதற்கு உதவுகிறது. கண்ணாடிப் பாத்திரமோ அல்லது பீங்கான் பாத்திரமோ கூடப் பயன்படுத்தலாம்.

உறை ஊற்றும் போது, ஒரு சிட்டிகை சர்க்கரை போடுவது தயிருக்கு நல்ல மணத்தைக் கொடுக்கிறது. 250 கிராம் பாலுக்கு ஒரு டீஸ்பூன் சர்க்கரையும், ஒரு ஸ்பூன் தயிரும் போதுமானது.

முதலில்பாலை,வேண்டிய அளவு சூட்டில், மண் பாத்திரத்திலோ, பீங்கான் பாத்திரத்திலோ அல்லது கண்ணாடிப் பாத்திரத்திலோ ஊற்றவும். சர்க்கரையைப் போடவும். இப்போது பாத்திரத்தின் மேலே, இடது கையில் உறை ஊற்றும் தயிரை ஒரு டேபிள் ஸ்பூனில் எடுத்துக் கொண்டு, இந்தத் தயிரை வலது கையில் இன்னொரு டேபிள் ஸ்பூன் தயிரின் மேல் விடவும். இப்படிச் செய்யும் போது, இது, சொட்டுச் சொட்டாக, பால் பாத்திரத்தில் எல்லா இடங்களிலும் விழும்படிச் செய்ய வேண்டும். இதே மாதிரி, சில முறை செய்யவும். பிறகு, மெதுவாகப் பாலை ஸ்பூனால் வட்டமாகக் கலக்கவும். கலக்கும் போது ஒவ்வொரு முறையும் பாத்திரத்திலுள்ள ஸ்பூனில் எடுத்துச் சிறிது உயரத்திலிருந்து மறுபடியும் பாத்திரத்தில் ஊற்றவும். இவ்வாறு கலக்குவது மிக முக்கியம். சுமார், இரண்டு மூன்று நிமிடங்கள் கலக்க வேண்டும். பாலின் அளவு மிக அதிகமாக இருந்தால், அதிகநேரம் கலக்க வேண்டும். தயிர் உறைவது, பால் உறை ஊற்றப்படும் தயிர், சர்க்கரைக் கலவையை எவ்வளவு நேரம் கலக்குகிறோமோ அதைப் பொறுத்தது. பிறகு, பால் பாத்திரத்தை ஒரு தட்டால் மூடி, மற்றொரு பெரிய பாத்திரத்தால், பால் வைத்திருக்கும் பாத்திரம் முழுவதையும் கவிழ்த்து மூடவும். மூடி வைத்த பிறகு, அப்பாத்திரத்தை அடிக்கடித் திறப்பதோ அல்லது நகர்த்துவதோ கூடாது. காற்றோட்டமுள்ள

இடத்தில் வைக்கக் கூடாது. குளிர் காலத்தில் பாத்திரத்தை ஒரு ஃபிளானல் துணியாலோ அல்லது கம்பளியாலோ சுற்றி வைக்க வேண்டும்.

எப்போதும் கைவசம், ஒரு சிறிய கிண்ணத்தில் இரண்டு ஸ்பூன் தயிர் வைத்து இக்கிண்ணத்தை நீர் ஊற்றிய பாத்திரத்தில் வைக்க வேண்டும். இது தினமும் உறை ஊற்றத் தயிர் கேட்டு அண்டை வீட்டாரைத் தொந்தரவு படுத்தி எரிச்சலூட்டாமலிருக்க உதவும்.

தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்களுக்கு நம் வீட்டுத் தயிரையே உறை ஊற்றப் பயன்படுத்தும்போது, ஒரு குறிப்பிட்ட காலம் சென்ற பிறகு, உறையும் தயிர் கெட்டியாக இல்லாமல் ஒரு மாதிரி கொழகொழவென்று, சரியாக உறையாமல் இருக்கும். இது மாதிரி ஏற்படும்போது உறை ஊற்றப் பயன்படுத்தும் தயிரை மாற்ற வேண்டும்.

—ராஜி.

மன்னை மங்கையர் மன்றம்

பதினைந்து மாதங்களுக்கு முன் துவங்கப்பட்ட இச்சங்கம் மன்னார்குடியில் மங்கையரின் முன்னேற்றம், பொழுதுபோக்கு, வளர்ச்சி மற்றும் பாதுகாப்புக்கு அனைத்து பணிகளையும் ஆற்றி வருகிறது.

வாரந்தோறும் நடக்கும் கூட்டங்களில் புதிய சமையல் குறிப்புகள், தையல், எம்பிராய்டரி, வீட்டு அலங்காரம், மணிப்பைகள், சுவர்ப்படங்கள், ரங்கோலி, சர்பத், கேக், ரொட்டி வகைகள் செய்யும் விதங்கள் வல்லுனர்களால் விளக்கப்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு உறுப்பினர்கள் தங்கள் வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் சுமார் 1000 மரக்கன்றுகளை பயிரிட்டு சமூக காடு வளர்ப்பிற்கு உதவியுள்ளனர். வீட்டுத் தோட்டம் பயிரிடுவதையும் ஓய்வு நேரப் பயனுள்ள பணியாக மேற்கொண்டுள்ளனர்.

கல்வி ஆண்டுத் துவக்கத்தில் ஏழைச் சிறுவர் சிறுமியருக்குச் சீருடைகள், பாடப் புத்தகங்கள் வழங்கியதும் இம்மன்றத்தின் சேவை.

திருவிழாக் காலங்களில் தண்ணீர்ப் பந்தலும் நடத்துகிறது.

உறுப்பினர்களிடம் உள்ள நுண்கலைத் திறமைகளைப் பாராட்டவும் வளர்க்கவும் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கியுள்ளது.

சமீபத்தில் மன்ற உறுப்பினர்கள் வேதாரண்யம் அகதிகள் முகாமில் உள்ள ஈழத் தமிழ்க் குடும்பங்களுக்கு ஒரு நாள் பகல் உணவைத் தாங்களே தயாரித்து அளித்ததையும் இவர்கள் அளித்த ஆடைகளை முகாமில் உள்ள குழந்தைகளுக்கு வழங்கிய மன்னை உதவி கலெக்டர் இம்மன்றத்தைப் பெரிதும் பாராட்டியுள்ளார்.

இதைத் தவிர மன்னையில் உள்ள இலக்கிய வட்டம், சங்கீத மன்றம், கலை மன்றம் சக்தி வழிபாட்டு அமைப்புக்களிலும் மன்னை மங்கையர் மன்றத்தின் உறுப்பினர்கள் பல நிலைகளில் பங்கேற்று அவற்றின் நல்ல இயக்கங்களுக்கும் உதவி வருகின்றனர்.

வழக்கமான வீட்டுப் பிரச்னைகளிலிருந்து சற்று விலகி சமூகப் பணிகளில் தங்கள் ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தி சமூகத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டுகிறது மன்னை மங்கையர் மன்றம்.

தற்போதைய தலைவி டாக்டர் விமல நாயகி. செயலர் சங்கீதா அசோக் குமார், பொருளாளர் கமலா வரதாச்சாரி மற்றும் காந்திமதி நடனம், சாருமதி ரங்கநாதன், அலமேலு ராமமூர்த்தி, பத்மா கணேசன், கீதா ராஜகோபால், பானுமூர்த்தி ஆகியோர் அடங்கிய நிர்வாகக் குழுவுடன் மன்னை மங்கையர் மன்றம் பாங்குடன் செயலாற்றுவதில் மன்னார்குடிக்கே பெருமைதான்.





ஹேலோ வழங்குது
கூந்தல் எழில்—
கூந்தல் பெற்றிடும்
மென்மை சுகம்.
அதன் மணமோ
அபூர்வப் புதுமையே,
ஹேலோ உணர்வே
உன்னதமே.

வியப்பூட்டும் புதிய ஹேலோ வரிசை

ஹேலோ எக்
ஷாம்பூ—
புரத
ஊட்டத்திற்கானது.

புதிய ஹேலோ
க்ரீன் ஆப்பிள்
ஷாம்பூ—
வியப்பூட்டும்
புத்துணர்வு மணம்
அளிக்கிறது.

புதிய ஹேலோ
ஹெர்பல்
ஷாம்பூ—
மூலிகைகளின்
இயற்கை நலன்கள்
உள்ளது.

ஹேலோ உணர்வே உன்னதமே!


.B83.29.TM



For today's woman... *new* **you** PANTIES

Available in a choice of colours. 100% cotton

From the makers of **TANTEX**



Imageads M- 1808

வெளியில் போக பயமாக இருக்கிறதா?



உங்களுடைய கைப்பை, பர்ஸ் போன்றவைகளை எப்பொழுதாவது பறி கொடுத்து விட்டு, நீங்கள் ஏமாந்து போயிருக்கிறீர்களா? அல்லது ஜேபடித் திருடனிடம் மாட்டிக் கொண்டிருக்கிறீர்களா? இல்லையே... ஆனால், எந்தச் சமயத்திலும் நம்முடைய சிறிய அஜாக்கிரதையினாலும், கவனக் குறைவினாலும் இது போன்ற குற்றவாளிகளிடம் அகப்பட்டுக் கொள்ள நேரிடலாம். இதோ, சில யோசனைகள்—

'ஜேப்' அடித்தல், செயினை இழுப்பது போன்ற செய்கைகளைச் செய்யும் சமூக விரோதிகள் எல்லாரும், உண்மையிலேயே நன்கு கைதேர்ந்தவர்கள் இல்லை. அவர்கள் தொழிலில் இது ஆரம்பமாகத்தான் இருக்கும். பணம் சம்பாதிப்பதற்கு, இவைகளை சுலபமானமுறையாகநினைக்கிறார்கள். இவைகளில் வெற்றி பெற்ற பிறகுதான் பெரிய கொள்ளை போன்றவைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள்.


அதனால் நாம் எல்லோரும், முக்கியமாக வெளியில் போய் வரும் பெண்மணிகள் சற்று கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருப்பது நல்லது.

சாலையில் நடக்கும் பொழுது நம்மைச் சுற்றி, வருகிறவர்கள் போகிறவர்களிடம் எப்பொழுதும் ஒரு கண் இருக்க வேண்டும். எவனாவது கிட்ட நெருங்கி நம்மிடம் ஏதாவது விஷமம் செய்வான் என்று தோன்றினால், பயந்து நடுங்கி விட வேண்டாம். உடனேயே பெரிய கூச்சல் போடுங்கள். அத்துடன் மனிதர்கள் எங்கு கூட்டமாக இருக்கிறார்களோ, அங்கு ஓடிவிடுங்கள்.

சில சமயங்களில், நமக்குத் தெரியாத புதிய இடங்களுக்குப் போகும்படியாக நேரிடலாம். அந்த சமயங்களில் சரியான வழி தெரியாமல் தவிக்கவும் நேரிடலாம். அப்பொழுது தெருவில் போவோரிடம் வழியைக் கேட்டுத் தெரிந்து கொள்வது, நம்மிடையே சாதாரண பழக்கமாக இருக்கிறது. இதில் தவறு எதுவுமில்லை. அவ்வாறு நாம் விசாரிக்கும் பொழுது, நாம் விரும்பாமலேயே நம்மிடம் அதிக அக்கறை காட்டி, நமக்கு உதவுவதாக எண்ணி, நம்முடன் கூடவே வருபவர்களை ஒருக்காலும் அனுமதிக்காதீர்கள். அவன் எப்படிப்பட்ட மனிதன் என்பது நமக்குத் தெரியாது. இதை விடச் சிறந்த முறை, அருகிலுள்ள கடைக்காரரிடமோ, தபால்காரரிடமோ அல்லது போலீஸ்காரரிடமோ கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது.

கூட்டத்தில் நடக்கும் பொழுது உங்கள் தோள்பை, கைப்பையை எப்பொழுதும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். நடைபாதையின் மத்தியிலேயே எப்பொழுதும் நடப்பது நல்லது. நமக்கு முன்னும், பின்னும், அருகிலும் நடந்து வருபவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும். அதிலும் வசீகரமாகவும், ஆடம்பரமாகவும் நம்மை அலங்காரம் செய்து கொண்டு போவது, பிறர் கவனத்தை அதிகமாக இழுக்க நேரிடும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பாங்க், கடைகளுக்குச் சென்றால், உங்கள் பணம் முழுவதையும் வெளியில் எடுத்துக் காண்பிக்காதீர்கள். முக்கியமாக பாங்கிலிருக்கும் பொழுது, பர்ஸிலிருந்து பணத்தை அடிக்கடி வெளியில் எடுத்துப் பார்க்கக் கூடாது. எங்கிருந்தாவது, எந்தத் திருடனாவது உங்களையே கவனித்துக் கொண்டிருக்கலாம். பாங்கிலிருந்து வெளியே வருவதற்கு



முன்பாக, உங்களுடைய பணத்தைப் பர்ஸில் கவனமாக வைத்து மூடிய பிறகே, வெளியில் வர வேண்டும். இதற்கிடையில் யாராவது உங்களுடன் பேச்சுக் கொடுத்து, உங்கள் கவனத்தைக் கவர முயற்சித்தால், அதற்கு இடம்கொடுக்காதீர்கள். கடைகளிலும், பாங்கிலும் பணம் கொடுத்து வாங்கும் பொழுது யாரிடமும் பேச்சுக்கொடுக்காதீர்கள். பாக்கி பணத்தைக் கவனமாக பர்ஸில் போட்டு, கைப்பையில் அடைத்த பிறகே வெளியில் வர வேண்டும்.

நீங்கள் தனியாக கார் ஓட்டுபவராக இருந்தால், உங்கள் கைப்பையைக் காலுக்குக் கீழே, தரையில் வைத்துக் கொள்வது நல்லது. கைப்பையைத் திருட வருபவன் முதலில் கார் ஸீட்டில்தான் பார்ப்பான். கைப்பை கார் ஸீட்டில் இருந்தால், கைநீட்டி எடுக்க முயற்சிப்பான். ஸிக்னலுக்காகக் கார் நின்றாலோ, சாலைத் திருப்பத்தில் மெதுவாகப் போனாலோ, காரை நிறுத்தி வைக்க வேண்டிய இடத்தில் நிறுத்தி வைத்திருந்தாலோ, கைப்பையை எடுப்பதற்காகச் காரின் கண்ணாடியை உடைக்க நேரிடலாம். அதனால் நம்முடைய கைப்பையை எப்பொழுதுமே, நம் காலுக்குக் கீழேயே வைத்துக் கொள்வது நல்லது. போக்குவரத்து சிக்னலில் காரை நிறுத்தும்பொழுது, நமக்கு முன்பாக நிற்கும் காருக்குப் பின்னால், அதிக இடைவெளி விட்டே, நம்முடைய காரை நிறுத்த வேண்டும்.

எந்த அயோக்கியனாவது உங்களை நேருக்கு நேர் நின்று பயமுறுத்தினால், உடனேயே பயந்து சுய தைரியத்தை இழந்து விட வேண்டாம். உங்களுடைய எதிரியின் கையில் ஏதாவது ஆயுதங்கள் இருந்தால் அவனைத் தடுக்காதீர்கள். உங்களுக்குத் தைரியமிருந்தால் பெரிதாகக் கூச்சல் போட்டுக் கத்துங்கள். சில சமயங்களில் இதிலேயே குற்றவாளிகள் பயந்து ஓடிப் போய் விடுவார்கள். நீங்களும் தப்பித்து ஓடிவிடலாம். இல்லையேல், எதுவும் பேசாமல் உங்களிடம் இருப்பதைக் கொடுத்து விடுங்கள்., நிச்சயமாக உங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடும் என்று தோன்றினால்தான், அவனை எதிர்க்க வேண்டும். உங்கள் கையை மூடிக் கொண்டு, அவனுடைய கண், மூக்கு, கழுத்து எதிலாவது, வேகமாக ஒரு குத்து விடுங்கள். எதிர்பாராத இந்தத் தாக்குதலினால், அவன் அப்படியே மலைத்துப் போய் நின்று விடுவான். அதுசமயம் நீங்களும் தப்பி ஓடிவிடலாம்.

நம்முடைய கைப்பையில் எப்பொழுதும், ஒரு சிறிய பாட்டிலில் மிளகாய்ப் பொடி வைத்துக்கொள்வது நல்லது. பாட்டிலை அமுக்கினால் மிளகாய்ப் பொடி வெளியில் பரவக் கூடியதாக, பாட்டில் இருக்க வேண்டும். மற்றும் கைவிரலில் கூரான மோதிரமோ அல்லது கைகளில் சுரசுரப்பாக இருக்கும் வளைகளோ அணிவது நல்லது. ஆபத்து சமயங்களில் கூரான மோதிரம், வளைகளால், எதிரியை பிராண்டி எடுத்துவிடலாம். கடவுள் கொடுத்த பற்களாலேயே, வேண்டிய சேதமும் செய்யலாம்.

மாலையில் நேரம் கழித்து வீடு திரும்புபவராக இருந்தால், தினமும் ஒரே வழியில் நடந்து வராதீர்கள். யாராவது இதை கவனித்து வைத்துக் கொண்டு, உங்களைத் தொல்லை செய்ய ஆரம்பிக்கலாம்.

வீட்டில், முன்புறப் பின்புறக் கதவுகளில், உள்ளிருந்து நாம் மட்டும் வெளியே பார்க்கக் கூடிய கண்ணாடிகளைப் பொருத்துவது நல்லது. வேண்டுமானால், கடைகளில் விற்கும் கதவுச் செயினையும் போட்டுக் கொள்ளலாம்.

– ஜானகி சுந்தரம்

துவரம் பருப்பு, உளுந்து போன்ற பருப்புகளில் கேசரி பருப்பு என்பதனை கலந்து விற்கிறார்கள். இந்த கேசரி பருப்பு துவரம் பருப்பை போலவே இருக்கும். இதில் பீட்டா ஆக்ஸ் லைல் அமைனோ அமிலம் என்ற விஷமுள்ள அமைனோ அமிலம் இருக்கிறது. இதனை தொடர்ந்து உட்கொண்டால் கால்களில் வாதநோய் ஏற்படும்.

மதுபாலன்.

எங்கேயாவது விழுந்தாலோ, இடித்துக் கொண்டாலோ ஏற்படும் வீக்கத்திற்கு (இரத்தம் கட்டியதற்கு இல்லை.) வெள்ளை நாமக்கட்டியைத் தண்ணீரில் உரைத்து உடனே தடவி விட்டு அதன் பிறகும் இரண்டு, மூன்று முறை தடவினால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் வீக்கம் மறைந்துவிடும்.

— ஜ. "வேணுகுமாரி"

அடுத்த வாரம் இந்த நேரத்துல கலர் கலரா கனவு கண்டுட்டு இருப்பாரு ஐயா... குறும்பாகக் கண்ணடித்தான் கோபி...

''ஏன் அடுத்த வாரம் என்ன?'' விக்ரம்.

ராமுக்கு அடுத்த வாரம் இந்த நேரம் வெட்டிங் முடிஞ்சிருக்கும்டா அதான்!''

''சரி அதுக்கு என்ன கனவு?'' விக்ரம்.

''அறிவிருக்காடா உனக்கு? வரப் போற ராத்திரி முதல் ராத்திரியாச்சே.. கனவு வராதா?''

''ப்ல... இதுதானு. இதுக்கா இந்த ஆர்ப்பாட்டம்?''

விக்ரம் அசுவாரசியமாகச் சொல்ல, ராம் அவனை ஆச்சரியமாகப் பார்த்தான்.,.. ஏம்பா 'திரில்' இல்லையா அதுல?''

''எனக்குத் தோணலே...''

''உனக்குக் கல்யாணம் முடிஞ்சு வருஷம் ரெண்டாச்சு... அதான்... அலுத்துப் போயிருக்கும்...''

''நோ... அப்பவே இல்லே...''

''ஏன்?''

''ஏன்னு எனக்கு அது முதல் இரவு இல்லே...

''புரியலே...''

''மடையா 'திரில்' முதல் இரவுல இல்லேடா... எப்படியானாலும் அது அங்கீகரிக்கப் பட்டது. ஊருக்கும் உறவுக்கும் தெரிஞ்சு மேளம் கொட்டி தாழ்ப்பாள் போடற நாலாந்தர நாடகம்... என்ன திரில் இருக்கு இதுல?''

வேலி தாண்டிப் போறதுதான் திரில்ங்கறியா... அது தப்பில்லையா? மனைவிக்குச் செய்யற துரோகம் இல்லையா?''

''யாரு உன்னை மனைவிக்குத் துரோகம் செய்யச் சொன்னது?''

''குழப்பற நீ!''

''அடேயப்பா! நீ ரெட்லைட்டுக்கு போன்னு நான் சொன்னேன். உனக்கு மனைவியா வரப் போறவகிட்டே ஜாலியா இருக்கத்தானே நா சொன்னேன்... லைசென்ஸ் போட்டப்புறம் உனக்குச் சொந்தமா ஆனப்புறம் தொடறதுல என்ன சுவாரசியம் இருக்கு? எப்ப வேணும்னாலும் தொட்டுக்கலாமே.... ஆனு இப்ப?''

''இதுக்கு அவங்க வீட்ல சம்மதிக்கணுமே!''

''யார்றா அவன்? அவங்க வீடு. ஒங்க வீடு. புரோகிதர் எல்லாத்தையும் வச்சுக் கிட்டா செய்வான் ஒருத்தன்? மச்சான் இது 'திருட்டு தம்'டா.''

சரி.. அவ சம்மதிக்கணுமே!''

''அது ஒன் சாமர்த்தியம்! எந்தப் பொண்ணும் லேசுல ஒப்புக்க மாட்டா... அதே சமயம் புருஷனு வரப் போறவனை மறுக்கவும் பயப்படுவா... அந்த ஊசலாட்டம்தான்டா விறுவிறுப்பு...''

''சரி லஞ்ச் முடிஞ்சுப் போச்சு... வீட்டுக்குப் போகலாம்... அவரவர்கள் கலைந்து போக,

ராம் தன் இடத்துக்கு வந்தான்.

டைப்ரைட்டரில் காகிதத்தைச் செருகி, மார்ஜின் செட் செய்து விரல்களை ஓடவிட தப்புத் தப்பாக விழுந்தன எழுத்துக்கள்...

மனது நழுவி நழுவி ஓடியது...

கேட்டா நல்லாத்தானே இருக்கு...

கொஞ்சம் விறுவிறுப்பான விஷயம் தானே?

ப்ரீ மாரிட்டல் செக்ஸ் தப்பில்லையா? இன்னிய தேதிக்கு ஒரு 'தம்' கூட அடிச்ச

நேரில் சொல்கிறேன் வா



குறுநாவல்

தேவிபாலா

இல்லே. கல்யாணத்துக்கு முன்னுல செக்ஸ் தப்பில்லேயா?

என்ன தப்பு? மோகனு என்னேட சொத்து தானே... என்னேட சாப்பாட்டை கொஞ்சம் முன்னுலேயே சாப்பிட்டா என்ன? அடுத்த வாரம் கல்யாணம்... பயப்பட என்ன இருக்கு?

அப்படியும்...

இப்படியுமாக மனது அலேபாய்ந்து...

ஆயிரம் நொண்டி சமாதானங்கள் கற்பித்து...

சரி முயற்சி செய்வோம் என்று முடிவு செய்த போது மணி மூன்றடித்தது.

நாளேக்கே முடிச்சிட வேண்டியதுதான்... எங்க?

அடுத்த கேள்வி வந்து எட்டிப் பார்க்க, குழம்பிப் போனுன்...

விக்ரம் இட்ட யோசனே கேக்கலாமா?

ச்சே, அவன் வக்ரமா ஏதாவது பதில் சொல்லுவான். வேணும், நானே முடிவு செய்ய வேண்டியதுதான்...

மோகனுவுக்குப் போன் பண்ணி கேக்கணும் முதல்ல...

டைரக்டரி எடுத்து கனரா பேங்க் விலாசம் தேடி... நம்பரைக் கண்டெடுத்து...

எதிர் முனே சிணுங்க...

ஹலோ, கேஷியர் மோகனு இருக்காங்களா?

நீங்க யார் பேசறது...

அவ ஸ்நேகிதன்... ப்ளீஸ்!

லேன்ல இருங்க...

அடுத்த ஐந்து நிமிடம் டெலிபோன் அமைதி பெற்று, மோகனுவால் உயிர் பெற்றது...

''மோகனுவா?''

''யெஸ் ஸ்பீக்கிங்... யார் நீங்க?''

அந்த வீணேக் குரலில் சின்னதாகச் சிலிர்த்து, ''நாந்தான் ராம்...''

''எந்த ரா...'' முடிக்காமல் நிறுத்தி, சன்னமாக ''ஐ'ம் ஸாரி'' என்றுள்...

''உங்க பேங்க் எத்தனே மணி வரைக்கும் மோகனு?''

''ஆறு மணிக்குக் க்ளோஸ் ஆகும்...''

''நான் உன் கூடக் கொஞ்சம் தனியாப் பேசணுமே!''

''என்ன விஷயம்?'' கொஞ்சம் பதட்டமும், மிச்சம் ஆர்வமுமாக கலந்து வந்தது கேள்வி...

> **சிறு பூச்சிக் கடியா**
>
> நல்லெண்ணெய் கொண்டு தடிப்பான இடங்களில் அழுத்தித் தேயுங்கள். கூடுமானுல் சிறிது நேரம் அந்த எண்ணெயில் ஊறி, வெந்நீரில் தலை முழுகுங்கள். சிறு பூச்சி விஷக் கடிகள் சீக்கிரம் நீங்கி விடும்.
>
> — ராஜிராதா.

''விஷயம் இல்லாம போன் பண்ணக் கூடாதா? குரலில் தேனேக் குழைத்து, கொஞ்சம் பொய்க் கோபத்தோடு எறிந்தான்.

''அய்யோ... நா அதுக்குச் சொல்லலே...''

''வரத்தான் போறேன். அஞ்சரைக்கு உங்க பேங்க் வாசல்ல இருப்பேன்... வச்சிடட்டுமா?''

அஞ்சு மணிக்கு ஆபீஸ் முடிந்து, அவசரமாக ஸ்கூட்டரை உதைத்து அறுபதில் பறந்தான்.

பேங்க் வாசலில் நிறுத்தி, பூட்டி, கூலிங் கிளாஸை அணிந்து கொண்டு திரும்ப,

மோகனு எதிரே சிரித்தாள்...

அட, காத்துக்கிட்டிருக்கியா?''

நாணத்தோடு சிரித்தாள்... கன்னம் ரூஜ் இல்லாமலேசிவந்தது...இதைமட்டும்தனியா ஒரு பதினஞ்சு நிமிஷம் கவனிக்கணும் என்று நினேத்துக் கொண்டான்.

என்ன இவ்ளோ அவசரம்?''

''திடீர்னு ஒரு ஆசை...''

மோகனு கொஞ்சமாகப் பயந்தாள். ஏற்கெனவே இருபது சவரன் நகை, கையில் பத்து, வெள்ளி பாத்திரம் இத்யாதி...

சக்திக்கு மீறிய கல்யாணம்... அப்பா விழி பிதுங்கிக் கொண்டிருக்கிருர்... இன்னும் என்ன ஆசை?

''என்னன்னு கேக்க மாட்டியா?''

''சொன்னுத் தெரிஞ்க்கறேன்....''

''நாளேக்குச் சின்னதா ஒரு பிக்னிக்... நானும் நீயும் போறேம்... அதனுல லீவு போட்டுட்டு வர்ற நீ...''

''நாம ரெண்டு பேர் மட்டும் தனியாவா?''

''பின்ன? இன்னும் பத்து பேரை சேர்த்துக்கலாமா?''

''அது தப்பில்லேயா ராம்?''

''என்ன தப்பு இதுல? அடுத்த வாரம் நமக்குக் கல்யாணம் மோகனு!''

''அதுனுலதான் சொல்றேன். ஒரு வாரம் பொறுத்தா, ஊரறிய போகலாமே...''

''நோ ஐ நீட் இட்! அவன் குரலில் பிடிவாதமும், அழுத்தமும் இருந்தது...

''இது வீட்டுக்குத் தெரிஞ்சா சம்மதம்..''

''ஏன் வீட்டுக்குத் தெரியணும்... நமக்குள்ள ஆயிரம் ப்ரைவஸி! எல்லாத்தையும் சொல்லணுமா என்ன? வி ஆர் க்ரோனப்... சம்பாதிக்கறேம். ஆஃப்டர் ஆல் இதுக்குக் கூடவா சுதந்திரம் இல்லே...? இது அரேஞ்ச்ட் மாரேஜ்... வி ஆர் நாட் லவர்ஸ்... அந்த அனுபவம் எப்படியிருக்கும்னு பார்க்க எனக்கு ஆசை... அடுத்த வாரம் நீ எனக்கு மனேவி... ஒரே ஒரு நாள் காதலியா உன்னேப் பார்க்க ஆசை... இதெல்லாம் ஒரு திரில் தானே... என்ன மோகனு?''

''கொஞ்சம் நான் யோசிக்க...''

''ஒரு வாரம் வேணுமா? ஆத்திரத்தோடு கேட்டான்... லே, யெஸ் ஆர் நோ...''

அவன் முகச் சிவப்பைக் கண்டு மெலிதாகப் பயந்தாள்.... அடுத்த வாரமே புருஷனு வரப் போறவர்... இப்பவே ஏன் அதிருப்தியைத் தேடிக்கணும்? எதுக்கு அனுவசியமா

ஒரு கரும்புள்ளி? இதென்ன சும்மா ஒரு பிக்னிக்தானே! யாருதான் போகலே?'' என்ன தப்பு?

''சரி... எங்க வரணும்?''

''வாவ்... தட்ஸ் நைஸ்...'' அவள் கன்னத்தில் உற்சாகமாகத் தட்டினான்...

மறுபடியும் சிவந்தாள்...

வழக்கம் போல... ''ஓ... நோ, உனக்கு பேங்க் அவர்ஸ் லெவன் டு சிக்ஸ்... அது சரிப்படாது... இப்பவே நீ லீவு எழுதி வச்சுட்டு வந்துரு... பிராட்வே பஸ் ஸ்டாண்டில சரியா பத்தரைக்கு இரு... அங்க நான் வந்து உன்னை பிக்கப் பண்ணிக்கறேன்...''

''வரட்டுமா?''

''வரும்போது அந்த ஊதா கலர்... பொண்ணு பார்க்க வந்த அன்னிக்குக் கட்டியிருந்தியே... புடவையைக் கட்டிண்டு வா... கவர்ச்சியா இருக்கும்.''

ஸ்கூட்டர் தெருக்கோடியில் மறையும் வரை அங்கேயே இருந்தாள். அவன் செல்லமாகத் தட்டிய கன்னம் குறுகுறுத்தது... ஆண்மையான அந்தக் கரங்களின் சின்னத் தட்டு கூடக் கொஞ்சமாக வலித்தது... சுகமான வலி...

''இதெல்லாம் ஒரு 'த்ரில்' தானே!''

த்ரில்தான்... ஆனால் அவனது விருந்து அவளுக்கு விஷமாகப் போகிறது என்பது அப்போது அவளுக்குத் தெரியாது.

* * * * * * *

ஸ்கூட்டரை நிறுத்தி உள்ளே நுழைந்த போது அம்மா புலம்பிக் கொண்டிருந்தாள்..

''என்னம்மா ஆச்சு உனக்கு...?''

''ஹூம்! என்ன ஆனா என்ன? எல்லாம் முடிஞ்சாச்சு இனிமே பேசி என்ன உபயோகம்?''

அப்பாவைப் பார்த்தான்...

''வேறொண்ணுமில்லேடா ராம்... எதிர் வீட்டு கோபாலுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கு...

''அதுக்கு?''

''சீர் எக்கச்சக்கமா செய்யறாங்களாம் பொண்ணு வீட்ல.... அவன் உன்னைவிட, எல்லா விதத்திலேயும் குறைச்சலோ இல்லேயோ... அதான் இவ புலம்பறா...''

''நம்முது முடிவானப்புறம் என்ன பேச்சு?''

''நா வேறெதுவும் கேக்கலே... வைரத்தோடு மட்டும் போட்டுட்டா போதும்... மோகனா பத்து வருஷமா சம்பாதிக்கறா... சேத்து வச்சுக்கத் தெரியலியா அவங்க வீட்ல...?''

அம்மாவைப்புறக்கணித்துஇவன் உள்ளே நுழைய...

''ஒரு வரன் வந்திருக்கு நம்ம ராமுக்கு...'' தரகர் பின்னாலேயே வருகிறார்.

அப்பா சிரித்தார்...' நீங்க ஒரு மாசமா ஊர்ல இல்லே... அதான் சங்கதி தெரியலே உங்களுக்கு!''

''என்ன சங்கதி?''

வெற்றிலை மகாத்மியம்

ஆகாரத்திற்குப் பிறகு சிறிதளவு, கிராம்பு, ஏல அரிசி இவற்றைச் சேர்த்தோ, சேர்க்காமலோ உபயோகித்தால் ஜீரண சக்தி பெருகும். உடம்பில் தேஜஸ் உண்டாகும் என்று தன்வந்திரி நிகண்டு கூறுகிறது.

வெற்றிலையுடன் ஜாதிக்காய், ஏலம் சேர்த்து உபயோகிக்க உடல் சூடு குறையும். நல்ல தூக்கம் வரும்.

வெற்றிலையுடன் வால் மிளகு, பச்சைக் கற்பூரம், ஏலக்காய், ஜாதி பத்திரி இவற்றைச் சேர்த்து உபயோகித்தால் வாய் நாற்றம், உடலில் காணும் கற்றாழை நாற்றம் ஆகியவை நீங்கும்.

''பிள்ளைக்கு அடுத்த வாரம் கல்யாணம் ஓய்! லக்னப் பத்திரிகை கொடுத்து மாசம் ஒண்ணாச்சு...''

''எந்த எடம்?''

சொன்னார்...

''மகாதேவன் பொண்ணு மோகனாவா? மகா பிசினாறிக் குடும்பமாச்சே... எச்சக் கையால காக்கா விரட்டாத வீடு அது! என்ன செய்யறா?''

''பரவால்லே... சக்திக்கு மீறித்தான் செய்யறா ஓய்... இது போறும்... பொண்ணு பேங்க் உத்தியோகம்...''

''அவ்ளவ்தானே!''

''நான் கொண்டு வந்திருக்கேன் ஒரு வரன்... கேட்டா வாயைப் பிளப்பீர்... லேட்டாயிடுத்து என்ன செய்ய?''

''சொல்லுங்கோ... தெரிஞ்சுக்கலாம்,'' அம்மா ஆவலோடு அவர் வாயைப் பார்க்க,

''எதுக்குடி உனக்கு?'' அப்பா.

''நீங்க சும்மாருங்கோ... நீர் சொல்லும்!''

சொல்ல ஆரம்பித்தார்...

''சொந்தமா பொண்ணு பேர்ல நாலு கிரவுண்ட் நிலம் இருக்கு...''

''நகையெல்லாம் கிலோக் கணக்குல தான்...''

''ரொக்கம்... நீங்க கற்பனை பண்ண முடியாத அளவுக்கு...''

''ஒரே பொண்ணு...''

''அத்தனை சொத்துக்கும் இவதான் வாரிசு...''

''நீங்க சம்மதிச்சா...''

''உங்க பிள்ளை வாரிசு...''

''ஆனா...''

'என்ன ஆனா?' ஏக காலத்தில் இருவரும் கேட்க,.. குரலைக் கிசுகிசுப்பாக்கிக் கொண்டு சொல்ல ஆரம்பித்தார் தரகர்...

''அய்யோ'' என்று இருவரும் அலற...

தரகர் தன் பக்கத்து விளக்கத்தை விலாவாரியாக சொல்லிக் கொண்டே போக,

இவர்கள் முதலில் மறுத்து...

பின் கொஞ்சம் அசைந்து...

அங்கு விவாதம் சூடாக நடக்க ஆரம்பிக்க,

மறுநாளைய 'திரில்'லுக்காக இப்போதே சூடாகிக் கொண்டிருக்கிறான் ராம்.

ஒன்பது மணிக்குப் புறப்பட்டான் ராம்...

"ராம் உன் கூடக் கொஞ்சம் பேசணும்" அப்பா.

"என்ன இன்விடேஷன் விஷயமா? இன்னிக்குக் கிடைச்சிடும்... ஒரே வாரம்தான் இருக்கு... கொஞ்சம் லேட்தான்."

"அதில்லேப்பா... இது வேற விஷயம்... நீ லீவு போட்டுட்டு வந்தா சௌகர்யமாப் பேசலாம்..."

அடாடா, என்ன இந்த அப்பா? காரியத்தையே கெடுத்துடுவார் போல இருக்கே... லீவு படாடக் கூடாது... தெரிஞ்சா போட்டுட்டு வீட்டுக்கு வான்னு சொல்லுவார்...

"எதுக்குப்பா...?"

"விரிவாப் பேசணும்டா..."

"நாளைக்குப் பார்த்துக்கலாம்ப்பா..."

"தள்ள முடியாதுடா... இன்னிக்கே பேசியாகணும்..."

"எனக்கும் அதேதாம்பா... ஆபீஸ்ல ஏகப்பட்ட வேலை... ரெண்டு மூணு பார்ட்டிகிட்ட பெரிய தொகை வரணும்... நாந்தான் நேர்ல போயாகணும்... அதுவும் அந்த அகர்வால் கிட்ட எட்டு லட்சம் நெட் காஷ்... நா வர்றேம்பா..."

பதிலுக்குக் காத்திராமல் அவன் போக...

அப்பா கையைப் பிசைந்தார்...

"அகர்வால்கிட்ட எட்டு லட்சம் நெட் கேஷ்" தனக்குள்ளே சிரித்துக் கொண்டான் ராம்... அது நிஜம்தான்... ஆனால் பதினைந்து நாள் கழித்துச் செய்ய வேண்டிய வேலை... அவசரத்துக்கு உதவும் பொய்...

ஆபிசிலும் இதே பொய்தான்...

சேர்மன் இவனிடம் ஒப்படைத்திருக்கும் வேலை அது... எப்போது என்பது யாருக்கும் தெரியப் போவதில்லை...

கலெக்ஷனுக்குப் போவதாக ஒரு ஆன்—ட்யூட்டி ஸ்லிப் எழுதி வைத்துவிட்டுத் தான் போக வேண்டும்...

பத்து மணிக்கு ஆபீசில் நுழைந்து, ஸ்லிப் எழுதி மானேஜர் அறைக்குள் வைத்தான்.

"என்னப்பா ஒயிட் அண்ட் ஒயிட்ல ஹீரோவாட்டம் இருக்கே!" குறும்பாக விலாவில் இடித்தான் கோபி...

"பெரிய பார்ட்டியை பார்க்கப்போறேன்! ட்ரிம்மா இருக்க வேணுமா?"

"யாரது?"

"அகர்வால்தான்... தொகை பெரிசு... கறந்தாகணுமே!..."

"எவ்வளோ...?"

"அது கான்பிடன்ஷியல்!"

"ஓ. கே. நான் கிளம்பறேன்..."

"ராம்... ஒரு நிமிஷம்!"

"என்னப்பா, போகும்போது கூப்டுட்டு!"

"எல்லாம் நல்லாருக்கு... ஆனா இந்த ஜோல்னாப் பைதான் எடுபடல... அதை மாத்து முதல்ல..."

அதுவும் சரிதான்... அம்மா தந்த தேங்காய் சாதம் உள்ளே கனக்க, அதைத் தூக்கிக் கோபியிடம் கொடுத்தான்... நீ சாப்டு இன்னிக்கு... வரட்டுமா?"

குஷியாக விசிலடித்துக் கொண்டே போகும் அவனையே கவனித்த கோபி,

உள்ளே போய் சேர்மனின் ஆபீஸ் டைரியை அவசர அவசரமாகப் புரட்டி சில தேதிகளை விலக்கி, சிவப்பு மை வட்டத்துக்குள் சிக்கிய அந்தத் தேதியை கவனித்தான்.

தன் கையில் வைத்திருந்த வேறொரு ரெட் பேனாவால் மற்றொரு தேதியில் சிவப்பு வட்டம் போட்டான்.

அவசரமாக வெளியே வந்து டெலிபோன் புத்தகத்தைப் புரட்டி, அந்தக் குறிப்பிட்ட விலாசத்தையும் எண்ணையும் குறித்துக் கொண்டு,

'ரிசீவரைக் கையில் எடுத்தான்...

எதிர்முனை உயிர் பெற,

"மிஸ்டர் அகர்வால் வேணும்..."

"யெஸ் ஸ்பீக்கிங்... மே ஐ நோ ஹூ ஈஸ் ஸ்பீக்கிங்..."

இவன் பேசத் தொடங்க,

எதிர் முனையில் பதில் வர,

வெற்றிலையுடன் சிறிதளவு இந்துப்பு சேர்த்து உபயோகித்தால் கோழை உண்டாவது நீங்கும்.

காச நோயினால் அவதிப்படுவோர், சுவாசக் கோளாறுகள் நீங்க, சுகமாக மூச்சு விட வெற்றிலையுடன் சிறிது மிளகுத் தூளைக் கலந்து மென்று சிறிது சிறிதாக விழுங்க பால் கிடைக்கும்.

வெற்றிலைச் சாறும் தேனும் கலந்து மூன்று வேளை கொடுக்க சிறுவர்களின் கக்குவான் இருமல் குணமாகும்.

தொடர்ந்து பலமாகத் தலையசைத்துப் பேசியவன், "இன்னும் பத்து நிமிஷத்துல அங்க வர்றேன்... ஓ. கே...

ரிசீவரை வைத்துவிட்டு, அவசரமாக லீவு அப்ளிகேஷன் எழுதி மானேஜர் அறையில் போட்டுவிட்டு, போகும் போது மறக்காமல் ராமின் மஞ்சள் நிற ஜோல்னாப் பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டான்.

தன்னைச் சுற்றிப் பின்னப்படும் வலை புரியாமல் ராம் மோகனுவோடு மகாபலிபுரம் போகும் சாலையில் ஸ்கூட்டரில் உல்லாசமாக சவாரியில் இருந்தான்.

* * * * * * *

கோல்டன் பீச்சுக்குள் ஸ்கூட்டர் நுழைந்தது...

காதலர்களின் ரெடிமேட் சொர்க்கம்...

அயல்நாட்டுக்காரர்கள் டூ—பீஸ் உடையில் மணலில் மல்லாந்து கிடக்க,

இப்போது
கிடைக்கிறது

ஃப்ரெஷ்

தேங்காய் எண்ணெய்

100% தூய்மையானது,
"மைக்ரோ-ஃபில்டர்" செய்யப்பட்டது



கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய அழுக்கு மற்றும் கசண்டுப் பொருட்களும்கூட "மைக்ரோ-ஃபில்டர்" வழியே வடிகட்டப்பட்டு, தூயதாய் வருகிறது ஃப்ரெஷ். ஆகவே அது மேலும் நீடித்த காலத்திற்கு "அன்றெடுத்த எண்ணெய்" ஆக, "ஃப்ரெஷ்" ஆக நிலைத்திருக்கிறது.



ஆர்.டி. ஆயில் ப்ராடக்ட்ஸ் பிரைவெட் லிட்.,
தலைமை அலுவலகம் : ஆலப்புழை, கேரளா
தொழிற்சாலை : கோயமுத்தூர்–641 008

இந்தியாவின் கொப்பரை வர்த்தகத்தில் மிகப்பெரிய நிறுவனத்திடமிருந்து வருகிறது ஃப்ரெஷ்.

GK&E.M85.31 Tm.

''சிங்கிள் ரூம் இருக்கா? ராம் கவுண்டரில் விசாரிக்க, மெலிதாக அதிர்ந்தாள் மோகனா..

''எதுக்கு ராம் இப்ப ரூம்...?''

ரிசப்ஷனிஸ்டு அவர்களை ஒரு மாதிரி பார்க்க, ராம் மோகனாவை முறைத்தான்... கிசுகிசுப்பாக, ''சப்தமா இப்பிடி கேட்டா, என்ன தோணும்? மைண்ட் த அட்மாஸ்ஃபியர்! அடிக் குரலில் அதட்டினான்...

அனுமதிக்கப்பட்ட அறையின் சாவியை வாங்கிக் கொண்டு அவளோடு நடந்தான்...

கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்...

''ராம்... என்ன இதெல்...''

''முதல்ல கதவைச் சாத்திட்டுப் பேசு... நாம பேசறது ஊருக்கே தெரியணுமாக்கும்!''

கணவனைப் போல அதட்டுவது மெலிதாக எரிச்சலைத் தர கதவைச் சாத்தினாள் மோகனா...

''எதுக்கு ரூம்னு அவ்ளோ சப்தமா கேட்டா என்ன தோணும் மோகனா?'' திரும்பவும் கேட்டான்...

''கையில் ஒரு பெட்டி கூட இல்லாம, பட்டப் பகல் வேளைல ரூம் புக் பண்ணினா அதைவிட ஆபாசமாத் தோணும்... அது உங்களுக்குப் புரியலே!''

கோபத்தில் அவள் விழிகளை உருட்ட,

''ஹேய்... ப்யூட்டிஃபுல்! இந்த அழகைப் பார்த்தா உன்னைக் கோபம் மூட்டி நாளெல்லாம் பாக்கலாம் போலத் தோணுது...''

மெல்லச் சிரித்தான்...

''பகல் வேளை பிக்னிக்குக்கு ரூம் எதுக்கும்மா?''

கொஞ்சலாக அவள் அம்மா போட்டுப் பேச, அவனுக்குச் சிலிர்ப்பாக இருந்தது.

பிரைவஸிக்குத்தாண்டா! மெல்ல வலது கையைப் பற்றி அருகே இழுத்தான்...

இந்த ப்ரைவஸி அடுத்த வாரம்!... இதுக்குனு தெரிஞ்சா நான் வந்திருக்கவே மாட்டேன்...''

''நானும் இதுக்குனு கூப்பிடலியே...''

''பொய்.... கண்ணுல பொய் இருக்கு...!''

''வேற என்னல்லாம் இருக்கு? கிட்டக்க வாடா!''

ஓரடி விட்டு உட்கார்ந்தாள்...

அவன் எரிச்சலோடு பார்த்தான். ''நான் கடிச்சு முழுங்கிட மாட்டேன்...''

''முழுங்கத்தானே ஏற்பாடு நடந்துட்டு இருக்கு. ஏன் ராம் கோவம்? பொறுமை தான் இப்பத் தேவை. ஒரே வாரம் என்ன கெட்டுப் போயிடும்... அப்புறம் யாரு தடை?''

''அதுல திரில் இல்லே...''

''அதுலதான் திரில்... கல்யாணம் முடியறதுக்கு முன்னால மத்தது முடிச்சிட்டா, கட்டில்ல சந்திக்கும் போது சுவாரசியமே இருக்காதுப்பா... உரிமையோட தொடலாமே...!''

''ஸோ... இப்ப உரிமை இல்லேன்னு சொல்ற?''

''நோம்மா... நான் அப்படிச் சொல்லலே.. முறையோட நடக்கட்டும்னு சொல்றேன்...''

''என் மனைவி என் விருப்பத்தை அனுசரிக்கணும்னு ஆசைப்படறேன்...''

கண்டிப்பா செய்வா... பட் இப்ப நான் மனைவி இல்லே...''

''நிச்சயமான விஷயம்தானே மோகனா... என்ன சிக்கல் இதுல... என்ன கெட்டுப் போயிரும்...?'' பேசிக் கொண்டே நெருங்கி, அவள் இடுப்பைத் தொட்டான்.

''ராம் வேணாம் ப்ளீஸ்! சொல்றதைக் கேளுங்க...''

''இன்விடேஷன் கூட அடிச்சாச்சு மோகனா...''

''இருக்கட்டும் ராம்... அது கன்பர்மேஷன்! விலக முயற்சித்தாள்.

''ஊருக்கே தெரிஞ்சாச்சு மோகனா...''

''அதுனாலதான் சொல்றேன் பொறுங்கன்னு'' எழுந்தாள்.

''ஓ. கே... மோகனா, இப்ப என்னை நீ மறுத்தா, சந்தோஷமான ஒரு கணவனை சாந்தி முகூர்த்தத்துல சந்திக்கப் போறதில்லே... அதிருப்தியோட தொடங்கணுமா? இட்ஸ் யுவர் சாய்ஸ்...''

''உங்க கோவத்தை மதிச்சுத்தான் நான் வந்தேன்... இப்ப மிரட்டலா, என்ன ராம் இது?''

''இல்லடா, உன் மேலே அளவு கடந்த ஆசை அதான்... அப்புறம் உன் இஷ்டம்... கையை எடுத்தான்.


வாடிப் போன அவன் முகமும், தாபத்தில் துடிக்கும் கண்களும் அவளைக் கஷ்டப் படுத்த,

என் கணவன்தானே!

ஒரு வாரத்துக்கு முன்னால...

நிச்சயிக்கப்பட்ட பந்தம்தானே...





இணங்கினு எந்தவிதத்துல எனக்கு நஷ்டம்? என்ன அவமானம் எனக்கு?

போலாமா மோகனு? அரை மனத்தோடு அவன் கேட்க, அவன் பார்வையில் ஒரு குழந்தையின் பிடிவாதம் தெரிய, மெல்ல அவனை நெருங்கி நெற்றியில் முத்தமிட்டாள்...

''உனக்குச் சம்மதமாடா?''

அவன் கிராப்பைப் பிடித்துச் செல்லமாக அவள் குலுக்க, ஆவேசமாக அவளை அணைத்தான்.

அதேசமயம், அகர்வாலின் வீட்டை விட்டு வெளியே வந்து கொண்டிருந்த கோபி, ராமின் ஜோல்னுப் பையிலிருந்த கைக்குட்டையை அகர்வால் வீட்டுத் திண்ணையில் போட்டு விட்டு நகர்ந்தான்...

சல்யூட் அடித்து வழி விட்டான் கூர்க்கா.

* * * * * * *

தேங்க்யூ பேபி!

கண்கள் கலங்க அவனைப் பார்த்தாள் மோகனு...

''ஏண்டா. அழற, நான் உன் புருஷன்... என்னுடை சொத்தை அனுபவிக்க நான் யாரைக் கேக்கணும்... ருசி தெரிஞ்சுப் போச்சு... நிஜத்தைச் சொல்லணும்னு பர்ஸ்ட் நைட் இன்னும் ஜோரா இருக்கும்... வீடு வரைக்கும் வந்து ட்ராப் பண்ணட்டுமா?''

''வேணும். பஸ் ஸ்டாண்டில இறக்கிடுங்க... பஸ் பிடிச்சுப் போயிர்றேன்...''

''ஓ. கே... ஸ்வீட் நைட் அண்ட் சாக்லேட் ட்ரீம்ஸ்...''

கன்னம் குழையச் சிரித்து, கையை அசைத்தாள்...

அதே இனிமை நினைவுகளோடு பறந்தான் ஸ்கூட்டரில். அப்பா ஏதோ பேசணும்னு சொன்னாரே... ஆபீசுக்குப் போயிட்டே போகலாம்...''

ஆபீஸில் நுழைய...

''தேங்காய் சாதம் பிரமாதம்டா'' என்றான் கோபி... அவன் அரை நாள் லீவில் மறுபடியும் வந்திருந்தான்...

கலெக்ஷன் ஆயிடுச்சா?''

''இல்லை... பதினைஞ்சு நாளுக்கு அப்புறம் தான்...''

''கல்யாணத்துக்கு முன்னாலேயே முடிச்சிடுவேன்னு நினைச்சேன் தள்ளிப் போட்டுட்டியா?''

''என்ன சொல்றே நீ?'' அதிர்ந்தான்.

கலெக்ஷனைச் சொன்னேன்...

ஹாலில் இருந்த அப்பாவும், அம்மாவும் இவனுக்காகக் காத்திருந்தது போலப் பட்டது...

''இப்பவாவது நேரமிருக்கா?''

''சொல்லுங்கப்பா...''

''நாங்க சொல்றதை நீ சரியாப் புரிஞ்சுக்கணும்...'' பீடிகையோடு ஆரம்பித்தார்.

* மத்திய ஆசியர்களும், தென் ரஷ்யர்களும், குதிரைப் பாலிலிருந்து வித்தியாசமான நெடியுள்ள ஒரு வகையான தயிரைத் தயாரிக்கிறார்கள். இதைச் சிறு கண்ணாடி புட்டிகளில் சீல் செய்து விற்கிறார்கள். இதனால் அதிலிருந்து கிளம்பும் வாயுவும் அதனுள்ளேயே நொதித்து நின்று, போதையுண்டாக்கக் கூடிய பானமாக மாறுகிறது.

''நம்ம குடும்பத்துல வைரத் தோடு போடாத பொம்மனாட்டியே கிடையாது... வரப் போற மோகனு தவிர...''

''அதுக்குத்தான் வழியில்லேன்னு அவங்கப்பா சொல்லி நீங்களும் சம்மதிச்சாச்சே.. அப்புறம் என்ன?''

''இதென்ன சத்திய வாக்கா? நாலு பேர் கேட்டா நாம பதில் சொல்ல வேணுமா?''

''விடுங்கப்பா... பெரிய விஷயமா இது...?''

''பெரிசுதாண்டா... ஏற்கெனவே சீர்செனத்தி ரொம்ப இல்லே... உன் அந்தஸ்துக்கு மட்டம் தான். தரகர் வீராசாமி கொண்டு வந்திருக்கார் ஒரு பெண்ணை.... கோமதீஸ்வரி... உன்னைக் கட்டிப்பேன்னு போட்டோ பாத்தப்புறம் ஒத்தக்கால்ல நிக்கறாளாம்—''

''நாலு தலைமுறைக்குச் சொத்துடா... குழந்தை கொஞ்சம் வெகுளியாம்... குறைனு நினைச்சா அது மட்டுந்தான்...''

''அப்பா என்ன அசிங்கம் இது? அடுத்த வாரம் கல்யாணம் எனக்கு. ஊரார் பெண்ணைப் பத்தி பேச்சு எதுக்கு?''

''கேளுடா! அப்படிப்பட்ட எடமே இனிமே நமக்கு வழியில்லே... நிச்சயித்த கல்யாணம் நின்னுகூடப் போயிருக்கு. நாங்க அதுக்கா சொல்றோம்?'' அம்மா.

''அம்மா, உன் பேச்சு சரியில்லே...''

''மோகனுதான் என்னுடை மனைவி...''

''இல்லன்னு யாருடா சொன்னு... அந்த வைரத் தோட்டைப் போடட்டும்... சமாளிச்சுக்கறோம்...''

''இல்லன்னு?''

''கல்யாணம் நடக்காது...''

''அப்பா?''

''ஆமாண்டா... உனக்குப் பட்டுக் கம்பளம் விரிச்சு காத்துட்டு இருக்காங்கவா சல்லே.. இந்த வைரத்தோடு என்னுடை கௌரவப் பிரச்னைடா... அது இல்லாம அவ வர முடியாது இங்க... உனக்கு நாங்க வேணுமா, அவ வேணுமானு முடிவு செஞ்சுக்கோ...''

அவர்கள் எழுந்து போக...

இயல்பான கோழைத்தனம் வந்து ஒட்டிக் கொள்ள,

தராசில் ஒரு தட்டில்

அந்தக் கோமதீஸ்வரியோடு அப்பா, அம்மா...

மற்றொன்றில் மோகனு...

மோகனுவின் தராசு ரொம்ப உயரத்தில் இருந்தது...



தாய்மார்களே!

உங்கள் குழந்தை

தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பு பெற்றுள்ளதா?

கண்டு பிடியுங்கள்.. கண்டு பிடியுங்கள்.. கண்டு பிடியுங்கள்.. கண்டு பிடியுங்கள்

கீழ்க்காணும் கட்டங்களில் சரியான இடங்களில் ✔ குறி இடவும்

குழந்தையின் பெயர் ....

வயது (மாதங்களில்) .... எடை ....

வ.எண்.	தடுப்பு ஊசிகள் விவரம்	போடப் பட்டது	போடப்பட வில்லை
1.	காச நோய் வராமல் தடுக்க் தடுப்பு ஊசி (B.C.G.)		
2.	கக்குவான், தொண்டை அடைப்பான் இசிவு நோய் ஆகிய மூன்று நோய்கள் வராமல் தடுப்பு ஊசி (D.P.T.)		
3.	இளம்பிள்ளை வாதம் வராமல் தடுக்க சொட்டு மருந்து (POLIO)		
4.	தட்டம்மை வராமல் தடுக்க தடுப்பு ஊசி (MEASLES)		

இதில்
போடப்பட்டது
என்ற கட்டங்களில்
எல்லாக் கட்டங்களிலும்
✔ குறி
இடப்பட்டிருந்தால்
உங்கள் குழந்தை
நலமான குழந்தை

மதுரை, கோயம்புத்தூர் பெரியார், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் தடுப்பு ஊசி முனைப்பு இயக்கம் இப்போது நடைபெறுகிறது.

விவரங்களுக்கு அணுகுங்கள்,
முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுக் கூடம்,
அல்லது சுகாதார நிலையங்கள்

தொடர்புப்பிரிவு
தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்திட்டம்
570, அண்ணா சாலை, சென்னை-600 018.

கத்தரித்து வைத்துக்கொள்ளவும்.

DIPP-10/1-85-Efficient

ஒரு வைரத் தோடுதானே...

பேசிப் பார்க்கட்டும்...

இவ்ளோ செஞ்ச மோகனுவோட அப்பா வுக்கு இதைச் செய்ய முடியாதா? இருபதாயிரம் ரூபாய்க்காக நல்ல வரனை விடவா செய்வார்.

சரி, அப்பா பேசட்டும்!

இவன் பச்சைக் கொடி காட்ட,

அப்பாவும், அம்மாவும் புறப்பட்டார்கள்.

* * * * * * *

டாக்ஸியிலிருந்து அவர்கள் இறங்க, ஜன்னல் வழியாக கவனித்தாள் மோகனு...

"அம்மா, அத்தையும், மாமாவும் வர்றாங்க..."

அம்மா இழுத்துப் போர்த்திய புடவையோடு வெளிப்பட்டாள்.

"சௌக்கியமா மகாதேவன்!"

"இருக்கேன்... திடீர்னு இவ்ளோ தூரம்?"

"ஒண்ணுமில்லே... குழந்தையைப் பார்க்கலாம்னு தோணித்து.. அதான்..."

"ஆனாலும் சபை கவுரவத்தை விடவும் முடியாதே அம்மா."

மகாதேவன் மௌனமாக இருந்தார்...

"சம்பந்தி நீங்கள் என்ன செய்யறேன்னு, எப்படியாவது அட்ஜஸ்ட் பண்ணி அதைப் போட்டுடுங்கோ... ஒரு வாரம் அவகாசம் இருக்கே..."

"எங்கிட்ட வகையில்லேன்னு நாந்தான் சொல்லிட்டேனே!"

"அப்படிச் சொன்னா ஆச்சா? பொண்ணைப் பெத்தவா செஞ்சுதான் ஆகணும்..."

குரலில் மிரட்டல் இருந்தது...

"சரி... கல்யாணம் நடந்து ஒரு வருஷத்துக்குள்ள முயற்சிக்கிறேன்..."

"இப்பஇல்லேன்னாநீங்கசெய்யவேவேண்டாமே... எங்க பிரச்னை கல்யாணத்தன்னிக்கு அவ காதுல அது இருக்கணுமே!"

"ப்ளீஸ் சம்பந்தி, எனக்கு வழியில்லே அதுக்கு?"

"ஸோ, நாங்களும் யோசிக்கத்தான் வேணும் இதைப் பத்தி..."

"அதைத்தான் நானும் சொல்றேன்!" மகாதேவன்.

துண்டு ஒயர் மாலை

தேவையான பொருட்கள்: துண்டு ஒயிர், டொயன், க்ரோஷா ஒயர் 2 மீட்டர்.

நாம் ஒயர் கூடை போட்டு முடித்து சொருகியபின் இருக்கும் மீதி ஒயர்களை சின்ன துண்டு ஒயர்களை தூக்கி எறியாமல் அந்த சின்ன துண்டுகளை சுமார் 15 to 20 துண்டுகளை எடுத்துக்கொண்டு நன்றாக இறுக்கமாக டொயனில் முடி போட வேண்டும். முடி போட்டபின் கீழே இருக்கும் ஒயர்களை ஒரே மாதிரி ஒரு இஞ்ச் விட்டு கட் செய்ய வேண்டும். இது மாதிரி 20, 30 கட்டிக் கொண்டு சன்ன க்ரோஷா ஒயரில் கொஞ்சம் இடம் விட்டுவிட்டு பூ கட்டுவது போல கட்டிப் போட்டால் தூரத்திலிருந்து பார்ப்பதற்கு மாலை மிக அழகாக இருக்கும். செலவும் குறைவு, வேலையும் குறைவு. வீட்டில் வேறு கலர் ஒயர் இருந்தாலும் கட்டிப் போட்டால் நன்றாக கதம்ப மாலை போல் இருக்கும்.

— ரமாதேவி.

மகாதேவன் முகத்தில் சந்தோஷம் அப்பட்டமாகத் தெரிய, 'மோகனு' என்றார்.

வந்தாள்...

"நமஸ்காரம் பண்ணிக்கோம்மா..."

"பரவால்லே...குழந்தையை கஷ்டப்படுத்த வேணாம்... பக்கத்தில் இருத்திக் கொண்டாள் அம்மா...

"தங்க விக்ரமா இருக்கிற குழந்தைக்கு ஒரே ஒரு குறை!"

"என்ன?" அதிர்ந்தார் மகாதேவன்.

"தெரிஞ்சு போச்சா பிக்னிக் விவரம்?" மோகனு.

"காதுல வைரத்தோடு இருந்தா...?"

"அவ்ளவுக்கு நான் எங்க போவேன் சம்பந்தி?"

"உங்க கஷ்டம் எங்களுக்குப் புரியறது... எங்க மனுஷாளுக்குப் புரியலையே... எங்க குடும்ப கவுரவமே சபைல அடிபடுமே இதுனால...

"கோமஸ்வரனே பொண்ணோட தெருக் கோடில வந்து நிக்கறான்... எங்களுக்குத் தலையெழுத்தா என்ன? எங்க மோகனுவை விட?"

"தோ மகாதேவன்! எங்க கௌரவத்தை சபைல காப்பாத்த முடியாத பெண் எங்க மருமகளா வரணுமான்னு நாங்க யோசிக்கணும்னு சொல்றோம்."

மின்சாரம் தாக்க நிமிர்ந்தாள் மோகனு...

"மாமா, ஒரு வருஷம் அவகாசம் தந்தா, என் சம்பளத்துலேயே அதைச் செஞ்சிடலாம்..."

"எங்க வீட்டுக்கு வந்தப்புறம் ஏதும்மா உன் சம்பளம்... அந்த வீட்டுக் காசாச்சே அது! எங்க காதுல வைரத்தோடு வாங்க யார்கிட்ட நாங்க கேக்கணும்...?"

"சம்பந்தி இதைப் பத்தி..."

"தோ மகாதேவன்... இதுதான் எங்க முடிவு... வைரத்தோடு இருந்தாத்தான் இந்தக் கல்யாணம்...

"நிச்சயித்த கல்யாணம் நடக்கலேன்னு..."

"யார் சொன்னது நடக்காதுன்னு? நடக்கும்... ஆனா பொண் உங்க பொண் இல்லே...

"சம்பந்தி இது அடாவடி... மனுஷத்தனமே இல்லே... காட்டுமிராண்டித்தனம்."

''நாக்கை அடக்குங்க மகாதேவன்... நடத்திக் காட்டுவோம்...''

''நானும் சும்மாருக்க மாட்டேன்... போலீஸ்ல புகார் பண்ணுவேன்..., கௌரவ மாம் கௌரவம்... ஊர் சிரிக்க வைப்பேன்... என்னய்யா நினேச்ச? பொண்ணேப் பெத்த வன் கறவை மாடா? நீ சொன்னதுக்கெல் லாம் தலையாட்ட இளிச்சவாயனேப் பாரு..."

''அப்பா...'' பதறிஞள் மோகனு...

''நீ உள்ள போம்மா...''

''ஓய் மகாதேவன்... இனிமே வைரத் தோடு நீர் போட்டாலும் உம்ம பொண்ணு வேண்டாம் எங்களுக்கு...''

''அய்யோ மாமா... அப்படிச் சொல்லா தீங்க... அப்பா நீங்க ஒண்ணும் பேசாதீங் கப்பா தயவு செஞ்சு...

''நீ போமா உள்ள... இவனே விட்டா மாப் பிள்ளையா இல்லே...? அதே தேதில நானும் நடத்திக் காட்டறேன் உன் கல்யாணத்தை... கொடுத்த வரதட்சனே பத்தாயிரத்தை வச் சுட்டு வெளிய போ... இல்லன்னு படி தாண்ட மாட்ட...''

''இப்பவே தர்றேன்! அவர் செக் புக்கை எடுக்க,

நொறுங்கிப் போனுள் மோகனு...

''வேண்டாம்மாமா... அப்பா நான் சொல் றதைக் கேளுங்கப்பா...''

''முடியாது... இந்த ரோக் எனக்குச் சம் பந்தியில்லே... உன்னேக் கட்டிக்க ஆள் இருக்கு... நீ கவலேப்படாதம்மா...''

நிலைமை முற்றி...

சண்டை வலுத்து...

பெரிய பள்ளம் விழுந்து...

மோகனு ஓசைப்படாமல் அதில் விழுந்து...

அய்யோ ராம்... அவசரப்பட்டுட்டமே... நான் உடனே உங்களேப் பார்க்கணுமே...

* * * * * * *

ரிசப்ஷனுக்கு ராம் வர,

மோகனு நகக் கடிப்போடு, ஏராளமான அவஸ்தையைச்சுமந்துகொண்டுவிரல்களில் நின்று கொண்டிருந்தாள்.

''ராம் எல்லாமே தடம் புரண்டுப் போச்சு...''

''ஸாரி மோகனு... உங்கப்பா அப்படிப் பேசியிருக்கக் கூடாது.''

''ராம் மாமா பேசினது மட்டும் உங்க ளுக்குத் தெரியலியா? மனுஷத்தனம் அதுல இல்லே...''

''ஓ... ஸ்டாப் இட்! மகாதேவன் மகன் தானே, உங்கிட்ட வேறெதை எதிர்பார்க்க முடியும்,...?''

''ராம்நீங்களுமா? ஓ.கே.லீவிட்... அதுக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன்... இனிமே நாம பிரிய முடியாது ராம்... ப்ளீஸ்! உங்க ளுக்கு நிலைமை புரியும். எடுத்துச் சொல் லுங்க ராம்...

''அந்தவைரத்தோட்டை உங்கப்பாபோட் டுட்டா, எப்படியாவது அப்பா காலைப் பிடிச்சு நான் கெஞ்சறேன்...

''வைரத்துக்குப் பின்னுல ஒரு கெஞ்சலும் அடிஷனு?

''ராம் ஹ்யூமன்லியா கொஞ்சம் பாக்க ணும் நீங்க... நடுத்தர குடும்பத்துல ஒரு வாரத்து இடைக்கு இருபதாயிரம், எப்படி ராம் புரட்ட முடியும்... ஏற்கெனவே ஆற செலவுக்கே எங்கப்பா பிச்சைதான் எடுக் கணும்...''

''அதை உன்னேப் பெத்தப்ப யோசிச்சு இருக்கணும்...''

''ராம் நீங்கள்தான் பேசறீங்களா?''

''யெஸ் எங்கப்பா கௌரவத்துல எனக் கும் பங்கு இருக்கு...''

''அந்த கௌரவம் கோல்டன் பிச்ல எங்க போச்சு ராம்?''

''ரெண்டு கை தட்டிஞத்தான் ஓசை மோகனு... நீயும் சம்மதிச்சிருக்கே...''

''காரணம் உங்க பலவந்தம்... நீங்க புரு ஷனு வரப்போற அச்சம் எனக்கு...''

''ஆனலும் நீ பெண்... விளேவு உனக்குத் தானே... யோசனே பண்ணியிருக்கலாம்..''

''ராம் அப்பவே நான் மறுத்தேன்...''

''முடிஞ்சுப் போச்சு... இப்ப என்ன செய்ய?''

''உங்கப்பாவைச் சரிக்கட்டிக் கல்யா ணத்தை நடத்துங்க...''

''நீ உங்கப்பாவைச் சரிக்கட்டி வைரத் தோட்டைப் போடற வழியைப் பாரு...''

''வேற ஆல்டர்நேட் இல்லே?''

''ஸாரி மோகனு!''

''இதுதான் முடிவா ராம்?''

''அகெய்ன் ஸாரி...''

''நான் உன்னுல சேதப்பட்டிருக்கேன் ராம்...''

''ஃபர்கெட் இட்!''

''மறக்கற நிகழ்ச்சி இல்லே ராம்... நான் பெண்...''

''மறக்கறதைத் தவிர வேற வழி இல்லே மோகனு... எனக்கு டயமாச்சு மோகனு... நீ இளம்பறியா?''

அவன் வேகமாக உள்ளே போக...

ஸ்தம்பித்துப் போய் நின்ருள் மோகனு...

* * * * * * * *

''நம்ம பாலாவைப் பண்ணிக்கறி யாம்மா?''

காப்பி பில்டர் தேய்ந்து விட்டா லும் சரி, ஒருவர், இருவருக்குக் குறை வாகப் பொடி போடும் நேரங்களிலும் சரி, பொடியை நன்ருக அமுக்கிவிட்டு அதன்மேல் ஒரு குழிக் கரண்டியை வைத்துக் கொதிக்கும் வெந்நீர் நேராகப் பொடியில் படாமல் கரண்டியின்மேல் ஊற்றி மூடி வைத்தால் டிகாக்ஷன் சொட்டு சொட்டாய் 'திக்'காய் இறங் கும்.

—சரோஜ்.



ஃபீஸ், ஹாஸ்டல் செலவு, துணிமணிகள், புத்தகங்கள், பயணச் செலவு... இன்னும் எத்தனை எத்தனையோ!

உங்கள் மகன் காலேஜில் சேரத் தயாராகும்போது, நீங்கள் தயாரா?

உங்கள் மகனுக்கு கல்லூரிப் படிப்பு அளிப்பதென்பது உங்கள் பண வசதியை பாதிக்கக்கூடும். அதற்கு இன்று முதலே திட்டமிட வேண்டும்.

ஈஸி.ஃபீஸ்-வேறெந்த வங்கியும் அளிக்காத திட்டம்

உங்கள் குழந்தையின் வயதைப் பொருத்து-(மகனோ மகளோ வயதில் சிறிதாக இருந்தால், சேமிக்க வேண்டிய தொகை சிறிது) மாதந்தோறும் ஒரு சிறிய தொகையை (ரூ. 55 போல் ஒரு சிறு தொகையை) சில ஆண்டுகளுக்கு (5 முதல் 10 ஆண்டுகள் வரை) கத்தோலிக் சிரியன் பாங்கில் சேமித்து வாருங்கள். அல்லது இதற்கு பதிலாக நீங்கள் மொத்த தொகையாகவும் முதலீடு செய்யலாம்.

உங்கள் குழந்தை பள்ளிப் படிப்பை முடித்ததும், வங்கி உங்களுக்கு பணம் தரத் தொடங்கும். மகனின் பிளஸ்-2 படிப்புக்கான நுழைவுக் கட்டணத்துக்காக ரூ. 1000/- மும், அதன் பின் மாதந்தோறும் ரூ. 200/- வீதமும் அளித்துவரும்.

மறுபடியும் உங்கள் மகன் கல்லூரிப் படிப்பு அல்லது தொழிற்கல்விக்கு சேரும் போது நுழைவுக் கட்டணமாக ரூ. 1500/- முதல் ரூ. 3000/- வரையிலும் பின்னர் படிப்பு முடியும் வரை மாதந்தோறும் ரூ. 200/- வீதமும் அளித்து வரும். அதுமட்டுமல்ல

விவரங்களுக்கு உங்கள் அருகிலிருக்கும் கிளையை அணுகுங்கள்

உங்கள் ஊரின் தொலைபேசி புத்தகத்தைக் கொண்டு கிளைகளின் விலாசத்தை அறியலாம். கேரளாவிலுள்ள ஏறக்குறைய 200 கிளைகளைத் தவிர்த்து, தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலும் கிளைகள் உள்ளன.

'ஈஸி.ஃபீஸ்' அளிப்போர்

கத்தோலிக் சிரியன் பேங்க்

தி கத்தோலிக் சிரியன் பேங்க் லிமிடெட்

தலைமை அலுவலகம்:

செயின்ட் மேரீஸ் காலேஜ் ரோடு

த. பை. எண்: 502, திருச்சூர் 680 020

WL 6909 OBA

"அப்பா.... என்ன நியாயம் இதுல...?"

"மோகனா, தோ பாரு... இது மாதிரி நாய்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க நமக்கும் தெரியும்னு நிரூபிக்கணும்... அவர்களைப் பத்திப் போலீஸ்ல ஒரு புகார் லாட்ஜ் பண்ணப் போறேன்... கேஸ் போட்டுச் சீரழிக்கப்போறேன்... அதுஎன்னோட கணக்கு... நான் தீர்த்துக்கறேன்... நீ சொல்லு பாலாவைப் பிடிச்சிருக்கா?"

"அப்பா...

"அவனுக்கு உன்னை விடச் சம்பளம் கொஞ்சம் கம்மிதாம்மா... ஆனாலும் நல்ல உத்தியோகம்... கண்ணுக்கு லட்சணமா இருக்கான்... அவன்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டேன். அவன் தயார்மா... ஏழையா இருந்தாலும் நல்ல பிள்ளை, என்னம்மா?"

எல்லாத்தையும் நீங்க சொல்லலாம்... நான் எதையுமே சொல்லலையேப்பா..."

"ஏம்மா பேசாம இருக்கே... நீ அந்த ராம் தான் வேணும்னு நினைச்சுண்டு இருக்கியா? அவனோட நமக்கென்ன இனிமே? விட்ட குறையா, தொட்ட குறையா?"

"தொட்ட குறைதாம்பா... சொல்ல வழியில்லாம துடிச்சிண்டு இருக்கேம்பா..."

"உனக்குச் சம்மதமே இல்லேயோ... உங்கப்பாவோட கௌரவம் இதுல அடங்கியிருக்குன்னு நீ புரிஞ்சுக்கணும்... அவர் விருட்டென்று நகர,

எல்லாரும் கௌரவம் பேசி...

ஒரு பெண்ணைச் சீரழிச்சிட்டீங்களே... பாவிகளா!

பாலா!

நான் சேதப்பட்ட கதை உனக்குத் தெரிஞ்சா என்னை ஒப்புக்குவியா பாலா?

"உன்னை ஏமாத்தி உனக்கு மனைவியா வர மனசு சம்மதிக்கலையே பாலா..."

'ஃபர்கெட் இட்!'

'ஃபர்கெட் இட்!'

ஒருவிதச் சீற்றத்தோடு பற்களைக் கடித்தாள் மோகனா.

• • • • • • •

குக்கரில் வைக்காமல் தனியாய் புளி சேராத கூட்டு வகைகள் செய்யும் பொழுது அளவான ஜலத்தில் அடியில் பருப்புகள், மேலே காய்கறி நறுக்கியது, கருவேப்பிலை, சாம்பார் பொடி, பெருங்காயம் எல்லாவற்றையும் போட்டு (உப்பு தவிர) மிதமான தீயில் மூடி வைத்து விட்டால் சமீப காலத்தில் யாவும் வெந்துவிடும். இவை வேகும் வரை கரண்டியால் கிளறவே கூடாது. வெந்ததும் கிளறி உப்பு போட்டு மாவுக் கரைத்துவிட்டு இறக்க வேண்டும்.

—சரோஜா.

சேர்மன் அழைப்பதாக ப்யூன் வந்து சொல்ல, உள்ளே போனான் ராம்...

"உக்காருங்க ராம்... கங்க்ராட்ஸ்!"

"நா சொல்றதுக்கு முன்னாலேயே என் கல்யாணம் பத்தித் தெரிஞ்சு போச்சா சார்?"

"நான் அதைச் சொல்லலே... அகர்வால்கிட்டேயிருந்து அந்த எட்டு லட்சத்தை கலெக்ட் பண்ணிட்டு வந்ததுக்கு..."

"எட்டு லட்சமா? அகர்வாலா?"

"யெஸ்... அகர்வால் இப்பத்தான் போன் பண்ணினார்...

"நேத்திக்கு நீங்க வந்ததாவும்... கடைசில உங்க பேச்சுக்கு மசிஞ்சு அவரே தந்துட்டதாகவும் சொன்னார்... ரொம்ப நாள் ட்யூ அது. சாதுர்யமா சாதிச்சிட்டீங்க... டெபாஸிட் பண்ணியாச்சா...?"

அதிர்ந்தான் ராம்.

"சார் அகர்வாலே போன் பண்ணினாரா?

"சர்ட்டன்லி. அதுல உங்களுக்கு என்ன சந்தேகம்?"

"ஸார், என்னவோ தப்பு நடந்திருக்கு! நான் அகர்வால் வீட்டுக்கு இன்னும் போகவே இல்லே... அந்த எட்டு லட்சத்தைப் பத்தி எனக்கு எதுவுமே தெரியாது... மோரோவர், நீங்க சொன்ன தேதியும் இன்னும் பதினைஞ்சு நாளுக்கு அப்புறம் தான் உங்க டைரில ரெட்டுல வட்டம் போட்டிருக்கு... பார்த்தாத் தெரியும்..."

என்ன மிஸ்டர் ராம் இது வேடிக்கை..."

"ஸார்.... நீங்க....?"

"முக்கியமான சங்கதிகளுக்கு சிவப்பு வட்டம் போடுவேன்... இதோ நேத்திய தேதில கூட வட்டம் போட்டிருக்கேன். நான் மறந்து கூட போயிருக்கலாம். அது மட்டுமில்ல. நேத்திக்கு நீங்க உங்க கைப்பட... அகர்வால் வீட்டுக்குப் போறதா, அவுட்-டூட்டி ஸ்லிப் எழுதி வச்சிருக்கீங்க... இதோ அந்த ஸ்லிப்..."

சார் நான் எழுதினது நிஜம்தான். ஆனா, அங்க போகலே...

"என்ன ராம் காது குத்தறீங்க... எட்டு லட்சம் கொட்டாவி விடச் சொல்லுதா? நீங்க அங்க போனதுக்கு சாட்சி இருக்கு..."

"ஸார் இது அபாண்டம்! நான் சத்தியமா அங்க போகலே..."

"நோ. இனிமே அதைப் பத்திப் பேசி உபயோகமில்லே.... போலீஸ்ல புகார் கொடுக்க வேண்டியதுதான்... சட்டம் பேசட்டும்..."

"ஸார், போலீஸ்...?"

"யெஸ்... இது ரொம்பப் பெரிய தொகை மிஸ்டர் ராம்...

"சார் நான் அங்க போகலேன்னு நிரூபிச்சிட்டா?"

"முடிஞ்சா செய்ங்க... நானும் சந்தோஷப்படுவேன்... டெலிபோனை எடுத்து விஜிலன்ஸை அழைக்க, ராம் வியர்த்தான்...

சற்று நேரத்தில் அந்த ஆபீஸே கூடி கெசகெசக்கத் தொடங்க, செய்தி காட்டுத் தீ போல பரவியது...

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடதடவென வந்து இறங்க,

"சொல்லுங்க ராம்..."

''என்னோட சொந்த வேலையா நான் வெளியே போனது நிஜம்...''

''லீவு போட்டீங்களா?''

''இல்லே...''

''ஏன் இல்லே? சொந்த வேலையா ஆபீஸ் நேரத்துல போயிருக்கீங்க. அதுவும் ஆன்–ட்யூட்டி ஸ்லிப் எழுதி வச்சுட்டு! அதுவும் அகர்வால் வீட்டுக்குப் போறதாச் சொல்லிட்டு...''

''நோ நான் போகலே...''

''மிஸ்டர் கோபி கொஞ்சம் வர்றீங்களா?''

வந்தான்.

''சொல்லுங்க...''

''பெரிய தொகை கலெக்ட் பண்ணப் போறதா சொன்னான். எவ்வளோன்னு கேட்டேன். கான்பிடன்ஷியல்னு சொல்லிட்டுப் போயிட்டான்.''

''மிஸ்டர் அகர்வால்!''

வந்தார்...

''காலேல உங்க வீட்டுக்கு இவர் வந்தாரா?''

ராமைப் பார்த்த அகர்வால் கண்களை இடுக்கிக் கொண்டு பெரிய தொப்பை குலுங்க, 'ஆமாம்' என்றான்.

''அடப்பாவி! நான் உன்னைப் பார்த்ததே இல்லேயே!''

''வரும்போது என்ன டிரஸ்ல இருந்தார்?''

''வெள்ளை பேண்ட், வெள்ளைச் சட்டை.''

அதிர்ந்தான் ராம்....

சட்டென்று அது தோன்றியது ராமுக்கு, 'வேறென்ன வெச்சிருந்தேன்னு சொல்லட்டும்...!''

''கையிலே மஞ்சள்நிற ஜோல்னாபை...''

''நோ... அதை கோபி கையில குடுத்தேன்... தேங்காய் சாதம் நல்லாயிருந்ததுனு கோபி சொன்னான்... கேளுங்க ஸார்... அதுல நீல நிற பூப்போட்ட கர்ச்சீப் இருக்கும்...''

''எங்கிட்ட எப்பவும் தரலேயே...'' கோபி கையை விரிக்க,

''நீங்க சொன்ன அந்த நீல நிற கர்சீப் அகர்வால்வீட்டுத் திண்ணையில்கிடைச்சது ராம்...'' அதிகாரி அதை எடுத்துக் காட்ட,

''நோ... என்னைச் சுத்தி நடக்கற சூழ்ச்சி இது... நான் ஒப்புக்க மாட்டேன்...''

''உங்கப்பாவே இதுக்கு சாட்சி ராம்..''

''அப்பாவா?''

''காலேல நீங்க புறப்படும் போது அவர் லீவு போடச் சொன்னாராம்... அகர்வால் வீட்டு கலெக்ஷன் விஷயத்தை அவர்கிட்ட நீங்க சொல்லியிருக்கீங்க...''

நாக்கு உலர்ந்து போனது ராமுக்கு ...

''இப்ப சொல்லுங்க, எங்க அந்தப் பணம்? உடனே குடுத்துட்டா கேஸை வித்ட்ரா பண்ணிடறோம்? உங்களை மன்னிக்க சேர்மன் தயாரா இருக்கார்.''

''அய்யோ அது எங்கிட்ட இல்லே... நான் அன்னிக்கு அகர்வால் வீட்டுக்குப் போகலே. இது சத்தியம்...''

''வேறே ஏதாவது சொல்லுங்க ராம். ம்...: கம் அவுட்! எங்கே அந்தப் பணம்?''

''சரி எத்தனை மணிக்கு நான் உங்க வீட்டுக்கு வந்தேன், எவ்ளோ நேரம் அங்க இருந்தேன்னு உங்களால சொல்ல முடியுமா? அகர்வாலிடம் கேட்டான்...

''பதினொண்ணு இருக்கலாம்... ரெண்டு மணிக்கு மேல போனீங்க...''

''அதுக்குக் கூர்க்கா சாட்சி'' என்றார் ஒரு அதிகாரி.

''குட்... 11 முதல்ரெண்டு மணி வரை நான் இருந்தது வேற ஒரு இடம்... அதுவும் ஒரு பெண்ணோட... அதை அந்தப் பெண்ணை வச்சே என்னால நிரூபிக்க முடியும்... அவளும் பேங்க்ல வேலே செய்யற பெண்... அதுக்கு முன்னால எங்கப்பாவையும், அந்தப் பெண்ணேயும் சந்திக்க நான் பேசணும்...''

''ஓ. கே... அவகாசம் தர்றோம்... அது வரைக்கும் எங்க ஆள் உங்களுக்கு செக்யூரிட்டி... நாளைக்கு காலேல அந்தப் பெண் சாட்சி சொல்லணும். அதுக்கப்புறம்தான் இந்தக் கேஸ்... ஃபர்தரா தொடரும்.''

அவர்கள் கலைய, பரபரப்பாக செயல்படத் தொடங்கினான் ராம்.

* * * * * * *

வாசலில் டாக்ஸி வந்து நிற்க,

மோகனா வெளியே வந்தாள்...

அவசரக்கால்களை நிலத்தில் பதித்து, பாய்ந்து வந்தான் ராம்... பின்னால் அப்பாவும், அம்மாவும்.

''மோகனா, காப்பாத்து!''

''மகாதேவன் எங்கம்மா?''

''அப்பா வெளில போயிருக்கார்... கல்யாண விஷயமாகக் கொஞ்சம் வேலே இருக்கு ... என்ன விஷயம்?''

''எங்களை மன்னிச்சிடும்மா... வைரத் தோடும் வேண்டாம்... ஒண்ணும் வேண்டாம். நீ சொல்லப் போற ஒரே ஒரு வார்த்தையிலதான் இவனோட வாழ்க்கையே இருக்கும்மாப. எங்க கௌரவமே அதுலதாம்மா அடங்கியிருக்கு!''

''நீங்க பேசறது எதுவுமே புரியலே எனக்கு... ஒக்காருங்க முதல்ல...''

காலேயில் பாக்கு மிகுதியாகவும், நடுப் பகலில் சுண்ணாம்பு மிகுதியாகவும், இரவில் வெற்றிலே மிகுதியாகவும் இருக்குமாறு தாம்பூலம் தரிக்க வேண்டும்.

தாம்பூலம் போடும் போது, வெற்றிலே நுனியையும், காம்பையும், முதுகு நரம்பையும் எடுக்காமல் ஒரு போதும் உபயோகிக்கக் கூடாது. வெற்றிலேயின் மூலிகை குணம் தெரியாமல்தழைமெல்லுபவர்கள் இனிமேல் தகுந்த முறையில் அதனை உபயோகிக்கட்டும்.

—ராஜீ சீனிவாசன்.



கல்யாணங்களில் தம்பதிகளை ஊஞ்சலில் உட்கார வைத்து சுமங்கலிப் பெண்கள் ஊஞ்சல் பாட்டுப் பாடுவார்கள். இதன் தத்துவம் என்ன தெரியுமா?

மேலேயிருந்து தொங்கும் சங்கிலிகள் கர்ம பாசத்தால் மேலான பகவானிடத்திலிருந்து பூமியில் இறங்கி இந்த மானிடப் பிறவியைப் பெற்றிருக்கிறோம் என்பதைக் காண்பிக்கின்றன.

ஊஞ்சல் முன்னும் பின்னும் செல்வது நமது வாழ்க்கை அலைபோல் சஞ்சலமானது. சிறிது முன்னுக்கு வரும்; சிறிது பின்னே போகும் என்பதை உணர்த்துகின்றன.

இந்த சஞ்சலத்தைப் போக்க ஊஞ்சல் அசைவற்ற நிலையில் இருப்பது போன்ற ஸ்திரமான ஒன்றை நாம் பின்பற்ற வேண்டும்.

— ஸ்ரீமதி என். பங்கஜம்.

ராம் தொடங்க,
அப்பா தொடர,
அம்மா பக்கவாத்தியம் அமைக்க,
புலம்பலும் அழுகையுமாக அவர்கள் சொல்லிக் கொண்டே போக,
அவர்கள் முடிக்கும் போது...
வாசலில்.
பாலாவோடு மகாதேவன் நின்று கொண்டிருந்தார்...
வாங்கோ...

"சம்பந்தி, எங்களை மன்னிச்சேன்னு சொல்லுங்கோ..."

"அதிருக்கட்டும்... இவர் மிஸ்டர் பாலா, என்னோட வருங்கால மாப்பிள்ளை..."

"நோ... இல்லே மாமா. நான்தான் உங்க மாப்பிள்ளை... அதுல எந்தச் சந்தேகமும் இனிமே உங்களுக்கு வேணாம்... மிஸ்டர் பாலா, இந்த மோகனா என்னோட சில நிமிஷங்களைக் கழிச்சிருக்கா..." ராம் அலறினான்.

"அதை அவளே எனக்குச் சொல்லியாச்சு....! பாலா நிதானமாக பதில்சொன்னான்... "அவ செஞ்சது தப்புதான்... இருந்தாலும் நிச்சயிக்கப்பட்ட வாழ்வுதானே, புருஷன் மனம் கோண வேண்டாம்னு சுகப்போடதான் இடம் கொடுத்திருக்கா... அவ செஞ்ச அந்தத் தப்புக்கு இந்த நாப்பத்தெட்டு மணி நேரமா தொடர்ந்து வந்த அதிர்ச்சிகளே அவளுக்குத் தண்டனைதான்... இதுக்கு மேலே வேணும்னு நினைக்கறேன்..."

"நோ, எவ்ரிதிங் ஈஸ் ஓ.கே. அவளும் நினைச்சபடியே வாழலாம்... நாளைக்கு விஜிலன்ஸ்ல நடந்ததை அப்படியே சொன்னாப் போதும்.... மறந்துடுங்க மகாதேவன்...."

"மிஸ்டர் ராம் நீங்க... மகாதேவன் ஆரம்பிக்கும் முன்னால் குறுக்கே நுழைந்தாள் மோகனா...

"கொஞ்சம் இருங்கப்பா... இனிமே நான் பேசணும்..."

"மிஸ்டர் ராம், இந்த பாலாவை என்ன செய்யலாம்?"

"நீ எனக்குத்தான் மோகனா...!"

"இருக்கட்டும்... அது அப்பத் தோணலே உங்களுக்கு-... சம்பவம் தெரிஞ்சும் இந்த பாலா என்னை ஏத்துக்க சம்மதிச்சிருக்கார். இது எங்கப்பாவோட கௌரவப் பிரச்னை ராம். அதுல எனக்கும் பங்கு இருக்கு..."

அதே வார்த்தைகள்... சவுக்கடி! துவண்டான் ராம்.

"ஒரே வாரத்துல வைரத்தோடு, எப்படி முடியும் ஒரு மனுஷனாலே... கேட்டா, பெண்ணைப் பெத்தப்பவே யோசிச்சிருக்கணும்னு எங்கப்பாவுக்குச் சூடு..."

"கோமேஸ்வரியை விட்டு அந்த எட்டு லட்சத்தைக் கட்டச் சொல்லலாமே!"

"செய்யாத குற்றத்துக்கு நான் பழி சுமக்கறேன் மோகனா..."

"ரெண்டு பேர் செஞ்ச குற்றத்துக்கு தண்டனையை நான் மட்டுந்தானே போன நிமிஷம் வரைக்கும் சுமந்தேன்..."

"மோகனா, நீ என்னோட உடமை..."

"இது மூடின அறைக்குள்ளே நிருபணமாயிருக்கு ... ஃபர்கெட் இட்!"

"மோகனா!"

"இதை நான் சொல்லலை.. மறக்கச் சொன்னது நீங்க... அதனாலே நான் மறந்துட்டேன்..."

"மோகனா..."

"ஃபர்கெட் இட்!"

"நீ சாட்சி சொல்ல வரலேன்னா அந்தப் பணத்தையும் கட்டி, வேலையும் எனக்குப் போகும் மோகனா ப்ளீஸ்!"

"ஃபர்கெட் இட்!" பலமாகச் சிரிக்கத் தொடங்கிய மோகனா, "பாலா, அவங்களை வெளியே அனுப்பிக் கதவைச் சாத்துங்க" என்றாள்.

தள்ளாடிப் போய் ராம் படியிறங்க,

"ஃபர்கெட் இட்!" என்று சொன்ன படியே அவள் கண்கள் தளும்பும் வரை சிரித்துக் கொண்டே இருந்தாள்...

ராமை ஏமாற்றி, தந்திரமாக வலையில் சிக்க வைத்த சேர்மன், அகர்வால், கோபி மூன்று பேரும் அங்கே சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

* * * * * * * * * *

“அஞ்சறைப் பெட்டியில் அஞ்சும் மூணும் அடுக்கா இருந்தா, அறியாதப் பெண்ணும் கறி சமைக்கும்” என்பது பழமொழி. அஞ்சறைப் பெட்டி அடுக்காய் இருந்தா மட்டும் இல்லை, சமையற்கட்டும் சிறந்த கண்காணிப்போடு, கட்டுப்பாட்டுடன் கட்டப்பட்டிருந்தால் எந்தப் பெண்ணுக்கும் சமையற்கலையில் நாட்டம் இயல்பாகத் தோன்றிவிடும். அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று சமையற்கலை.

மனை இலக்கணத்தில் சமையலறை வடகிழக்குத் திசையில் அமைய வேண்டும் என்று கூறப்படுகிறது. அத்திசை அக்னிக்கு உரிய திசையாகப் போற்றப்படுகிறது. சிலர் வீடு கட்டும் போது மற்ற அறைகளை எல்லாம் மிகப் பெரிதாக அமைப்பதில் நாட்டம் செலுத்தி, சமையலறையை மட்டும் மிகச் சிறிதாக—ஒரு ஆள் மட்டும் நின்று சமைக்கக் கூடிய வகையில் கட்டிவிடுவர். பல வேளைகளில் இது ஒரு பெரிய சிக்கலாகத் தோன்றும். நகராட்சி விதிப்படி, சமையலறை குறைந்த பட்சம் 80 சதுர அடி அளவில் இருத்தல் வேண்டும். வசதி உள்ளவர்கள் 120 சதுர அடி அல்லது அதற்கும் மேற்பட்டுள்ள அளவில் கட்டிக் கொள்ளலாம்.

சமைத்தல், தேவையான பொருட்களைச் சேமித்து வைத்தல், பாத்திரங்களைக் கழுவுதல், (சில வேளைகளில்) சாப்பிடுவது முதலிய செயல்கள் சமையலறையில் இடம் பெறுவதற்கேற்ப, இதனைக் கவனத்தில் கொண்டு சமையலறையை அமைத்தல் வேண்டும். சமையல் செய்யும் போது போக, வர எந்தத் தடையும் ஏற்படாத வகையில் வசதியாக அமைக்கப்பட வேண்டும். கட்டடக் கலை வல்லுநர்கள் சமையல் அறையை நான்கு வகையாகக் கட்டலாம் என்று உரைத்துள்ளனர். அவை: 1. ஒரு பக்க மேடை, 2. இரு பக்க மேடை, 3. 'ட' வடிவ மேடை, 4. 'U' வடிவ மேடை அமைப்புகளாகும்.

சமையலறையில் மேடை அமைப்பு, நீர் கழுவு தொட்டி (Sink) சன்னல் இவை அவசியம் இடம் பெற வேண்டும். சன்னல் அருகில் எரி அடுப்பு அமையக் கூடாது. சாமான்களைச் சுத்தம் செய்யும் குழாய் நீர்த் தொட்டி (Sink) சன்னல் அருகில் இருத்தல் நலம். சமையலறை கழுவி, துடைத்து தூய்மை செய்ய எளிதாக இருக்கும் வகையில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அடுப்பு அமையும் இடம் வெப்பம் தாங்கக் கூடியதாகவும், கழுவும் போது நீரால் எவ்விதப் பாதிப்பும் (Water proof) அடையா வண்ணம் கட்டப்படல் வேண்டும். மேடையும், அலமாரிகளும் கடப்பைக்கல், பளிங்குக் கல் (வசதி உள்ளவர்க்கு) இவற்றால் சமைத்தல் நலம். தரையில் மொசைக் இடப்பட்டிருக்கலாம். அலமாரிகள் தேக்கு போன்ற மரத்தால் அமைக்கப்பட்டால் நெடுநாள் உழைக்கும். வசதி படைத்தவர்களே அமைக்க இயலும்.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் மரின் பிளை (Marine Ply) பயன்படுத்தலாம். அல்மாரிக் கதவுகளுக்கு பிளாஸ்டிக் லாமினட் பயன்படுத்தலாம். சிக்கன முறையைக் கையாள வேண்டுமெனில் நல்ல இரு

சிறந்த சமையலறை

இப்படித்தான் இருக்கும்!



மல் பெயிண்ட் அடிக்கலாம். கரப்பான் பூச்சிகள் நுழையா வண்ணமும், தூய்மை செய்ய எளிதாக அமையும் வண்ணமும் அலமாரிகள் செய்யப்பட வேண்டும். வேலை செய்யும் மேடையிலிருந்து சுவர், சுமார் இரண்டடி வரை டைல்ஸ் போடப்பட்டிருந்தால் நலம். சிறப்பாக எரி அடுப்பு, நீர்த் தொட்டி அமையும் இடங்களில் இவ்வமைப்பு முறை இருந்தால் தூய்மைப்படுத்துவது எளிதாகும். டைல்ஸ் போட இயலாதவர்கள் இனாமல் பெயிண்ட் அடிக்கலாம்.

எக்ஸாஸ்ட் ஃபான் வைப்பதாக இருந்தால், எரி அடுப்புக்கு மேலாக அமைத்தல் வேண்டும்.. வாயு உருளைக்கும் அடுப்புக்கும் இணைக்கப்படும் ரப்பர் குழாய், சுற்றி வளைத்து அமையாமல் அருகில் அமைதல் வேண்டும்.

சமையலறையின் வண்ணம் வெளிறிய வண்ணமாக இருந்தால் அறையைப் பெரிதாகக் காட்டுவதோடு, வெளிச்சமாகவும் இருக்கும். சமையலறை விளக்கு பிரகாசமானதாகவும், எப்போதும் பயன்படக் கூடிய நிலையில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். விளக்கு முக்கியமான இடங்களில் நிழலை ஏற்படுத்தா வண்ணம் பொருத்தப்படல் வேண்டும். சமைக்கும் அடுப்பு, அலமாரிகள், நீர்த் தொட்டி (Sink) ஆகிய இடங்களில் நல்ல ஒளிதரக் கூடிய வகையில் விளக்கு பொருத்தப்பட வேண்டும்.

குறைந்த அளவிலும், மிகுந்த அளவிலும் பயன்படத்தக்க வகையில் மின்சார இணைப்புக்களை (Plug points) அமைத்தல் வேண்டும். (மிக்ஸி, க்ரைண்டர் இவற்றிற்கு ஏற்ற வண்ணம்.)

சமையலறையில் திறந்த அலமாரிகளில் வைக்கும் பிளாஸ்டிக் டப்பாக்கள், கைத் துண்டுகள், விளக்குக் கூடு (Shade) இவை நிறப் பொருத்தம் பெற்றிருந்தால் அழகூட்டுவதாய் அமையும்.

1. உணவுப் பொருட்கள், பாத்திரங்கள் முதலியவற்றைச் சேமித்துப் பாதுகாத்தல்.

2. சமைத்தல்
3. சமைத்த பாத்திரங்களைக் கழுவுதல்

உணவுப் பொருட்களையும், பாத்திரங்களையும் அழகாக, முறையாக அலமாரியில் அடுக்கி வைத்திருத்தல் வேண்டும். தேவைக்குரிய பொருட்களை அன்றாடத் தேவைக்குரியவை' வாரத் தேவைக்குரியவை, மாதாந்திரத் தேவைக்குரியவை' சிறப்பாகப் பயன்படுத்துபவை என வகுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அன்றாடத் தேவைக்குரியவற்றை எளிதில் எடுக்க வசதியாக அருகில் உள்ள அலமாரிகளிலும், பிறவற்றைத் தேவைக்கு ஏற்பவும் வைக்க வேண்டும். சேமிக்கும் அறை இருந்தால் (Store Room) மாதாந்திர, வருடாந்திரத் தேவைப் பொருட்களை வைக்கலாம்.

பொருட்களை வைப்பதற்கு இடமகன்ற, குறுகிய அலமாரிகள், மூடிய அலமாரிகள், திறந்த சுவர் அலமாரிகள், இழுப்பறைகள் முதலியவற்றைப் பயன்படுத்தலாம். அன்றாடத் தேவைப் பொருட்களை, அடுப்பு மேடை கீழ் அமைக்கப்பட்ட அலமாரிகளில் வைக்கலாம்.

½ அடி (6 அங்) அகலமுள்ள திறந்த அலமாரி அடுப்புக்கு அருகாமையில் இருந்தால், அன்றாடத் தேவைக்குரிய மசாலா, பருப்பு வகைகள், இவற்றை வைப்பதற்கு வசதியாக இருக்கும். அவ்வலமாரிகளில் கரண்டிகளை மாட்டுவதற்கு கொக்கிகள் அமைத்தால் பயன்படுத்த எளிமையாக இருக்கும். பொதுவாக மேடைக்குக் கீழ் உள்ள அலமாரிகள் 2' உள்ளிடமும், 2½' — 2 3/4' உட்பட்ட உயரமும் உடையனவாய் இருத்தல் நலம். இவற்றில் உள்ள அடுக்குகளில் குக்கர் போன்ற பெரிய பாத்திரங்களை வைக்கலாம்.

டம்ளர்கள், தேநீர்க் கோப்பைகள், சிறிய டப்பாக்கள், சமையல் புத்தகங்கள் முதலியன வைக்க அலமாரியில் சிறிய தட்டுகள் வசதியாக இருக்கும். கத்திகள், தேக்கரண்டி வகைகள், முட்கரண்டிகள், முட்டை அடிப்பவை, அளவைகள், கைத்துண்டுகள் முதலியவற்றை இழுப்பறைகளில் (Drawers) வைக்கலாம். கம்பி வலைத் தட்டுகள் உறு

சர்க்கரைப் பொங்கல்


தேவையான பொருட்கள்:


அரிசி — 1 கிலோ,
சர்க்கரை — ½ கிலோ,
தேங்காய் — 1,
ஏலக்காய் — 10 கிராம்.

செய்முறை:

1. அரிசியைக் கழுவி, ஒன்றுக்கு ஒன்றரை என்ற அளவில் தண்ணீர் விட்டு, குக்கரில் வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்.
2. இத்துடன் துருவிய தேங்காயையும், சர்க்கரையையும், பொடி செய்த ஏலக்காயையும் சேர்த்துக் கிண்டவும்.
3. நன்றாகக் கிண்டி கையில் ஒட்டாத பதம் வரும்போது இறக்கவும்.

இது சாப்பிடுவதற்குப் புட்டரிசி போல் ருசியாக இருக்கும்.





SHARAVANA



Ranga

காய்ப் பாட்டில்கள், ஜாம் போன்றவை வைக்க வசதியாக இருக்கும்.

சமையலுக்குப் பயன்படுத்தும் தண்ணீர் அருகாமையில் மூடி வைக்கப்பட்டிருக்க வேண்டும். மேடையில் அடுப்பிற்கு இருபுறங்களிலும் 2 அடி அளவிற்கு இடம் இருந்தால், ஒருபுறம் காய்கறிகள் நறுக்குவது போன்றவற்றைச் செய்யவும், சமைத்தவற்றை எடுத்து இறக்கி வைக்க மறுபுறமும் பயன்படும்.

கைகளைத் துடைக்கும் துண்டுகள், சப்பாத்தி போன்றவைத் தயாரிக்கையில் மூடி வைக்கத் தேவையான துண்டு — ஆகியவற்றைத்தூய்மையாகஒருஇழுப்பறையில்வைக்கலாம். ஏதாவது சிறு தீக்காயம் ஏற்பட்டால் உடனே தடவுவதற்கு பர்னல், தேங்காய் எண்ணெய் போன்றவற்றை ஒரு மூலையில் வைத்தல் வேண்டும்.

அவ்வப்போது அரைப்பதற்கு, இடிப்பதற்குப் பயன்படுத்தும் அம்மி, சிறு உரல் போன்றவை நீர்த்தொட்டிக்கு அருகாமையில் இருப்பது நலம். மிக்ஸி போன்ற மின்சாரத்தில் பயன்படுத்தும் கருவிகள் மேடையின் ஒரு பகுதியில், அடுப்பிற்கு அருகில் இல்லாமல், மின்சார இணைப்புகள் பொருத்தப்பட்ட இடத்தில் இருந்தால் நல்லது. பிற்காலத்தில் மின் அடுப்பு வாங்கினால் பயன்படுத்த ஏற்ற வண்ணம் மின் இணைப்புகள் அமைக்கப்படல் வேண்டும்.

இவ்வண்ணம் வசதியாக, வகையாக, சிறப்பாகச் சமையலறை விளங்குமானால் வனிதையர் உள்ளம் சமையற்கலையில் நாட்டமுறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கட்டுக்கோப்பாகக் கலையழகுடன் திகழும் போது சமையலறையும் ஒரு கலைக் கூடமாகத் திகழ முடியும்.

கே. லட்சுமி நாராயணி

நிச்சயம் கல்யாணம் செய்துப்பேன்!

சென்ற மாதம் கோவையில் மயூரி சுதா சந்திரனுடன் கோவை வாசிப் பெண்கள் கலந்துரையாடினர். அதிலிருந்துசிலசுவையான பகுதிகள் ...

இந்திரா கணேசன்: இப்போது நீங்கள் பிரபலமாக இருக்கிறீர்கள். அனுதாபத்தை அடிப்படையாகக்கொண்ட இந்தப்புகழை நீங்கள் விரும்புகிறீர்களா?

சுதா: நிச்சயமாக இல்லை. பரத நாட்டியத்தின் மூலமாக நான் புகழ் பெறுவதைத் தான் விரும்புகிறேன். ஆனால் அதே சமயம் என்மேல் அனுதாபப்படுகிறவர்களுக்கு நான் நன்றி சொல்லவும் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கீதா: ''இப்போ நிறைய பாராட்டு, பரிசு எல்லாம் வாங்கியிருக்கீங்க. இந்த சமயத்தில நீங்க எப்படி ஃபீல் பண்றீங்க?''

சுதா: ''நான் வாழ்க்கையில பெரிய கனவுகள்ளாம் காண்றவள் இல்லே. அதன் போக்கிலஏத்துக்கறவ... என்னால ரொம்ப பெருமையா நினைக்க முடியலே. அதே சமயம் சந்தோஷமாகவும் இருக்கு...''

சவிதா: ''நீங்க கால் ஊனமாகி இப்போ நாட்டியமாடறீங்க. இந்த மாதிரி வாழ்க்கையில முன்னுக்கு வர்றதுக்கு நீங்க யாரையாவது முன்னோடியா நினைச்சீங்களா?''

சுதா: ''இல்லே. பரதநாட்டியம் என்னோட உயிர். சின்ன வயசுலேந்து என்னை ரொம்ப உற்சாகப்படுத்தி எனக்குக் கத்துக் கொடுத்தது எங்கம்மா. அதனால இதனால இருண்டு போன என் வாழ்க்கைய நான் திசை திருப்பிக்கிட்டேன். இந்த நாட்டியம் இல்லன்னா நான் என்னவாகியிருப்பேன்னு எனக்கே தெரியலே...''

மோகினி: ''செயற்கைக் கால் வச்சு நடனமாடும்போது வலி இருக்கிறதா?''

சுதா: ''ஆரம்பத்தில ரொம்ப வேதனையா இருந்தது. இப்பப் பழக்கமாயிட்டதால வலி குறைஞ்சிருக்கு. உங்களை மாதிரி இருக்கிறவங்க கொடுக்கிற உற்சாகத்துல வலியே தெரியலே...''


ஸ்ரீலதா: ''உங்க எதிர்காலத்தைப் பத்தி என்ன நினைச்சிருக்கீங்க. கல்யாணம்...?''

சுதா: ''நிச்சயமா அம்மா, அப்பா பாத்துக் கல்யாணம் செய்து வைக்கிறவருக்குச் சந்தோஷமா கழுத்தை நீட்டுவேன். மத்தபடி பெரிய லட்சியம் அது இதுன்னு நினைக்கலே. அன்றன்றைக்கு ஏற்படுகிற சந்தோஷங்களை, கஷ்டங்களை ஏற்று, அதிலிருந்து மேலே போகணும்னு நினைக்கிறவ நான்...''

தொகுப்பு: பார்கவி.

படங்கள்: பிரஸ் ஃபோட்டோ பீரோ.





அந்த 3 நாட்கள்

மாதவிடாய் நாட்களிலும், அதற்கு முன்பு சில நாட்களும் ஏற்படும் உடல் உபாதைகளினால் பல பெண்கள் கஷ்டப்படுகின்றனர். இதுசின்னப்பெண்களுக்கும், வயதான மாதர்களுக்கும் ஏற்படுவதுதான்.

நாட்டு வைத்தியத்திலும், இங்கிலீஷ் வைத்தியத்திலும், பலவிதமான நிவாரணிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவைகள் சில சமயங்களில் பலன் அளிக்கும். டாக்டரிடம் போனால், சின்னப் பெண்ணானால், கல்யாணம் ஆகி ஒரு குழந்தை பெற்றால் சரியாகி விடும் என்பார். வயதானவர்களானால், "எல்லாம் மனத்தில்தான் இருக்கிறது." என்று ஏதேனும் மருந்தெழுதிக் கொடுப்பார்.

ஆனால் அந்த நாட்களில் உங்கள் உடலில் ஏற்படும் மாறுதல்கள் எல்லாம் உண்மையானதே., அடிவயிற்றில் கருட்டிப் பிடித்துக் கொண்டது போல் ஏற்படும் வலியும், கால், தொடை எல்லாம் கடுப்பதும், முதுகின் கீழ்ப்பாகம், இடுப்பில் ஏற்படும் வலியும் பொறுக்க முடியாததுதான். இத்துடன் தலைவலி, அசதி, மனச்சோர்வு, படபடப்பு, ஆத்திரம், வாந்தி எடுப்பது, மலச்சிக்கல் எல்லாமே சேர்ந்து கொள்ளும்பொழுது, மாதவிடாய் என்பது ஒரு சாபம் என்றே தோன்றும். மாதம் ஒரு முறை பிரசவ வேதனைதான்.

ஆனால் இந்த உபாதைகளிலிருந்து விமோசனமே கிடையாது. அனுபவித்துத்தான் ஆக வேண்டும், என்பது மட்டும் உண்மையல்ல. நல்ல வேளை, நாம் எல்லோரும் எல்லாவிதமாகவும் கஷ்டப்படுவதில்லை. ஆனால் எல்லோருமே ரிலாக்சேஷன் மூலமாகப் பயனடைய முடியும்.

ரிலாக்சேஷன் — என்பது என்ன? இதனால் உடலில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன.

*ரிலாக்சேஷன் என்பது உடலில் ஒவ்*வொரு பாகத்தையும், ஒவ்வொரு தசை நார்களில் உள்ள முறுக்கையும் தளரச் செய்வதுதான். தளரவிட்ட தசைகளுக்கு அதிக பிராண வாயு தேவையில்லை. சர்க்கரை வேண்டியதில்லை. அதனால் இருதயம் மெதுவாக வேலை செய்கிறது, ரத்த அழுத்தம் குறைகிறது. உங்கள் சுவாசம் நிதானப்படுகிறது. உணவு சரியாக ஜீரணமாகிறது, சரியான அளவு செக்ஸ் ஹார்மோன்கள் சுரக்கின்றன. இதுவே மாதவிடாய் வலிகளை, சங்கடங்களைக் குறைக்கும்.

'ரிலாக்ஸ்' பண்ணக் கற்றுக் கொள்ள இருவராய்ச் செல்வது நல்லது. ஒருவர் 'ரிலாக்ஸ்' பண்ணும்பொழுது மற்றவர் கவனித்துத் தப்பைத் திருத்தலாம். அதனால் உங்களைப் போலவே 'ரிலாக்ஸ்' செய்யக் கற்றுக் கொள்ளப் பிரியப்படும் மற்றொருவருடன் சேர்ந்து பயிற்சியைத் தொடங்குங்கள்.

ஒரு மாதவிடாய் நாட்கள் முடிந்தபின், பயிற்சியை ஆரம்பித்தால், அடுத்த மாதம் அந்த நாட்கள் வருவதற்குள், நீங்கள் ரிலாக்ஸ் செய்யச் சிறிது கற்றுக் கொண்டிருப்பீர்கள். இது அவ்வளவு சுலபமல்ல. நம் உடலின் ஒவ்வொரு தசைகளையும் முதலில் தெரிந்து கொண்டு பின்பு தளரச் செய்ய, தினமும் அரை மணி நேரம் பயிற்சி செய்தால் இரண்டு மாதங்கள் பிடிக்கலாம். இதனால் மனம் தளர்ந்து விடாதீர்கள். முயற்சிக்கு நிச்சயமாக பலன் கிடைக்கும். (கர்ப்பிணி பெண்களுக்கும் இது நல்லது. பிரசவ வேதனையைக் குறைக்கும்.)

யாரும் தொந்திரவு செய்யாமல் இருக்கும் நேரத்தில் அரை மணி நேரம் ஒதுக்கவும்.

உடலை இறுக்கிப் பிடிக்கும் ஆடைகளைக் களைந்து விட்டு மிகவும் சௌகர்யமான ஒரு ஆடையை அணிந்து கொள்ளவும்.

மெத்தையிலோ, கார்பெட்டிலோ, எங்கு உங்களுக்கு சௌகரியமாக இருக்குமோ அங்கு படுத்துக் கொள்ளுங்கள். (தரையில் ஜமக்காளம் விரித்துக் கொள்ளலாம்.)

அனேகம் பேருக்கு நிமிர்ந்து படுத்துக் கொண்டு தலைக்கு இரண்டு தலையணை, காலில் மூட்டுக்கு அடியில் ஒரு திண்டு என்று வைத்துக் கொள்வது சௌகரியமாக இருக்கும். சிலருக்கு முதுகுத் தண்டின் நடுவளைவில் ஒரு சின்ன குஷன் தேவையாக இருக்கலாம்.

சிலருக்கு நிமிர்ந்து படுத்துக் கொள்வதே சௌகரியமாக இருக்காது. இவர்கள் ஒரு பக்கமாக ஒருக்களித்துப் படுப்பதையே விரும்புவார்கள்.

நீங்களே உங்களுக்கு உகந்த நிலையை, தேர்ந்தெடுத்து, தலையணை, குஷன் உதவியுடன், உடலின் எந்த பாகத்துக்கும், அனு






வசிய கஷ்டம் கொடுக்காத நிலையில், சௌ கரியமாகப் படுத்துக் கொள்ளவும்.

இப்பொழுது 'ரிலாக்ஸ்' பண்ணத் தொடங்குங்கள்.

தசை நார்களைத் தளரச் செய்யுமுன் அதை முறுக்கி முறுக்கிச் செய்தால்தான், அவை எது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். சுலபமாக முறுக்கித் தளரச் செய்யக் கூடிய பாகம் கைகளே. அதனால் அங்கிருந்தே ஆரம் பிக்கலாம்.




1. இரண்டு கைகளையும் உயரே தூக்கிக் கொண்டு, கைவிரல்களை மூடிக் கொண்டு, அழுத்தமாக முஷ்டியை இறுக்கவும். இந்த இறுக்கத்துடனே மூச்சை மெதுவாக ஆழமாக உள்ளிழுக்கவும். பிறகு வாய் வழியாக, நெருப்பை ஊதி அணைப்பது போல் நீள மாகக் காற்றை வெளியேற்றவும். (ஒவ் வொரு பாகத்திற்கும் பயிற்சியளிக்கும் பொழுது இதேபோல சுவாசிக்க வேண்டும்.) அப்படி மூச்சை வெளியேற்றும்பொழுது, விரல்களைப் பிரித்துவிட்டு, கையைத் தளர விட்டு, கீழே துவண்டு விழ விடவும். உங்கள் கவனத்தையெல்லாம் கைகளில் செலுத்தி, ஒவ்வொரு தசைநார்களும் தளருவதை உண ருங்கள். அப்படி முழுமையாக உணர முடியா விட்டால், இரண்டு நிமிடம் கழித்து மறுபடி, முன் போல் செய்யவும்.


2. அடுத்தது தோள்கள். அனேகம் பேருக்கு 'டென்ஷன்' தோள்பட்டையில் தான் அதிகமாகத் தெரியும்.


கழுத்து உயரத்துக்கு, காது வரை, தோள் களைத் தூக்கவும். பிடரி, முகவாய், இரண்டு தோள் எல்லாவற்றிலும் டென்ஷனை உணர முடியும். இந்த நிலையில் மூச்சை ஆழமாக மெதுவாக உள்ளிழுத்துவிட்டு, வாய் வழி யாகக் காற்றை வெளியேற்றிக் கொண்டே தோள்களைத் தளரச் செய்யவும். கையே தோள்களிலிருந்து கழன்று விழுவது போலக் கீழே இறக்கி விடவும்.


3. இப்பொழுது கால்கள் — இதற்கு கால் விரல்களைக் கீழ்நோக்கி படுக்கையைச் சுட்டிக்காட்டுவது போல் நீட்டியோ, அல்லது மேல்நோக்கித் தலையைச் சுட்டிக் காட்டுவது போல் மடக்கியோ கால்களை விறைப்பாகச் செய்யவும். இப்பொழுது பாதத்திலும், குதி யங்களிலும், கணுக்காலிலும், ஆடுசதை யிலும் தசைகள் இழுப்பதை உணர்வீர்கள். மூச்சை உள்ளுக்கிழுத்து, வாய் வழியாக வெளியேற்றிக்கொண்டேகால்களைத்தளரச் செய்யவும்.

கால் முட்டின் அடிபாகத்தைப் படுக் கையில் அழுத்திப் பதியச் செய்யுங்கள்.









அந்தத் தசைகளை உணர்ந்த பின் தளர விடவும்.

கால் தொடைகளுக்கு நடுவில், முட்டுக்குமேல் ஒரு பைசா இருப்பது போலவும், அது கீழே விழாமல் பிடித்துக் கொள்ள வேண்டும்என்றஎண்ணத்தில், இருதொடைகளையும் நெருக்கிப் பிடித்துக் கொண்டு, சுவாசத்தை உள்ளுக்கிழுத்து, வாய் வழியாக வெளியேற்றி, கால்கள் பறந்து கீழே விழும்படி தளரச் செய்யவும்.

4. கழுத்துப் பகுதியில் டென்ஷனை உண்டாக்க முகவாயை மார்பில் அழுத்தலாம் அல்லது உச்சந்தலை தலையணையில் படுவது போல், தலையை உயர்த்தலாம். கழுத்து, பிடரி, தாடை பகுதியின் தசைகளை உணர்ந்த பின், வாய் திறந்து, தாடை தொங்குவது போலத் தளரவிடவும். இந்த நிலையில் தலையணையின் உயரம், அதிகமாகவோ குறைவாகவோ இருந்தால், சரியானபடி மாற்றியமைத்துக் கொள்ளவும்.

இதற்கு முன்பு தளரச் செய்த பாகங்கள் இன்னமும் தளர்ந்துதான் இருக்கிறதா என்று, நடுநடுவில் கவனிக்கவும். ஒரு பாகத்தில் டென்ஷனை ஏற்படுத்தும்பொழுது மற்ற பாகங்கள் அதில் பங்கு பெறாமல் பார்த்துக் கொள்ளவும்.

5. மார்புப் பகுதியை உயர்த்தி விறைப்பாக்குங்கள். இப்படிச் செய்யும்பொழுது முதுகு வளையும், விலாப்புரம் இழுக்கும். மூச்சை வெளியேற்றிக் கொண்டே, உயர்த்தின மார்பைத் துவண்டு விழச் செய்யவும்.

6. வயிற்றுச் சதையை உள்ளுக்கிழுத்து, வயிறு முதுகுடன் ஒட்டிக் கொள்ளச் செய்வதுபோல் இறுக்கி, பின்பு தளர விடுங்கள்.

7. இடுப்புப் பகுதிக்கு — அவசரமாக சிறுநீர் கழிக்க வேண்டும் என்று தோன்றும் பொழுது, பாத்ரூமுக்குப் போக முடியாமல் இருந்தால், எப்படி அடக்கிக் கொள்வீர்களோ, அப்படி இழுத்துப்பிடித்துக்கொண்டு பின்பு தளர விடுங்கள்.

8. இவ்வளவு நேரம் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் குறிப்பாகக் கவனம் செலுத்தி வந்ததால் முகச்சதைகள் இறுகி இருக்கும்.

ஒருஎலுமிச்சம்பழத்துண்டத்தைச் சுவைக்கும்பொழுது, ரொம்பப் புளிப்பாக இருந்தால், முகத்தை எப்படிச் சுளிப்பீர்களோ, அப்படி வாய், மூக்கு, கண், கன்னங்கள் எல்லாவற்றையும் கூட்டிக் கொள்ளுங்கள். பின்பு முழுமையாகத் தளரச் செய்யுங்கள்.

இவை எல்லாம் செய்தபின் உடம்பு முழுவதும் துவண்டு தூக்கம் வருவது போல இருக்கும். அப்படியே சிறிது நேரம் படுத்துக் கொண்டிருந்து விட்டு, பின்பு மெதுவாக எழுந்திருக்க வேண்டும். உடம்பு முழுவதும் 'ரிலாக்ஸ்'டாக இருக்கும்பொழுது சட்டென்று எழுந்திருக்கக் கூடாது. தலை சுற்றும். மெதுவாக எழுந்து உட்கார்ந்து, சிறிது நேரத்திற்குப் பின்பே நிற்க வேண்டும்.

பயிற்சி செய்யச் செய்ய, உடம்பில் எந்த பாகம் டென்ஸாக இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு சுலபமாக ரிலாக்ஸ் செய்ய முடியும். பின்பு உட்கார்ந்த நிலையிலோ, நின்ற நிலையிலோ எந்த இடத்திலும் 'ரிலாக்ஸ்' செய்ய முடியும்.

வேலைக்குப் போகும் பெண்களுக்கு அதுவும் நாள் முழுவதும் நின்றுகொண்டே இருக்க வேண்டுமானால் இடுப்புப் பகுதியில் வலி உண்டாகும். உட்காரக் கூட இடம் இல்லாமல், இருந்தால், பக்கத்தில் எதையாவது பிடித்துக் கொண்டு, உடம்பை லேசாக முன்புறமாக வளைத்து, உடலின் எடையை கைதாங்கிக் கொள்வது போல், நின்றால், வலி குறையும். பஸ்ஸில், ரயிலில் நின்று கொண்டு பயணம் செய்ய நேரும் பொழுது இப்படி நிற்பது சௌகரியமாக இருக்கும்.

சமயம் கிடைக்கும்பொழுது, முதுகுக்காக இந்தப் பயிற்சியும் செய்யலாம். சுவற்றுடன் ஒட்டி நின்று கொண்டு (கால் மட்டும் சிறிது சுவரிலிருந்து தள்ளி இருக்க வேண்டும்.) இடுப்புக்குமேல் உடம்பில் எதுவுமே இல்லாதது போல் துவண்டு விழச் செய்து, பின்பு மெதுவாக, கொஞ்சம் கொஞ்சமாக உடலை நிமிர்த்தவும்.

காலில் வீக்கம், அடிவயிற்றில் கனம் போன்ற உபாதைகள் உங்களைப் பாதித்தால் கீழே படுத்துக் கொண்டு நாற்காலியின்மேல் காலைப் போட்டுக் கொள்வது ரொம்ப சௌகரியமாக இருக்கும். நல்ல கனமான பலகை இருந்தால், அதைஒருபக்கம்உயர்த்திவைத்து, தலை கீழேயும், கால் மேலேயும் இருப்பது போல் வைத்துக் கொண்டு, படுத்துக் கொண்டால் உண்டாகும் சுகத்தை அனுபவித்துத் தான் உணர வேண்டும்.

திடீரென்று வயிற்றை சுருட்டிப் பிடித்துக் கொண்டு வலிக்க ஆரம்பித்தால், ரிலாக்ஸ் பண்ணும்பொழுது சுவாசிப்பது போல மூச்சை மூக்கு வழியாக மெதுவாக ஆழமாக உள்ளுக்கிழுத்து, வாய் வழியாக ஊதி நெருப்பை அணைப்பது போல் காற்றைவெளியிடவும். இதுபோல சில முறை செய்தால் வலி குறையும்.

கழுத்து, தோள், வலி இருந்தால் தலையை நாலாபுறமும் உருட்டவும். பிரதக்ஷிணமாக சிலமுறையும், அப்பிரதக்ஷிணமாக சிலமுறையும் செய்யவும்.

இந்த வலியெல்லாம் போதாது என்று சிலருக்கு வாந்தி எடுக்கும், வயிற்றைப் புரட்



இயற்கை எழில் கொஞ்சும்
ஏ-டில்லா மேனி எழிலுக்கு
MEDIMIX
AYURVEDIC TOILET SOAP
மெடிமிக்ஸ்
ஆயுர்வேத டாய்லட் சோப்பு
• வேர்க்குரு • கரும்புள்ளி • தேமல் • சிரங்கு
• முகப்பரு • படை • சொறி
ZEST/MS/5/85.
Marketed by SAPP
CHOLAYIL PHARMACEUTICALS,
MADRAS

டும், தலையைச் சுற்றும், மலச்சிக்கல் இருக்கும்.

மாதவிடாய் நாட்களில் ஆகாரத்தில் கவனம் செலுத்த வேண்டும். ரொம்ப வயிறு முட்டச் சாப்பிடாமல் சிறிது குறையச் சாப்பிட வேண்டும். எண்ணெயில் பொரித்தது, இத்திப்பு, கேக், பன் போன்ற மாவுச் சத்து நிறைந்த உணவுகளைத் தயாரிக்க வேண்டாம். நிறைய காய்கறி, கீரை, பழம், பால் சாப்பிடலாம். இது உடலுக்கு வேண்டிய ஊட்டச் சத்தை அளிக்கும், வயிறு கனக்காமல் இருக்கும். மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கும்.

வயிற்றுப் புரட்டல் இருந்தால், ஜில்லென்று எலுமிச்சம் பழ சர்பத், அல்லது லெட்டாகமஎதையாவது மெதுவாக உறிஞ்சிக் குடித்தால் குணம் தெரியும்.

சிலருக்கு உடம்பில் நீர் வைத்துக் கொள்ளும். அனேக பெண்கள் அந்த நாட்களில் மூன்று கிலோ வரை எடை கூடுவார்கள். ரவிக்கை பிடிப்பாக இருக்கும். ஜீன்ஸ் போட்டுக் கொள்பவர்கள் ஜிப்பை இழுத்து மூட சிரமப்படுவார்கள். மூக்கின் இருபுறமும் சைனஸ் கேவிட்டியில் நீர் நிரம்பி வலிக்கும். கணுக்கால் வீங்கும். இது எல்லாம் நீர் தான். வடிந்துவிடும்.

இதைத் தவிர்க்க மாதவிடாய்க்கு இரண்டு நாட்கள் முன்பிருந்தே நீர் குடிப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்; டீ, காப்பி, பால், மோர், நீர் எல்லாமாகச் சேர்ந்து 4 கப்புக்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

காலையில் எழுந்திருக்கும் பொழுதே, வெறுப்பாக இருக்கும், சின்ன விஷயத்துக்கெல்லாம் கோபம் வரும். யாரைப் பார்த்தாலும் எரிச்சலாக இருக்கும். வீடு முழுவதும் குப்பையாக, அலங்கோலமாக இருப்பதாகத் தோன்றும். எதிலுமே பிடிப்பில்லாமல் இருக்கும். ஏன் என்று யோசித்துப் பார்த்தால், புலப்பட்டுவிடும். மாதவிடாய் நாள் சமீபித்து விட்டது என்று சிலருக்கு உடலும், மனமும் சோர்ந்து போயிருக்கும். வேறு சிலருக்கு, ஒரு இடத்தில் இருப்புக் கொள்ளாமல் ஏதாவது செய்து கொண்டேயிருக்க வேண்டும் போலப் பரபரவென்று வரும்.

பயப்படாதீர்கள். அனேகம் பேர் மாதா மாதம் இப்படித்தான் தடுமாறுகிறார்கள்.

அதிக சுறுசுறுப்பாக இருப்பவர்கள் பாடு தேவலை. இழுத்துப் போட்டுக் கொண்டு தோட்ட வேலை, வீட்டை ஒழித்தல், ஜன்னல் துடைத்தல் என்று எல்லா வேலையையும் செய்யலாம். வேலைக்கு வேலையும் ஆகும், ஆத்திரமும் குறையும்.

(இதனால்தான் பெண்களை ஒரு வேலையும் செய்யவிடாமல் மூன்று நாட்கள் ஒதுக்கி வைக்கிறார்கள்.) இவை எல்லாவற்றுக்கும் உடலின் ரஸாயன மாறுதல்கள்தான் காரணம்.

இந்த நாட்களில் குளிக்காமல், அழுக்குப் புடவையுடன், வேர்வைநாற்றத்துடன் சிக்குப் பிடித்த தலையுடன், ஒரு மூலையில் நிற்பதே பாதி சங்கடங்களுக்குக் காரணம்.

உங்கள் உடல் மனநிலை எப்படி இருந்தாலும், தினமும் குளித்து, சுத்தமான உடை உடுத்தினாலே பாதி குணமாகிவிடும். காலத்திற்குத் தகுந்த மாதிரி வெந்நீரிலோ, குளிர்ந்த நீரிலோ தினமும் ஒரு முறையாவது குளிக்க வேண்டும். வெந்நீரில் குளிப்பது உடல் வலியைப் போக்கி இதமாக இருக்கும். (அந்த நாட்களில் குளிக்கக் கூடாது, ஜலதோஷம் பிடிக்கும், நிமோனியா வரும் என்று சொல்வார்கள். அப்பொழுது குளத்தில் குளிக்க வேண்டும், ஈரப்புடவையைச் சுற்றிக் கொண்டு வர வேண்டும். ஆனால் இன்று வீட்டில் பாத்ரூமில் குளித்து, அங்கேயே உடையும் மாற்றிக் கொண்டு வரும்பொழுது ஒரு வித கெடுதலும் இல்லை.) வெயில் காலத்தில் அதிகமாக வியர்த்து தலை கசகசவென்று இருந்தால் தாராளமாக தலைக்கு ஷாம்பு போட்டுக் குளிக்கலாம்.

(இந்த நாட்களில் குழந்தைக்குப் பால் கொடுக்கும் தாய் சுத்தமாக இல்லாவிட்டால் குழந்தை பால் குடிக்கக் கூட மறுத்துவிடும்.)

ஸ்கூலிலும், வேலைக்குப் போகும் இடத்திலும் திடீரென்று அசௌகரியம் ஏற்படலாம்.


கைப்பையில் எப்பொழுதும் இரண்டு ஸானிடரி நாப்கின்கள், சில வலி நீக்கி மாத்திரைகள், சில க்ளுகோஸ் மிட்டாய்களை எப்பொழுதும் வைத்திருக்கவும். மத்தியான சாப்பாட்டு நேரத்தில் வெளியில் சுற்றாமல், சத்தான உணவைச் சாப்பிட்டு விட்டு, காலைத் தூக்கி மேலே போட்டுக் கொண்டு உட்கார்ந்து ஓய்வு எடுத்துக் கொள்ளவும்.

யாரிடமும் அனாவசியமாக வாக்குவாதம் வைத்துக் கொள்ளாதீர்கள். குடும்பத்தில் ஏதேனும் பிரச்னை இருந்தால் அதைப் பற்றி இந்த நாட்களில் விவாதிக்காதீர்கள். மனம் தெளிந்தபின் வழி சுலபமாகத் தெரியும்.

ஜெயா. வி. ராமன்.

கொத்தமல்லித் தழையை தண்டைக் கிள்ளி எடுத்துவிட்டு நன்றாகக் காய வைத்து எடுத்து வைத்துக் கொண்டால் தழை கிடைக்காத நாட்களில் ரசத்தில் போடலாம். 'கம கம'வென்று மணம் கெடாமல் இருக்கும்.

— எஸ். உமா.



நவராத்திரி ஆரம்பம் என்றவுடனேயே நம் நினைவுக்கு வருபவை கொலுவும், கொலுவை அலங்கரிக்கும் பொம்மைகளும்தான். கடைகளிலோ அல்லது தெரு வீதிகளிலோ விற்கும் பொம்மைகளை வாங்கிக் கொண்டு வந்து கொலுவில் வைத்து அழகு பார்க்கும் நாம் அந்தப் பொம்மைகள் எப்படி உருவாகின்றன? அதை உருவாக்குபவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கிறது? என்பனவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டாமா?

குயப்பேட்டையில் தான் பெரும்பாலான பொம்மைகள் செய்யப்படுகின்றன. அங்கு சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பொம்மை செய்யும் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்றனர்.

இவர்களில் ஒருவரான கிருஷ்ணனையும் அவரது குடும்பத்தினரையும் சந்தித்தோம்.

குயப்பேட்டை: சென்னையிலுள்ள புரசைவாக்கத்திற்குப் பக்கத்தில் உள்ளது குயப்பேட்டை. மண் பானைகள், சட்டிகள், பொம்மைகள், கோவிலுக்கு வேண்டிய உருவங்கள் ஆகியவைகளைச் செய்யக் கூடிய குயவர்கள் இங்கு அதிகமாக இருந்த காரணத்தால் இது குயவர்கள் பேட்டை என்று அழைக்கப்பட்டு காலப்போக்கில் குயப்பேட்டையாகவும், குசப்பேட்டையாகவும் மாறி இருக்கிறது.

"எங்கப்பா, அவரு அப்பா ஆகியோர் கூட மண்பானை சட்டி இதையெல்லாம் செய்துக்கிட்டு இருந்தாங்க. அது அப்படியே எங்களுக்கும் தொழிலாகி எங்க பிள்ளைகளுக்கும் தொழிலாகிப் போச்சு. எங்கள் வீட்டில் இருக்கும் பெண்கள் கூட எங்களுக்குக் கூட மாட ஒத்தாசை செய்வார்கள்.

முதன் முதலாக ஒருவர் ஒரு பொம்மையை செய்யும் போது தன் குருவை பக்கத்தில் வைத்துக் கொள்வாராம். அவர் மேற்பார்வையில் முதல் பொம்மையைச் செய்துவிட்டு பின்புதான் தொழிலை மும்முரமாக ஆரம்பிப்பார்கள். தொழிலில் முதன் முதலில் நுழையும் போது மட்டும் குருதட்சிணை, குரு பூஜை, சுவாமி பூஜை எல்லாம் உண்டு. அப்புறம் தினசரி பொம்மைகளை செய்யும் போது மனசால் 'இறைவனை வேண்டிக் கொண்டு கர்மமே கண்ணாயினார்' — என்பதற்கு'ஏற்பத் தொழிலில் இறங்கி விடுகிறார்களாம் இவர்கள்.

மண்ணில் தோன்றும் கவிதை

பொம்மைகள் எப்படி உருவாகின்றன?

ஒரு பொம்மையை அதனுடைய அளவு, வேலைப்பாடுகள் ஆகியவைகளைப்பொறுத்து அது உருவாகக் கூடிய நாட்கள் அமைகின்றன. ஒரு கை பிடி அளவிற்கு உள்ள பொம்மைகள் ஒரு நாளில் ஐந்து ஆறு கூடச் செய்யப்படுகின்றன! பெரிய பொம்மைகள், மிக நுட்பமானவேலைப்பாடுகள்கொண்டபொம்மைகள் உருவாக ஐந்து ஆறு நாட்கள் கூட ஆகின்றன:

மண் ,பொம்மைகள் :

மண், பேப்பர் போன்றவற்றால் பொம்மைகளைக் கற்பனை நயத்துடன் உருவாக்குகிறார்கள்.

குரோம்பேட்டைக்குப்பக்கத்திலுள்ள அய்யவரம் ஏரி மற்றும் குருக்குப் பேட்டை, வேளச்சேரி, ரெட்ஹில்ஸ் ஆகிய ஊர்களிலிருந்து களிமண் எடுத்து வருகின்றனர். களிமண்ணை ஒரு இடத்தில் கொட்டி வேண்டிய அளவிற்குத் தண்ணீர் சேர்த்து மாவாக மாற்றுவதற்காக காலால் மிதிக்கின்றனர். பொதுவாக இந்த வேலையில் பெண்களும் ஈடுபடுவதுண்டு. களி மண்ணை கோந்து போல் மாற்றுவதற்கு இவர்கள் எந்தவித இயந்திரத்தையும் உபயோகிப்பதில்லை.

"கடவுள் கொடுத்த கால் கைதான் எங்கள் தொழிலுக்கு இயந்திரம்" என்று பெருமையோடு சொல்கிறார்கள். இவர்கள். என்னதான் இயந்திரங்கள் இருந்தாலும் காலால் மண்ணை மிதிக்கும் போதுதான் மண் இந்த அள்விற்கு பதமான தன்மை கொடுக்குமாம்.

செய்ய வேண்டிய பொம்மைகளை மனக் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்தி, கை, பிரஷ் போன்றவற்றின் மூலம் மண்ணுக்கு உருவம் கொடுக்கிறார்கள்.


பொம்மைகள் எப்படி உருவாகின்றன?

சிற்பங்களைப் பார்த்ததிலிருந்து தோன்றிய எண்ணங்கள், கேலண்டர்களில்வரைந்த ஓவியங்களில் இருந்து கிடைத்த டிசைன்கள், உருவங்கள் ஆகியவற்றை மனத்தில் பதிய வைத்துக் கொண்டு அவற்றை தங்கள் கையால் சுவரில் முதலில் வரைபடமாக வரைந்து கொள்கிறார்கள். பிறகு செய்ய வேண்டிய பொம்மையின் மாடலை மோல்டு பண்ணுகிறார்கள். மோல்டுகளின் உதவியினால் மண் பொம்மைகள் அச்சில் வார்க்கப்பட்டு உருப்பெறுகின்றன. அந்த பொம்மைகளை பிரஷ் உதவியினால் சரி செய்து ஒழுங்குபடுத்தி அவைகளை அப்படியே எரி, விறகு போன்றவற்றின் நடுவில் வைத்து, தீ வைக்கின்றனர். இரண்டு மூன்று நாளில் தீயின் வெது வெதுப்பில் இருக்கும் பொம்மைகள் ஈரத்தன்மையற்று நன்றாகக் காய்ந்து சிவப்பு நிறத்தை அடைகின்றன.

சிவப்பு நிறம் அடைந்த பொம்மைகளை பின்பு வெளியே எடுத்து அவைகளுக்கு முதலில் வாட்டர் பெயிண்டும் பின்பு எனுமல் பெயிண்டும் அடிக்கின்றனர். பொம்மைகளின் உருவங்களின் குணங்களுக்கு ஏற்ப பெயிண்டுகளின் நிறத்தைக் கொடுக்கின்றனர். இப்படித்தான் மண் பொம்மைகள் உருவாகின்றன. பேப்பர் பொம்மைகள் உருவாகும் கதை தனியானது!

பேப்பர் பொம்மைகள்

கழிவுப் பேப்பர்களை வாங்கி அவைகளை மிஷினில் கொடுத்து மாவாக பொடியாக்குகின்றனர். பின்பு மைதா மாவைக் காய்ச்சி பசையாக்கி, அதோடு பேப்பர் நைஸ் தூள்களையும் சேர்த்துப் பிசைந்து பூரி மாவு போல் ஆக்குகின்றனர். பின்பு பூரி இடுவது போல் இதை கனமாக இட்டு மோல்டுகளின் உதவியால் வேண்டிய உருவத்தைப் பெறுகின்றனர். பின்பு இவைகளை வெய்யிலில் காய வைத்து ஒட்ட வேண்டிய பகுதிகளை பிளாஸ்டர்ஸ்பாரிஸ் மூலம் ஒட்டுகிறார்கள். பின்பு வர்ணங்கள் கொடுக்கப்படுகின்றன. மண் பொம்மைகள் கனமாக இருக்கக் கூடிய அளவுக்கு பேப்பர் பொம்மைகள் கனமாக இருப்பதில்லை. மண் பொம்மைகளின் ஏதாவது பாகங்கள் உடைந்தால் பின்பு அந்த பொம்மை எதற்கும் பிரயோஜனப்படாது.





ஆனால் பேப்பர் பொம்மைகள் உடைந்தால் கூட அவைகளை லாகவமாக, நுட்பமாக ஒட்டி விடலாம்!

கண்ணும் கருத்தும்தான் ஒரு பொம்மையை படைப்பதற்குத் தேவை. கற்பனை வளமும் தானாகவே வளையக் கூடிய கையும் இயற்கையிலே அமைந்தால்தான் பொம்மைகளை, உருவங்களைப் படைக்க முடியும். இது போன்ற தொழில் செய்பவர்களுக்கு பொறுமை ரொம்பவும் வேண்டும் — என்று சொன்ன கிருஷ்ணன் குடும்பத்தாரைப் பார்த்து, பொதுவாக நவராத்திரி சமயங்களில்தான் பொம்மைகளை எல்லோரும் வாங்குவார்கள். எனவே உங்கள் தொழில் நவராத்திரிக்கு முன்னால் மட்டும் தான் நடைபெறுகிறதா இல்லை... என்று நாம் கேட்டு முடிப்பதற்குள் கிருஷ்ணன் சொன்னார்:

"எங்களுக்கு வருஷம் 365 நாட்களும் இது தான் வேலை. நவராத்திரி சமயங்களில் தான் அதிக பொம்மைகள் விற்பனையாகும் என்பது உண்மை. ஆனாலும் மற்ற காலங்களிலும் எங்களுக்கு இப்போது விற்பனை இருக்கிறது அரசாங்க ஆர்டர்கள் கிடைக்கின்றன: காதி கிராப்ட், அரசு கைவினைப் பொருட்கள் அங்காடி போன்ற நிறுவனங்கள் எங்களிடமிருந்து பொருள்களைப் பெறுகின்றன.

பம்பாய், கல்கத்தா, கேரளா போன்ற வெளி மாநிலத்தவரும், சிங்கப்பூர், ஜப்பான், கொழும்பு, மலேசியா போன்ற அயல் நாட்டவர்களுக்கும் பொம்மைகள் அனுப்பப் படுகின்றன! எனவே எங்களுக்கு முழு நேரத் தொழில் இதுதான். மேலும் எங்களில் சிலர் மண் பாண்டங்கள் உற்பத்தியிலும் பிற நாட்களைக் கழிப்போம். எனவே எங்கள் கைகளுக்கு எப்போதுமே வேலை இருந்து கொண்டேயிருக்கும்."

நவராத்திரி காலங்களில் மண் பொம்மைகளுக்கு கிராக்கி இருக்கும். மற்ற காலங்களில் பேப்பர் பொம்மைகளுக்கு கிராக்கி இருக்கும். பேப்பர் பொம்மைகளை பார்சல் செய்து அனுப்புவது கூட எளிது! அதிகம் டேமேஜ் ஆவதில்லை என்கிறார்.

இப்போது மாதர் சங்கங்களில் பெண்கள் தாங்களே பொம்மைகள் செய்யக் கற்றுக் கொள்கிறார்களே. அப்புறம் பல பொம்மைகளையும் செய்து கண்காட்சியாக வைப்பது இப்போது பேஷனாகிவிட்டதே... இது உங்களின் விற்பனையைப் பாதிக்கிறதா?

பெண்கள் சங்கம் நடத்துகின்ற கண்காட்சிகளால் எங்களுக்கு ஒன்றும் பாதிப்பில்லை! அவர்களால் தொழில் ரீதியாக எங்களைப் போன்று செய்ய முடியுமா என்பது சந்தேகமே. மேலும் எங்களுக்கு குலத் தொழில் இது. நாகரீகம் வளர்ச்சி அடைய அடைய காலத்திற்கு ஏற்றாற் போல் மக்களின் ரசனைகளுக்கு ஏற்றாற்போல் நாங்களும் பொம்மைகளைச் செய்து கொடுக்கிறோம்!

சித்திரமும் கைப்பழக்கம் என்பார்கள். எங்களுக்குக் கைப்பழக்கம் இருப்பதால் கஷ்டமான ஓவியங்களைக் கூட மாடலாக வைத்துக் கொண்டு பொம்மைகளாக கொண்டு வர முடியும். எங்களுடைய தொழிலில் நாங்கள் யாரையும் போட்டியாக நினைப்பது இல்லை. எங்கள் திறமைக்கு ஏற்ப கூலி கிடைக்கும் என்பது எங்களுக்குத் தெரியும்.

எந்த மாதிரி பொம்மைகளைச் செய்கிறீர்கள்?

பொம்மைகள் என்று சொல்லும்போது எல்லா விதமான பொம்மைகளையும் செய்கிறோம். நவராத்திரி காலத்தில் தசாவதார பொம்மைகள், சரஸ்வதி, லெக்ஷ்மி போன்ற பொம்மைகள் அதிகமாக விற்பனையாகும். விநாயகர் சதுர்த்திக்கு முன்னால் விநாயகர் பொம்மை அதிகமாக விற்பனையாகும். பம்பாயிலுள்ள மாதுங்காவுக்குக் கூட அனுப்புகிறோம். பம்பாயில் விநாயக சதுர்த்தி ரொம்பவும் முக்கியமான பண்டிகை. கோவில்களின் கோபுரங்களுக்கு வேண்டிய பொம்மைகளையும், நேர்ச்சைக்காக உருவங்கள் செய்து விடுபவர்களுக்காக ஆண், பெண் உருவங்களையும் செய்துகொடுக்கிறோம். வயல்வெளி, வீரப்பு, சின்ன கிராமம், அறிவியல் முன்னேற்ற விளக்கம் இப்படியெல்லாம் கூட சிலர் பொம்மைகள் செய்து கொடுக்கின்றனர்."

பாகற்காய் வேக வைத்த நீர், பித்தம், தலை சுற்றல் போன்ற நோய்களை குணமாக்கும். இந்நீரைக் குடித்து வந்தால் நீரிழிவு நோயை வருமுன் காப்பது போலாகும்.
— குப்பம்மாள்.



Our Latest Introductions:

B. K. R. "SANDAL SUPER" & SUPRADEEP INSENSE STICKS



பொம்மை செய்யும் போது மனம் தளரும் சந்தர்ப்பங்களும் வருமே...?

சோதனைகள் எங்களுக்கு வரும். நன்றாக செய்து வைத்த பொம்மை உடைந்து போனால் மனம் தளர்ந்து போவோம். இப்படித்தான் ஒருமுறை ஆறு அடி விநாயகர் செய்ய வேண்டியிருந்தது. மோல்டில் இருந்து மண்ணை உருவமாக எடுத்து கலர் கொடுக்க வேண்டியதுதான் பாக்கி. திடீரென்று மழை ராத்திரி பிடித்துக் கொண்டு விநாயகரை உருக் குலைத்துவிட்டது! பதறிப்போனேன். உடனே கொடுக்க வேண்டிய ஆர்டர் அது. அந்த விநாயகனையே மனத்தில் நினைத்துக் கொண்டு அடுத்த நாள் பொம்மையை செய்ய முற்பட்டேன். என்ன ஆச்சரியம். இரண்டு நாள் வேலை செய்தால்தான் முழு உருப் பெறக் கூடிய விநாயகப் பொம்மை அன்று மூன்று மணி நேரத்தில் உருவானது! எல்லாம் நன்மைக்குத்தான் என்று எண்ணிக் கொண்டோம்..

பொம்மைகள் உருவாக்குவது பற்றித் தெரிந்து கொண்டு தி. நகரில் ரோட்டில் பொம்மைகளை பரப்பி விற்பனை செய்து கொண்டிருந்த ஒருவரைச் சந்தித்துக் கேட்டோம். இவருடைய குடும்பமே பொம்மைகளை விற்பனை செய்வதில் இருபது ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறதாம்.

இவர் வாடிக்கையாளர்களைப் பற்றிச் சொன்ன கருத்து வேடிக்கையாக இருந்தது பாவம் அவர்!

"ஆம்பளைகளும், பொம்பளைகளும் சேர்ந்து வந்தால் அல்லது ஆம்பளைகள் மட்டும் தனியாக வந்தால் எங்களுக்கு வியாபாரம் எளிதாக ஆகிவிடும். ஆனால் பெண்கள் மட்டும் தனியாகவோ அல்லது நாலு ஐந்து பெண்களாக வந்தாலோ எங்கள் பாடு அம்போதான்! அதை எடு இதை எடு என்று ஏகப்பட்ட பொம்மைகளை பார்த்துவிட்டு கடைசியில் விலையில் பேரம் பேசி முடிப்பதற்குள் அப்பப்பா என்றாகிவிடும்.'

"நவராத்திரிக்கு ஒரு மாதத்திற்கு முன்னால் தான் பொம்மைகளை ரோட்டில் பரப்பி விற்பனை செய்வோம். இந்த வருஷம் பாருங்க. தெரு ஓரக் கடைகள் எல்லாம் கூடாதுன்னுட்டாங்க. பிஸியான தெருக்களை விட்டு ஆள் நடமாட்டம் அதிகமாகக் கொண்ட தெருக்களை விட்டு இப்படி மரத்தடியில் தான் கடை போட வேண்டியிருக்கிறது. ரோட்டில கடை போடக் கூடாதுன்னு சொன்னதால இந்த வருஷம் அதிகக் கடை வராதுன்னு நினைக்கிறேன்.

மழை பெய்தா எங்களுக்கு வியாபாரம் சரியா இருக்காதுங்க. அது மட்டுமில்லை. பொம்மைகள் வேற பாழாய் போயிடும். பொதுவா நவராத்திரிக்கு முன்னால வெயில் தான் இருக்கும். வியாபாரம் மாலை நேரத்தில் தான்!

பொம்மைகளை கொலு போல பார்ப்பதற்கு எடுப்பாக மத்தியானம் முதல் நாங்கள் அடுக்கி வைப்போம். எங்களுடைய பொம்மைகளை நாங்கள் அடுக்கி வைத்து இருக்கும் அழகைப் பார்த்துவிட்டு வந்து வாங்க வருபவர்கள் தான் அதிகம்!

கடைசி நாள் விற்பனை கூட உண்டு...!

நவராத்திரி கடைசி ரெண்டு நாளில் வாங்க வருபவர்கள் உண்டு! காரணம் நவராத்திரி முடிந்து விட்டதே என்ற காரணத்தினால் குறைந்த விலைகள் பொம்மைகள் கிடைக்கும் என்று நினைப்பவர்கள் இவர்கள். வாஸ்தவம்தான் நாங்களும் குறைந்த விலைக்குத் தான் பொம்மைகளை கொடுக்க வேண்டியிருக்கிறது.

பொம்மைகளை பாதுகாப்பது ரொம்பக் கஷ்டம். அடுத்த வருஷம் தான் நாங்கள் வியாபாரத்தைப் பார்க்க முடியும் என்பதும் ஒரு காரணம். அதுவரை பொருள்கள் மீது உள்ள பணத்திற்கு வட்டி நஷ்டம். இதையெல்லாம் உத்தேசித்து கடைசி இரண்டு நாளில் சகாய விலைக்கு பொம்மைகள் விற்கப்படுவதுண்டு. அத வாங்க நிறைய கூட்டம் வரும். நம் நாட்டில்தான் மலிவு விலை சாமான்கள், பரிசு பொருளோட சாமான்கள் விலைக்கு வருகிறதென்றால் அதை வாங்குவதற்கென்று தான் கூட்டமே இருக்கிறதே என்று அலுத்துக் கொண்டார் அந்தப் பெரியவர்!

பேட்டி:

கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்.

புகைப்படம்: **பிரஸ் ஃபோட்டோ பீரோ.**


மங்கையர்
மலர்
நவராத்திரி
சிறப்பிதழ்

மங்கையின் எழிலின் நிறைவிற்கே
மனங்கவரும் பட்டுக்கு இணையுண்டோ!



மங்கையின் மனதிற்கு மகிழ்ச்சியூட்டுவதில் பட்டுப் புடவைகளுக்கு ஈடேதுமில்லை. லக்ஷ்மி சில்க் ஹவுஸுக்கு விஜயம் செய்தாலன்றி உங்கள் பட்டுப் புடவைகளின் தேர்வு நிறைவு பெறுவதில்லை. வாருங்கள், 30,000க்கும் மேலான அரிய படைப்புகளிலிருந்து தேர்ந்தெடுங்கள்.

லக்ஷ்மி சில்க் ஹவுஸ்
மாடியில்
பனகல் பார்க் எதிரில்,
தி. நகர், சென்னை 600 017.
உரிமையாளர்; லக்ஷ்மி சில்க் ஹவுஸ்
(சென்னை) & கோ.

market movers/LSH/585/85

அழகிய
மென்மைப் பொட்டு,
அற்புத
கருமைக் கோடு...

அடடா ஓ!
உம்மைக்
கவர்ந்திடும்
பெண்மை.



சிங்கார் குங்கும பொட்டு

சீராக பரவுவதற்கு மிகச் சிறப்பான தரமுள்ள பொருள்களால் தயாரிக்கப்பட்டது... விரியாது. பரவாது. உங்கள் ஆடைகளுக்குப் பொருந்தும் வண்ணங்கள்

சிங்கார் கண்மை

மென்மையான, இதமான, வளமான கருமை. உங்கள் கண்களை குளிர்ச்சியோடும் அழகோடும் வைத்துக் கொள்வதற்காக தூய்மையான பொருட்களால் தயாரிக்கப் பட்டுள்ளது. இடுவதும் எளிது அதனை நீக்குவதும் அதேபோல் எளிது.

சிங்கார்®

குங்கும பொட்டு மற்றும் கண்மை.
தூய்மையானது, மென்மையானது
அழகானது — உங்களைப்போல்!



REGISTERED No. TN MS (S) 23
Registered as a Newspaper in Sri Lanka
"Supplement to the October MANGAYAR MALAR"

ஹைகூ...ஜப்பானிய மொழியிலே கவிதை.
உங்கள் மேனியிலே ஒரு உணர்வின் பிரதிபலிப்பு.



ஹைகூ
சேலைக

ஹைகூ...பாம்பே டையிங் புதுப்படைப்பு. புதுக்கவிதை போல் நேர்த்தியான புதுவகை க்ரேப் டி ஷின். ஜாக்கார்ட். ஜ்யார்ஜெட். தென்றலென மேனியிலே தவழும் மென்சுகம்—எதுகையும் மோனையும் போல்...உங்கள் எழிற்கோலமும், இவற்றின் வண்ண ஜாலமும். ஜப்பானி ஹைகூ கலைவடிவம் பிறப்பித்த எழிற்கோல துணிவகைகள், பாம்பே டையிங் படைக்கும் ஹைகூ உங்கள் மேனியிலே புதுக்கவிதை!

பாம்பே டையிங்

BDM-1889



உங்கள்
வாழ்வில்
மகிழ்ச்சி
அளிக்கும்
லக்ஷ்மி!
லக்ஷ்மி
சுப்ரபா, காலக்ஸி,
சுஹாசினி
100% பாலியெஸ்டர்,
ஷிஃபான்,
ஜார்ஜெட்
புடவைகள்
லக்ஷ்மி மில்ஸ்
கோயம்புத்தூர்

REGISTERED No. TN MS (S) 231
Registered as a Newspaper in Sri Lanka



daCunha/CLS/14/85/TAM